https://www.facebook.com/ebooksintamil/

॥ ஸ்ரீ: ॥

# குடும்ப ஜோதிடம்

ஆசிரியர்கள் :

ஜோதிஷ வித்வான்கள்

பொத்தேரி ஸ்ரீ ராமய்யங்கார்

&

கீழாத்தூர் ஸ்ரீ ஸ்ரீநிவாஸாசாரியர்

பரிசோதகர் :

நவக்ரஹ வரப்ரஸாதி, ஜ்யோதிஷ ப்ருஹஸ்பதி, ஜ்யோதிஷ சாஸ்த்ர பரிபூர்ண, ஜ்யோதிஷ சக்ரவர்த்தி, ஜ்யோதிஷ வாசஸ்பதி, ஜ்யோதிஷ ஞான ரத்னகர, ஜ்யோதிஷ சாணக்ய, ஜ்யோதிஷ ஆசார்ய, ஜ்யோதிஷ மார்த்தாண்ட

திருவள்ளூர் கௌசிகன் ஸ்வாமி

ஜோதிடர், ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா

பதிப்பகத்தார் :

தி லிட்டில் ப்ளவர் கம்பெனி

சென்னை-600 017 ★ திருச்சி-620 002

லிப்கோ புத்தகங்கள் கீழ்க்கண்ட இடங்களிலும் கிடைக்கும்

சென்னை

1. லிப்கோ அஸோஷியேட்ஸ்
நாராயணா அபார்ட்மெண்ட்ஸ்
23/G-5, ராமேச்வரம் ரோடு
(மாம்பலம் ரெயில் நிலையம் அருகில்)
தி.நகர், சென்னை-600 017

2. எம். தாமோதரம் & கம்பெனி
7, அம்பர்ஸன் தெரு,
ஜார்ஜ் டவுன
சென்னை-600 108

திருச்சி

தி லிட்டில் ப்ளவர் கம்பெனி
17/1, நந்திகோயில் தெரு, தெப்பக்குளம், திருச்சி-620 002.

ஹிக்கின்பாதம்ஸ், மற்றும் பிரபல புத்தக வியாபாரிகள்

Hariram Thejus

https://www.facebook.com/ebooksintamil/

குடும்ப ஜோதிடம்

## முன்னுரை

''பலாநி க்ரஹ சாரேண ஸூசயந்தி மநீஷிண: |
கோ வக்தா தாரதம்யஸ்ய தமேகம் வேதஸம் விநா ||''

என்பது காளிதாசனின் வாக்கு. ''சோதிடர்கள் கிரகங்களின் அசைவுகளைக் கொண்டு இயன்றவரை பலன்களை முன்கூட்டி அறிவிக்கிறார்கள். ஆயினும் நம்மைப் படைத்த பிரமனைத் தவிர, வேறு யாராலும் திட்டவட்டமாக 'இதுதான் நடக்கும்' என்று கூற முடியாது'' என்பது இதன் பொருள்.

### ஜோதிடத்தின் இன்றியமையாமை

மற்ற விஞ்ஞானப் பாடங்கள் சட்டதிட்டங்களைக் கொண்டு மட்டும் அறிய வல்லன. ஆனால் ஜோதிட சாஸ்திரத்தில் விதி முறைகளை அறிவதோடு கடவுளின் அருளால் தீர்க்க தரிசனம், இயற்கையின் ரகசியங்களைச் சரியாக முன்னுணரும் திறன் (intution) என்பவை இரண்டும் தேவையாகும்.

வேதத்தின் ஆறு பாகங்களில் ஜோதிடம் ஒன்று. எனவே இது அனாதியானது. வேதம் உள்ளளவும் ஜோதிடமும் நின்று பயன் தரும். மஹரிஷிகள் நம்முடைய நன்மைக்காக இவற்றைத் தொகுத்து அளித்துள்ளனர். ஜோதிடத்தை மூன்று பிரிவுகளாகக் கூறலாம். (1) மஹரிஷி பராசரரின் முறை (2) ஜைமினி மஹரிஷி முறை (3) தாஜக முறை. இந்தியாவில் கிடைக்கும் எல்லா ஜோதிட நூல்களும் பராசர மஹரிஷியின் காலத்திற்குப் பிற்பட்டவையே. இவர் கலியுகத்திற்கு முன், அதாவது இன்றைக்குச் சுமார் 6000 ஆண்டுகளுக்கு முன் இருந்தவர். பிற்காலத்தில் மஹரிஷிகளும் வராஹ மிஹிரர், பட்டோத்பலர், வேங்கடேசர் ஆகிய ஜோதிட சாஸ்திரிகளும் இவரைப் போற்றி வணங்குகின்றனர். ஜைமினி முறை பராசரமுறையினின்றும் வேறுபட்டது. இது சில குறித்த சந்தர்ப்பங்களிலும் சிலரால் பின்பற்றப்படுகிறது. தாஜக முறை ஒவ்வொரு ஆண்டிற்கும் (வருஷப்) பலன் அறியவும் சில குறித்த சம்பவங்கள் நடைபெறும் தருணங்களை அறியவும் பயன்படுகிறது. எனவே பராசர மஹரிஷியின் அடியொற்றி இப் புத்தகத்தில் பலன்கள் தரப்பட்டுள்ளன.

ஆங்கிலேயர்களால் பின்பற்றப்படுவது சாயன முறை எனப்படும். இது தற்காலத்தில் கிரகம் உள்ள நிலை குறிக்கும்.

www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

ஆயினும் நமது இந்திய முறை நிரயனம் எனப்படும். சூரிய சித்தாந்தப்படி இந்த அண்டம் முழுவதும் ஆண்டுதோறும் சிறிது நகர்ந்து வருகிறது. ஒரு குறித்த தினத்தில் ஒரு குறித்த இடத்தை தாண்டும்போது இருந்த நிலையான தன்மைக்கு பலன்கள் எழுதப்பட்டன. எனவே இந்த வித்தியாசத்தைக் கழித்து கிரக நிலைகளை அறிந்து பலன் கூற வேண்டும். இந்த பேதமே அயனும்சம் எனப்படும். இந்திய பஞ்சாங்கங்கள் நிரயன கிரக நிலைகளையும் அயனும்சத்தையும் தெரிவிக்கின்றன. மேல்நாட்டு எபமிரிஸ் என்னும் பஞ்சாங்கங்கள் சாயன நிலையைத் தருவன. எனவே இவற்றைப் பயன்படுத்துவோர் அயனும்சத்தைக் கழித்து கிரக நிலை அறிய வேண்டும்.

இந்திய முறையில் வாக்கியம், திருக்கணிதம் என இரு வகை உள்ளன. வாக்கிய கணிதம் ஏற்பட்ட பின்னர் விஞ்ஞானத்தில் நிரூபிக்கப்பட்ட சில சிறிய மாறுதல்கள் (அதாவது பூமியின் சுழற்சிப்பாதை, சூர்ய சந்திரர்களின் இயக்கம், ஆகர்ஷண சக்தி,) ஏற்கப்பட்டு, சிறிய மாறுதல்களுடன் கணிக்கப்படுவது திருக்கணிதம். திருக்கணிதப்படி கணிப்பது சரியானது என்பது பல பெரியோர்களுடைய அனுபவமும் அபிப்பிராயமும் ஆகும்.

ஜ்யோதிஷம் என்பது அறிவைத்தரும் ஒளி எனப் பொருள் படும். ஹோரா சாஸ்திரம் என்றல் நேரத்தைக் கணக்கிடும் சாஸ்திரம் என பொருள் தரும். 'அஸ்ட்ராலஜி' என்ற ஆங்கிலச் சொல் கிரகங்களின் மூலம் கிடைக்கும் பலன் எனப் பொருள் படும்.

ஜோதிடமானது மைவித்தைகள், பில்லி, ஏவல், சூன்யம், மந்திர வித்தைகள், கைரேகை முதலான எந்தத் துறையுடனும் சேர்ந்தது அல்ல.

''ஜனனீ ஜன்ம ஸௌக்யானும் வர்த்தனீ குலஸம்பதாம் பதவீ பூர்வ புண்யாநாம் லிக்யதே ஜந்ம பத்ரிகா ||'' என்று ஒவ்வொரு ஜாதகத்தின் ஆரம்பத்திலும் எழுதப்படுகிறது. நமது ஹிந்து மத நம்பிக்கையின்படி ஒரு குழந்தை தன் முற்பிறப்பில் செய்த பாவம், புண்ணியம் இவற்றைத் தழுவியே இப்பிறவியில் அப்பலன்களை அனுபவிக்கப் பிறவி எடுக்கிறது என்பதே இதன் பொருள். இதனுல், ஒருவர் விதியின் பிடியிலிருந்து தப்ப முடியாது என்பது இதன் பொருளல்ல. விதியினுல் மாற்ற முடியாதவை என்பது சில. அவையாவன—ஆயுள், சில கொடிய வியாதிகள், இவை தவிர மற்றவை நமது திடமான நம்பிக்கை, முயற்சி இவை மூலமும் பரிகாரங்கள் மூலமும் ஓரளவுக்கு மாற்றத்தக்கவையே யாகும். "Fools obey planets while wise men control them" என்பது ஆங்கிலப் பழமொழியாகும்.

எனவே, இனி ஜோதிட விதிமுறைகளைக் கூறுவோம். இவை ஓரளவுக்கு அனைவருக்கும் ஜாதகங்களின் வழிமுறைகளை விளக்கும்.



https://www.facebook.com/ebooksintamil/

மற்றும் விரிவான புத்தகங்களின் (மூலம்) அறிந்து நாம் நல்வழியில் ஒழுகலாம். துன்பங்களை முன்னதாக அறிந்து தற்காப்பு செய்து கொண்டு நல்வாழ்வு வாழலாம்.

## கிரக மண்டல விளக்கம்

''ஸோடியாக்'' (Zodiac) என ஆங்கிலத்தில் அழைக்கப்படும் வான் மண்டலத் தொகுதி, அல்லது ராசி மண்டலத் தொகுதி சூரியனின் பாதையை (தற்கால விஞ்ஞான விதிப்படி பூமியின் பாதையை) ஒட்டி இரு புறமும் 9 பாகைகள் கொண்ட ஒரு தொகுதியாக உள்ளது. பூமியின் பாதை முட்டை வடிவானதால் இந்த மண்டலத் தொகுதியும் முட்டை வடிவமானதே. இப்பாதை ஒரு பட்டையாகக் காணப்படும். பல கோடிக்கணக்கான நக்ஷத்திரங்கள் இருப்பினும், ஜோதிடத்தில் அறியப்படும் அசுவினி முதலிய 27 நக்ஷத்திரங்களும் இப்பாதையில் அமைந்துள்ளன. இதன் வழியாகவே ஒன்பது கிரகங்களும் சஞ்சரிக்கின்றன. இப்பாதை 360 பாகை கொண்ட ஒரு வட்ட வடிவமான பாதையாக எடுத்துக் கொள்ளப்படுகிறது. இது 12 ராசிகள் அடங்கியது. எனவே ஒவ்வொரு ராசியும் 30 பாகைகளைக் கொண்டது. ஒவ்வொரு ராசியின் ஒவ்வொரு பாகையும் மாறுபட்ட குணுதிசயங்களைக் கொண்டது. இப்பாகை தினமும் ஒருமுறை தன்னைத் தானே சுற்றுகிறது. இது கிழக்கிலிருந்து மேற்காகச் சுற்றுகிறது.

யுரேனஸ், நெப்ட்யூன், ப்ளுட்டோ ஆகிய கிரகங்கள் நமது ஜோதிட சாஸ்திரத்தில் சேர்க்கப்படவில்லை. ராகு கேதுக்கள் நிழல் கிரகங்கள். இவை பின்வந்த மஹரிஷிகளால் ஏற்றுக் கொள்ளப்பட்டன. எல்லா கிரகங்களும் தங்களைத் தாங்களே சுற்றிக் கொண்டு சூரியனையும் சுற்றி வருகின்றன. பூமியிடமிருந்து அதிகமாக விலகியிருக்கும் கிரகம் சனி. சூர்ய சித்தாந்தப்படி குரு, செவ்வாய், சூரியன், சுக்ரன், புதன், சந்திரன் இவை வரிசைக் கிரமப்படி விலகியிருப்பனவாகும். பூமியைவிட்டு விலக விலக கிரகங்களின் வேகமும் குறைகின்றது.

சூரியன் வான் பாதையில் தினசரி 1 பாகை செல்கிறது. ஒரு முறை சுற்றிவர 365 நாள் 6 மணி நேரம் ஆகிறது.

சந்திரன் ஒரு பாகை செல்ல 1 மணி 48 நிமிடம் ஆகும். செவ்வாய் 1½ நாளில் 1 பாகை நகர்கிறது.

புதன் ஒரு நாளில் 1½ பாகை நகரும். ஆயினும் சூரியனுக்கு அருகில் இருப்பதால் நிலையில் அடிக்கடி மாறுதல் ஏற்படும். எனவே சராசரி 27 நாளில் ஒரு ராசியை தாண்டும். புதன் சூரியனிடமிருந்து 28 பாகைக்குள் தான் இருக்கும். குரு சுமார் ஒரு வருடத்தில் ஒரு ராசியைத் தாண்டும். சுக்ரன் தினசரி ஒரு பாகையும் சனி மாதத்திற்கு ஒரு பாகையும் நகரும். இவைகள் பிரதக்ஷிணமாக நகர்வன. ராகுவும் கேதுவும் அப்பிரதக்ஷிணமாக நகர்



https://www.facebook.com/ebooksintamil/

Hariram Thejus

www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

வன. இவை கிழக்கிலிருந்து மேற்காக நகர்ந்து ஒரு ராசியை, அதாவது 30 பாகைகளை பதினெட்டு மாதங்களில் கடக்கும்.

சூரியன், சந்திரன், ராகு, கேது இவை தவிர மற்ற ஐந்து கிரகங்களும் வக்ரம் (பின்னோக்கிச் செல்லுதல்) கதிக்கு உட்பட்டனவாகும்.

ஹிந்து முறைப்படி 60 வருடங்கள் கொண்டது ஒரு சுழற்சியாகும். 60 ஆண்டுகள் முடிந்தவுடன் மறுபடியும் முதல் வருடத்திலிருந்து ஆரம்பமாகும். ஒவ்வொரு ஆண்டின் பெயரும் காரணப் பெயராக அமைந்ததாகும்.

ஒரு வருடம் இரண்டு அயனங்களாக பிரிக்கப்படும்—உத்தராயணம், தக்ஷிணாயணம். இவை சூரியன் மகரத்திலும் கடகத்திலும் நுழைந்து தனது பாதையை மாற்றிக் கொள்ளும் காலத்தில் ஆரம்பமாகும். ஒரு வருடம் ஆறு ருதுக்களாக பிரிக்கப்படுகிறது—வசந்தம், க்ரீஷ்மம், வர்ஷம், சரத், ஹேமந்தம், சிசிரம். ஒவ்வொன்றும் இரண்டு மாதங்களை உள்ளடக்கியது.

மாதங்கள் 12 அனைவரும் அறிந்ததே. ஒவ்வொரு மாதமும் இரு பக்ஷங்களாகப் பிரிக்கப்படும்-வளர்பிறை, தேய்பிறை. இவை சந்திரனின் நிலையை யொட்டி பெயரிடப்பட்டன.

### கிரகங்கள், ராசிகள், நக்ஷத்ரங்கள்

அசுவினி நக்ஷத்திரம், பரணி, மிருகசீர்ஷம், பூசம், விசாகம், அனுஷம், கேட்டை, திருவோணம், ரேவதி இவை ஆகாயத்தில் மூன்று நக்ஷத்திரங்களைக் கொண்டவை.

கார்த்திகை, ஆயில்யம், மூலம் இவை 6 நக்ஷத்திரங்களைக் கொண்டவை.

ரோஹிணி, புனர்வசு, மகம், ஹஸ்தம், இவை 5 நக்ஷத்திரங்களையும்

பூரம், உத்திரம், அவிட்டம், பூரட்டாதி, உத்திரட்டாதி ஆகியவை 4 நக்ஷத்திரங்களையும் உடையவை.

மற்றவை ஒரே நக்ஷத்திரமாக இருப்பவை.

மேற்கூறிய 27, நக்ஷத்திரங்களும் 360 டிகிரியில் அடங்குபவை. எனவே ஒரு ராசியில் 2¼ நக்ஷத்திரங்கள் உள்ளன. ஒரு நக்ஷத்திரம் 13° 20′ உள்ளது. ஒவ்வொரு நக்ஷத்திரமும் 4 பாதங்களாகப் பிரிக்கப்படுவதால் ஒரு பாதம் 3° 20′ உள்ளதாகும்.

### ஜோதிட சாஸ்திரம்

வெள்ளையர்கள் கையாளும் சோதிட சாஸ்திரம் சாயன முறையாகும். அதாவது சூரியனின் சலனத்தைக்கொண்டு மற்றக் கிரகங்களின் இருப்பைக் கணிப்பது.



Hariram Thejus

https://www.facebook.com/ebooksintamil/

இந்து சோதிடம் நிரயன முறை எனப்படும். அதாவது சந்திரனின் சலனத்தைக் கொண்டு கணிப்பது. இந்து சோதிடம் 2000 ஆண்டுகளுக்கும் முற்பட்டது.

சூரிய சித்தாந்தப்படி கிருதயுகம், திரேதாயுகம், துவாபர யுகம், கலியுகம் எனப்படும் நான்கு யுகங்களைக் கொண்டது ஒரு சதுர் யுகம். ஒரு சதுர் யுகம் என்றால் 43,20,000 ஆண்டுகள் கொண்டது.

71 சதுர் யுகங்கள்—1 மன்வந்தரம்

14 மன்வந்தரங்கள்—1 கல்பம்

1 கல்பம் என்றால் பிரம்மாவுக்கு ½ நாள்

நாம் இருப்பது 7-ஆவது மன்வந்தரம். இது வைவஸ்வத மன்வந்தரம் எனப்படும். அதில் சுவேத வராஹ கல்பமாகும். இப்போதைய பிரம்மா 50 ஆண்டுகளை முடித்து 51-ஆம் ஆண்டில் உள்ளார்.

1978 ஆண்டு கலி பிறந்து 5079 ஆண்டுகளாகும்.

வானில் அனேகக் கோடி நட்சத்திரங்கள் இருப்பினும் ஜோதிட சாஸ்திரத்தில் அசுவனி முதல் ரேவதி வரை 27 நட்சத்திரங்களைக் கொண்டுதான் கணிக்கப்பட்டது. ஏனெனில் சோதிடத்தில் எடுக்கப்பட்டுள்ள நவக்கிரகங்கள் இந்த 27 நட்சத்திரங்கள் இருக்கும் பாதையில்தான் சஞ்சாரம் செய்கின்றன. எனவே இவைகள்தான் பூமியிலுள்ள சகலப் பிராணிகளின் வாழ்க்கையில் தொடர்பு கொண்டுள்ளன.

இந்த 27 நட்சத்திரங்கள் கொண்ட ஓட்டப்பாதையை 12 ராசிகளாகப் பிரித்துள்ளனர். ஒவ்வொரு ராசியும் 120 அம்சங்களாகப் பிரிக்கப்பட்டன. அறுபது நாழிகள் (24Hrs.) கொண்ட ஒரு நாளில் 21,600 பிறப்புகள் பூலோகத்தில் உதயமாகின்றன. அவற்றில் 7,200 மனிதப்பிராணிகள் ஆவர். ஒரு லக்னத்தில் 600 மனிதர்கள் பிறப்பார் என சூரியசித்தாந்தம் கூறுகிறது. ஒவ்வொரு ராசியும் 30° (பாகைகள்) கொண்டது. சூரியன் ஒவ்வொரு ராசியிலும் சுமார் 30 நாட்கள் சஞ்சரிப்பார்.

சந்திரன் 28½ முதல் 29 நாட்களில் ஒரு தரம் சுற்றி வருவார் (12 ராசிகளையும்).

சூரியன் இருக்குமிடம் முதல் 12 பாகைகள் சந்திரன் நடப்பினில் ஒரு திதியாகும்.

| | | |
|---|---|---|
| ஒருநாள் என்பது | — | 60 நாழிகை (24 மணி) |
| ஒரு நாழிகை | — | 60 விநாழிகை |
| ஒரு விநாழிகை | — | 60 விப்தம் |



www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

https://www.facebook.com/ebooksintamil/

| | | |
|---|---|---|
| ஒரு லிப்தம் | — | 60 விலிப்தம் |
| ஒரு விலிப்தம் | — | 60 பரா |
| ஒரு பரா | — | 60 தத்பரா |

என சூரிய சித்தாந்தத்தில் காலத்தைப் பிரித்துள்ளனர். இந்திய தேசிய மணி (Indian Standard Time) என்பது 82°— 30′ பாகையில் இருக்கும் உஜ்ஜயினி என்னும் இடத்திற்கு கணிக்கப்பட்ட காலமாகும்.

உதாரணமாக, சென்னையில் ஒரு சிசு காலை 8 மணி அளவில் பிறந்தது என்றால் இது தேசிய மணியைக் குறிக்கும். 1-9-1942 முதல் 15-10-1945 வரை இந்திய தேசிய மணியை ஒரு மணி நேரம் கூட்டியுள்ளனர். இதுதான் போர்க்கால மணி. (War Time). மேல் குறித்த காலத்தில் சிசு பிறந்திருந்தால் அதில் ஒரு மணி நேரம் கழித்து நாம் ஜாதகத்தைக் கணிக்க வேண்டும்.

சாதாரணமாக ஜாதகங்களை பஞ்சாங்கத்தைக் கொண்டு கணிப்பதுண்டு. நம் நாட்டில் ஒரு பஞ்சாங்கத்திற்கும் மற்றொரு பஞ்சாங்கத்திற்கும் கிரக சாரங்களின் குறிப்புகளில் வித்தியாசம் காணப்படுகின்றன. எனவே ஒரு பஞ்சாங்கத்தின்படி குறித்த ஜாதகம் மற்றொரு பஞ்சாங்கத்தை வைத்துக் குறித்தால் சிறிய வித்தியாசங்கள் காணப்படலாம். எபிமரீஸ் (Ephimeries) எனப்படும் கிரகங்களின் அன்றாட சலனத்தை குறிக்கும் நூல். இது ஒரு உலக நூல். இதை வைத்து ஜாதகம் கணித்தால் சரியாக இருக்கும். 2000 ஆண்டுகளுக்கு முன்பு குறிக்கப்பட்ட ஜோதிட விதிகளிலும் இப்பொழுது நடைமுறையில் நடக்கும் நிகழ்ச்சிகளிலும் சில வேறுபாடுகள் தோன்றுகின்றன. எனவே கலியுகத்தில் ஜோதிட விதிகளை ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது நாம் தற்போதைய சூழ்நிலையைக் கொண்டுதான் ஜோதிடம் கூற வேண்டும். ஜோதிட நூல்களைப் படித்தல் மட்டும் போதாது. பல ஆயிரக் கணக்கான ஜாதகங்களை ஆராய்ந்து நடைமுறையில் சாஸ்திர விதிகளுக்கும் நடக்கும் நிகழ்ச்சிகளுக்கும் உள்ள சம்பந்தங்களை அறிந்தால்தான் ஜோதிடர் ஆகலாம்.

'குடும்ப ஜோதிடம்' நூலைப் படித்து சட்டென்று எந்த முடிவையும் சொல்லிவிட இயலாது. பலாபலன்களைச் சொல்லுமுன் நன்கு ஆராய்ந்து தற்போதைய சூழ்நிலை, காலம் இவைகளையொட்டி கூறவேண்டும்.



https://www.facebook.com/ebooksintamil/

# இந்நூலின் சிறப்பு

**குடும்ப ஜோதிடம்** என்ற இந்த நூல் மற்ற ஜோதிட நூல்களைப் போலன்றி ஒரு தனித்தன்மை கொண்டதாகும். அதாவது- அவரவர் தம் குடும்பத்தில் பிறக்கும் குழந்தைகளுக்குப் பஞ்சாங்க உதவியுடன் தாமே ஜாதகங்களைக் கணித்துக் கொள்வதற்கும், தாமே அவர்களது ஜாதகத்தில் உள்ள கிரக-லக்ன-அமைப்புக்களைக் கொண்டு ஓரளவு அவர்களது வாழ்க்கைப் பலனைத் தெரிந்து கொள்வதற்கும் இந்நூல் வகை செய்கிறது.

**கல்யாணப் பொருத்தம்**

இவற்றைத் தவிர, குடும்பத்தில் திருமணம் ஆகவேண்டியுள்ள பெண் பிள்ளைகளுக்கு திருமணச் சம்பந்தம் ஏற்படுத்த ஆண், பெண் ஜாதகங்களுடன் ஒப்பிட்டுப் பார்ப்பதற்கும், பத்து விதப் பொருத்தம் பார்ப்பதற்கும் தேவையான அம்சங்கள் மிகத் தெளிவாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

**அங்காரக தோஷத்**தைப்பற்றியும் அதன் பரிகாரங்களைப் பற்றியுமான விபரங்கள் தரப்பட்டுள்ளன. எனவே, தோஷத்தை மட்டும் பார்த்து, பரிகாரங்களைப் பற்றி கவனிக்காமல் எந்த ஜாதகத்தை எடுத்தாலும் 'இது அங்காரக தோஷமுள்ள ஜாதகம்' என்று ஒதுக்கி விடுவதாகிய அவசரத் தீர்மானத்தை அகற்றும் வகையில் பரிகாரங்கள் தரப்பட்டுள்ளன.

ஜாதகங்களில் காணப்படும் **பாலாரிஷ்ட தோஷங்கள்,** அவற்றிற்கான பரிகாரங்கள் இவைகளெல்லாம் விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

**கோசார பலன்களை** அவ்வப்பொழுது தாமே பார்த்துக் கொள்வதற்கு வழிமுறைகள் தரப்பட்டுள்ளன.

**தசாபுத்தி பலன்களும்,** சந்திர ராசி பலன்களும், ஏழரை நாட்டுச் சனியைப் பற்றிய விவரங்களும் விளக்கமாக உள்ளன.

கலியாணப் பொருத்தங்களை ஆண், பெண் நக்ஷத்திர ரீதியாகவும், ஜாதக ரீதியாகவும் பார்க்க வேண்டிய முறைகள் மிகச் சிறப்பாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

**பெண் ஜாதகங்களின்** சிறப்பும், ருதுகாலப் பலன்களும் தரப்பட்டுள்ளன.

**வீடுவாசல் கட்ட,** கிரஹப் பிரவேசத்திற்கான காலம் முதலிய விவரங்களை இந்நூலில் காணலாம்.



Hariram Thejus
www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

**பிரயாணத்திற்கு** நல்ல நாள் பார்க்கும் வழி, பொருத்தமான நாள் நக்ஷத்திரங்கள், பரஸ்தானம், சகுனபலன் இவைகளெல்லாம் விரிவாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

**தினப் பலன், மாதப் பலன்** பார்க்கும் வழிகள், பலன்களைப் பல கட்டங்களுடன் காணலாம்.

**ஆரூடங்கள்** பார்த்துச் சொல்லும் பல வழிகள், பலனைகளுடன் அபூர்வமாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

**முகூர்த்தங்கள்:** உபநயனம், விவாஹம் முதலியவற்றிற்கான நாட்களைத் தேர்ந்தெடுக்க வேண்டிய வழிகள் விளக்கப்பட்டுள்ளன.

இன்னும் இத்தகைய எத்தனையோ சிறிய பெரிய விஷயங்களைத் தாங்கும் இந்த நூல் ஒவ்வொரு குடும்பத்திலும் இருக்க வேண்டும் என்பதை மனதில் கொண்டே 'குடும்ப ஜோதிடம்' என்று இந்நூலுக்குப் பொருத்தமான பெயரிடப்பட்டுள்ளது.

இந்நூலைச் சிறந்த முறையில் வெளியிட முன்வந்த விப்கோ ஸ்தாபனத்திற்கு எங்களது நன்றியைச் செலுத்துகிறோம்.

பிங்கள ௵
மாசி மீ 26உ
(10-3-1978)

— ஆசிரியர்கள்.



https://www.facebook.com/ebooksintamil/

# அத்யாயம் 1

ஜோதிடம் என்பது பன்னிரண்டு ராசிகள், இருபத்தேழு நக்ஷத்திரங்கள், ஒன்பது கிரஹங்கள் இவைகளின் செயல்களைக் கூறும் காலமாகும். இவைகளைக் கொண்டுதான் ஜாதகம் கணிக்கப்படுகின்றது. அதாவது—ராசிகள், நக்ஷத்திரங்கள், கிரஹங்கள் இவைகளின் நிலையைக் கொண்டு ஸ்வபாவம், பலம், பலவீனம் இவைகளைத் தெரிந்துகொண்டால் ஜாதகப் பலனைத் தெரிந்து கொள்ளலாம்.

## ராசிகள் 12

1. மேஷம்
2. ரிஷபம்
3. மிதுனம்
4. கடகம்
5. சிம்மம்
6. கன்னி
7. துலாம்
8. விருச்சிகம்
9. தனுசு
10. மகரம்
11. கும்பம்
12. மீனம்

## கிரஹங்கள் 9

1. சூரியன்
2. சந்திரன்
3. செவ்வாய்
4. புதன்
5. குரு
6. சுக்ரன்
7. சனி
8. ராகு
9. கேது

## யுகங்கள் 4

1. கிரேதாயுகம்
2. திரேதாயுகம்
3. துவாபரயுகம்
4. கலியுகம்

## வருஷங்கள் 7 (தேசங்கள்)

1. பாரத வருஷம்
2. கிம்புருஷ வருஷம்
3. ஹரி வருஷம்
4. இளாவ்ருத வருஷம்
5. ரம்மியத வருஷம்
6. ஐரணவத வருஷம்
7. குரு வருஷம்



Hariram Thejus

www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

## சகாப்தங்கள் 8

| | |
|---|---|
| 1. பாண்டவ சகாப்தம் | 5. கொல்ல சகாப்தம் |
| 2. சாலிவாகன சகாப்தம் | 6. ராமதேவ சகாப்தம் |
| 3. விக்ரம சகாப்தம் | 7. பிரதாபருத்திர சகாப்தம் |
| 4. போஜராஜ சகாப்தம் | 8. கிருஷ்ணதேவராய சகாப்தம் |

## வருஷங்கள் 60

| | | | |
|---|---|---|---|
| பிரபவ | சித்ரபானு | ஹேவிளம்பி | பரிதாபி |
| விபவ | சுபானு | விளம்பி | பிரமாதீச |
| சுக்ல | தாரண | விகாரி | ஆனந்த |
| பிரமோதூத | பார்த்திப | சார்வரி | ராக்ஷஸ |
| பிரஜோற்பத்தி | விய | பிலவ | நள |
| ஆங்கிரஸ | ஸர்வஜித்து | சுபகிருது | பிங்கள |
| ஸ்ரீமுக | ஸர்வதாரி | சோபகிருது | காளயுக்தி |
| பவ | விரோதி | குரோதி | சித்தார்த்ரி |
| யுவ | விக்ருதி | விசுவாவசு | ரௌத்ரி |
| தாது | கர | பராபவ | துன்மதி |
| ஈச்வர | நந்தன | பிலவங்க | துந்துபி |
| வெகுதான்ய | விஜய | கீலக | ருத்ரோத்காரி |
| பிரமாதி | ஜய | சௌமிய | ரத்தாக்ஷி |
| விக்கிரம | மன்மத | சாதாரண | குரோதன |
| விஷு | துன்முகி | விரோதிகிருது | அக்ஷய |

## நக்ஷத்திரங்கள் 27

| | |
|---|---|
| 1. அசுவனி | 15. ஸ்வாதி (சுவாதி) |
| 2. பரணி | 16. விசாகம் |
| 3. கிருத்திகை | 17. அனுஷம் |
| 4. ரோகிணி | 18. கேட்டை |
| 5. மிருகசீர்ஷம் | 19. மூலம் |
| 6. திருவாதிரை | 20. பூராடம் |
| 7. புனர்பூசம் (புனர்வசு) | 21. உத்திராடம் |
| 8. பூசம் | 22. திருவோணம் |
| 9. ஆயில்யம் | 23. அவிட்டம் |
| 10. மகம் | 24. சதயம் |
| 11. பூரம் | 25. பூரட்டாதி |
| 12. உத்தரம் | 26. உத்திரட்டாதி |
| 13. அஸ்தம் | 27. ரேவதி |
| 14. சித்திரை | |

இந்த நக்ஷத்திரங்கள் இருபத்தேழும் பன்னிரண்டு ராசிகளுக்குப் பங்கிடப்பட்டிருக்கின்றன. அதாவது ஒவ்வொரு ராசிக்கும்



https://www.facebook.com/ebooksintamil/

2¼ நக்ஷத்திரம், ஒவ்வொரு நக்ஷத்திரத்திற்கும் நான்கு பாதங்கள் உண்டு. ஆகவே, ஒவ்வொரு ராசியிலும் ஒன்பது பாதங்கள் அல்லது 2¼ நக்ஷத்திரங்கள் உண்டு.

12 ராசிகளையும் அதில் அடங்கிய 27 நக்ஷத்திரங்களையும் கீழ்க் கண்ட சக்கரத்தில் காணலாம்:

| | | | |
|---|---|---|---|
| **மீனம்**<br>பூரட்டாதி 4-ம் பாதம்<br>உத்திரட்டாதி<br>ரேவதி | **மேஷம்**<br>அசுவினி<br>பரணி<br>கிருத்திகை 1-ம் பாதம் | **ரிஷபம்**<br>கிருத்திகை 2,3,4-ம் பாதம்<br>ரோகிணி<br>மிருகசீர்ஷம் 1,2-ம் பாதம் | **மிதுனம்**<br>மிருகசீர்ஷம் 3,4-ம் பாதம்<br>திருவாதிரை<br>புனர்வசு 1,2,3-ம் பாதம் |
| **கும்பம்**<br>அவிட்டம் 3,4-ம் பாதம்<br>சதயம்<br>பூரட்டாதி 1,2,3-ம் பாதம் | **ராசி** | **மண்டலம்** | **கடகம்**<br>புனர்வசு 4-ம் பாதம்<br>பூசம்<br>ஆயில்யம் |
| **மகரம்**<br>உத்திராடம் 2,3,4-ம் பாதம்<br>திருவோணம்<br>அவிட்டம் 1,2-ம் பாதம் | | | **சிம்மம்**<br>மகம்<br>பூரம்<br>உத்தரம் 1-ம் பாதம் |
| **தனுசு**<br>மூலம்<br>பூராடம்<br>உத்திராடம் 1-ம் பாதம் | **விருச்சிகம்**<br>விசாகம் 4-ம் பாதம்<br>அனுஷம்<br>கேட்டை | **துலாம்**<br>சித்திரை 3,4-ம் பாதம்<br>சுவாதி<br>விசாகம் 1,2,3-ம் பாதம் | **கன்னி**<br>உத்தரம் 2,3,4-ம் பாதம்<br>ஹஸ்தம்<br>சித்திரை 1,2-ம் பாதம் |

**இதன் உபயோகம் :** ஒரு குழந்தை பிறந்தபோது எந்த நக்ஷத்திரத்தில் எந்த பாதத்தில் ஒரு கிரஹம் இருக்கிறதோ, அந்த நக்ஷத்திரத்தின் பாதம் எந்த ராசியைச் சேர்ந்ததோ, அந்த ராசியில் அந்தக் கிரஹத்தை எழுதவேண்டும்.

இந்த 27 நக்ஷத்திரங்களும் சவ்விய நக்ஷத்திரங்கள் (வல வோட்டு) என்றும் அபசவ்விய நக்ஷத்திரங்கள் (இட வோட்டு)



Hariram Thejus

www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

என்றும் இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவைகள் பின் வருமாறு :—

### சவ்விய நக்ஷத்திரங்கள் 15

| | |
|---|---|
| அசுவனி | ஸ்வாதி |
| பரணி | மூலம் |
| கிருத்திகை | பூராடம் |
| புனர்பூசம் | உத்திராடம் |
| பூசம் | பூரட்டாதி |
| ஆயில்யம் | உத்திரட்டாதி |
| அஸ்தம் | ரேவதி |
| சித்திரை | |

### அப சவ்விய நக்ஷத்திரங்கள் 12

| | |
|---|---|
| ரோகிணி | விசாகம் |
| மிருகசீர்ஷம் | அனுஷம் |
| திருவாதிரை | கேட்டை |
| மகம் | திருவோணம் |
| பூரம் | அவிட்டம் |
| உத்தரம் | சதயம் |

### தாமஸ நக்ஷத்திரங்கள் 12

| | | |
|---|---|---|
| அசுவனி | மகம் | மூலம் |
| திருவாதிரை | ஸ்வாதி | சதயம் |
| மிருகசீர்ஷம் | சித்திரை | அவிட்டம் |
| பூசம் | அனுஷம் | உத்திரட்டாதி |

### ராஜஸ நக்ஷத்திரங்கள் 9

| | | |
|---|---|---|
| கிருத்திகை | உத்தரம் | உத்திராடம் |
| ரோகிணி | அஸ்தம் | திருவோணம் |
| பரணி | பூரம் | பூராடம் |

### சாத்வீக நக்ஷத்திரங்கள் 6

| | | |
|---|---|---|
| புனர்பூசம் | விசாகம் | பூரட்டாதி |
| ஆயில்யம் | கேட்டை | ரேவதி |

### அயனங்கள் 2

1. உத்தராயணம்—தை மாதம் முதல் ஆனி மாதம் முடிய.
2. தக்ஷிணாயணம்—ஆடி மாதம் முதல் மார்கழி மாதம் முடிய.



https://www.facebook.com/ebooksintamil/

### ருதுக்கள் 6

| | |
|---|---|
| சித்திரையும், வைகாசியும் | —வஸந்த ருது |
| ஆனியும், ஆடியும் | —கிரீஷ்ம ருது |
| ஆவணியும், புரட்டாசியும் | —வர்ஷ ருது |
| ஐப்பசியும், கார்த்திகையும் | —சரத் ருது |
| மார்கழியும், தையும் | —ஹேமந்த ருது |
| மாசியும், பங்குனியும் | —சிசிர ருது |

### திதிகள் 15

| | |
|---|---|
| 1. பிரதமை | 9. நவமி |
| 2. துவிதியை | 10. தசமி |
| 3. திருதியை | 11. ஏகாதசி |
| 4. சதுர்த்தி | 12. துவாதசி |
| 5. பஞ்சமி | 13. திரயோதசி |
| 6. சஷ்டி | 14. சதுர்தசி |
| 7. சப்தமி | 15. பௌர்ணமி அல்லது அமாவாசை |
| 8. அஷ்டமி | |

### யோகங்கள் 27

| | |
|---|---|
| 1. விஷ்கம்பம் | 15. வஜ்ரம் |
| 2. பிரீதி | 16. ஸித்தி |
| 3. ஆயுஷ்மான் | 17. வ்யதீபாதம் |
| 4. சௌபாக்யம் | 18. வரியான் |
| 5. சோபனம் | 19. பரீகம் |
| 6. அதிகண்டம் | 20. சிவம் |
| 7. சுகர்மம் | 21. ஸித்தம் |
| 8. திருதி | 22. சாத்தியம் |
| 9. சூலம் | 23. சுபம் |
| 10. கண்டம் | 24. சுப்பிரம் |
| 11. விருத்தி | 25. பிராம்மம் |
| 12. துருவம் | 26. ஐந்திரம் |
| 13. வியாகாதம் | 27. வைதிருதி |
| 14. ஹர்ஷணம் | |

### கரணங்கள் 11

| | | |
|---|---|---|
| பவம் | ... | சிங்கம் |
| பாலவம் | ... | புலி |
| கௌலவம் | ... | பன்றி |
| தைதுலை | ... | கழுகு |
| கரசை | ... | யானை |
| வணிசை | ... | எருது |



Hariram Thejus
www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

| | | |
|---|---|---|
| பத்திரை | ... | கோழி |
| சகுனி | ... | காக்கை |
| சதுஷ்பாதம் | ... | நாய் |
| நாகவம் | ... | பாம்பு |
| கிம்ஸ்துக்னம் | ... | புழு |

## வேளைகள் 3

1. சாத்வீகம்
2. தாமஸம்
3. ராஜஸம்

## குளிகாதியர் 9

1. காலன்
2. அர்த்தப்ரகரன்
3. எமகண்டன்
4. துன்மதனன்
5. தூமகேது
6. இந்திரதனுசு
7. குளிகன்
8. பரிவேடன்
9. விதிபாதன்

| நவக்கிரஹங்கள் | கிரஹதான்யம் | கிரஹ புஷ்பம் |
|---|---|---|
| 1. சூரியன் | கோதுமை | செந்தாமரை |
| 2. சந்திரன் | நெல் | வெள்ளெளி |
| 3. செவ்வாய் | துவரை | சண்பகம் |
| 4. ராகு | உளுந்து | மந்தாரை |
| 5. குரு | கடலை | முல்லை |
| 6. சனி | எள்ளு | கருங்குவளை |
| 7. புதன் | பச்சைப்பயறு | வெண்காந்தல் |
| 8. கேது | கொள்ளு | செவ்வல்லி |
| 9. சுக்ரன் | மொச்சை | வெண்தாமரை |

மாந்தி அல்லது குளிகன் என்பது ராகு, கேது போல் ஒரு சாயா கிரஹம். இதை சனிபகவானின் புத்திரர் என்பார்கள். குளிகன் ஒவ்வொரு தினமும் குறிப்பிட்ட நாழிகையில் உதயமாகும். அது கீழ்க்கண்டவாறு :—

| நாள் | பகல் | இரவு |
|---|---|---|
| ஞாயிறு | 26 நாழிகை | 10 நாழிகை |
| திங்கள் | 22 ,, | 6 ,, |
| செவ்வாய் | 18 ,, | 2 ,, |
| புதன் | 14 ,, | 26 ,, |
| வியாழன் | 10 ,, | 22 ,, |
| வெள்ளி | 6 ,, | 18 ,, |
| சனி | 2 ,, | 14 ,, |



மேற் குறிப்பிட்ட நாட்களில் பகலிலும் இரவிலும் குறிப்பிட்ட நாழிகையில் மாந்தி உதயமாகும். ஒரு ஜாதகனின் ராசிச் சக்கரத்தில் மாந்தியைக் குறிப்பிடுதல் எப்படி ? ஜாதகன் பிறந்த பகலோ இரவோ அதற்குக் கொடுத்தபடி நாழிகையை முதலில் கண்டுகொள்ளவும். பிறகு அன்றைய சூரியோதயம் முதல் அந்த மாந்தி உதயம் ஆகும் நாழிகைக்கு எந்த ராசி நடைபெறுகிறதோ அதில் மாந்தியைக் குறிக்கவும். சாதாரணமாக, மாந்தியைக் கேரள நாட்டிலும் ஆந்திர தேசத்திலும் தான் முக்கியமாக குறிப்பது வழக்கம்.

மாந்தியைக் கொண்டு தான் ஆயுர்தாயம் நிர்ணயம் செய்வார்கள். மாந்தி இருக்கும் ராசிநாதனும் மாந்தியுடன் கூடியுள்ள கிரஹமும் கெடுதலைத்தான் அளிக்குமென்று கூறுவர். மாந்தி லக்னத்தில் இருந்தால் ஆரோக்கியம் கெடும். அங்கங்களுக்கு ஊனம் ஏற்படலாம். லக்கனத்திக்கு இரண்டில் இருந்தால் பிறரைத் தூஷிப்பது—மூன்றில் தம்பி தங்கைகளைக் கொடுமைப் படுத்துதல்—நாலில் மனக்கஷ்டம், சத்ரு பயம் சந்தோஷம் இல்லாமை—ஐந்தில் குருத்துரோகம், குழைந்தைகள் இல்லாமை, பெரியோர்களைத் தூஷிப்பது—ஆறில் பந்துக்களைப் பிரிதல்—எழில் வாழ்க்கையில் கெடுதல்—களத்ர தோஷம்—எட்டில் ஏழ்மை, சிறிய ஆயுள், விஷம் அல்லது ஆயுதங்களால் சாவு—ஒன்பதில் தெய்வீகத் தன்மை இல்லாமை—பத்தில் நல்ல பெரும் புகழும்—பதினொன்றில் தன லாபம்—பன்னிரெண்டில் உறக்கமில்லாமை, கெடு நினைவுகள்.

குளிகன் 4, 10 வீடுகளில் சந்திரனுடன் கூடியிருந்தால் தாயுக்குக் கெடுதல். 9, 3-ல் சூரியனுடன் கூடியிருந்தால் தகப்பனுக்குக் கெடுதல்.

## நக்ஷத்திர ஆதிதேவதைகள்

| நக்ஷத்திரங்கள் | வருஷாதி நூல்களில் கூறியிருக்கிறபடி அதி தேவதைகள் | நக்ஷத்ர ஸூக்தத்தில் கூறியிருக்கிறபடி அதிதேவதைகள் |
|---|---|---|
| அசுவனி | ஸரஸ்வதி | அசுவனி |
| பரணி | துர்க்கை | யமன் |
| க்ருத்திகை | அக்னி | அக்னி |
| ரோகிணி | பிரம்மன் | ப்ரஜாபதி |
| மிருகசீரிஷம் | சந்திரன் | சந்திரன் |
| திருவாதிரை | பரமசிவன் | ருத்ரன் |
| புனர்பூசம் | அதிதி | அதிதி |
| பூசம் | ப்ருஹஸ்பதி | குரு |
| ஆயில்யம் | ஆதிசேஷன் | ஸர்ப்பம் |



https://www.facebook.com/ebooksintamil/

Hariram Thejus

www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

| | | |
|---|---|---|
| மகம் | சுக்ரன் | பித்ருக்கள் |
| பூரம் | பார்வதி | பாகா |
| உத்திரம் | சூரியன் | அர்யமான் |
| அஸ்தம் | சாத்தான் | ஸவிதா |
| சித்திரை | விஸ்வகர்மா | ஸ்வஷ்டா |
| ஸ்வாதி | வாயு | வாயு |
| விசாகம் | குமரன் | இந்திராக்னி |
| அனுஷம் | லக்ஷ்மி | மித்ரன் |
| கேட்டை | இந்திரன் | இந்திரன் |
| மூலம் | அசுரர் | நிருதி |
| பூராடம் | வருணன் | விச்வதேவா |
| உத்திராடம் | கணபதி | ப்ரம்மன் |
| திருவோணம் | விஷ்ணு | விஷ்ணு |
| அவிட்டம் | வசுக்கள் | வஸு |
| சதயம் | யமன் | வருணன் |
| பூரட்டாதி | குபேரன் | அஜாயகபத் |
| உத்திரட்டாதி | காமதேனு | அஹிர்புத்ரன் |
| ரேவதி | சனி | பூஷா |

அபிஜித் - ப்ரம்மா

### புருஷ நக்ஷத்திரங்கள் 8

அசுவனி — திருவோணம்
புனர்பூசம் — அனுஷம்
பூசம் — பூரட்டாதி
அஸ்தம் — உத்திரட்டாதி

### ஸ்த்ரீ நக்ஷத்திரங்கள் 16

| | |
|---|---|
| பரணி | சித்திரை |
| கிருத்திகை | ஸ்வாதி |
| ரோகிணி | விசாகம் |
| திருவாதிரை | கேட்டை |
| ஆயில்யம் | பூராடம் |
| மகம் | உத்திராடம் |
| பூரம் | அவிட்டம் |
| உத்தரம் | ரேவதி |

### அலி நக்ஷத்திரங்கள் 3

மிருகசீருஷம், மூலம் சதயம்

### கிரஹங்களின் தத்துவம்

சூரியன், செவ்வாய், குரு — ஆண் கிரஹங்கள்
சந்திரன், சுக்ரன், ராகு — பெண் கிரஹங்கள்



https://www.facebook.com/ebooksintamil/

புதன், சனி, கேது — அலி கிரஹங்கள்.

### கிரஹங்களின் நிறம்

சந்திரன், சுக்ரன் — வெண்மை நிறம்
சூரியன், செவ்வாய், கேது — சிவப்பு நிறம்
புதன் — பச்சை நிறம்
குரு — மஞ்சள் நிறம் - பொன் நிறம்
சனி, ராகு — கருமை நிறம்

### கிரஹங்களின் ஜாதி

குரு, சுக்ரன் — பிராமண ஜாதி
சூரியன், செவ்வாய் — க்ஷத்திரிய ஜாதி
சந்திரன், புதன் — வைசிய ஜாதி
சனி — சூத்திர ஜாதி
ராகு, கேது — சங்கிரம ஜாதி

### கிரஹங்களின் வடிவம்

புதன், குரு, ராகு, கேது — உயரமானவர்
சந்திரன், செவ்வாய், சனி — குள்ளமானவர்
சூரியன், சுக்ரன் — சம உயரமானவர்

### கிரஹ அவயவங்கள்

சூரியன் — தலை
சந்திரன் — முகம், வயிறு



Hariram Thejus
www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

| | | |
|---|---|---|
| செவ்வாய், கேது | — | கை, தோள் |
| புதன் | — | கழுத்து |
| வியாழன் | — | ஹிருதயம் |
| சுக்ரன் | — | மர்ம ஸ்தானம் |
| சனி, ராகு | — | தொடை, பாதம், கணுக்கால் |

### கிரஹங்களின் உலோகப் பொருள்கள்

| | | |
|---|---|---|
| சூரியன் | — | தாமிரம், தம்பாக்கு |
| சந்திரன் | — | ஈயம் |
| செவ்வாய் | — | செம்பு |
| புதன் | — | பித்தளை |
| குரு | — | பொன் |
| சுக்ரன் | — | வெள்ளி |
| சனி | — | இரும்பு |
| ராகு | — | கருங்கல் |
| கேது | — | துருக்கல் |

### கிரஹங்களின், பாஷைகள், கலைகள்.

| | | |
|---|---|---|
| சூரியன், குரு, சுக்ரன் | — | ஹிந்தி, சமஸ்கிருதம், தெலுங்கு, கன்னடம், மலையாளம் |
| செவ்வாய் | — | தெலுங்கு, தமிழ், மஹாராட்டியம் |
| புதன் | — | தமிழ், கணிதம், சிற்பம், ஜோதிஷம் |
| சனி, ராகு, கேது | — | துலுக்கு, அந்நிய பாஷைகள் |

### கிரஹங்களின் ரத்தினங்கள்

| | | |
|---|---|---|
| சூரியன் | — | மாணிக்கம் |
| சந்திரன் | — | முத்து |
| செவ்வாய் | — | பவளம் |
| புதன் | — | பச்சை |
| குரு | — | புஷ்பராகம் |
| சுக்ரன் | — | வைரம் |
| சனி | — | நீலம் |
| ராகு | — | கோமேதகம் |
| கேது | — | வைடூர்யம் |



### கிரஹங்களின் வஸ்திரம்

| | | |
|---|---|---|
| சூரியன் | — | சிவப்பு (ரத்த நிறம்) |
| சந்திரன் | — | வெண்மை (முத்துவெண்மை) |
| செவ்வாய் | — | நல்ல சிவப்பு (பவளநிறம்) |
| புதன் | — | நல்ல பச்சை |
| குரு | — | பொன்னிறமான துணி |
| சனி | — | கறுப்பு |
| ராகு | — | கறுப்புடன் சித்திரங்கள் சம்மந்தம் |
| கேது | — | புள்ளிகளுடைய சிவப்பு (பல நிறங்கள்) |
| சுக்ரன் | — | பட்டு போன்ற வெண்மை |

### கிரஹங்களின் தூபதீபம்

| | | |
|---|---|---|
| சூரியன் | — | சந்தணம் |
| சந்திரன் | — | சாம்பிராணி |
| செவ்வாய் | — | குங்கிலியம் |
| புதன் | — | சற்பூரம் |
| குரு | — | ஆம்பல் |
| சுக்ரன் | — | லவங்கம் |
| சனி | — | கருங்காலி |
| ராகு | — | கடுகு |
| கேது | — | செம்மரம் |

### கிரஹங்களின் வாகனங்கள்

| | | |
|---|---|---|
| சூரியன் | — | மயில், தேர் |
| சந்திரன் | — | முத்து விமானம் |
| செவ்வாய் | — | (அன்னம்) செம்போத்து, சேவல் |
| புதன் | — | குதிரை, நரி |
| குரு | — | யானை |
| சுக்ரன் | — | (கருடன்) குதிரை, மாடு, விமானம் |
| சனி | — | காக்கை, எருமை |
| ராகு | — | ஆடு |
| கேது | — | சிம்மம் |

### கிரஹ மறைவு ஸ்தானங்கள் - சிறப்பு விதி

சூரியன், செவ்வாய், சனி, ராகு, கேது — லக்னத்துக்கு 8, 12-ல் இருந்தால் மறைவு.

சந்திரன், புதன், குரு — லக்னத்துக்கு 3, 6, 8, 12-ல் இருந்தால் மறைவு.



https://www.facebook.com/ebooksintamil/
Hariram Thejus
www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

சுக்ரன், லக்னத்துக்கு 3, 8-ல் மட்டும் இருந்தால் மறைவு. 6, 12-ல் இருந்தால் மறைவு இல்லை.

## கிரஹங்களின் சமித்துக்கள்

| | | |
|---|---|---|
| சூரியன் | — | எருக்கு |
| சந்திரன் | — | முருக்கு |
| செவ்வாய் | — | கருங்காலி |
| புதன் | — | நாயுருவி |
| குரு | — | அரசு |
| சுக்ரன் | — | அத்தி |
| சனி | — | வன்னி |
| ராகு | — | அறுகு |
| கேது | — | தர்ப்பை |

## கிரஹங்களின் சுவைகள்

| | | |
|---|---|---|
| சந்திரன் | — | உப்பு |
| குரு | — | தித்திப்பு |
| சுக்ரன் | — | புளிப்பு |
| சூரியன் | — | கார்ப்பு |
| செவ்வாய் | — | எரிப்பு, உறைப்பு |
| புதன் | — | உவர்ப்பு |
| சனி | — | கைப்பு |
| ராகு | — | கைப்பு |
| கேது | — | உறைப்பு |

## கிரஹங்களின் பஞ்சபூத கிரஹங்கள்

| | | |
|---|---|---|
| சந்திரன், சுக்ரன் | — | அப்புக் கிரஹம் |
| செவ்வாய் | — | பிருதிவிக் கிரஹம் |
| குரு, சூரியன் | — | தேயுக் கிரஹம் |
| புதன் | — | வாயு கிரஹம் |
| சனி, ராகு, கேது | — | ஆகாய கிரஹம் |

## கிரஹங்களின் நாடி

| | | |
|---|---|---|
| குரு, புதன், சனி | — | வாத நாடி |
| சூரியன், செவ்வாய், ராகு, கேது | — | பித்த நாடி |
| சுக்ரன், சந்திரன் | — | சிலேஷ்ம நாடி |



## கிரஹங்களின் திக்குகள்

| | | |
|---|---|---|
| சூரியன் | — | கிழக்கு |
| சந்திரன் | — | வாயுமூலை (வடமேற்கு) |
| செவ்வாய் | — | தெற்கு |
| புதன் | — | வடக்கு |
| சுக்ரன் | — | ஆக்னேயம் (தென்கிழக்கு) |
| குரு | — | ஈசான்யம் (வடகிழக்கு) |
| சனி | — | மேற்கு |
| ராகு | — | தென்மேற்கு |
| கேது | — | வடமேற்கு |

## கிரஹங்களின் அதிதேவதை

| | | |
|---|---|---|
| சூரியன் | — | சிவன் |
| சந்திரன் | — | பார்வதி |
| செவ்வாய் | — | சுப்ரமண்யர் |
| புதன் | — | விஷ்ணு |
| குரு | — | பிரம்மா, தக்ஷிணாமூர்த்தி |
| சுக்ரன் | — | லக்ஷ்மி, (இந்திரன்), வருணன் |
| சனி | — | யமன், சாஸ்தா |
| ராகு | — | காளி, துர்கை, கருமாரியம்மன் |
| கேது | — | விநாயகர், சண்டிகேச்வரர் |

## கிரஹங்கள் ராசியில் சஞ்சரிக்கும் கால அளவுகள்

**சூரியன்** ஒவ்வொரு ராசியிலும் 1 மாதம் சஞ்சரிப்பான்.
**சந்திரன்** ஒவ்வொரு ராசியிலும் $2\frac{1}{4}$ நாள் சஞ்சரிப்பான்.
**செவ்வாய்** ஒவ்வொரு ராசியிலும் $1\frac{1}{2}$ மாதங்கள் சஞ்சரிப்பான்
**புதன்** ஒவ்வொரு ராசியிலும் 1 மாதம் சஞ்சரிப்பான்.
**குரு** ஒவ்வொரு ராசியிலும் 1 வருஷம் சஞ்சரிப்பான்.
**சனி** ஒவ்வொரு ராசியிலும் $2\frac{1}{2}$ வருஷங்கள் சஞ்சரிப்பான்.
**ராகு** ஒவ்வொரு ராசியிலும் $1\frac{1}{2}$ வருஷங்கள் சஞ்சரிப்பான்.
**கேது** ஒவ்வொரு ராசியிலும் $1\frac{1}{2}$ வருஷங்கள் சஞ்சரிப்பான்.
**சுக்ரன்** ஒவ்வொரு ராசியிலும் 1 மாதம் சஞ்சரிப்பான்.
(வக்ரம், அதிசாரம், ஸ்தம்பனம்காரணமாகராசியில் சஞ்சார கால அளவுகள் மாறும்)



https://www.facebook.com/ebooksintamil/
Hariram Thejus
www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

## கிரஹத் தன்மை (சர—ஸ்திர—உபயம்)

| | |
|---|---|
| செவ்வாய், சந்திரன், ராகு, கேது | — சரக் கிரஹங்கள் |
| சூரியன், சுக்ரன் | — ஸ்திரக் கிரஹம் |
| புதன், குரு, சனி | — உபயக் கிரஹம் |

## கிரஹங்களின் குணம்

| | |
|---|---|
| சந்திரன், குரு | — சாத்மீகம் |
| சுக்ரன், செவ்வாய் | — ராஜஸம் |
| சனி, புதன், ராகு, கேது, சூரியன் | — தாமஸம் |

## கிரஹங்களின் ஆட்சி, உச்சம், நீசம், மூலதிரிகோணம்

| கிரஹம் | ஆட்சி | உச்சம் | நீசம் | மூலதிரி கோணம் |
|---|---|---|---|---|
| சூரியன் | சிம்மம் | மேஷம் | துலாம் | சிம்மம் |
| சந்திரன் | கடகம் | ரிஷபம் | விருச்சிகம் | ரிஷபம் |
| செவ்வாய் | மேஷம், விருச்சிகம் | மகரம் | கடகம் | மேஷம் |
| புதன் | மிதுனம், கன்னி | கன்னி | மீனம் | கன்னி |
| குரு | தனுசு, மீனம் | கடகம் | மகரம் | தனுசு |
| சுக்ரன் | ரிஷபம், துலாம் | மீனம் | கன்னி | துலாம் |
| சனி | மகரம், கும்பம் | துலாம் | மேஷம் | கும்பம் |
| ராகு | கன்னி | ரிஷபம் | விருச்சிகம் | ரிஷபம் |
| கேது | மீனம் | விருச்சிகம் | ரிஷபம் | விருச்சிகம் |



https://www.facebook.com/ebooksintamil/

## கிரஹங்களின் நட்பு வீடுகள்

| | |
|---|---|
| சூரியன் | — விருச்சிகம், தனுசு, கடகம், மீனம். |
| சந்திரன் | — மிதுனம், சிம்மம், கன்னி. |
| செவ்வாய் | — சிம்மம், தனுசு, மீனம். |
| புதன் | — ரிஷபம், சிம்மம், துலாம். |
| குரு | — மேஷம், சிம்மம், கன்னி, விருச்சிகம். |
| சுக்ரன் | — மிதுனம், தனுசு, மகரம், கும்பம் . |
| சனி | — ரிஷபம், மிதுனம். |
| ராகு, கேது | — மிதுனம், கன்னி, துலாம், தனுசு, மகரம், மீனம். |

## கிரஹங்களின் பகை வீடுகள்

| | |
|---|---|
| சூரியன் | — ரிஷபம், மகரம், கும்பம். |
| செவ்வாய் | — மிதுனம், கன்னி. |
| புதன் | — கடகம், விருச்சிகம். |
| குரு | — ரிஷபம், மிதுனம், துலாம். |
| சுக்ரன் | — கடகம், சிம்மம், தனுசு. |
| சனி | — கடகம், சிம்மம், விருச்சிகம். |
| ராகு, கேது | — கடகம், சிம்மம். |
| சந்திரன் | — எல்லா வீடுகளும் நட்பு (பகை கிடையாது). |

## கிரஹங்களின் பார்வை

எல்லா கிரஹங்களும் தான் இருக்கும் இடத்திலிருந்து 7-வது வீட்டைப் பார்ப்பார்கள்.

செவ்வாய், தான் இருக்கும் இடத்திலிருந்து 4, 7, 8 வீடுகளைப் பார்க்கும் தன்மை உண்டு. (4-ம், 8-ம் விசேஷப் பார்வை)

குரு, தான் இருக்கும் இடத்திலிருந்து 5, 7, 9 வீடுகளைப் பார்ப்பார் (5-ம், 9-ம் விசேஷப் பார்வை)

சனி, தான் இருக்கும் இடத்திலிருந்து 3, 7, 10 ஆகிய வீடுகளைப் பார்ப்பார். (3-ம், 10-ம் விசேஷப் பார்வை)

## கிரஹங்களின் மார்க்கம்

சூரியன், சந்திரன், செவ்வாய், குரு, சனி, புதன், சுக்ரன் ஆகிய 7 கிரஹங்களும் ராசியைப் பிரதக்ஷிணமாகச் சுற்றி வருவார்கள் (clockwise).

ராகு, கேது கிரஹங்கள் எதிர்ப்புறமாகச் சஞ்சாரம் செய்வார்கள் (anti-clockwise).



Hariram Thejus

www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

## கிரஹங்கள் பலன் தரும் காலங்கள்

சூரியன், செவ்வாய் கிரஹங்கள் ஆரம்ப காலத்திலேயே பலன்களைக் கொடுப்பார்கள்.

சந்திரன், புதன் கிரஹங்கள் அவர்கள் காலம் முழுவதும் பலன்களைக் கொடுப்பார்கள்.

குருவும், சுக்ரனும் அவர்களுடைய காலத்தின் மத்தியில் பலன்களைக் கொடுப்பார்கள்.

சனி, ராகு, கேது (பிற்கூறிலே) பலனைக் கொடுப்பார்கள்.

## அடுத்த ராசிகளின் பார்வை

கிரஹங்கள் ஒரு ராசியில் சஞ்சரித்துக்கொண்டிருக்கும்போது, அதை விட்டுப் போவதற்குமுன்பே அடுத்த ராசிகளைப் பார்ப்பார்கள். கிரஹங்கள், தாங்கள் இருக்கும் ராசியிலிருந்து அடுத்த ராசிக்கு மாறுமுன், அந்தந்த அடுத்த ராசியின் குண விசேஷங்களை முன்னதாகவே அடையப்பெற்று, அதற்குத் தகுந்தவாறு அடுத்த ராசியின் பலாபலன்களை ஜாதகருக்கு கொடுக்க ஆரம்பித்துவிடுவார்கள். அதாவது,

| | | |
|---|---|---|
| சூரியன் | — | 5 நாள் |
| புதன், சுக்ரன் | — | 7 நாள் |
| செவ்வாய் | — | 8 நாள் |
| குரு | — | 2 மாதம் |
| ராகு-கேது | — | 3 மாதம் |
| சனி | — | 6 மாதம் |

ராகு கேது இவைகள் கிரஹங்கள் அல்ல. இவைகள் சாயா கிரஹங்கள். சூரியன், சந்திரன் வானத்தில் சஞ்சாரம் செய்யும் பாதைகள் குறிக்கிடும் இடங்கள் (Nodes). இப்புள்ளிகள் அப்பிரதட்சணமாகச் சுற்றும். வராஹமிஹிரன் தான் எழுதிய பிரஹத் ஜாதகம் என்ற ஆதிகால நூலில் ராகு கேதுகளை கிரஹங்களாகக் குறிப்பிடவில்லை. மற்ற ஏழு கிரஹங்களை வைத்துதான் ஜோதிடப் பலன்களை கூறியுள்ளார். அவருக்குப்பிறகு தோன்றிய ஜோதிட மேதைகள்தான் ராகு கேதுகளையும் சேர்த்து ஒன்பது கிரஹங்களாகக் கருதி பலன்களைச் சொல்லியுள்ளார்கள். ராகு கேது எப்பொழுதும் ஒன்றுக்கொன்று சமசப்தமத்தில் அதாவது 180° பாகைகளில் இருக்கும். ராகு கேதுகளுக்கு சொந்த வீடும் கிடையாது; பார்வைகளும் இல்லை எனப் பலர் கருதுகிறார்கள். இக்கிரஹங்கள் எந்த ராசியில் உள்ளனவோ, எந்த கிரஹத்தோடு கூடி உள்ளனவோ அல்லது எந்த கிரஹங்களின் பார்வைகளைக் கொண்டு உள்ளனவோ அக்கிரஹங்களின் தத்துவங்களைக் கொண்டுதான் பலாபலன்களை அளிப்பார்கள்.



https://www.facebook.com/ebooksintamil/

க்ஷீர சாகரம் என்னும் பாற்கடலைத் தேவர்களும் அரக்கர்களும் கடைந்து அமிர்தம் எடுத்தார்கள் எனப் புராணம் சொல்கிறது. அப்பொழுது ஓர் அரக்கன் தேவவுருவில் வ்ந்து அமிர்தத்தை விஷ்ணுவிடம் பெற்றான். மாறுவேடத்தில் வந்த அரக்கனை சூரிய சந்திரர்கள் விஷ்ணுவிற்குக் காட்டிக் கொடுத்தார்கள். அதன் பேரில் திருமால் தன் சக்ராயுதத்தால் அரக்கன் சிரத்தைத் துண்டிக்க, சிரம் ராகுவாகவும் உடல் கேதுவாகவும் ஆயிற்றென பெரியோர் கூறுவர். சூரிய சந்திரர்கள் தன்னைக் காட்டிக் கொடுத்ததால் இவர்களுக்கு ராகு கேதுவினால் பலத்த பகைமை ஏற்படுகிறது. இந்த சாயா கிரஹங்களுடன் சேர்ந்த எந்த கிரஹமும் தோஷத்தை அடைகிறது. முக்கியமாக சூரியனுக்கு ராகுவும் சந்திரனுக்குக் கேதுவும் பலத்த தோஷம் உண்டாக்குகின்றன.

## ராசிகளின் இயற்கை

மேஷம்—சரராசி—ஒற்றை—ஆண்—சிரோதயம்

ரிஷபம்—ஸ்திர ராசி—இரட்டை—பெண்—பிருஷ்டோதயம்

மிதுனம்—உபய ராசி—ஒற்றை—ஆண்—சிரோதயம்

கடகம்—சர ராசி—இரட்டை—பெண்—பிருஷ்டோதயம்

சிம்மம்—ஸ்திர ராசி—ஒற்றை—ஆண்—சிரோதயம்

கன்னி—உபய ராசி—இரட்டை—பெண்—சிரோதயம்

துலாம்—சரராசி—ஒற்றை—ஆண்—சிரோதயம்

விருச்சிகம்—ஸ்திர ராசி—இரட்டை—பெண்—பிருஷ்டோதயம்

தனுசு—உபயராசி—ஒற்றை—ஆண்—பிருஷ்டோதயம்

மகரம்—சர ராசி—இரட்டை—பெண்—பிருஷ்டோதயம்

கும்பம்—ஸ்திரராசி—ஒற்றை—ஆண்—சிரோதயம்

மீனம்—உபயராசி—இரட்டை—பெண்—சிரோதயமும், பிருஷ்டோதயமும்

**ஒரு ராசிக்கு 30 பாகைகள். ராசிகள் 12-க்கும் சேர்ந்து 360° டிக்ரி அல்லது 360 பாகைகள்.**



Hariram Thejus
www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

## உடு மகாதசை

| நக்ஷத்திரங்கள் | தசாநாதன் | வருடங்கள் |
|---|---|---|
| கிருத்திகை, உத்திரம், உத்திராடம் | சூரியன் | 6 |
| ரோகிணி, ஹஸ்தம், திருவோணம் | சந்திரன் | 10 |
| மிருகசீர்ஷம், சித்திரை, அவிட்டம் | செவ்வாய் | 7 |
| திருவாதிரை, சுவாதி, சதையம் | ராகு | 18 |
| புனர்பூசம், விசாகம், பூரட்டாதி | குரு | 16 |
| பூசம், அனுஷம், உத்திரட்டாதி | சனி | 19 |
| ஆயில்யம், கேட்டை, ரேவதி | புதன் | 17 |
| மகம், மூலம், அசுவினி | கேது | 7 |
| பரணி, பூரம், பூராடம் | சுக்ரன் | 20 |

உதாரணம்:—

ஒருவர் விசாகத்தில் பிறந்தால்—குருதசை ஆரம்பம். பிறகு சனி தசை என்று வரிசைக் கிரமமாகத் தெரிந்துகொள்ளலாம்.

## புக்தி, அந்தரம்

ஒவ்வொரு தசை நடக்கும்போது ஒன்பது கிரஹங்களும் அதில் பங்குகொள்கிறார்கள். அவர்களுடைய காலத்தில் அந்தக் கிரஹங்கள் **புக்தி நாதர்கள்** என்று பெயர் கொள்கிறார்கள்.

ஒவ்வொரு புக்தியிலும் ஒன்பது கிரஹங்களும் பங்கு கொள்கிறார்கள். அவைகளை **அந்தரங்கள்** என்று கூறவேண்டும்.

32-வது பக்கம் முதல் கொடுக்கப்பட்டிருக்கும் தெசா, புக்தி, அந்தரங்கள் அட்டவணையிலிருந்து இதை அறிந்துகொள்ளலாம். ஒவ்வொரு பக்கத்திலும் உள்ள 9 கட்டங்களில் உள்ளவை அந்த அந்த புக்தியில் அடங்கிய 9 கிரஹங்களின் அந்தரகாலங்கள் என்பதை அறியவும்.

இந்த தெசாபுக்தி அந்தரங்களிலிருந்து ஜாதகங்களின் பலனை அறிந்து, அவரவர்கள் எதிர்கால வாழ்க்கையில் நடக்க முயலவேண்டும். கிரஹங்களின் கெடுதல்களை அறிந்து அதற்கு வேண்டிய சாந்தி, பரிஹாரங்கள் செய்து மக்களெல்லோரும் நற்பலனைப் பெறுவார்களாக.



Hariram Thejus

https://www.facebook.com/ebooksintamil/

# ஜாதகம் கணிக்கும் வழி

## லக்னம் என்றால் என்ன ?

லக்னம் என்பது ஒரு குழந்தை பிறந்த குறிப்பிட்ட காலத்திற்குப் பெயர். அதைச் சற்று விளக்குவோம்.

ராசி என்பது 12 சமபாகமாகப் பிரிக்கப்பட்ட பூமண்டலத்தின் பாகம். சூரியனும் மற்ற கிரகங்களும் கிழக்கிலிருந்து மேற்குப் பக்கமாகச் சுற்றுகின்றன. அதே சமயத்தில் மேஷாதி 12 ராசிகளைச் சமபாகமாகக் கொண்ட பூமண்டலமானது மேற்கிலிருந்து கிழக்குப் பக்கமாகச் சுற்றுகிறது. அப்படிச் சுற்றும்பொழுது பூமண்டலத்தின் எந்தப் பாகம் கிழக்கில் நமக்கு நேராக வருகிறதோ அந்த ராசிக்கு லக்னம் என்று பெயர்.

அதாவது, அந்த நேரத்தில் பிறந்த குழந்தைக்கு அந்த ராசியை லக்கினமென்று சொல்வார்கள். மற்றும் அப்பொழுது கிரஹங்கள் எந்த எந்த ராசியில் இருக்கின்றனவோ, அதையும் குறித்துவைத்துக் கொள்வார்கள். இதெல்லாம் சேர்ந்ததற்கே ஜாதகச் சக்கரம் அல்லது **ராசிச் சக்கரம்** என்று பெயர்.

இனி லக்னம், கிரஹநிலை, தசாபுக்தி ஆகியவற்றைக் கணிக்கும் வழியை ஓர் உதாரண மூலமாக விளக்குவோம்—

## உதாரண ஜாதகம்

விகாரி ஹு தை மாதம் 9-ஆம் தேதி வெள்ளிக்கிழமை, சுவாதி நக்ஷத்திரம் 29-27 மறுநாள் விசாகம் 25-42(23-1-1960 @ 5-40 A.M. . . . .) இரவு மணி 5-40க்கு (சனிக்கிழமை விடியற்காலை) **சென்னையில்** ஓர் ஆண் குழந்தை பிறந்ததை வைத்துக் கொண்டு, அதற்கு ஜாதகம் கணிக்கும் விதத்தையும் கிரகங்களை அமைக்கும் வழியையும் தசா புக்திகள் கணிக்கும் விதத்தையும் கீழே விளக்குவோம்.

ஒரு ஜாதகம் கணிக்குமுன் கீழ்க்கண்ட அம்சங்களை முக்கியமாகத் தெரிந்துகொள்ள வேண்டும் :

1. குழந்தை எத்தனையாவது அட்சாம்சத்தில் உள்ள ஊரில் பிறந்தது?
2. அந்த அட்சாம்ச ரேகைக்குத் தக்கபடி மேஷாதி ராசிப் பிரமாணங்கள் என்ன?
3. குழந்தை ஜனனமான தேதியில் அது பிறந்த ஊரில் சூரிய உதயம், எத்தனை மணி, எத்தனை நிமிஷத்துக்கு நிகழ்ந்தது?
4. சூரியோதயம் முதல் குழந்தை பிறந்தது வரையில் எத்தனை நாழிகை எத்தனை விநாடிகள் சென்றன.
5. சிசு பிறந்த நட்சத்திரத்தின் மொத்த நாழிகை என்ன?



www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

இவற்றைப் பஞ்சாங்கத்தின் உதவியால் முக்கியமாகக் குறித்து வைத்துக்கொண்டால் சுலபமாக ஜாதகம் கணித்துவிடலாம்.

## 1. சூரிய உதயம்

இந்தக் குழந்தை சென்னையில் பிறந்தது.

சென்னையில் அட்சாம்சம் 13. சென்னையில் அன்றையசூரிய உதயம் 6-39. தை மீ 9-ஆம் தேதி வெள்ளிக்கிழமை. குழந்தை விடியற்காலை மணி 5-40க்குப் பிறந்தது. அதாவது சனிக்கிழமை உதயத்துக்கு முன் 0-59 நிமிஷங்களுக்கு முன்னதாகப் பிறந்துள்ளது. நம் நாட்டு வழக்கப்படி சூரிய உதயத்திலிருந்து அடுத்த சூரிய உதயம் வரையில் ஒரு நாள் என்று கணக்கிடப்படும்.

## 2. உதயாதி ஜனன நாழிகை

வெள்ளிக்கிழமை சூரியஉதயம் முதல் குழந்தை பிறந்த நாழிகை விநாடிகள் வரையில் கணக்கிட வேண்டும். அது முதல் சனிக்கிழமை விடியற்காலை 5-40 வரையில் 23 மணி 1 நிமிஷம் ஆகும். மணி ஒன்றுக்கு 2½ நாழிகை வீதம் கணக்கிட. 57 நாழிகை 33 விநாடிகள் வரும். ஆகையால், வெள்ளிக்கிழமை சூரிய உதயாதி நாழிகை 57-33-க்கு அந்தக் குழந்தையின் ஜனனம் என்று அறிய வேண்டும்

**குறிப்பு:**—சூரிய உதயம் ஒவ்வொரு நாளும் காலை 6—00 மணிக்கே நிகழ்வதில்லை. காலை 5—39 முதல் 6—39க்கு இடையிலான காலத்தில் நாளுக்கு நாள் வித்தியாசமாக சூரியோதயம் ஆகிக்கொண்டிருக்கும். அதேபோல் இடத்திற்கு இடம் சூரியோதய காலம் மாறுபடும்.

உதாரணமாக, சென்னையில் காலை 6—01க்குச் சூரியோதயமென்றால், ராமேசுவரத்தில் அதே தினத்தில் 6—09 க்குச் சூரியோதயம் ஆகும்.

ஆகவே, ஒரு குறிப்பிட்ட ஜாதகத்தை கணிப்பதற்கு முன், அந்தக் குழந்தை பிறந்த ஊரில் சூரியோதயம் எப்பொழுது நிகழ்ந்தது என்பதைப் பஞ்சாங்கங்கள் மூலம் துல்லியமாகத் தெரிந்து கொள்ளவேண்டும்.

## அட்சாம்சங்களும் ராசிப் பிரமாணமும்

மேஷம் முதல் மீனம் வரையிலான 12 ராசிகளை 360 சம பாகங்களாக (அதாவது ராசி ஒன்றுக்கு 30 பாகைகள் வீதம்) பிரித்திருக்கிறார்கள். இவற்றுக்கு அட்சாம்சம் (*Latitude*) என்று



Hariram Thejus

பெயர். பூமி முழுவதும் இந்த அட்சாம்ச ரேகைகளின் மீதே இருக்கிறது. அந்த அந்த அட்சாம்சங்களிலுள்ள பட்டணங்களுக்கு வெவ்வேறு ராசிமான சங்கியைகள் (அதாவது ராசியளவு நாழிகை, விநாடிகள்) ஏற்பட்டுள்ளன.

இந்த அட்சாம்சங்களை அநுசரித்தே மேஷாதி ராசிகளின் கால அளவை அறிய வேண்டும். உதாரணமாக, சென்னையும், அதைச் சுற்றி சுமார் 100 மைல்களுக்கு உட்பட்ட பிரதேசங்களும் 13-ஆவது அட்சாம்சத்தில் இருக்கின்றன. ஆகையால், இந்த 13-வது அட்சாம்சத்தைச் சேர்ந்த இடங்களுக்கு மேஷ ராசிப் பிரமாணம் 4 நாழிகை 29 விநாடிகள் என்றால், இதே மேஷ ராசிக்கு 9-ஆவது அட்சாம்சத்தில் இருக்கும் ராமேசுவரத்துக்கு 4-37 விநாடியாகும். அதாவது சென்னையைக் காட்டிலும் 2 விநாடி குறைவு. (45-வது பக்கம் அட்டவணை 2-ஐ கவனிக்க).

இம்மாதிரி, இடத்துக்கு இடம் மேஷாதி ராசிப் பிரமாணங்கள் மாறுபடும். ஆகையால், ஒரு குழந்தை பிறந்த இடம் எந்த அட்சாம்சத்தைச் சேர்ந்ததோ அந்த அட்சாம்சத்துக்குரிய மேஷாதி ராசிப் பிரமாணங்களைச் சூரியோதயம் தொடங்கி, குழந்தையின் ஜன்ன காலம் வரையில் கூட்டி லக்னத்தை அறிய வேண்டும். இதைக் கவனிக்காவிட்டால் சரியான ஜாதகம் கணிக்க இயலாது.

## 3. உதயலக்ன சேஷம்

சூரியன் உதயகாலத்தில் எந்த ராசியில் இருக்கிறானோ, அதுவே உதயலக்னம் என்று கூறப்படும். மேற்படி உதய லக்ன நாழிகை ஒவ்வொரு நாளும் சூரியோதய காலத்தில் குறைந்து கொண்டே வரும். அதாவது, தமிழ் மாதமான சித்திரை மாதத்தின் முதல் தேதியன்று சூரிய உதய காலத்தில் மேஷ ராசியில் இருப்பு 13-வது அட்சாம்சத்தைச் சேர்ந்த சென்னைக்கு 4-29 என்றால் 2-ஆம் தேதி மேஷத்தின் இருப்பு 4-20. இம்மாதிரி ஒவ்வொரு தேதிக்கும் சூரிய உதய காலத்தில் 0-9 விநாடி வீதம் கழித்துக்கொண்டே போக வேண்டும். இது பஞ்சாங்கத்தில் ராசி இருப்பு என்ற தலைப்பில் இருக்கும்.

அப்படிக் கழித்தது போக மீதி நாழிகை விநாடியே உதய லக்ன சேஷமாகும்.

## 4. ஜன்ம லக்னம்

பிறகு ஜனன கால நாழிகை விநாடிகள் வரும்வரை ஒவ்வொரு ராசியாகக் கூட்டிக்கொண்டே போனால், எந்த ராசிப் பிரமாணத்தில் ஜனன கால நாழிகை அடங்குமோ அதுவே அந்தக் குழந்தையின் ஜன்ம லக்னம் என்று அறிய வேண்டும்.



https://www.facebook.com/ebooksintamil/

www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

## லக்னம் கணிக்கும் வழி

இந்தக் குழந்தை பிறந்தது தை மாதம் 9-ஆம் தேதி இரவு. ஆகையால் தை மாதம் 9-ஆம் தேதிக்குச் சரியாக (தை மாதத்திற் சூரிய) மகரராசியின் சேஷத்தைப் பஞ்சாங்கத்தில் உள்ளபடி குறித்துக் கொள்ளவேண்டும். அதன் கீழ் கும்பம் தொடங்கி ஜனன கால நாழிகை வரும் வரையில் ராசிமான சங்கியைகளை எழுதிக் கூட்டிக்கொள்ள வேண்டும். அதாவது: தை 9-ஆம் தேதி சூரிய உதயத்தில்—

| | | | நா.-வி |
|---|---|---|---|
| (உதயலக்னம்) | மகர சேஷம் | .. | 3-32 |
| | கும்பம் | .. | 4-17 |
| | மீனம் | .. | 4-11 |
| | மேஷம் | .. | 4-29 |
| | ரிஷபம் | .. | 5-04 |
| | மிதுனம் | .. | 5-27 |
| | கடகம் | .. | 5-22 |
| | சிம்மம் | .. | 5-08 |
| | கன்னி | .. | 5-04 |
| | துலாம் | .. | 5-16 |
| | விருச்சிகம் | .. | 5-28 |
| | தனுசு ஆரம்ப நாழிகை | .. | 53-18 |

தனுசு — 5-19 சேர்த்து ——— 58-37

ஜனன கால நாழிகையான 57-33, மேற்கண்ட தனுசு ராசி வரையிலுள்ள 58-37க்கு உட்பட்டிருப்பதால், இந்தக் குழந்தை தனுர் லக்னத்தில் பிறந்ததாகும். அதாவது குழந்தையின் ஜன்ம லக்னம் தனுசு என்று அறிய வேண்டும். இனி அந்தக் குழந்தையின் ஜனன காலத்தில் கிரகங்கள் எந்த பாதசாரத்தில் இருந்தன என்பதைக் கவனிப்போம் :—

பஞ்சாங்கத்தில் **கிரகபாதசாரங்கள்** என்னும் அட்டவணையில் கண்டபடி, தை மாதம் 9-ஆம் தேதி கிரகங்கள் கீழ்க்கண்ட வகையில் நக்ஷத்திர பாதங்களில் சஞ்சரிக்கின்றன :—

| கிரகம் | நக்ஷத்திரம் | பாதம் | ராசி | நவாம்சம் |
|---|---|---|---|---|
| சூரியன் | உத்திராடம் | 4 | மகரம் | மீனம் |
| சந்திரன் | விசாகம் | 2 | துலாம் | ரிஷபம் |
| செவ்வாய் | மூலம் | 4 | தனுசு | கடகம் |



| கிரஹம் | நக்ஷத்திரம் | பாதம் | ராசி | நவாம்சம் |
|---|---|---|---|---|
| புதன் | உத்திராடம் | 3 | மகரம் | கும்பம் |
| குரு | மூலம் | 1 | தனுசு | மேஷம் |
| சுக்கிரன் | மூலம் | 1 | தனுசு | மேஷம் |
| சனி | பூராடம் | 2 | தனுசு | கன்னி |
| ராகு | உத்திரம் | 3 | கன்னி | கும்பம் |
| கேது | உத்திரட்டாதி | 1 | மீனம் | சிம்ஹம் |

## 5. நவாம்ச லக்னம்

நவாம்ச லக்னம் என்பது ஜன்ம லக்னத்தில் 9-ல் ஒரு பங்கு என்று பொருள். அதாவது ஜன்ம லக்னம் தனுசு, அதன் நிராயன ராசிமானம் சென்னைக்கு 5 நாழி 19 விநாடி அல்லது 319 விநாடி. இதை 9-ஆல் வகுக்க ஒரு பாகம் $35^4/_9$. குழந்தை பிறந்த நேரம் 57 நாழி 33 விநாடி. தனுர் லக்னம் ஆரம்பம். 53 நாழி 18 விநாடி. தனுர் லக்னம் பிறப்பு வரை சென்றது 57 நாழி 33 விநாடி — 53 நாழி 18 விநாடி (57-33—53-18) 4 நாழி 15 விநாடி அல்லது 255 விநாடி. இதை 35 $^4/_9$-ஆல் வகுக்க 8வது பாகத்தில் அமையும். ஆக நவாம்ச லக்னம்- மேஷம் முதல் கணக்கிட விருச்சிக லக்னம் வரும்.

35) 255 (7
245
10

மற்ற லக்னங்களுக்கு நவாம்ச லக்னம் போடுவது எப்படி என்பதை கீழே விளக்கியுள்ளோம்.

| | | |
|---|---|---|
| மேஷம், சிம்மம், தனுசு | - | ஜன்ம லக்னமானால் - மேஷம் முதல் கணக்கிட வேண்டும் |
| ரிஷபம், கன்னி, மகம் | - | ஜன்ம லக்னமானால் - மகம் முதல் கணக்கிட வேண்டும் |
| மிதுனம், துலாம், கும்பம் | - | ஜன்ம லக்னமானால் - துலாம் முதல் கணக்கிட வேண்டும் |
| கடகம், விருச்சிகம், மீனம் | - | ஜன்ம லக்னமானால் - கடகம் முதல் கணக்கிட வேண்டும் |



https://www.facebook.com/ebooksintamil/

Hariram Thejus

www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

## 6. ஜந்மநக்ஷத்ரம் ஆத்யந்தம்

இனி ஜன்ம நட்சத்திரத்தின் ஆதியந்த நாழிகைகளையும் ஜனனகால தசாசேஷத்தையும் கணிப்போமாக :

தை மாதம் 9-ஆம் தேதி வெள்ளிக்கிழமை சூரியோதயத்திலிருந்து 29-27 நாழிகை வரை சுவாதி நக்ஷத்திரம் இருக்கிறது. பிறகு விசாக நக்ஷத்திரம் ஆரம்பம். ஜாதகன் சூரிய உதயாதி 57 நாழிகை 33 விநாடிகளுக்குப் பிறந்திருப்பதால் சுவாதி கழிந்து விசாக நக்ஷத்திரத்தில் ஜனனம் என்று தெரிகிறது. இனி விசாக நக்ஷத்திரத்தின் ஆத்யந்த பரம நாழிகை - அதாவது மொத்த நாழிகை என்ன என்று தெரிந்தால் தசாசேஷம் கணிக்கலாம். ஒரு தினத்துக்கு 60-00 நாழிகைகள். அதில் 9-ஆம் தேதி சுவாதி இருப்பு 29-27 போக, அன்றைதினம்—

விசாக நக்ஷத்திரம். 30-33.

மறுநாள் தை 10-ஆம் தேதி விசாகம் (பஞ்சாங்கத்தில் உள்ளபடி) 25-42. ஆகையால், இவைகள் இரண்டையும்கூட்ட விசாகம் மொத்த நாழிகை 56-15 ஆகும்.

| | |
|---|---|
| ஜனன நாழிகை | 57-33 |
| அன்று சுவாதி செல்லு | 29-27 |
| 9-ஆம் தேதி விசாகத்தில் செல்லு | 28-06 |
| விசாகம் மொத்தம் (அ) ஆத்யந்த பரம நாழிகை | 56-15ல் |
| | 28-09 ஐக் கழிக்க |
| ஜனன காலத்தில் விசாகம் இருப்பு | 28-09 |

## 7. ஜனனகால தசாசேஷம்

ஆகையால், மேற்கண்ட விசாக நக்ஷத்திரத்தின் சேஷம் 28 நாழிகை, 9 விநாடிகளுக்கு தசாசேஷம் கணிக்க வேண்டும்.

முன்பு குறிப்பிட்டபடி விசாக நட்சத்திரத்துக்கு குருதசை ஆரம்பம். குரு தசை 16 வருஷங்கள். விசாக நட்சத்திரம் மொத்தம் நாழிகை 56-15க்கு 16 வருஷங்களானால் விசாகத்தில் மீதியுள்ள 28-09க்குத் தசாசேஷம் என்ன என்பதைக் கீழ்க்கண்ட விதமாகக் கணிக்கலாம்.



அதாவது,

1\. விசாகம் மொத்த நாழிகை 56-15 × 60

3360 விநாடிகள்
15

மொத்தம் 3375 விநாடிகள்

2\. விசாகம் செல்லு போக இருப்பு 28-09 × 60

1680
9

1689 விநாடிகள்

விசாகம் குருவின் நக்ஷத்திரம். ஜனன காலதசை குருதசை. ஆகவே, மேற்கண்ட இருப்பு விநாடிகளைக் குரு தசா வருஷமான 16 ஆல் பெருக்கவேண்டும். அந்த மொத்தத்தை விசாகம் மொத்த விநாடிகளால் வகுக்க தசாசேஷ வருடங்கள் வரும். மீதியை 12-ஆல் பெருக்கி மொத்த விநாடிகளால் வகுத்தது மாதம், 30-ஆல் பெருக்கி வகுத்தது நாட்கள். இவ்விதமாக தசா சேஷம் வரும்.

1689 × 16

3375) 27024 (8 வரு
27000

24 × 12 ÷ 3375 = 0 மீ

288 × 30

3375)8640 (2 + 1 = 3 நா.
6750

1890 பாதிக்குமேல் இருப்பதால் 1 ஆகச் சேர்த்துக் கொள்ளலாம்.

ஆக, ஜனன காலத்தில் குருதசை சேஷம் 8 வரு 0 மீ 3 நா. அதாவது இந்தக் குழந்தை கர்ப்பத்தில் இருக்கும்போதே விசாக நட்சத்திரத்தில் பாதி பாகம் கழிந்துவிட்டபடியால், அதற்கு உரிய குருதசை 16 வருஷத்தில் சுமார் பாதி கழிந்து 8 வருஷம் 3 நாட்கள் மாத்திரமே பாக்கி இருக்கின்றன.



https://www.facebook.com/ebooksintamil/

Hariram Thejus

www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

இவ்வாறு கணிக்கப்பட்ட இந்த உதாரண ஜாதகத்தைச் சுருக்கமாக எப்படி எழுதுவது என்பதை அறிவோம்:—

# 8. உதாரண ஜாதகம்

ஸ்ரீராமஜயம்

**ஜநநீ ஜந்ம ஸௌக்யாநாம் வர்த்திநீ குலஸம்பதாம் |**
**பதவீ பூர்வபுண்யாநாம் லிக்யதே ஜந்ம பத்ரிகா ||**

ஜாதகனின் பெயர்: சிரஞ்ஜீவி நீலமேகன்

பிறந்த ஊர்: சென்னை; ஜில்லா: சென்னை

பிறந்த தேதி: 23—1—1960. மணி நிமிஷம்: 5—40 A.M.

ஸ்வஸ்தி. ஸ்ரீ விகாரி வருஷம் தை மாதம் 9—ம் தேதி வெள்ளிக்கிழமை, கிருஷ்ண பக்ஷம் நவமி திதி (நா. 57—52) சுவாதி (நா. 29-27)க்குமேல் **விசாகநக்ஷத்திரம்** கூடிய சுபதினத்தில் சூரியோதயாதி நாழிகை 57, விநாடி 33—க்கு தனுர் லக்னத்தில் ஸ்ரீமான் கணேசதாஸன் அவர்களுக்கு 3—வது புத்ரன் சுபஜனனம்.

### தத்கால க்ரஹநிலை

| நட்சத்திரம் | பாதம் | கிரஹம் | நட்சத்திரம் | பாதம் | கிரஹம் | நட்சத்திரம் | பாதம் | கிரஹம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| உத்-டம் | 4 | சூரி | உத்-டம் | 3 | புத | பூராடம் | 2 | சனி |
| விசாகம் | 2 | சந் | மூலம் | 1 | குரு | உத்திரம் | 3 | ராகு |
| மூலம் | 4 | செவ் | மூலம் | 1 | சுக் | உ-டாதி | 1 | கேது |

(பூராடம் 4 லக்னம்)



|| ஸ்ரீரஸ்து ||

| | | | |
|---|---|---|---|
| கேது | | | |
| | ராசி சக்கரம் | | |
| சூரி புத | | | |
| லக்னம் / செவ் குரு சுக். சனி | | சந் | ராகு |

| | | | |
|---|---|---|---|
| சூ | குரு சுக் | சந் | |
| புத ராகு | நவாம்ச சக்கரம் | | செவ் |
| | | | கேது |
| | ல | | சனி |

### தசாபுக்தி விவரம்

ஜந்ம நக்ஷத்ரம் விசாகம் 2-ம் பாதம்

| | நாழிகை | | விநாடி |
|---|---|---|---|
| ஆத்யந்தபரம நாழிகை | 56 | — | 15 |
| கர்ப்பத்தில் செல்லானது | 28 | — | 06 |
| இருப்பு | 28 | — | 09 |

இதற்கு ஜனன காலத்தில் குரு தசையில் கெற்பச் செல்லு நீக்கி இருப்பு:

வருஷம் 8, மாதம் 0, நாள் 3.

தீர்க்காயுஷ்யமஸ்து. சுபமஸ்து.



https://www.facebook.com/ebooksintamil/

Hariram Thejus

www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

**உதாரண ஜாதகத்துக்குத் தசாபுக்திகள் விவரம்:**

இந்த ஜாதகனுக்கு ஜனன காலத்தில் குரு தசையில் குரு, சனி, புதன், கேது புக்திகள் செல்லாகிவிட்டன. சுக்கிர புத்தியிலும் 1 மாதம் 15 நாட்கள் செல்லாகிவிட்டன. ஆகவே, ஜனன காலத்தில் கர்ப்பத்தில் குரு தசை செல்லு விவரம் வருமாறு:

| கிரஹ தசை | கிரஹ புக்தி | புக்தி கால அளவு | புக்தி நடக்கும் காலம் | |
|---|---|---|---|---|
| | | | முதல் | வரையிலும் |
| குரு தசை | | வரு. மா. நா. | வரு. மா. நா. | வரு. மா. நா. |
| | சுக்கிர புக்தி (சேஷம்) | 2—6—15 | 1960—1—23 | 1962—8—8 |
| | சூரியன் | 0—9—18 | 1962—8—9 | 1963—5—26 |
| | சந்திரன் | 1—4—0 | 1963—5—27 | 1964—9—26 |
| | செவ்வாய் | 0—11—6 | 1964—9—27 | 1965—9—2 |
| | ராகு | 2—4—24 | 1965—9—3 | 1968—1—26 |

இதன் பிறகு நடக்கும் சனி, புதன், கேது, சுக்கிரன், சூரியன் முதலிய தசைகளுக்குரிய புக்திகாலங்களை முன்பு புக்தி கண்டுபிடிக்கும் வழியில் சொல்லியுள்ளபடி கணித்துக் கூட்டித் தெரிந்துகொள்ள வேண்டும். அல்லது தசா புக்தி அந்தரங்களுக்கான டேபிள்களில் உள்ளபடி வரிசையாகச் சேர்த்துக்கொள்ளலாம்.

## 9. தசை என்றால் என்ன?

தசை என்பது, மனிதனின் வாழ்நாட்களில் கிரஹங்கள் ஆட்சி செலுத்தும் கால அளவு (*Period*) என்று பொருள்படும். மனிதனுடைய வாழ்நாளை 120 வருஷங்கள் என்று சோதிட சாஸ்திரத்தில் நிச்சயித்திருக்கிறார்கள். இது தீர்க்காயுசு எனப்படும்.

ஆகையால், தீர்க்காயுசு என்பது 120 வருஷங்கள் என்று நம் சோதிடக் கிரந்தங்களில் நிர்ணயித்திருப்பது உண்மையாகும். மேற்கண்ட 120 வருடங்களை 9 பாகங்களாகப் பிரித்திருக்கிறார்கள். ஒன்பதும் சமபாகங்கள் அல்ல; சிறிது ஏற்றக் குறைவுள்ள பாகங்கள். அவரவர் ஜனன நட்சத்திரத்தையொட்டி, கேது, சுக்கிரன், சூரியன், சந்திரன், செவ்வாய், ராகு, குரு, சனி, புதன் இந்த வரிசையில் தசைகள் நடக்கும். இந்த ஒன்பது தசைகளுக்கு



மேற்கண்ட 120 வருடங்களும் பின்வருமாறு பங்கிடப்பட்டிருக்கின்றன :—

| | கிரஹம் | (வருஷங்கள்) | | கிரஹம் | (வருஷங்கள்) |
|---|---|---|---|---|---|
| (1) | கேது | 7 | (6) | ராகு | 18 |
| (2) | சுக்கிரன் | 20 | (7) | குரு | 16 |
| (3) | சூரியன் | 6 | (8) | சனி | 19 |
| (4) | சந்திரன் | 10 | (9) | புதன் | 17 |
| (5) | செவ்வாய் | 7 | | | |
| | ஆக மொத்தம் | | | | 120 |

அதாவது, 120 வயதுள்ள ஒருவருக்கு ஜனன காலத்தில் கேது தசை ஆரம்பித்தால், பிறகு சுக்கிர தசை 20 வருஷம், சூரிய தசை 6 வருஷம், சந்திர தசை 10 வருஷம், செவ்வாய் தசை 7 வருஷம் இவ்விதமாகத் தசைகளைக் கணித்துக்கொள்ள வேண்டும்.

## 10. முதல் தசை எது?

முதல் தசை என்பது அந்த அந்த ஜாதகன் பிறந்த நட்சத்திரத்தையொட்டி ஆரம்பமாகும். உதாரணமாக, ஒருவன் 'கிருத்திகை' நட்சத்திரத்தில் பிறந்தால் அவனுக்கு ஜனன காலத்தில் சூரிய தசை ஆரம்பமாகும். ஒருவன் 'ரோகிணி'யில் பிறந்தால் சந்திர தசை ஆரம்பமாகும். இவ்விதமே மற்ற நட்சத்திரங்களுக்கும் அந்த அந்தத் தசைகள் ஆரம்பமாகும்.

**தசை அறியும் விதம் வருமாறு:** நட்சத்திரங்கள் மொத்தம் 27 என்பது யாவரும் அறிந்ததே. அந்த 27 நட்சத்திரங்களையும் 9 கிரஹங்களுக்கு மும்மூன்றாகப் பங்கிட்டிருக்கிறார்கள். வரிசையாக மும்மூன்று நட்சத்திரங்கள் அல்ல. வரிசையாக ஒவ்வொரு கிரஹத்துக்கும் ஒவ்வொரு நட்சத்திரத்தைக் கொடுத்து, அந்த அந்த நட்சத்திரத்துக்குப் பத்தாவது நட்சத்திரத்தை மறுபடியும் அதே கிரஹத்துக்குப் பங்கிட்டிருக்கிறார்கள். அதன் விவரம் :

| நட்சத்திரங்கள் | | | தசை |
|---|---|---|---|
| 1. அசுவினி | மகம் | மூலம் | கேது |
| 2. பரணி | பூரம் | பூராடம் | சுக்கிரன் |
| 3. கிருத்திகை | உத்திரம் | உத்திராடம் | சூரியன் |
| 4. ரோகிணி | ஹஸ்தம் | திருவோணம் | சந்திரன் |
| 5. மிருகசீர்ஷம் | சித்திரை | அவிட்டம் | செவ்வாய் |
| 6. திருவாதிரை | சுவாதி | சதயம் | ராகு |
| 7. புனர்வசு | விசாகம் | பூரட்டாதி | குரு |
| 8. பூசம் | அனுஷம் | உத்திரட்டாதி | சனி |
| 9. ஆயில்யம் | கேட்டை | ரேவதி | புதன் |



https://www.facebook.com/ebooksintamil/

Hariram Thejus

www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

மேற்கண்ட அட்டவணையால் விளங்குவது யாதெனில், அசுவினி, மகம், மூலம் இந்த மூன்று நட்சத்திரங்களில் எந்த நட்சத்திரத்தில் பிறந்தவர்களானாலும், அவர்களுக்கு ஜனன காலத்தில் கேது தசை ஆரம்பம் என்பதாம். இவ்விதமே பரணி, பூரம், பூராடம் இவற்றில் ஏதாவது ஒரு நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்குச் சுக்கிரதசை ஆரம்பமாகும். இம்மாதிரியே அவரவர் நட்சத்திரத்தையொட்டி ஜனன காலத்தில் அவரவர்களுக்கு எந்தத் தசை ஆரம்பமாகும் என்று தெரிந்துகொள்ளலாம்.

## முதல் தசையில் கவனிக்க வேண்டியது

மேற்கண்டபடி ஒவ்வொருவருக்கும் ஆரம்பமாகும் முதல் தசை அவரவர் ஜன்ம நட்சத்திரத்துக்கான முழுக் காலத்திலும் இராது. அதாவது கிருத்திகையில் பிறந்த ஒருவன், சூரிய தசை 6 வருஷத்தையும் அநுபவிப்பான் என்று சொல்ல முடியாது. ஏனெனில் கிருத்திகை நட்சத்திரத்தில் பிறப்பவன் அந்த நட்சத்திரம் ஆரம்பமான முதல் விநாடியிலேயே பிறந்தால், முதல் தசையாகிய சூரிய தசையை 6 வருஷமும் கணக்கிடலாம். இப்படி அநேகமாக நேராது. எவ்வாறெனில், ஒருவன் கிருத்திகை நட்சத்திரத்தில் 60 நாழிகை உள்ள ஒரு நாளில் அந்த நட்சத்திரம் ஆரம்பமாகி 20 நாழிகை கழிந்த பிறகு பிறந்திருப்பான். அவனுக்குச் சூரிய தசையில் $\frac{1}{3}$ போக, மீதி $\frac{2}{3}$ அதாவது சுமார் 4 வருஷமே இருப்பு என்று சொல்ல வேண்டும். இதற்கு ஜனனகால தசாசேஷம் என்று பெயர்.

## 11. புக்தி என்றால் என்ன?

புக்தி என்பது தசையில் ஒரு பாகம்; அதாவது ஒரு கிரஹ தசைக்குள் மற்றைய கிரஹங்கள் வரிசையாக வந்து ஆட்சி செலுத்தும் காலம் 'புக்தி' அல்லது அந்தரம் (*Sub-period*) எனப்படும். தசை எந்தக் கிரஹத்தினுடையதோ, அதன் புக்தி முதலில் ஆரம்பமாகும். உதாரணமாகச் சூரிய தசையில் சூரிய புக்தி ஆரம்பம். பிறகு சந்திரபுக்தி, செவ்வாய் புக்தி. இவ்விதமாக, சூரிய தசை, சூரிய புக்தியுடன் ஆரம்பித்துச் சுக்கிர புக்தியுடன் முடியும். இதேமாதிரி, சந்திர தசை, சந்திர புக்தியில் ஆரம்பித்துச் சூரிய புக்தியோடு முடியும். இம்மாதிரியே மற்றைய கிரஹங்களின் தசைகளில் புக்திகளை அறிய வேண்டும். தசையானாலும் புக்தியானாலும் கேது, சுக்கிரன், சூரியன், சந்திரன், செவ்வாய், ராகு, குரு, சனி, புதன் என்ற முறையிலே வரிசையாகத்தான் வரும்.

## புக்திகளைக் கண்டுபிடிக்கும் சுலபமான வழி

தசாநாதனுடைய கிரஹத்தின் தசை வருஷ எண்ணை புக்திநாதனுடைய கிரஹத்தின் தசை வருஷ எண்ணால் பெருக்கி வரும் மொத்த



Hariram Thejus

https://www.facebook.com/ebooksintamil/

எண்ணில் கடைசி எண்ணுக்கு முன் புள்ளி வைக்கவேண்டும். அந்தப் புள்ளிக்கு முன்னுள்ளவை புக்தி மாதங்கள். புள்ளிக்குப் பிறகு உள்ள எண்ணை மூன்றால் பெருக்க அவை நாட்களாகும்.

**உதாரணமாக, சூரிய தசை, செவ்வாய் புக்தி கணிக்கும் விதம்:** தசாநாதனுடைய சூரிய தசை வருஷ எண் 6-ஐ, புக்திநாதனுடைய செவ்வாய் தசை வருஷ எண் 7-ஆல் பெருக்க $6 \times 7 = 42$. இதில் கடைசி எண்ணான 2க்கு முன் புள்ளி வைக்க 4·2 ஆகும். புள்ளிக்கு முன்னுள்ள எண் 4 மாதங்களாகும். புள்ளிக்குப் பின்னுள்ள 2-ஐ மூன்றால் பெருக்க 6 வரும். ஆக, சூரிய தசையில் செவ்வாய் புக்தி 4 மாதங்கள், 6 நாட்களாகும்.

**மற்றோர் உதாரணம்:** (குரு தசை, சனி புக்தி)

குரு தசை வருஷங்கள் 16-ஐ, சனி தசை வருஷங்கள் 19-ஆல் பெருக்க $16 \times 19 = 304$.

அதாவது 30.4 $(4 \times 3) = 12$ நாட்கள். ஆகவே, 2 வருஷம், 6மீ, 12 நாட்கள் ஆகும்.

இம்மாதிரியே எந்தத் தசையில் எந்தக் கிரஹத்தின் காலம் தெரிய வேண்டுமானாலும் தசாநாதன் தசை வருஷத்தைப் புக்திநாதனின் தசை வருஷத்தால் பெருக்கி முன்சொன்னபடி புக்திநாதனுடைய கிரஹத்தின் காலத்தை அறியலாம்.

## 12. புக்தியின் உபயோகம் என்ன?

ஒரு தசை ஒரு ஜாதகனுக்குக் கெடுதலாகப் பலனைத் தரும் என்று வைத்துக்கொள்வோம். உதாரணமாக, ஒருவனுக்குச் சூரிய தசை நடக்கிறது. சூரிய தசை 6 வருஷம். ஆகையால், சூரிய தசை முழுவதும் அவனுக்குக் கெடுதல் என்று வைத்துக் கொள்ளக்கூடாது. அல்லது அதே சூரியன் ஒரு ஜாதகனுக்கு நல்ல யோக பலனைக் கொடுப்பவனாக இருக்கிறான். அதனால் 6 வருஷ காலமும் அவனுக்கு நல்ல யோக பலனே நடக்கும் என்று கருதக்கூடாது.

**மற்று யாதெனில்,** சூரிய தசையில் சூரியன் முதலாகச் சுக்கிரன் வரையில் உள்ள 9 கிரஹங்களின் புக்திகள் நடக்கும். ஆகையால், அந்தப் புக்திகளில் சில புத்திகளுக்கு உரியவர்களான கிரஹங்கள் நல்ல நிலையில் இருந்தால் நல்லதும், அசுப ஸ்தானத்தில் இருந்தால் கெடுதலும் நடக்கும் என்று அறிய வேண்டும்.

ஆகையால், ஒரு தசையின் உட்பிரிவான புக்தி காலங்களில் (*Sub-period*) நற்பயன் அல்லது கெட்ட பயன் ஏற்படும். இதை அறிவிப்பதே புக்திகளின் உபயோகமாகும்.

**குறிப்பு:** எல்லாத் தசைகளுக்கும் எல்லாக் கிரஹங்களின் புக்திகால அளவை எல்லாப் பஞ்சாங்கங்களிலும் பார்க்கலாம். ஆயினும் நேயர்களின் சௌகர்யத்துக்காக, இப்புத்தகத்திலும் அடுத்த பக்கங்களில் தசாபுக்திப் பட்டியலைச் சேர்த்திருக்கிறோம்.



www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

அட்டவணை-1

## சூரிய தசை-௵ 6. புக்தி, அந்தரங்கள்

(கிருத்திகை, உத்திரம், உத்திராடம்)

| சூரியன் | சந்திரன் | அங்காரகன் | ராகு |
|---|---|---|---|
| ௴ நா.நா. | ௴ நா.நா. | ௴ நா.நா. | ௴ நா.நா. |
| சூரி 0- 5-24 | சந் 0-15- 0 | அ 0- 7-21 | ரா 1-18-36 |
| சந் 0- 9- 0 | அ 0-10-30 | ரா 0-18-54 | குரு 1-13-12 |
| அ 0- 6-18 | ரா 0-27- 0 | குரு 0-16-48 | ச 1-21-18 |
| ரா 0-16-12 | குரு 0-24- 0 | ச 0-19-57 | புத 1-15-54 |
| குரு 0-14-24 | ச 0-28-30 | புத 0-17-51 | கே 0-18-54 |
| ச 0-17- 6 | புத 0-25-30 | கே 0- 7-21 | சுக் 1-24- 0 |
| புத 0-15-18 | கே 0-10-30 | சுக் 0-21- 0 | சூரி 0-16-12 |
| கே 0- 6-18 | சுக் 1- 0- 0 | சூரி 0- 6-18 | சந் 0-27- 0 |
| சுக் 0-18- 0 | சூரி 0- 9- 0 | சந் 0-10-30 | அ 0-18-54 |
| 3-18- 0 | 6-0- 0 | 4- 6- 0 | 10-24- 0 |

| குரு | சனி | புதன் | கேது |
|---|---|---|---|
| ௴ நா.நா. | ௴ நா.நா. | ௴ நா.நா | ௴ நா.நா |
| குரு 1- 8-24 | ச 1-24- 9 | புத 1-13-21 | கே 0- 7-21 |
| ச 1-15-36 | புத 1-18-27 | கே 0-17-51 | சுக் 0-21- 0 |
| புத 1-10-48 | கே 0-19-57 | சுக் 1-21- 0 | சூரி 0- 6-18 |
| கே 0-16-48 | சுக் 1-27- 0 | சூரி 0-15-18 | சந் 0-10-30 |
| சுக் 1-18- 0 | சூரி 0-17- 6 | சந் 0-25-30 | அ 0- 7-21 |
| சூரி 0-14-24 | சந் 0-28-30 | அ 0-17-51 | ரா 0-18-54 |
| சந் 0-24- 0 | அ 0-19-57 | ரா 1-15-54 | குரு 0-16-48 |
| அ 0-16-48 | ரா 1-21-18 | குரு 1-10-48 | ச 0-19-57 |
| ரா 1-13-12 | குரு 1-15-36 | ச 1-18-27 | புத 0-17-51 |
| 9-18- 0 | 11-12- 0 | 10- 6- 0 | 4- 6- 0 |

| சுக்கிரன் | |
|---|---|
| | ௴ நா.நா |
| சுக் | 2- 0- 0 |
| சூரி | 0-18- 0 |
| சந் | 1- 0- 0 |
| அ | 0-21- 0 |
| ரா | 1-24- 0 |
| குரு | 1-18- 0 |
| ச | 1-27- 0 |
| புத | 1-21- 0 |
| கே | 0-21- 0 |
| | 12- 0-0 |

சூரிய தசை புக்தி விவரம்

| | ௵ | ௴ | நாள் |
|---|---|---|---|
| சூரியன் | 0 | 3 | 18 |
| சந்திரன் | 0 | 6 | 0 |
| அங்காரகன் | 0 | 4 | 6 |
| ராகு | 0 | 10 | 24 |
| குரு | 0 | 9 | 18 |
| சனி | 0 | 11 | 12 |
| புதன் | 0 | 10 | 6 |
| கேது | 0 | 4 | 6 |
| சுக்கிரன் | 1 | 0 | 0 |
| ஆக௵ | 6 | 0 | 0 |



Hariram Thejus

https://www.facebook.com/ebooksintamil/

## சந்திர தசை–௵ 10

(ரோகிணி, ஹஸ்தம், திருவோணம்)

| சந்திரன் | அங்காரகன் | ராகு | குரு |
|---|---|---|---|
| ௴. நா.நா. | ௴. நா.நா. | ௴ நா.நா. | ௴ நா.நா. |
| சந் 0-25- 0 | அ 0-12-15 | ரா 2-21- 0 | குரு 2- 4- 0 |
| அ 0-17-36 | ரா 1- 1-30 | குரு 2-12- 0 | ச 2-16- 0 |
| ரா 1-15- 0 | குரு 0-28- 0 | ச 2-25-30 | புத 2- 8- 0 |
| குரு 1-10- 0 | ச 1- 3-15 | புத 2-16-30 | கே 0-28- 0 |
| ச 1-17-30 | பு 0-29-45 | கே 1- 1-30 | சுக் 2-20- 0 |
| புத 1-12-30 | கே 0-12-15 | சுக் 3- 0- 0 | சூரி 0-24- 0 |
| கே 0-17-30 | சுக் 1- 5- 0 | சூரி 0-27- 0 | சந் 1-10- 0 |
| சுக் 1-20- 0 | சூரி 0-10-30 | சந் 1-15- 0 | அ 0-28- 0 |
| சூரி 0-15- 0 | சந் 0-17-30 | அ 1- 1-30 | ரா 2-12- 0 |
| 10—0—0 | 7—0—0 | 18—0—0 | 16—0—0 |

| சனி | புதன் | கேது | சுக்கிரன் |
|---|---|---|---|
| ௴ நா.நா. | ௴ நா.நா. | ௴ நா.நா. | ௴ நா.நா. |
| ச 3- 0-15 | புத 2-12-15 | கே 0-12-15 | சுக் 3-10- 0 |
| புத 2-20-45 | கே 0-29-45 | சுக் 1- 5- 0 | சூரி 1- 0- 0 |
| கே 1- 3-15 | சுக் 2-25- 0 | சூரி 0-10-30 | சந் 1-20- 0 |
| சுக் 3- 5- 0 | சூரி 0-25-30 | சந் 0-17-30 | அ 1- 5- 0 |
| சூரி 0-28-30 | சந் 1-12-30 | அ 0-12-15 | ரா 3- 0- 0 |
| சந் 1-17-30 | அ 0-29-45 | ரா 1- 1-30 | குரு 2-20- 0 |
| அ 1- 3-15 | ரா 2-16-30 | குரு 0-28- 0 | ச 3- 5- 0 |
| ரா 2-25-30 | குரு 2- 8- 0 | ச 1- 3-15 | புத 2-25- 0 |
| குரு 2-16- 0 | ச 2-20-45 | புத 0-29-45 | கே 1- 5- 0 |
| 19—0—0 | 17—0—0 | 7—0—0 | 20—0—0 |

| சூரியன் | |
|---|---|
| | ௴ நா.நா. |
| சூரி | 0- 9- 0 |
| சந் | 0-15- 0 |
| அ | 0-10-30 |
| ரா | 0-27- 0 |
| குரு | 0-24- 0 |
| ச | 0-28-30 |
| புத | 0-25-30 |
| கே | 0-10-30 |
| சுக் | 1- 0- 0 |
| | 6—0—0 |

சந்திர தசை புக்தி விவரம்

| | ௵ | ௴ | நாள் |
|---|---|---|---|
| சந்திரன் | 0 | 10 | 0 |
| அங்காரகன் | 0 | 7 | 0 |
| ராகு | 1 | 6 | 0 |
| குரு | 1 | 4 | 0 |
| சனி | 1 | 7 | 0 |
| புதன் | 1 | 5 | 0 |
| கேது | 0 | 7 | 0 |
| சுக்கிரன் | 1 | 8 | 0 |
| சூரியன் | 0 | 6 | 0 |
| ஆக௵ | 10 | 0 | 0 |



www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

## அங்காரக தசை-ஆண்டு 7
(மிருகசீரிஷம், சித்திரை, அவிட்டம்)

| அங்காரகன் | | ராகு | | குரு | | சனி | |
|---|---|---|---|---|---|---|---|
| | மீ நா.நா. | | மீ நா.நா. | | மீ நா.நா. | | மீ நா.நா. |
| அ | 0- 8-34½ | ரா | 1-26-42 | குரு | 1-14-48 | ச | 2- 3-10½ |
| ரா | 0-22- 3 | குரு | 1-20-24 | ச | 1-23-12 | புத | 1-26-31½ |
| குரு | 0-19-36 | ச | 1-29-51 | புத | 1-17-36 | கே | 0-23-16½ |
| ச | 0-23-16½ | புத | 1-23-33 | கே | 0-19-36 | சு | 2- 3-30 |
| புத | 0-20-49½ | கே | 0-22- 3 | சுக் | 1-26- 0 | சூ | 0-19-57 |
| கே | 0- 8-34½ | சுக் | 2- 3- 0 | சூரி | 0-16-48 | சந் | 1- 3-15 |
| சுக் | 0-24-30 | சூரி | 0-18-54 | சந் | 0-28- 0 | அ | 0-23-16½ |
| சூ | 0- 7-21 | சந் | 1- 1-30 | அ | 0-19-36 | ரா | 1-29-51 |
| சந் | 0-12-15 | அ | 0-22- 3 | ரா | 1-20-24 | குரு | 1-23-12 |
| | 4-27- 0 | | 12—18—0 | | 11—6—0 | | 13—9—0 |

| புதன் | | கேது | | சுக்கிரன் | | சூரியன் | |
|---|---|---|---|---|---|---|---|
| | மீ நா.நா. | | மீ நா.நா. | | மீ நா.நா. | | மீ நா.நா |
| புத | 1-20-34½ | கே | 0- 8-34½ | சுக் | 2-10- 0 | சூரி | 0- 6-18 |
| கே | 0-20-49½ | சு | 0-24-30 | சூரி | 0-21- 0 | சந் | 0-10-30 |
| சுக் | 1-29-30 | சூ | 0- 7-21 | சந் | 1- 5- 0 | அ | 0- 7-21 |
| சூ | 0-17-51 | சந் | 0-12-15 | அ | 0-24-30 | ரா | 0-18-54 |
| சந் | 0-29-45 | அ | 0- 8-34½ | ரா | 2- 3- 0 | குரு | 0-16-48 |
| அ | 0-29-49½ | ரா | 0-22- 3 | குரு | 1-26- 0 | ச | 0-19-57 |
| ரா | 1-23-33 | கு | 0-19-36 | ச | 2- 6-30 | புத | 0-17-51 |
| கு | 1-17-36 | ச | 0-23-16½ | புத | 1-29-30 | கே | 0- 7-21 |
| ச | 1-26-31½ | பு | 0-20-49½ | கே | 0-24-30 | சுக் | 0-21- 0 |
| | 11—27—0 | | 4—27—0 | | 14—0—0 | | 4—6—0 |

| சந்திரன் | |
|---|---|
| | மீ நா.நா. |
| சந் | 0-17-30 |
| அ | 0-12-15 |
| ரா | 1- 1-30 |
| குரு | 0-28- 0 |
| ச | 1- 3-15 |
| புத | 0-29-45 |
| கே | 0-12-15 |
| சுக் | 1- 5- 0 |
| சூரி | 0-10-30 |
| | 7—0—0 |

அங்காரக தசை புக்தி விவரம்

| | ஆண்டு | மீ | நாள் |
|---|---|---|---|
| அங்காரகன் | 0 | 4 | 27 |
| ராகு | 1 | 0 | 18 |
| குரு | 0 | 11 | 6 |
| சனி | 1 | 1 | 9 |
| புதன் | 0 | 11 | 27 |
| கேது | 0 | 4 | 27 |
| சுக்கிரன் | 1 | 2 | 0 |
| சூரியன் | 0 | 4 | 6 |
| சந்திரன் | 0 | 7 | 0 |
| ஆக ஆண்டு | 7 | 0 | 0 |



Hariram Thejus

https://www.facebook.com/ebooksintamil/

## இராகு தசை-ஆண்டு 18
(திருவாதிரை, சுவாதி, சதயம்)

| ராகு | | குரு | | சனி | | புதன் | |
|---|---|---|---|---|---|---|---|
| | மீ நா.நா. | | மீ நா.நா. | | மீ நா.நா. | | மீ நா.நா. |
| ரா | 4-25-48 | குரு | 3-25-12 | ச | 5-12-27 | புத | 4-10- 3 |
| குரு | 4- 9-36 | ச | 4-16-48 | புத | 4-25-21 | கே | 1-23-33 |
| ச | 5- 3-54 | புத | 4- 2-24 | கே | 1-29-51 | சுக் | 5- 3- 0 |
| புத | 4-17-42 | கே | 1-20-24 | சுக் | 5-21- 0 | சூரி | 1-15-54 |
| கே | 1-26-42 | சுக் | 4-24- 0 | சூரி | 1-21-18 | சந் | 2-16-30 |
| சுக் | 5-12- 0 | சூரி | 1-13-12 | சந் | 2-25-30 | அ | 1-23-33 |
| சூரி | 1-18-36 | சந் | 2-12- 0 | அ | 1-29-51 | ரா | 4-17-42 |
| சந் | 2-21- 0 | அ | 1-20-24 | ரா | 5- 3 54 | குரு | 4- 2-24 |
| அ | 1-26-42 | ரா | 4- 9-36 | குரு | 4-16-48 | ச | 4-25-21 |
| | 32-12- 0 | | 28-24- 0 | | 34- 6- 0 | | 30-18- 0 |

| கேது | | சுக்கிரன் | | சூரியன் | | சந்திரன் | |
|---|---|---|---|---|---|---|---|
| | மீ நா.நா. | | மீ நா.நா. | | மீ நா.நா. | | மீ நா.நா. |
| கே | 0-22- 3 | சுக் | 6- 0-0 | சூரி | 0-16-12 | சந் | 1-15- 0 |
| சுக் | 2- 3- 0 | சூரி | 1-24-0 | சந் | 0-27- 0 | அ | 1- 1-30 |
| சூரி | 0-18-54 | சந் | 3- 0-0 | அ | 0-18-54 | ரா | 2-21- 0 |
| சந் | 1- 1-30 | அ | 2- 3-0 | ரா | 1-18-36 | குரு | 2-12- 0 |
| அ | 0-22- 3 | ரா | 5-12 0 | குரு | 1-13-12 | ச | 2-25-30 |
| ரா | 1-26-42 | குரு | 4-24-0 | ச | 1-21-18 | புத | 2-16-30 |
| குரு | 1-20-24 | ச | 5-21-0 | புத | 1-15-54 | கே | 1- 1-30 |
| ச | 1-29-51 | புத | 5- 3-0 | கே | 0-18-54 | சுக் | 3- 0- 0 |
| புத | 1-23-33 | கே | 2- 3-0 | சுக் | 1-24- 0 | சூரி | 0-27- 0 |
| | 12-18- 0 | | 36- 0-0 | | 10-24- 0 | | 18- 0- 0 |

| அங்காரகன் | |
|---|---|
| | மீ நா.நா. |
| அ | 0-22- 3 |
| ரா | 1-26-42 |
| குரு | 1-20-24 |
| ச | 1-29-51 |
| புத | 1-23-33 |
| கே | 0-22- 3 |
| சுக் | 2- 3- 0 |
| சூரி | 0-18-54 |
| சந் | 1- 1-30 |
| | 12-8-0 |

ராகுதசை புக்தி விவரம்

| | ஆண்டு | மீ | நாள் |
|---|---|---|---|
| ராகு | 2 | 8 | 12 |
| குரு | 2 | 4 | 24 |
| சனி | 2 | 10 | 6 |
| புதன் | 2 | 6 | 18 |
| கேது | 1 | 0 | 18 |
| சுக்கிரன் | 3 | 0 | 0 |
| சூரியன் | 0 | 10 | 24 |
| சந்திரன் | 1 | 6 | 0 |
| அங்காரகன் | 1 | 0 | 18 |
| ஆக ஆண்டு | 18 | 0 | 0 |



https://www.facebook.com/ebooksintamil/

www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

## குரு தசை-வரு 16

(புனர்பூசம், விசாகம், பூரட்டாதி)

| குரு | மீ நா.நா. |
|---|---|
| குரு | 3-12-24 |
| ச | 4- 1-36 |
| புத | 3-18-48 |
| கே | 1-14-48 |
| சுக் | 4- 8- 0 |
| சூரி | 1- 8-24 |
| சந் | 2- 4- 0 |
| அ | 1-14-48 |
| ரா | 3-25-12 |
| | 25-18-0 |

| சனி | மீ நா.நா. |
|---|---|
| ச | 4-24-24 |
| புத | 4- 9-12 |
| கே | 1-23-12 |
| சுக் | 5- 2- 0 |
| சூரி | 1-15-36 |
| சந் | 2-16- 0 |
| அ | 1-23-12 |
| ரா | 4-16-48 |
| குரு | 4- 1-36 |
| | 30-12-0 |

| புதன் | மீ நா.நா. |
|---|---|
| புத | 3-25-36 |
| கே | 1-17-36 |
| சுக் | 4-16- 0 |
| சூரி | 1-10-48 |
| சந் | 2- 8- 0 |
| அ | 1-17-36 |
| ரா | 4-2- 24 |
| குரு | 3-18-48 |
| ச | 4- 9-12 |
| | 27- 6- 0 |

| கேது | மீ நா.நா. |
|---|---|
| கே | 0-19-36 |
| சுக் | 1-26- 0 |
| சூரி | 0-16-48 |
| சந் | 0-28- 0 |
| அ | 0-19-36 |
| ரா | 1-20-24 |
| குரு | 1-14-48 |
| ச | 1-23-12 |
| புத | 1-17-36 |
| | 11- 6- 0 |

| சுக்கிரன் | மீ நா.நா. |
|---|---|
| சுக் | 5-10-0 |
| சூரி | 1-18-0 |
| சந் | 2-20-0 |
| அ | 1-26-0 |
| ரா | 4-24-0 |
| குரு | 4- 8-0 |
| ச | 5- 2-0 |
| புத | 4-16-0 |
| கே | 1-26-0 |
| | 32- 0-0 |

| சூரியன் | மீ நா.நா. |
|---|---|
| சூரி | 0-14-24 |
| சந் | 0- 24-0 |
| அ | 0-16-48 |
| ரா | 1-13-12 |
| குரு | 1- 8-24 |
| சனி | 1-15-36 |
| புத | 1-10-48 |
| கே | 0-16-48 |
| சுக் | 1-18- 0 |
| | 9-18- 0 |

| சந்திரன் | மீ நா.நா. |
|---|---|
| சந் | 1-10-0 |
| அ | 0-28-0 |
| ரா | 2-12-0 |
| குரு | 2- 4-0 |
| ச | 2-16-0 |
| புத | 2- 8-0 |
| கே | 0-28-0 |
| சுக் | 2-20-0 |
| சூரி | 0-24-0 |
| | 16- 0-0 |

| அங்காரகன் | மீ நா.நா. |
|---|---|
| அ | 0-19-36 |
| ரா | 1-20-24 |
| குரு | 1-14-48 |
| ச | 1-23-12 |
| புத | 1-17-36 |
| கே | 0-19-36 |
| சுக் | 1-26- 0 |
| சூரி | 0-16-48 |
| சந் | 0-28- 0 |
| | 11- 6- 0 |

| ராகு | மீ நா.நா. |
|---|---|
| ரா | 4- 9-36 |
| குரு | 3-25-12 |
| ச | 4-16-48 |
| புத | 4- 2-24 |
| கே | 1-20-24 |
| சுக் | 4-24- 0 |
| சூரி | 1-13-12 |
| சந் | 2-12- 0 |
| அ | 1-20-24 |
| | 28-24-0 |

### குருதசை புக்தி விவரம்

| | வரு | மீ | நாள் |
|---|---|---|---|
| குரு | 2 | 1 | 18 |
| சனி | 2 | 6 | 12 |
| புதன் | 2 | 3 | 6 |
| கேது | 0 | 11 | 6 |
| சுக்கிரன் | 2 | 8 | 0 |
| சூரியன் | 0 | 9 | 18 |
| சந்திரன் | 1 | 4 | 0 |
| அங்காரகன் | 0 | 11 | 6 |
| ராகு | 2 | 4 | 24 |
| ஆக வரு | 16 | 0 | 0 |



## சனி தசை-வரு 19

(பூசம், அனுஷம், உத்திரட்டாதி)

| சனி | மீ நா.நா. |
|---|---|
| ச | 5-21-28½ |
| புத | 5- 3-25½ |
| கே | 2- 3-10½ |
| சுக் | 6- 0-30 |
| கு | 1-24- 9 |
| சந் | 3- 0-15 |
| அ | 2- 3-10½ |
| ரா | 5-12-27 |
| கு | 4-24-24 |
| | 36- 3- 0 |

| புதன் | மீ நா.நா. |
|---|---|
| புத | 4-17-16½ |
| கே | 1-26-31½ |
| சு | 5-11-30 |
| சூ | 1-18-27 |
| சந் | 2-20-45 |
| அ | 1-26-31½ |
| ரா | 4-25-21 |
| கு | 4- 9-12 |
| ச | 5- 3-25½ |
| | 32- 9- 0 |

| கேது | மீ நா.நா. |
|---|---|
| கே | 0-23-16½ |
| சுக் | 2- 6-30 |
| சூ | 0-19-57 |
| சந் | 1- 3-15 |
| அ | 0-23-16½ |
| ரா | 1-29-51 |
| கு | 1-23-12 |
| ச | 2- 3-10½ |
| புத | 1-26-31½ |
| | 13- 9- 0 |

| சுக்கிரன் | மீ நா.நா. |
|---|---|
| சுக் | 6-10- 0 |
| சூரி | 1- 27 0 |
| சந் | 3- 5- 0 |
| அ | 2- 6-30 |
| ரா | 5-21- 0 |
| குரு | 5- 2- 0 |
| ச | 6- 0-30 |
| புத | 5-11-30 |
| கே | 2- 6-30 |
| | 38- 0- 0 |

| சூரியன் | மீ நா.நா. |
|---|---|
| சூரி | 0-17- 6 |
| சந் | 0-28-30 |
| அ | 0-19-57 |
| ரா | 1-21-18 |
| குரு | 1-15-36 |
| ச | 1-24- 9 |
| புத | 1-18-27 |
| கே | 0-19-57 |
| சுக் | 1-27- 0 |
| | 11-12- 0 |

| சந்திரன் | மீ நா.நா. |
|---|---|
| சந் | 1-17-30 |
| அ | 1- 3-15 |
| ரா | 2-25-30 |
| குரு | 2-16- 0 |
| ச | 3- 0-15 |
| புத | 2-20-45 |
| கே | 1- 3-15 |
| சுக் | 3- 5- 0 |
| சூரி | 0-28-30 |
| | 19- 0- 0 |

| அங்காரகன் | மீ நா.நா. |
|---|---|
| அ | 0-23-16½ |
| ரா | 1-29-51 |
| கு | 1-23-12 |
| ச | 2- 3-10½ |
| புத | 1-26-31½ |
| கே | 0-23-16½ |
| சுக் | 2- 6-30 |
| சூ | 0-19-57 |
| சந் | 1- 3-15 |
| | 13- 9- 0 |

| ராகு | மீ நா.நா. |
|---|---|
| ரா | 5- 3-54 |
| குரு | 4-16-48 |
| ச | 5-12-27 |
| புத | 4-25-21 |
| கே | 1-29-51 |
| சுக் | 5-21- 0 |
| சூரி | 1-21-18 |
| சந் | 2-25-30 |
| அ | 1-29-51 |
| | 34- 6- 0 |

| குரு | மீ நா.நா. |
|---|---|
| கு | 4- 1-36 |
| ச | 4-24-24 |
| புத | 4- 9-12 |
| கே | 1-23-12 |
| சுக் | 5- 2- 0 |
| சூரி | 1-15-36 |
| சந் | 2-16- 0 |
| அ | 1-23-12 |
| ரா | 4-16-48 |
| | 30-12- 0 |

### சனிதசை புக்தி விவரம்

| | வரு | மீ | நாள் |
|---|---|---|---|
| சனி | 3 | 0 | 3 |
| புதன் | 2 | 8 | 9 |
| கேது | 1 | 1 | 9 |
| சுக்கிரன் | 3 | 2 | 0 |
| சூரியன் | 0 | 11 | 12 |
| சந்திரன் | 1 | 7 | 0 |
| அங்காரகன் | 1 | 1 | 9 |
| ராகு | 2 | 10 | 6 |
| குரு | 2 | 6 | 12 |
| ஆக வரு | 19 | 0 | 0 |



https://www.facebook.com/ebooksintamil/

Hariram Thejus

www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

## புதன் தசை-௵ 17

(ஆயில்யம், கேட்டை, ரேவதி)

| புதன் | | கேது | | சுக்கிரன் | | சூரியன் | |
|---|---|---|---|---|---|---|---|
| | ௴ நா.நா. | | ௴ நா.நா. | | ௴ நா.நா. | | ௴ நா.நா. |
| பு | 4- 2-49½ | கே | 0-20-49½ | சுக் | 5-20- 0 | சூரி | 0-15-18 |
| கே | 1-20-34½ | சு | 1-29-30 | சூரி | 1-21- 0 | சந் | 0-25-30 |
| சு | 4-24-30 | சூ | 0-17-51 | சந் | 2-25- 0 | அ | 0-17-51 |
| சூ | 1-13-21 | சந் | 0-29-45 | அ | 1-29-30 | ரா | 1-15-54 |
| சந் | 2-12-15½ | அ | 0-20-49½ | ரா | 5- 3- 0 | குரு | 1-10-48 |
| அ | 1-20-34 | ரா | 1-23-33 | குரு | 4-16- 0 | ச | 1-18-27 |
| ரா | 4-10- 3 | கு | 1-17-36 | ச | 5-11-30 | புத | 1-13-21 |
| கு | 3-25-36 | ச | 1-26-31½ | புத | 4-24-30 | கே | 0-17-51 |
| ச | 4-17-16½ | பு | 1-20-34½ | கே | 1-29-30 | சுக் | 1-21- 0 |
| | 28-27- 0 | | 11-27- 0 | | 34- 0- 0 | | 10- 6- 0 |

| சந்திரன் | | அங்காரகன் | | ராகு | | குரு | |
|---|---|---|---|---|---|---|---|
| | ௴ நா.நா. | | ௴ நா.நா. | | ௴ நா.நா. | | ௴ நா.நா. |
| சந் | 1-12-30 | அ | 0-20-49½ | ரா | 4-17-42 | குரு | 3-18-48 |
| அ | 0-29-45 | ரா | 1-23-33 | குரு | 4- 2-24 | ச | 4- 9-12 |
| ரா | 2-15-30 | கு | 1-17-36 | ச | 4-25-21 | புத | 3-25-36 |
| குரு | 2- 8- 0 | ச | 1-26-31½ | புத | 4-10- 3 | கே | 1-17-36 |
| ச | 2-20-45 | பு | 1-20-34½ | கே | 1-23-33 | சுக் | 4-16- 0 |
| புத | 2-12-15 | கே | 0-20-49½ | சுக் | 5- 3- 0 | சூரி | 1-10-48 |
| கே | 0-29-45 | சு | 1-29-30 | சூரி | 1-15-54 | சந் | 2- 8- 0 |
| சுக் | 2-25- 0 | சூ | 0-17-51 | சந் | 2-16-30 | அ | 1-17-36 |
| சூரி | 0-25-30 | சந் | 0-29-45 | அ | 1-23-33 | ரா | 4- 2-24 |
| | 17- 0- 0 | | 11-27- 0 | | 30- 18-0 | | 27- 6- 0 |

| சனி | |
|---|---|
| | ௴ நா.நா. |
| ச | 5- 3-25½ |
| பு | 4-17-16½ |
| கே | 1-26-31½ |
| சு | 5-11-30 |
| சூ | 1-18-27 |
| சந் | 2-20-45 |
| அ | 1-26-31½ |
| ரா | 4-25-21 |
| கு | 4- 9-12 |
| | 32- 9- 0 |

புதன் தசை புக்தி விவரம்

| | ௵ | ௴ | நாள் |
|---|---|---|---|
| புதன் | 2 | 4 | 27 |
| கேது | 0 | 11 | 27 |
| சுக்கிரன் | 2 | 10 | 0 |
| சூரியன் | 0 | 10 | 6 |
| சந்திரன் | 1 | 5 | 0 |
| அங்காரகன் | 0 | 11 | 27 |
| ராகு | 2 | 6 | 18 |
| குரு | 2 | 3 | 6 |
| சனி | 2 | 8 | 9 |
| ஆக ௵ | 17 | 0 | 0 |



https://www.facebook.com/ebooksintamil/

## கேது தசை-௵ 7

(அசுவினி, மகம், மூலம்)

| கேது | | சுக்கிரன் | | சூரியன் | | சந்திரன் | |
|---|---|---|---|---|---|---|---|
| | ௴ நா.நா. | | ௴ நா.நா. | | ௴ நா.நா. | | ௴ நா.நா. |
| கே | 0- 8-34½ | சுக் | 2-10- 0 | சூரி | 0- 6-18 | சந் | 0-17-30 |
| சு | 0-24-30 | சூரி | 0-21- 0 | சந் | 0-10-30 | அ | 0-12-10 |
| சூ | 0- 7-21 | சந் | 1- 5- 0 | அ | 0- 7-21 | ரா | 1- 1-35 |
| சந் | 0-12-15 | அ | 0-24-30 | ரா | 0-18-54 | குரு | 0-28- 0 |
| அ | 0- 8-34½ | ரா | 2- 3- 0 | குரு | 0-16-48 | ச | 1- 3-15 |
| ரா | 0-22- 3 | குரு | 1-26- 0 | ச | 0-19-57 | புத | 0-29-45 |
| கு | 0-19-36 | ச | 2- 6-30 | புத | 0-17-51 | கே | 0-12-15 |
| ச | 0-23-16½ | புத | 1-29-30 | கே | 0- 7-21 | சுக் | 1- 5- 0 |
| பு | 0-20-49½ | கே | 0-24-30 | சுக் | 0-21- 0 | சூரி | 0-10-30 |
| | 4-27- 0 | | 14- 0- 0 | | 4- 6- 0 | | 7- 0- 0 |

| அங்காரகன் | | ராகு | | குரு | | சனி | |
|---|---|---|---|---|---|---|---|
| | ௴ நா.நா. | | ௴ நா.நா. | | ௴ நா.நா. | | ௴ நா.நா. |
| அ | 0- 8-34½ | ரா | 1-26-42 | குரு | 1-14-48 | ச | 2- 3-10½ |
| ரா | 0-22- 3 | குரு | 1-20-24 | ச | 1-23-12 | பு | 1-26-31½ |
| கு | 0-19-36 | ச | 1-29-51 | புத | 1-17-36 | கே | 0-23-16½ |
| ச | 0-23-16½ | புத | 1-23-33 | கே | 0-19-36 | சு | 2- 6-30 |
| பு | 0-20-49½ | கே | 0-22- 3 | சுக் | 1-26- 0 | சூ | 0-19-57 |
| கே | 0- 8-34½ | சுக் | 2- 3- 0 | சூரி | 0-16-48 | சந் | 1- 3-15 |
| சு | 0-24-30 | சூரி | 0-18-54 | சந் | 0-28- 0 | அ | 0-23-16½ |
| சூ | 0- 7-21 | சந் | 1- 1-30 | அ | 0-19-36 | ரா | 1-29-51 |
| சந் | 0-12-15 | அ | 0-22- 3 | ரா | 1-20-24 | கு | 1-23-12 |
| | 4-27- 0 | | 12-18- 0 | | 11- 6- 0 | | 13- 9- 0 |

| புதன் | |
|---|---|
| | ௴ நா.நா. |
| பு | 1-20-34½ |
| கே | 0-20-49½ |
| சு | 1-29-30 |
| சூ | 0-17-51 |
| சந் | 0-29-45 |
| அ | 0-20-49½ |
| ரா | 1-23-33 |
| கு | 1-17-36 |
| ச | 1-26-31½ |
| | 11-27- 0 |

கேது தசை புக்தி விவரம்

| | ௵ | ௴ | நாள் |
|---|---|---|---|
| கேது | 0 | 4 | 27 |
| சுக்கிரன் | 1 | 2 | 0 |
| சூரியன் | 0 | 4 | 6 |
| சந்திரன் | 0 | 7 | 0 |
| அங்காரகன் | 0 | 4 | 27 |
| ராகு | 1 | 0 | 18 |
| குரு | 0 | 11 | 6 |
| சனி | 1 | 1 | 9 |
| புதன் | 0 | 11 | 27 |
| ஆக ௵ | 7 | 0 | 0 |



https://www.facebook.com/ebooksintamil/

Hariram Thejus

www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

## சுக்ர தசை-௵ 20

(பரணி, பூரம், பூராடம்)

| சுக்கிரன் | ௴ நா.நா. | சூரியன் | ௴ நா.நா. | சந்திரன் | ௴ நா.நா. | அங்காரகன் | ௴ நா.நா. |
|---|---|---|---|---|---|---|---|
| சுக் | 6-20- 0 | சூரி | 0-18- 0 | சந் | 1-20- 0 | அ | 0-24-30 |
| சூரி | 2- 0- 0 | சந் | 1- 0- 0 | அ | 1- 5- 0 | ரா | 2- 3- 0 |
| சந் | 3-10- 0 | அ | 0-21- 0 | ரா | 3- 0- 0 | குரு | 1-26- 0 |
| அ | 2-10- 0 | ரா | 1-24- 0 | கு | 2-20- 0 | ச | 2- 6-30 |
| ரா | 6- 0- 0 | குரு | 1-18- 0 | ச | 3- 5- 0 | புத | 1-29-30 |
| கு | 5-10- 0 | ச | 1-27- 0 | புத | 2-25- 0 | கே | 0-24-30 |
| ச | 6-10- 0 | புத | 1-21- 0 | கே | 1- 5- 0 | சுக் | 2-10- 0 |
| புத | 5-20- 0 | கே | 0-21- 0 | சுக் | 3-10- 0 | சூரி | 0-21- 0 |
| கே | 2-10- 0 | சுக் | 2- 0- 0 | சூரி | 1- 0- 0 | சந் | 1- 5- 0 |
| | 40- 0- 0 | | 12- 0- 0 | | 20- 0- 0 | | 14- 0- 0 |

| ராகு | ௴ நா.நா. | குரு | ௴ நா.நா. | சனி | ௴ நா.நா. | புதன் | ௴ நா.நா. |
|---|---|---|---|---|---|---|---|
| ரா | 5-12- 0 | குரு | 4- 8- 0 | ச | 6- 0-30 | புத | 4-24-30 |
| கு | 4-24- 0 | ச | 5- 2- 0 | புத | 5-11-30 | கே | 1-29-30 |
| ச | 5-21- 0 | புத | 4-16- 0 | கே | 2- 6-30 | சுக் | 5-20 0 |
| புத | 5- 3- 0 | கே | 1-26- 0 | சுக் | 6-10- 0 | சூரி | 1-21- 0 |
| கே | 2- 3- 0 | சுக் | 5-10- 0 | சூரி | 1-27- 0 | சந் | 2-25- 0 |
| சுக் | 6- 0- 0 | சூரி | 1-18- 0 | சந் | 3- 5- 0 | அ | 1-29-30 |
| சூரி | 1-24- 0 | சந் | 2-20- 0 | அ | 2- 6-30 | ரா | 5- 3- 0 |
| சந் | 3- 0- 0 | அ | 1-26- 0 | ரா | 5-21- 0 | கு | 4-16- 0 |
| அ | 2- 3- 0 | ரா | 4-24- 0 | கு | 5-21- 0 | ச | 5-11-30 |
| | 36- 0- 0 | | 32- 0- 0 | | 38- 0- 0 | | 34- 0- 0 |

| கேது | ௴ நா.நா. |
|---|---|
| கே | 0-24-30 |
| சுக் | 2-10- 0 |
| சூரி | 0-21- 0 |
| சந் | 1- 5- 0 |
| அ | 0-24-30 |
| ரா | 2- 3- 0 |
| கு | 1-26- 0 |
| ச | 2- 6-30 |
| புத | 1-29-30 |
| | 14- 0- 0 |

**சுக்ரதசை புக்தி விவரம்**

| | ௵ | ௴ | நாள் |
|---|---|---|---|
| சுக்கிரன் | 3 | 4 | 0 |
| சூரியன் | 1 | 0 | 0 |
| சந்திரன் | 1 | 8 | 0 |
| அங்காரகன் | 1 | 2 | 0 |
| ராகு | 3 | 0 | 0 |
| குரு | 2 | 8 | 0 |
| சனி | 3 | 2 | 0 |
| புதன் | 2 | 10 | 0 |
| கேது | 1 | 2 | 0 |
| ஆக ௵ | 20 | 0 | 0 |



Hariram Thejus

https://www.facebook.com/ebooksintamil/

அட்டவணை—2

## உத்தர அக்ஷாம்சத்தில் உள்ள சில முக்கிய பட்டணங்களின் நிரயன ராசிமான சங்கியை

(நாழிகை வினாடிகளில்)

தென்னாட்டிலுள்ள பட்டணங்கள்

| அக்ஷாம்சம் | 13° | 12° | 11° | 10° | 9° | 8° |
|---|---|---|---|---|---|---|
| ராசிகள் | சென்னை<br>செங்கற்பட்டு<br>காஞ்சீபுரம்<br>ஆற்காடு<br>வேலூர்<br>சித்தூர்<br>பெங்களூர்<br>மங்களூர் | கண்ணனூர்<br>கூடலூர்<br>சிதம்பரம்<br>செஞ்சி<br>சேலம்<br>தலைச்சேரி<br>திருவையாறு<br>புதுச்சேரி<br>மைசூர் | கருவூர்<br>கள்ளிக்கோட்டை<br>கும்பகோணம்<br>கோயமுத்தூர்<br>தஞ்சாவூர்<br>திருச்சி<br>திருவாரூர்<br>தேவக்கோட்டை<br>நாகப்பட்டினம்<br>நீலகிரி | கொச்சி<br>கொடைக்கானல்<br>திண்டுக்கல்<br>புதுக்கோட்டை<br>மதுரை<br>யாழ்ப்பாணம் | திருநெல்வேலி<br>திரிகோணமலை<br>தூத்துக்குடி<br>ராமேசுவரம் | கன்யாகுமரி<br>திருவனந்தபுரம் |
| | நா.வி. | நா.வி. | நா.வி. | நா.வி. | நா.வி. | நா.வி. |
| மேஷம் | 4-29 | 4-31 | 4-33 | 4-35 | 4-37 | 4-39 |
| ரிஷபம் | 5-04 | 5-05 | 5-05 | 5-06 | 5-06 | 5-07 |
| மிதுனம் | 5-27 | 5-26 | 5-26 | 5-25 | 5-25 | 5-25 |
| கடகம் | 5-22 | 5-21 | 5-20 | 5-18 | 5-16 | 5-14 |
| சிம்மம் | 5-08 | 5-06 | 5-04 | 5-02 | 5-00 | 4-58 |
| கன்னி | 5-04 | 5-02 | 5-00 | 4-58 | 4-56 | 4-54 |
| துலாம் | 5-16 | 5-14 | 5-13 | 5-11 | 5-09 | 5-07 |
| விருச்சிகம் | 5-28 | 5-27 | 5-26 | 5-25 | 5-25 | 5-24 |
| தனுசு | 5-19 | 5-19 | 5-19 | 5-19 | 5-19 | 5-19 |
| மகரம் | 4-46 | 4-47 | 4-48 | 4-50 | 4-51 | 4-53 |
| கும்பம் | 4-17 | 4-19 | 4-21 | 4-24 | 4-26 | 4-28 |
| மீனம் | 4-11 | 4-13 | 4-15 | 4-17 | 4-20 | 4-22 |



www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

## வட நாட்டிலுள்ள பட்டணங்கள்

| 14° | 15° | 16° | 17° | 18° | 19° | 20° |
|---|---|---|---|---|---|---|
| அனந்தப்பூர் கடப்பை நெல்லூர் | குத்தி பெல்லாரி | ஆதோனி கர்நூல் குண்டூர் பெல்காம் மசூலிப்பட்டணம் ராய்ச்சூர் | ஐதராபாத் காகினாடா ராஜமந்திரி விஜயவாடா ரங்கூன் | விஜயநகரம் விசாகப் பட்டணம் ஸ்ரீகாகுளம் பூனா | கஞ்சம் பம்பாய் | நாசிக் |
| நா.வி. | நா.வி. | நா.வி. | நா.வி. | நா.வி. | நா.வி. | நா.வி. |
| 4-27 | 4-25 | 4-23 | 4-21 | 4-19 | 4-17 | 4-15 |
| 5-03 | 5-02 | 5-01 | 5-00 | 4-58 | 4-57 | 4-55 |
| 5-28 | 5-28 | 5-28 | 5-29 | 5-29 | 5-29 | 5-29 |
| 5-23 | 5-25 | 5-27 | 5-29 | 5-31 | 5-33 | 5-35 |
| 5-10 | 5-12 | 5-14 | 5-16 | 5-19 | 5-22 | 5-25 |
| 5-06 | 5-08 | 5-10 | 5-12 | 5-15 | 5-18 | 5-21 |
| 5-18 | 5-19 | 5-21 | 5-23 | 5-26 | 5-28 | 5-31 |
| 5-29 | 5-30 | 5-31 | 5-32 | 5-33 | 5-35 | 5-37 |
| 5-18 | 5-18 | 5-18 | 5-17 | 5-17 | 5-16 | 5-16 |
| 4-44 | 4-43 | 4-41 | 4-39 | 4-37 | 4-35 | 4-33 |
| 4-15 | 4-13 | 4-11 | 4-09 | 4-06 | 4-03 | 4-00 |
| 4-09 | 4-07 | 4-05 | 4-03 | 4-00 | 3-57 | 3-53 |

## வெளிநாட்டிலுள்ள பட்டணங்கள்

| 7° | 6° | 5° | 4° | 3° | 2° | 1° |
|---|---|---|---|---|---|---|
| கண்டி கொழும்பு | காலி | பினங்கு | குவாந்தன் | கோலாலம்பூர் | மலாக்கா | சிங்கப்பூர் |
| நா.வி. | நா.வி. | நா.வி. | நா.வி. | நா.வி. | நா.வி. | நா.வி. |
| 4-41 | 4-42 | 4-44 | 4-46 | 4-48 | 4-49 | 4-51 |
| 5-08 | 5-09 | 5-10 | 5-11 | 5-12 | 5-13 | 5-14 |
| 5-24 | 5-24 | 5-24 | 5-23 | 5-23 | 5-23 | 5-22 |
| 5-13 | 5-12 | 5-11 | 5-09 | 5-07 | 5-05 | 5-04 |
| 4-56 | 4-55 | 4-53 | 4-51 | 4-49 | 4-47 | 4-46 |
| 4-52 | 4-51 | 4-49 | 4-47 | 4-45 | 4-43 | 4-42 |
| 5-05 | 5-03 | 5-01 | 4-59 | 4-57 | 4-55 | 4-53 |
| 5-23 | 5-22 | 5-21 | 5-20 | 5-19 | 5-18 | 5-17 |
| 5-19 | 5-19 | 5-19 | 5-20 | 5-20 | 5-21 | 5-21 |
| 4-54 | 4-54 | 4-55 | 4-57 | 4-58 | 5-00 | 5-01 |
| 4-30 | 4-32 | 4-34 | 4-36 | 4-38 | 4-40 | 4-41 |
| 4-25 | 4-27 | 4-29 | 4-31 | 4-34 | 4-36 | 4-38 |



Hariram Thejus

அட்டவணை — 5

## நவாம்ச சக்கரம் கிரஹ ஸ்தாபன பதகம்

| எண் (1) | நக்ஷத்திரம் (2) | 1-ம் பாதம் (3) | 2-ம் பாதம் (4) | 3-ம் பாதம் (5) | 4-ம் பாதம் (6) |
|---|---|---|---|---|---|
| 1 | அசுவினி | மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் |
| 2 | பரணி | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் |
| 3 | கிருத்திகை | தனுஸ் | மகரம் | கும்பம் | மீனம் |
| 4 | ரோகிணி | மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் |
| 5 | மிருகசீருஷம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் |
| 6 | திருவாதிரை | தனுஸ் | மகரம் | கும்பம் | மீனம் |
| 7 | புனர்பூசம் | மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் |
| 8 | பூசம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் |
| 9 | ஆயில்யம் | தனுஸ் | மகரம் | கும்பம் | மீனம் |
| 10 | மகம் | மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் |
| 11 | பூரம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் |
| 12 | உத்திரம் | தனுஸ் | மகரம் | கும்பம் | மீனம் |
| 13 | ஹஸ்தம் | மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் |
| 14 | சித்திரை | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் |
| 15 | சுவாதி | தனுஸ் | மகரம் | கும்பம் | மீனம் |
| 16 | விசாகம் | மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் |
| 17 | அனுஷம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் |
| 18 | கேட்டை | தனுஸ் | மகரம் | கும்பம் | மீனம் |
| 19 | மூலம் | மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் |
| 20 | பூராடம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் |
| 21 | உத்திராடம் | தனுஸ் | மகரம் | கும்பம் | மீனம் |
| 22 | திருவோணம் | மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் |
| 23 | அவிட்டம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் |
| 24 | சதயம் | தனுஸ் | மகரம் | கும்பம் | மீனம் |
| 25 | பூரட்டாதி | மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் |
| 26 | உத்திரட்டாதி | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் |
| 27 | ரேவதி | தனுஸ் | மகரம் | கும்பம் | மீனம் |

குறிப்பு: ஒரு கிரஹம் எந்த நக்ஷத்திரத்தில் எந்த பாதத்தில் உள்ளதோ, அதை இந்த அட்டவணையில் பார்த்து அந்த நவாம்சை ராசியில் அந்த கிரஹத்தைக் குறிக்கவேண்டும்.



https://www.facebook.com/ebooksintamil/

www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

## ஸ்தானப் பலன்கள்

**(லக்னம் முதல் 12 ஸ்தானங்களில் அறியவேண்டிய பலன்கள்)**

(1) லக்னம் (ஜந்மம்) உயிர், ஜீவன், தேகம், தோற்றம்.

(2) இரண்டாமிடம் (வாக்குஸ்தானம்) குடும்பஸ்தானம், தனம், கண் பார்வை.

(3) மூன்றுமிடம் (சகோதரஸ்தானம்) பேச்சு வல்லமை, கீர்த்தி, தைர்யம், இளைய சகோதரன், சகோதரி, காது, ஆள், அடிமை, அணிகலம், போகம்.

(4) நான்காமிடம் (மாத்ரு ஸ்தானம்) சுகஸ்தானம், வீடு, வாகனம், நிலம், மாதா, பந்துக்கள், வித்தை, வியாபாரம்.

(5) ஐந்தாமிடம் (புத்திர ஸ்தானம்) சந்ததி, புகழ், அம்மான், பிரபுத்வம். மேல்படிப்பு

(6) ஆறுமிடம் (ரோகஸ்தானம்) சத்ருஸ்தானம், சத்ரு, ரோகம், வழக்கு, கடன்.

(7) ஏழாமிடம் (மனைவி) களத்திரஸ்தானம், மாரகஸ்தானம், கூட்டாளிகள்.

(8) எட்டாமிடம் (ஆயுள் ஸ்தானம்.) ஆயுள், மரணவழி.

(9) ஒன்பதாமிடம் (பித்ரு ஸ்தானம்) பாக்யஸ்தானம், கடவுள் பக்தி, குருஉபதேசம், தர்மம், சீலம், பிரயாணம்.

(10) பத்தாமிடம் (ஜீவனஸ்தானம்) ராஜ்யாதிபத்யம், தொழில், கர்மம், ஞானம்.

(11) பதினொன்றுமிடம் (லாபஸ்தானம்) மூத்த சகோதர ஸ்தானம், லாபம்.

(12) பன்னிரண்டாமிடம் (விரயஸ்தானம்) செலவு, சயனம், மோக்ஷம்.

**முக்கிய ஸ்தானங்கள் விவரமும் பெயரும்**

| | |
|---|---|
| 1-4-7-10 | கேந்திரம் |
| 1-5-9 | திரிகோணம் |
| 2-6-8-11 | பணபரம் |
| 3-12 | ஆபோக்லிமம் |

**சுபர்கள் :** வளர்பிறைச் சந்திரன், குரு, சுக்கிரன், பாபரோடு சேராத புதன் இவர்கள் சுபர்களாவர்.

**பாவிகள் :** சூரியன், செவ்வாய், சனி, ராகு, கேது, தேய்பிறைச் சந்திரன், பாபரோடு கூடிய புதன்.



கேந்திராதிபத்ய தோஷம் :

1, 4, 7, 10, ஸ்தானங்களுக்கு அதிபதியாக இருப்பது கேந்திர ஆதிபத்ய தோஷம். இது பாபக் கிரஹங்களுக்குக் கிடையாது. சுபக்கிரஹங்களுக்கு உண்டு. கேந்திரத்தில் பாபர் இருந்தால் தோஷம் உண்டு.

**கிரஹங்களின் ஆதிபத்ய சுப, பாவ பலன்கள் :**

கிரஹங்களுக்கு 3,6,8,11,12 என்ற இந்த ஆதிபத்யம் வந்து, சுப வீட்டு ஆதிபத்யம் வராமலிருந்தால், 3,6,8,11,12ம் வீட்டுக்குடையவர்கள் பாபராவர். சுப ஆதிபத்யமும் இருந்தால் சமபாவமாகக் கொள்ளலாம்.

**கேந்திரங்கள் :**

(1) 1 லக்னம்.

(2) லக்னத்திலிருந்து 4-வது வீடு

(3) லக்னத்திலிருந்து 7-வது வீடு

(4) லக்னத்திலிருந்து 10-வது வீடு

இதற்கு கேந்திரஸ்தானம் என்று பெயர்.

இதை விஷ்ணுஸ்தானம், உச்சம் என்பார்கள்.

ஒன்று—லக்னகேந்திரம் - உதயம் - காற்பலன்.

நான்காவது வீடு—கேந்திரம் - நீர்க்கீழ் - அரைப் பலன்

ஏழாவது வீடு—கேந்திரம் - அஸ்தமனம் - சுப - பாவ - மிஸ்ர பலன்.

பத்தாவது வீடு—கேந்திரம் - உச்சம் - பூரண பலன்

**கிரஹ கேந்திர பலன் :**

லக்னகேந்திரத்தில் - புதன், குரு - பூரணபலன்.

4வது கேந்திரத்தில் - சந்திரன் - சுக்ரன் - பூரணபலன்.

ஏழாவது கேந்திரத்தில் - சனி - ராகு - கேது - பூரணபலன்.

தசம கேந்திரத்தில் - சூரியன் - செவ்வாய் - பூரணபலனைக் கொடுப்பார்கள்.

**திரிகோணம் பலன்: 1-5-9**

லக்னத்திலிருந்து 5 வது வீடு. 9வது வீடு கோணங்களாகும். இதற்கு லக்ஷ்மி ஸ்தானம் என்று பெயர். இதுவே சுப வீடு. ஐந்தாவது (வீட்டில்) கோணத்தில் முக்காற்பலனையும், ஒன்பதாவது (வீட்டில்) கோணத்தில் முழுப்பலனையும் கிரஹங்கள், தசாநாதன் இவர்கள் இருக்கும்போது மேற்சொன்ன பலன்களைக் கொடுப்பார்கள்.



https://www.facebook.com/ebooksintamil/

Hariram Thejus

www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

## நவக்கிஹ காரகத்துவம்

(குறிப்பு: நவக்கிரஹ காரகத்துவம் என்றால் நவக்ரஹங்கள் தரும் பலன் என்று பொருள். அதாவது, கீழ்க்கண்ட பலனை அளிப்பது அந்த அந்த கிரகத்தின் இயற்கையான குணம். ஆகவே, அவரவருடைய ஜாதகப்படி நடக்கும் தசாபுத்திகாலங்களிலும், கோசார காலங்களிலும் கிரகங்கள் அளிக்கும் அந்தப் பலன்கள், அந்தப் பொருள்கள் சம்பந்தமான வியாபாரங்கள், லாப நஷ்டங்கள் இவைகளையெல்லாம் அவரவர் நிலைக்கேற்றபடி ஊகித்துக்கொள்வதற்கு இந்தப்பகுதி மிகவும் உதவும்.)

### சூரியன்—பித்ருகாரகன்

**பிதா,** ஆத்மா, சிரசு, தந்தம், வலது நேத்திரம், சிலும்பின மயிர், பித்தம், சரீரம், வைத்தியம், ஒருதலைநோவு முதலிய சிரசு ரோகம், சுரம், வியாதிஸ்திரீ அல்லது சித்தசுவாதீனமில்லாத ஸ்திரீ போகம், சௌரியம், பிரதாபம், தைரியம், இராஜசேவை, உத்தியோகம், சைவானுஷ்டானம், தபசு, சதாசிவன், பஞ்சலோகம், வச்சிர ரத்தினம், இரசவாதம், யானை, கோதுமை, மிளகு, யாத்திரை, பகற்பொழுது, ஒளி, மலை, காடு, கிராம சஞ்சாரம் இவைகட்கெல்லாம் சூரியனே காரகன்.

### சந்திரன்—மாத்ருகாரகன்

**மாதா,** பராசக்தி, கணபதி, சுகபோசனம், வஸ்திரம், குதிரை, நித்திரை, சிறிதுநாள் பருத்தும் இளைத்து மிருக்கும் சரீரம், சித்தசுவாதீனமின்மை, க்ஷயரோகம், சிலேஷ்ம சீதளநோய்கள், இடக்கண், புருவம், குடை, உத்தியோகம், கீர்த்தி, முத்து, ஸ்திரமின்மை, முத்தாபரணம், வெண்கலம், வெண்ணெய், அரிசி, பனிப் பயறு, உப்பு, மச்சம், உழவன், உப்பளவர், வண்ணார், சத்திரம், கந்த புஷ்பம், சாமரம், பலம், ஸ்நானாதிகம் இவைகட்கெல்லாம் சந்திரனே காரகன்.

### செவ்வாய்—ப்ராத்ருகாரகன்

**சகோதரம்,** பூமி, சுப்பிரமணியர், பத்திரகாளி, கோபவான், குயவன், அக்கினி முகமாகச் செய்யுந் தொழிலினர், யுத்தம், இரத்தம், காயம், சாகசம், செம்பு, சிவந்த இரத்தினம் முதலானவை, பவளம், துவரை, அக்கினிபயம், விரணம், துவேஷம், கடன், சோரம், சுயம்பாகம், வீரியம், உத்சாகம், ஆட்டுவர்க்கம், சேனைத் தலைமை, அதிகாரம், விதவைஸ்திரீபோகம், வைகல்யம், சும்பனம், பிளவை, சடுதிமரணம் இவைகட்கெல்லாம் செவ்வாயே காரகன்.

### புதன்— வித்யா, மாதுலகாரகன்

**அம்மான், கல்வி** ஞானம், விஷ்ணு, வைசியன், கணக்கன், தானாதிபதி, தூதுவன், தேர்ப்பாகன், வாக்கு சாதுர்யம், கதை,



சங்கீதம், சோதிடம், பிரசங்கம், காவியம், உபாசனை, யுக்தி, சத்திய வசனம், வைஷ்ணவகர்மம், வியாபாரங்கள், லிகிதத் தொழில், சிற்பத்தொழில், அலி, தேர், தாதன், அந்தரநாட்டியம் முதலானவை, அண்டரோகம், வாத நோய், விஷரோகம், தாசிபரன், சகல பிரபஞ்சமு மறிந்தவன், நிலையான பேச்சு, புத்திரக்குறைவு, பச்சை ரத்தினம் முதலானவை, சேங்கன்று வர்க்கம், இலை முதலியவை, பாசிப்பயிறு, தாரா, வெந்தயம் இவைகட்கெல்லாம் புதனே காரகன்.

### வியாழன்—புத்ரகாரகன்

**புத்திரர்,** பிரம்மா, ஞானம், யோகாப்பியாசம், ஆசாரியத்துவம், அஷ்டமாசித்திகள், உபதேசம், புத்தியுக்தி, விவகார ஆலோசனை முதலானவை, இராச்சியாதிபத்தியம், குடும்பம், அரசசேவை, தனம், ஒழுக்கம், பிராபல்யம், இராசசன்மானம், பட்டப்பேர், சுருதி, ஸ்மிருதி, ஸத்விஷயம், சாந்தம், சொர்ணம், வைடூரியம், புஷ்பராகம், கோமேதகம், புஷ்பம், தித்திப்பு, நேத்திரங்கள், விப்பிரவர்க்கம், ஆண்டிவர்க்கம், ரிஷிவர்க்கம், தேன், கடலை, சிரகம் இவைகட்கெல்லாம் வியாழனே காரகன்.

### சுக்ரன்—களத்ரகாரகன்

களத்ரம், கிருகம், பட்டப்பேர், பகற்கால மாதுரு, வெகு ஸ்திரீ சங்கம், தாசிதாசன் முதலானவர், சங்கீதவாத்தியம், பரத நாட்டியம் முதலானவைகளில் பிரியம், சுந்தபுஷ்பம், புனுகு, கஸ்தூரி முதலாகிய நானாவித பரிமள வாசனாதிகள், கட்டில், மெத்தை, சப்பிரமஞ்சம் முதலானவை, வெண்சாமரை, இராஜஸ்திரீ, ரூபவதி, போகபாக்கியம், அழகு, இளமை, கருவிழி, சம்பத்து, வாகனம், மாலை, கொடி, டால் முதலானவை, ரத்னம், வெள்ளி, கப்பல் வியாபாரம், எப்போதும் விகடவிநோத பரியாசப் பிரசங்கப் பிரியம், ஆசை, ஸ்ரீதேவதை உபாசனை, ஜனரக்ஷணம், மித்திரம்,; பசு, பால், தயிர் அன்னம், மொச்சை, புளி, ஈயம், தேவப்பெண்கள், இலட்சுமிகடாக்ஷம், ஆகாய சமுத்திர யாத்திரை இவைகட்கெல்லாம் சுக்கிரனே காரகன்.

### சனி—ஆயுன்காரகன்

**தீர்க்காயுசு,** நிசிகாலத்துப்பிதா, சாத்தான் (ஐயனார்) உபாயம், ஜீவனம், எருமைவிருத்தி, இரும்பு, ஆளடிமை, சேவக விர்த்தி, வயற்களம், கிருஷித்தொழில், நீலரத்னம் முதலானவை, மரவேலை, களவு, ஆத்ம இம்சை, சிறைப்படல், இராஜதண்டனை, வீண் வார்த்தை, வெட்கமில்லாமை, துன்பம், வாயடித்தல், கடன், அசுபகர்மம், மயக்க போசனம், நீசஸ்திரீ, விதவைஸ்திரீ, தீவாந்தர பிரவேசம், ஸ்திரீ அல்லது ஊனமான ஸ்திரீ போகம், அலி, அவயவக்குறைவு, சித்தப்பிரமை, மேகநீர் உபத்திரவம், பித்தரோகம், கடுகு, உளுந்து, எள்ளு எண்ணெய் இவைகட்கெல்லாம் சனியே காரகன்.



https://www.facebook.com/ebooksintamil/
Hariram Thejus
www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

### ராகு--பிதாமஹகாரகன்

**ஞானம்,** பிதாமகன், (பிதுர் பாட்டன் வம்சம்), பிரதாபம், செப்பிடு வித்தை, களவு, நானுவித வேடத் தொழில், சேவகத் தொழில், பரதேசவாசம், சாதிக்கு விரோதமாய் செய்யத்தகாத தொழில்கள் செய்தல், விகடவிநோத வித்தைகள், வியாதி ஸ்திரீ போகம், குஷ்டம், விக்கம், நாட்பட்டரோகம், விஷபயம், ஜல கண்டம், அங்கவீனம், வெகு பேச்சு, வாயுவு வலிப்பு, பித்தம், குன்மம், வெட்டுக்காயம், பிளவை முதலிய ரோகங்கள், விலங்கு, சிறைப்படல் இவைகட்கெல்லாம் ராகுவே காரகன்.

### கேது—மாதாமஹகாரகன்

**ஞானம்,** மாதாமகன் (மாதுர்வழி பாட்டன் வம்சம்), கபடத் தொழில், சும்பனம், கீழ்குலத் தொழில், விபசாரம், பாபத் தொழில், பரதேச ஜீவனம், விரணம், விஷபாண்டு, குஷ்டம், வயிற்றுவலி முதலிய ரோகங்கள், அக்கினி கண்டம், அகங்காரம், அசுகம், சிறைப்படல் இவைகட்கெல்லாம் கேதுவே காரகன். பிதாமஹிக்கு கேது காரகனென்றும் கூறுவர்.





https://www.facebook.com/ebooksintamil/

## இலக்கின பலன்

### மேஷம்

இராஜ வெகுமானம், வெகுசனப்பிரியன், தைரியவான், அடிமையுள்ளவன், மூர்க்கன், சாமர்த்தியவான், மோகி, மெலிந்த தேகமுடையவன், அடக்கமுடையவன், தனவான், புத்திமான், அனுசாரன், சஞ்சாரி, பொறுமை, அறிவு, அழகு, மனோபயம், இவைகளையுடையவன். உபயகளத்திரம், ஆயுதம், நெருப்பு, மரம், கல், சுவர்விழுதல் இந்த வகைகளில் எதனுலாவது விரணமுள்ள சரீரம், சகோதரரில் சிரேஷ்டன், அற்ப புத்திரருடையன், 4—5—7—10—20—22—25—28 இந்த வய்துகளில்அக்கினி, சுரம், ஜலம், சிரங்கு, வைசூரி, விஷப்பீடை. சுபர்பார்க்க 100 வயதுவரையிலிருப்பான்.

இந்த இலக்கனத்திற்கு சூரியன், வியாழன் இவர்கள் சுபர் கள். சனி சம்பந்தப்பட்ட வியாழன் எப்போதும் பாப பலனைக் கொடுப்பான். வியாழன், சூரியன், யோககாரகர்கள். சனி, புதன் மாரகர்கள். சுக்கிரன், துதியாதிபதியாக இருந்தாலும் கொல் லான். சனி முதலானவர்கள் கொல்வார்கள். மாரக ஸ்தான மாகிய 2—3—7—8—12-ல் இருந்தால் மாரகத்துக்கொப்பா கிய கண்டத்தைக் கொடுப்பார்கள்.

### ரிஷபம்

ஸ்தூல தேகவான், களத்திர தோஷம், சத்தியவான், ஸ்வகாரிய பரன், பிறர் சொத்தை கிரகிக்க வல்லவன், கபடி, புருஷவசியன், வஸ்திராபரணமுள்ளவன், குண தோஷமறிவான், அடிமையுள்ளவன், பிற்கால புத்திரர்களை உடையவன், 5—13—16—19—20—27 இந்த வயதுகளில் சுரம், கழுத்தில் வியாதி, க்ஷயம், சிரங்கு இவைகளால் பீடை. இந்த லக்கினத்தை சுபக் கிரகங்கள் பார்த்தால் 77 வயது வரையிலிருப்பான்.

சூரியனும் சனியும், புதனும் நல்லவர்கள். சனியொருவனே மேலான ராஜயோகம் கொடுப்போன். சந்திரனும், வியாழனும், சுக்கிரனும் பாபிகள். சந்திரன், வியாழன், செவ்வாய், மாரகாள். புதன் கொல்லான், வியாழன் முதலானவர் கொல்வர். மாரக ஸ்தானமாகிய 2—3—7—8—12-ல் இருந்தால் மாரகத்திற்கு சமானமாகிய கெண்டத்தை கொடுப்பார்கள். சந்திரன் வியாழன், சுக்கிரன் செவ்வாய் இவர்களுடன் சம்பந்தப்பட்ட கிரகங்களை ஆராய்ந்து அவர்கள் நிலைகளறிந்து மாரகம் சொல்லவும்.

### மிதுனம்

சுபகாரியபரன், வயிற்றுநோயுள்ளவன, இனிய வார்த்தை யுடையவன், வார்த்தை சோர்வில்லாதவன், கபடி, மைதுனப்



https://www.facebook.com/ebooksintamil/
Hariram Thejus
www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

பிரியன், மனைவி சொல்லைக் கேட்பவன், ரோக களத்திரமுடையவன், வெட்கமுடையவன். கணக்கன், மூத்திரகிருச்ரரோகி, புகழையுடையவன், வழக்கறிஞன், 2-3-4-5-8-9-10-18-25-28 இந்த வயதுகளில் நெருப்பு, ஆயுதம், சுரம், கண்ணோய் இவைகளால் பீடை. இந்த லக்கினத்தை சுபக்கிரகம் பார்க்கில் 65 வயது வரையிலிருப்பான்.

இந்த லக்கினத்துக்கு சூரியன், செவ்வாய், வியாழன் கொடிய பாபிகள். வியாழன் சனியுடன் சேருவானாகில் அவயோக காரனுவான். சுக்கிரன் ஒருவனே சுபன். சந்திரன் துதியாதிபத்திய தோஷத்தை உடையவனாயிருந்தாலும் மாரகங்கொடான். சூரியன், செவ்வாய், வியாழன், இவர்கள் மாரகஸ்தானங்களிலிருந்தால் மாரக சமானமாகிய கெண்டத்தைக் கொடுப்பர். குருவும், சனியும் தருமகருமாதிபதிகளானகையால் யோககாரகர்கள். இவர்கள் ஒன்றுசேர்வதைக் காட்டிலும் தனிப்பட்ட சுபஸ்தானங்களில் பலமுற்றிருந்தால் யோகப்பலனுண்டாம்.

## கடகம்

தனவான், களத்திரககமற்றவன், கபடுள்ள அவமான களத்திரமுடையவன், சமர்த்துள்ளவன், குருவிசுவாசன், அற்ப புத்திருடையவன். சதா துக்கி, பிதாவுக்கு அடங்காமை. 5-8-14-16-20-25-40 இந்த வயதுகளில் சுரத்தால் பீடை. நன்மையான கிரகம் பார்க்கில் 90 வயது வரையில் இருப்பான்.

வியாழனும் செவ்வாயும் சுபர்கள். செவ்வாய், வியாழன், யோககாரகர். செவ்வாயும் வியாழனும் கூடியிருந்தால் பிரபல யோகம். சூரியன் கொல்லான். சுக்கிரன், புதன் பாபிகள். புதன், சுக்கிரன், சனி மாரகர்கள். இவர்கள் மாரகஸ்தானமாகிய 2-3-7-8-12ல் இருந்தால் மாரகத்துக்குச் சமமாகிய கெண்டத்தை கொடுப்பார்கள்.

## சிம்மம்

கம்பீர வசனமுள்ளவன், நல்ல புசிப்பையுடையவன், திடவான், பசியுடையவன், பாபகர்மி, மாதுர் பிதுர்துவேஷி, கோபி, தைரியவான், தனவான், பக்திமான், சகலகலாவல்லவன். ஜனவசியன், கபடி, நேத்திரம் சிரசு முகம் இவைகளில் ரோகி, வேலை செய்ய விருப்பமுடையவன். 5-10-27-30 வயதுகளில் சுரத்தால் பீடை. இந்த லக்கினத்தை சுபக்கிரகம் பார்க்கில் 80 வயது வரை இருப்பான்.

சூரியன் செவ்வாய் சுபர்கள். **புதன், சுக்கிரன்** பாவிகள். **செவ்வாய்,** யோககாரகன் செவ்வாயும் சுக்கிரனும் கூடியிருந்தால் யோகமுண்டாம். சனி, சுக்கிரன் மாரகர்கள். புதன கொல்லான். மாரகஸ்தானமாகிய 2-3-7-8-12ல் இருந்தால் மரணத்திற்குச் சமமாகிய கெண்டத்தைக் கொடுப்பார்கள்.



Hariram Thejus

https://www.facebook.com/ebooksintamil/

## கன்னி

தர்மவான், பின்விரக்கமுள்ளவன், ஆசாரமுடையவன், நல்ல நடத்தையுடையவன், சுயகாரியபரன், மனோவஞ்சகன், பிறரால் தொழில் தனம் பெற்றுடையோன். சனப்பிரியன், நன்மை தீமை இரண்டும் செய்பவன், பின் வயதில் அதிக தனம் சம்பாதித்தலுமுடையவன். 5-8-9-10-18-19 இந்த வயதுகளில் நெருப்பு, பேதி, சுரம், வைசூரி இவைகளால் பீடை. சுபக்கிரகப் பார்வையுண்டாகில் 77 வயதுக்குக் குறையாழலிருப்பான்.

இந்த இலக்கினத்துக்கு சுக்ரனும் புதனும் யோககாரகர்கள். இவர்களிருவரும் கூடியிருந்தால் பிரபல யோகம். சந்திரன், செவ்வாய், வியாழன், மாரகர்கள். சுக்கிரன் துதியாதிபதியாயிருந்தாலும் கொல்லான். மாரகஸ்தானமாகிய 2-3-7-8-12ல் இருந்தால் மாரக சமானமாகிய கெண்டத்தைக் கொடுப்பார்கள்.

## துலாம்

இராஜபூஜிதன், நல்ல குணம், நல்ல புத்தி, பொறுமை, வல்லமை, அறிவு, புகழ், இவையுடையவன், சம்பத்தையுடையவன், மன்மதசுகி, பரிமளப் பிரியன், தனவான், இரக்கமுடையவன், அபிமானி, சனப்பிரியன், சுகவான், மனோபீதி. 7-9-10-12-19-28 இந்த வயதுகளில் அக்கினி, பேதி, சத்துரு, வைசூரி, ஜலம், இவைகளால் பீடை. இந்த இலக்கினத்தைச் சுபக்கிரகம் பார்த்தால் 85 வயது வரையில் வாழ்ந்திருப்பான்.

இந்த இலக்கினத்துக்கு சனி, புதன், சுக்கிரன், சுபர்கள். சூரியன், செவ்வாய், வியாழன் பாவிகள். சந்திரனும், புதனும் யோககாரகர்கள். இவர்களிருவரும் கூடியிருந்தால் பிரபலயோகம். சூரியன், வியாழன் மாரகர்கள். செவ்வாய் துதிய சப்தமாதிபதியாயிருந்தாலும் கொல்லான். மாரகஸ்தானமாகிய 2-3-7-8-12-ல் இருந்தால் மாரகத்துக்கொப்பாகிய கெண்டத்தை கொடுப்பார்கள்.

## விருச்சிகம்

புத்திமான், தனவான், வெகுமானி, வஞ்சகன், இனிமையாகப் பேசுபவன், பந்துஜன துவேஷி, எடுத்த காரியத்தை முடிப்பான். வரையற்ற விஷப்பிரியன், மனைவியிடத்தில் அதிக பிரியமுள்ளவன். 4-5-10-12-18-40 இந்த வயதுகளில் கண்ட தோஷம். சுரம், அக்கினி, சன்னி இவைகளாற் பீடை. இந்த இலக்கினத்தை உத்தமகிரகம் நோக்கில் 90 வயது வரையிலிருப்பான்.

சூரியன், சந்திரன், வியாழன், சுபர்கள். செவ்வாய், புதன், சுக்ரன் பாவிகள். சூரியனும், சந்திரனும் யோககாரர்கள். இவர்



https://www.facebook.com/ebooksintamil/

www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

சனிவரும் கூடியிருந்தால் பிரபலயோகம். புதன், சுக்ரன் மாரகர்கள். வியாழன் சனி கொல்லார்கள். புதன், சுக்கிரன் முதலானவர் கொல்வர். மாரகஸ்தானமாகிய 2-3-7-8-12ல் இருந்தால் கொல்வர். அல்லது மாரகத்துக்குச் சமமான கெண்டத்தை கொடுப்பர்.

## தனுசு

சத்தியவான், நற்குணமுடையவன், அபிமானி, நல்ல வசனமுள்ளவன், சுகவான், தனவான், போகவான், மித்திரன், வித்தையுடையவன், சஞ்சாரி, சதா உத்தியோகபரன்; 3-4--5-12-15-18-32-40-47 இந்த வயதுகளில் கண்ணோயாலும், உஷ்ணரோகத்தாலும் பீடை. இலக்கினத்தைச் சுபக்கிரகம் பார்த்தால் 77-வயது வரையிலிருப்பான்.

சூரியனும் செவ்வாயும் சுபர்கள், சுக்கிரன் ஒருவனே பாவி. சூரியனும் புதனும் யோககாரகர்கள். சூரியனும் புதனும் கூடியிருந்தால் பிரபலயோகம், சுக்ரன், புதன் மாரகர்கள். சந்திரன், சனி கொல்லார்கள். சுக்ரன் முதலானவர்கள் கொல்வார்கள். மார்ரகஸ்தானமாகிய 2-3-7-8-12-ல் இருந்தால் மாரகத்துக்குச் சமானமாகிய கெண்டத்தைக் கொடுப்பார்கள்.

## மகரம்

துராசையுடையவன், திடபுத்திமான், சுபகாரியபரன், உபாயமுள்ளவன், கோபி, வாச்சாலகன், அபிமானி, பரிமளப்பிரியன் மனைவியிடத்தில் பிரியமுள்ளவன், 3-4-5-7-8-10-12-32-37இந்த வயதுகளில் ஜலம், சுரம், விஷம் இவைகளால் பீடை. இந்த லக்கினத்தை சுபக்கிரகம் பார்த்தால் 67-வயது வரையிலிருப்பான்.

செவ்வாய், புதன், சுக்கிரன், சுபர்கள். சந்திரன் வியாழன் பாவிகள், சுக்கிரன் ஒருவனே யோககாரகன், சுக்கிரனும் புதனும் கூடியிருந்தால் இராஜயோகம், சூரியன் சனி கொல்லார்கள். சந்திரன் வியாழன் மாரகாள். மாரகஸ்தானமாகிய 2-3-7-8-12ல் இருந்தால் மாரகத்துக்குச் சமானமாகிய கெண்டத்தைக் கொடுப்பார்கள்.

## கும்பம்

சிநேகிதர்களை பாதிப்பவன், ஸ்திரீகளுக்குப் பிரியமுள்ளவன், அகன்ற வயிறுடையவன், சுகவான், திடசித்தமுள்ளவன், தரித்திரன், தன்னையே புகழ்ந்து பேசுவன், குள்ளன், சிவந்த கண்ணையுடையவன், ஒருவர் செய்யும் உபகாரத்தை உடனே மறந்துவிடுகிறவன், அற்ப கல்வியுடையவன், பித்த சரீரமுடையவன், 9-10-11-20-30-32 இந்த வயதுகளில் சுரம், மிகுந்த



https://www.facebook.com/ebooksintamil/

[illegible] இந்த இலக்கினத்தை சுபர்கள் பார்த்தால் 80-வயது வரையிலிருப்பான்.

சுக்கிரன், புதன், சனி சுபர்கள், சந்திரன், செவ்வாய், வியாழன் பாவிகள். சுக்கிரன் ஒருவனே யோககாரகன். சுக்கிரன் செவ்வாய் கூடியிருந்தால் பிரபல யோகத்தைக் கொடுப்பார்கள். வியாழன் துதியாதிபதியாயிருந்தாலும் கொல்லான் சந்திரன் செவ்வாய் மாரகஸ்தானமாகிய 2-3-7-8-12-ல் இருந்தால் மாரகத்துக்குச் சமானமாகிய கெண்டத்தைக் கொடுப்பார்கள்.

## மீனம்

ஞானி, பிராமணர், பெரியோரிடத்தில் பக்தி விசுவாசமுடையவன், சத்தியவான், ரூபமும், சௌகரியமும், திரவியமு முடையவன், பரிமளப்பிரியன், வெகு செலவாளி, இரக்கமுள்ளவன், முன் ஜாக்கிரதையுள்ளவன், குளிர்ச்சியான கண்களும் கர்ணரோகமுமுடையவன் ; 3-4-7 12-20-28 இந்த வயதுகளில் இருமல், சுரம், உஷ்ணரோகம் இவைகளாற் பீடை. இந்த லக்கினத்தை சுபக்கிரகம் பார்த்தால் 100-வயது வரையிலிருப்பான்.

சந்திரன், செவ்வாய், சுபர்கள். சூரியன், புதன், சுக்கிரன், சனி இவர்கள் பாவிகள். செவ்வாயும் குருவும் யோககாரகர்கள். செவ்வாயும் வியாழனும் கூடியிருந்தால் பிரபல யோகத்தைக் கொடுப்பார்கள். சூரியன், புதன், சுக்கிரன், சனி இவர்கள் மாரகஸ்தர்கள். செவ்வாய் கொல்லான், சூரியன் முதலானவர்கள் கொல்வார்கள். மாரகஸ்தானமாகிய 2;3-7-8-12-ல் இருந்தால் மாரகத்துக்குச் சமானமாகிய கெண்டத்தைக் கொடுப்பார்கள். கிரகங்களுடைய வலிமையை யூகித்துச் சொல்லுக.

---



Hariram Thejus
www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

# ஜன்ம நக்ஷத்திர பலன்

## அசுவினி

**அசுவினி 1ம் பாதம்:**

தெய்வீக அருளைப் பெற்றிருப்பார்கள். மஹா லக்ஷ்மியுடன் கூடினவன். தனவந்தனாகவும், புத்தி சாதுர்யத்தினால் புகழையும் செல்வத்தையும் பெறுவான். அற்பமான எண்ணங்களும், புறம் பேசும் குணமும் உண்டு.

**அசுவினி 2ம் பாதம்:**

புராணங்கள், இதிகாசங்கள், சாஸ்திரங்கள், சரித்திரங்கள் முதலியவற்றைப் பெரியவர்களிடம் கேட்டுத் தெரிந்துகொள்ளும் ஊக்கத்தைப் பெற்றிருப்பார்கள். மற்றவர்களை நன்றாகப் புரிந்து கொண்டு, அன்புடன் பழகுவார்கள். வாதம் செய்வதிலும், டாம்பீகத்திலும் பிரியமுள்ளவனாக இருப்பார்கள்.

**அசுவினி 3ம் பாதம்:**

வேத, சாஸ்திர, விஞ்ஞானம், ஜோதிஷம், முதலியவைகளில் பிரியம் கொண்டவர்கள். ஆசிரியரைப் போல நல்ல விஷயங்களை மற்றவர்களுக்குப் போதிப்பார்கள். உஷ்ண திரேகத்தையும், மூலரோக வியாதிகளையும் பெற்றிருப்பார்கள்.

**அசுவினி 4ம் பாதம்:**

திறமையையும், விசாலமான புத்தி கூர்மையையும் பெற்றிருப்பார்கள். தேவாலய, தெய்வீக வழிபாடுகளையும், சாஸ்திர, ஜோதிஷத்தில் நம்பிக்கை கொண்டவர்களாகவும், மற்றவர்களை கிரஹித்துக்கொள்ளும் சக்தி பெற்றவர்களாகவும், நீதி, நேர்மை, உண்மையான வழிகளைப் பின்பற்றியும் இருப்பார்கள்.

## பரணி

**பரணி 1ம் பாதம்:**

பருத்த திரேகத்துடனும், நற்குண நற்செய்கைகளுடனும், எதிரிகளைச் சுலபத்தில் வெற்றி கொள்பவர்களாகவும், நன்றி அறிவு உள்ளவர்களாகவும், காமப்பிரியர்களாகவும், அகங்கார குணத்துடனும் இருப்பார்கள்.

**பரணி 2ம் பாதம்:**

திறமைகளைக் கொண்டவர்களாகவும், மற்றவர்களைப் புரிந்து கொண்டும், பழகும் குணங்களுடனும், தான தருமங்களைச் செய்



Hariram Thejus

https://www.facebook.com/ebooksintamil/

யும் இயல்புடையவராகவும், எதிரிகளை எளிதில் ஜயிக்கும் சக்திகளைப் பெற்றவர்களாகவும், நற்குணங்களைப் பெற்றுமிருப்பார்கள். மற்றவர்களால் புகழையும் கீர்த்தியையும் பெறுவார்கள்.

**பரணி 3ம் பாதம்:**

அதிர்ஷ்ட தேவதைகளின் அருளினால் எக்காரியங்களிலும் வெற்றியைப் பெற்றும், சந்தோஷங்கள், சௌகர்யங்களுக்கு குறைவில்லாமலும், திடகாத்திர திரேகத்துடனும், பெரிய கண்களுடனும், சிவந்தவர்களாகவும் இருப்பார்கள்.

**பரணி 4ம் பாதம்:**

பருத்த திரேகத்துடனும், தோற்றத்துடனும், துன்மார்க்க குணத்துடனும், பிடிவாத சுபாவத்துடனும், வஞ்ச நெஞ்சம் கொண்டவராகவும், அடிமை வாழ்க்கை அல்லது சாதாரணத் தொழிலை அல்லது வேலைகளைச் செய்பவராகவும் இருப்பார்கள். தன்னுடைய காரியங்களைச் சாதித்துக் கொள்வதில் சமர்த்தராக இருப்பார்கள்.

## கிருத்திகை

**கிருத்திகை 1ம் பாதம்:**

பூமி, காணி, வீடு முதலிய சொத்துக்களுடன், மாடு கன்று, பால் பாக்யங்களுடனும், செல்வந்தராகவும், முன்கோபியாகவும், ஆசார அனுஷ்டானங்களுடனும், வியாதி, நோய்களுடனும், இருப்பார்கள். கல்வியில் அதிகப் பற்றுதல் இருக்காது. திறமைகளுடன் இருப்பார்கள்.

**கிருத்திகை 2ம் பாதம்:**

ஆசார அனுஷ்டானங்களிலும், வேத, சாஸ்திர, விஞ்ஞானங்களிலும், புராணங்களிலும் நம்பிக்கை இல்லாதவர்களாகவும், மூர்க்கராகவும், கெட்ட சுபாவங்களைக் கொண்டவர்களாகவும், கல்வியில் திறமையும். கலைகளை ஆர்வங்களுடன் பயிலுபவராகவும் இருப்பார்கள்.

**கிருத்திகை 3ம் பாதம்:**

பயித்தியக்காரன் அல்லது அசடனாகவும், தைர்யங்களுடனும், பிறருக்கு உபத்திரவங்களைச் செய்யும் குணங்களுடனும், புத்திக் குறைவுடனும் இருப்பார்கள். மெதுவான குணமும், இருக்கும். கெட்ட நடத்தையுள்ள ஸ்திரிகளுடனும், துஷ்டப் பெண்களுடனும் நட்பைப் பெற்றிருப்பார்கள்.

**கிருத்திகை 4ம் பாதம்:**

ஏழ்மையுடையவனாகவும், திரேக அசௌக்கியங்களுடனும், துக்கங்களை எப்போதும் அனுபவிப்பவனாகவும், மனஸ்தாபங்களி



https://www.facebook.com/ebooksintamil/

www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

லேயே வாழ்பவனாகவும், பிறரிடம் சண்டை செய்துகொண்டிருப்பவர்களாகவும் இருப்பார்கள். கல்வியில் ஊக்கம் இருக்காது.

## ரோஹிணி

**ரோஹிணி 1ம் பாதம்:**

ஆசைகள் அதிகம் கொண்டவராகவும், ஸ்திரீகளிடம் விருப்பம் கொண்டவராகவும், கனதனவான்கள், கற்றறிந்தவர்களின் நட்பைப் பெற்றவர்களாகவும், அழகும், கம்பீரமான தோற்றத்துடனும், ஊர் சுற்றும் சுபாவ குணங்களுடனும், கற்றறிந்தவர்களாகவும், வாக்கில் பிசகில்லாதவராகவும் இருப்பார்கள்.

**ரோஹிணி 2ம் பாதம்:**

நல்ல சுபாவங்களுடனும், ஆசார அனுஷ்டானங்களைக் கொண்டவர்களாகவும், உண்மை, நீதி, நேர்மையுடன் கூடியவர்களாகவும், மாந்திரீகம், சாஸ்திரங்களில் பிரியமுள்ளவர்களாகவும், முன்கோபத்துடனும், ஸ்திரீகளிடம் நேசம் கொண்டவர்களாகவும் இருப்பார்கள்.

**ரோஹிணி 3ம் பாதம்:**

கல்வியில் பட்டம் பெற்றவர்களாகவும், திறமை கொண்டவர்களாகவும், கணிதத்தில் மேதையாகவும், சங்கீதத்திலும், வேடிக்கை வித்தைகள், மாயா ஜாலங்கள் செய்பவர்களாகவும் புலவர்களாகவும் இருப்பார்கள்.

**ரோஹிணி 4ம் பாதம்:**

பிறர்சொல் பொறுக்கமாட்டாதவர்களாகவும், நீதி, நேர்மையுடனும், ஸ்திரீகளிடம் பழகுபவர்களாகவும் இருப்பார்கள். தனவந்தர்களாகவும், செல்வாக்குடனும் இருப்பார்கள்.

## மிருகசீருஷம்

**மிருகசீருஷம் 1ம் பாதம்:**

செல்வந்தராக இருப்பார்கள். திறமைகளுடனும், விசால புத்தியுடனும், அழகுள்ளவர்களாகவும் இருப்பார்கள். ஆசார அனுஷ்டானங்களில் நம்பிக்கை இருக்காது. மன அழுத்தம்கொண்டவர்கள் : தேச யாத்திரைகளில் பற்றுதல் இருக்கும். பிறர் பொருளை அபகரிக்கும் குணம் உண்டு. திரேகத்தில் சிறங்கு முதலான நோய்கள் இருக்கும்.

**மிருகசீருஷம் 2ம் பாதம்:**

உண்மையைப் பேசுதல், உண்மையுடன் பழகுதல், சத்தியவான், திறமைகளைப் பெற்றவன், முன்கோபகுணம், பெண்களிடம் அற்ப ஆசையுடன் இருப்பார்கள்.



**மிருகசீருஷம் 3ம் பாதம்:**

சந்தோஷமாக காலங்கழிப்பவராகவும், உதாரகுணம் கொண்டவர்களாகவும், ஆசார அனுஷ்டானங்களில் பற்றுதல் கொண்டவராகவும், தெய்வீக தேவாலய வழிபாடுகளில் பங்குகொண்டவர்களாகவும், சாதுவாகவும் இருப்பார்கள்.

**மிருகசீருஷம் 4ம் பாதம்:**

திறமையுள்ளவர்களாகவும், சாதுவாகவும், தான தருமங்களைச் செய்பவர்களாகவும், பிறரின் மனதைப் புரிந்துகொண்டு அதன்படி நடப்பவர்களாகவும், சத்திய நெறி கொண்டவர்களாகவும், காமகுணம், பிடிவாத குணங்களுடன், ஏமாற்றுபவர்களாகவும், நெஞ்சில் அழுத்தம் கொண்டவர்களாகவும் இருப்பார்கள்.

## திருவாதிரை

**திருவாதிரை 1ம் பாதம்:**

சுத்த ஹ்ருதயமுள்ளவர்களாக இருப்பார்கள். திறமை, நற்குணம், மற்றவர்களிடம் எளிதில் நண்பராகும் ஆற்றல், பொருளைச் சேர்த்து வைப்பதில் பிரியம், பண விஷயங்களில் சாதுர்யமாக சம்பாதித்து, கணக்கு விஷயங்களில் திறமையுடன் இருப்பது போன்ற குணமுடையவர்கள்.

**திருவாதிரை 2ம் பாதம்:**

வாதங்களில் பேசுவதில் கண்டிப்பான பேச்சுக்களையும், கலைகளில் பற்றுதல் கொண்டவர்களாகவும், பிறர் சொல்வதை அறிந்து கொள்வதற்கு முன்பே, கோபம் கொள்ளும் குணமும், பந்துக்களுடன் விரோதம் பாராட்டுவதும், திடமான தைர்யத்தையும் பெற்றிருப்பார்கள்.

**திருவாதிரை 3ம் பாதம்:**

பிறரைப்பற்றி இகழ்வாக புறம் பேசித் திரிவார்கள். உடல் நோயுடனும், அழுக்கான ஆடைகளை அணிந்துகொண்டும், ஆணித்தரமான பேச்சுக்களைப் பேசியும், பிறரிடம் மனம் இளகாமல் இருப்பதும், ஸ்திரீ பிரஜைகளால் தூற்றப்பட்டும், வாழ்க்கையை நடத்துவார்கள். அசடு போல பார்வைக்கு பேசி வருவார்கள்.

**திருவாதிரை 4ம் பாதம்:**

பந்துஜன விரோதங்களுடன், சுபகாரியவாதியாகவும் பயித்தியக்காரன் போன்ற செய்கைகளுடனும், பணம் சம்பாதிப்பதில் நீதி, நேர்மை இல்லாதவராகவும், காமாந்தகாரராகவும் இருப்பார்கள். கணிதத்தில் திறமையாகவும், எழுதுவதில் சாமர்த்தியமுள்ளவராகவும் இருப்பார்கள்.



https://www.facebook.com/ebooksintamil/
Hariram Thejus
www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

## புனர்பூசம்

**புனர்பூசம் 1ம் பாதம்:**

பருத்த சரீரத்துடன், ஆசைகள் அதிகம் கொண்டவர்களாகவும், காது மந்தமாகவும், சுறுசுறுப்பு குறைந்தும், கல்வியில் திறமை, ஊக்கம் கொண்டவர்களாகவும், மனதில் ஸ்திரமான எண்ணங்களில்லாமலும், மனதை விட்டு வெளியே பேசாமலும் செல்வங்களுடன், பித்த திரேகத்துடன் இருப்பார்கள்.

**புனர்பூசம் 2ம் பாதம்:**

சோம்பேறிகளாகவும், ஆசார அனுஷ்டானங்கள், தெய்வ பக்தி வழிபாடுகள் குறைந்தும், வியாதிகளுள்ளவர்களாகவும், டாம்பீகக் குணங்களுள்ளவர்களாகவும்; பேசும் திறமை கொண்டவர்களாகவும் இருப்பார்கள்.

**புனர்பூசம் 3ம் பாதம்:**

ஊர் சுற்றும் குணங்களுடனும், குஷ்ட ரோக வியாதிகளுடனும், பற்களைச் சுத்தம் செய்யாது துர்நாற்றம் வீசும் வியாதிகளுடனும், நீண்ட ஆயுளுடனும் பிறரை நன்றாக அறிந்து கொள்ளும் குணங்களுடனும் இருப்பார்கள்.

**புனர்பூசம் 4ம் பாதம்:**

அழகான திரேக அங்கலக்ஷணங்களுடனும், குள்ளமாகவும், நன்மைகளைப் பிறருக்குச் செய்பவர்களாகவும், நன்றி மறவாத குணமுடையவர்களாகவும், தெளிவான பார்வைகளுடனும் இருப்பார்கள்.

## பூசம்

**பூசம் 1ம் பாதம் :**

பெரியவர்களிடம் பக்தி, சிரத்தையுடையவர்களாகவும், கல்வியில் திறமை கொண்டவர்களாகவும், தெய்வ பக்தி, வழிபாடுகள் நிரம்பப் பெற்றவர்களாகவும், தார்மீக சிந்தனையுடன் கூடினவர்களாகவும், செல்வந்தர்களாகவும், படித்த பெரிய மனிதர்களின் நட்பைப் பெற்றவர்களாகவும், சரீரத்திற்குள் வியாதிகளைக் கொண்டவர்களாகவும் இருப்பார்கள்.

**பூசம் 2ம் பாதம்:**

மெதுவான குணம் கொண்டவர்களாகவும், பிறருக்கு ஆசிரியர்களாகவும், புத்திசாலியாகவும், சண்டையிடுவதில் பிரியங் கொண்டவர்களாகவும், செல்வங்களுடன், ஸ்திரீ போகத்தைப் பெற்றவர்களாகவும் இருப்பார்கள்.



https://www.facebook.com/ebooksintamil/

**பூசம் 3ம் பாதம்:**

கவலைகளை மறந்தவராய் சதா சிரித்துப் பேசும் குணங்களுடனும், பந்துக்கள் நண்பர்களால் புகழ், பெருமைகளைப் பெறுபவர்களாகவும், சாமர்த்தியசாலிகளாகவும், எல்லோருடனும் சகஜமாகப் பழகுபவர்களாகவும், கல்வி ஞானம் பெற்றவர்களாகவும், எடுத்த காரியத்தை முடிக்கும் சுபாவத்துடனும் இருப்பார்கள்.

**பூசம் 4ம் பாதம்:**

சண்டையிடுவதில் பிரியம் கொண்டவர்களாகவும், கெட்ட எண்ணங்களுடனும் பழகுபவர்களாகவும், கோபியாகவும், காமம் அதிகம் கொண்டவர்களாகவும் இருப்பார்கள்.

## ஆயில்யம்

**ஆயில்யம் 1ம் பாதம்:**

சதா, தாம் தரித்திர நிலைமையில் இருப்பவர்களைப் போல மற்றவர்களிடம் பேசி வருவார்கள். ரத்தக் கண்களுடனும், அகங்கார குணத்துடனும், மற்றவர்களிடமிருந்து எவ்விதம் பொருள்களை அபகரிக்கலாம் என்ற நோக்கங்களுடனும், கல் நெஞ்சுக்காரர்களாகவும், செல்வந்தர்களாகவும் இருப்பார்கள். கோபமும், துன்மார்க்கத்தனமும் அதிகமிருக்கும்.

**ஆயில்யம் 2ம் பாதம்:**

சிவந்த மேனி, அகலமான கண்கள், ஆசார அனுஷ்டானத்தில் சிறிது நம்பிக்கையும், தான் நியாய வழிகளில் செல்லாது, பிறருக்கு நியாயங்களை போதிப்பவராகவும், முன்கோபங்களுடனும், துஷ்டர்களாகவும் இருப்பார்கள்.

**ஆயில்யம் 3ம் பாதம்:**

மனைவியை சித்ரவதை செய்பவனாகவும், ஸ்திரீ ஜனங்களால் தூற்றப்படுபவனாகவும், கோபம், அகங்கார குணங்களைக் கொண்டவனாகவும், நன்றியை மறப்பவர்களாகவும், யோசித்துப் பார்க்கும் குணமில்லாதவர்களாகவும், மெதுவான போக்கையும் கொண்டவராகவும் இருப்பார்கள்.

**ஆயில்யம் 4ம் பாதம்:**

கொலை செய்யும் குணங்களைக் கொண்டவர்களாகவும், தாழ்ந்த ஜாதி ஜனங்களுடன் நட்பு, சகவாசம், புணருதல், இன்பங்களை அனுபவிப்பவர்களாகவும், பொன், நகைகளில், பணத்தை சம்பாதிப்பதில் பிரியம் கொண்டவர்களாகவும், அசட்டு சுபாவம், பயித்தியக்காரர்களிடம் சிநேகங்களுடனும், வியாதிகளைக் கொண்டவர்களாகவும், செலவு செய்பவர்களாகவும் இருப்பார்கள்.



Hariram Thejus
www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

## மகம்

**மகம் 1ம் பாதம்:**

சிவந்த கண்களுடனும், கல்வி பயில்வதிலும், சாஸ்திர ஆராய்ச்சியிலும் திறமை உள்ளவர்களாகவும், தரும சிந்தனை, பரோபகாரச் சிந்தனை, ஆகிய குணங்களுடன் அழகாகவும், செல்வந்தர்களாகவும் இருப்பார்கள்.

**மகம் 2ம் பாதம்:**

மந்தமான குணங்களுடனும், செலவு அதிகம் செய்பவராகவும், வியாதிகளைக் கொண்டவர்களாகவும், கௌரவத்துடன், பரிசுத்த குணங்களுடன் இருப்பார்கள்.

**மகம் 3ம் பாதம்:**

சாதுவாகவும், பிறர் பொருளைப் பார்த்து ஏங்குபவர்களாகவும், வியாதிகளுடனும், பலவானாகவும் இருப்பார்கள்.

**மகம் 4ம் பாதம்:**

மனைவியிடம் அடங்கின கணவனாகவும், சரும வியாதிகளைக் கொண்டவர்களாகவும், சீலமுடையவர்களாகவும், ஸ்திரீகள் பேச்சுக்கு அதிகமான மதிப்பைக் கொடுப்பவர்களாகவும், வசியப்படுத்தக்கூடிய மதுரமான பேச்சுக்களைக் கொண்டவர்களாகவும் இருப்பார்கள்.

## பூரம்

**பூரம் 1ம் பாதம்:**

ஆசார சீலராகவும், தைரியங்களைப் பெற்றும், வியாபார எண்ணங்களைக் கொண்டும், புத்திசாதுர்யங்களைப் பெற்றவர்களாகவும், துடுக்காகவும், துன்மார்க்க குணங்களுடனும் ஸ்திரிகளிடம் பழகுபவர்களாகவும் இருப்பார்கள்.

**பூரம் 2ம் பாதம்:**

அதிர்ஷ்ட பாக்யங்களை அதிகம் பெறுதவராகவும், விவசாயத் தொழிலில் ஈடுபாடுடையவராகவும், வியாபார நோக்கங்களுடனும், மேன்மையுடையவராகவும், கவலைகளைக் கொண்டவராகவுமிருப்பார்கள்.

**பூரம் 3ம் பாதம்:**

கீர்த்திகளைப் பெற்றவர்களாகவும், உண்மை, நீதி, நேர்மையுடையவராகவும், நல்ல குணங்களைப் பெற்றும் இருப்பார்கள்.

**பூரம் 4ம் பாதம்:**

தெய்வீக, தேவாலய வழிபாடுகளில் நம்பிக்கை இல்லாதவர்களாகவும், ஆசார அனுஷ்டானங்களில் பற்றுதல் இல்லாதவர்களாகவும், திரேகத்தில் காயம் அல்லது வடு (Scar) வுடனும் தெய்வத்தையும் பெரியோர்களையும் தூஷிப்பவர்களாகவும் இருப்பார்கள்.



https://www.facebook.com/ebooksintamil/

## உத்திரம்

**உத்திரம் 1ம் பாதம்:**

பந்துக்கள், நண்பர்களிடம் உறவு, நட்பு கொண்டவர்களாகவும், இனிமையான வார்த்தைகளுடன் கூடினவர்களாகவும், நற்குண, நற்செய்கைகள், பிறர் செய்த நன்றிகளை மறக்காதவர்களாகவும், யோக பாக்யங்களுடன் இருப்பார்கள்.

**உத்திரம் 2ம் பாதம்:**

ஏழ்மை, வறுமை கொண்டவர்களாகவும், மாமிசங்களில் பற்றுதல் கொண்டவர்களாகவும், டம்பகுணங்களுடன், அலக்ஷியமாகப் பேசுபவராகவும், தைர்யசாலியாகவும் இருப்பார்கள்.

**உத்திரம் 3ம் பாதம்:**

தெய்வீக, தேவாலய வழிபாடுகள், ஆசார ஒழுக்கங்கள், விவசாயத்துடன், மாடுகன்றுகளுடனும், உண்மையைக் கடைப்பிடிப்பவராகவும், வாக்கு நாணயம் தவறுதவராகவும் இருப்பார்கள்.

**உத்திரம் 4ம் பாதம்:**

இளம் வயதிலேயே தாய் தந்தையை இழப்பவர்களாகவும், பிறர் செய்த நன்றியை மறக்காதவர்களாகவும், தூஷணமான வார்த்தைகளைக் கொண்டவராகவும், பிரறை மதிக்காதவராகவும் இருப்பார்கள்.

## ஹஸ்தம்

**ஹஸ்தம் 1ம் பாதம்:**

தற்பெருமை பேசுபவர்களாகவும், உண்மையைப் பேசாதவராகவும், மாடுகன்றுகளை பெற்றவர்களாகவும், பொன், நகைகளில் பிரியம் கொண்டவர்களாகவும், நற்காரியங்களில் பிரியம் கொண்டவர்களாகவும், படித்தவர்களாகவும் இருப்பார்கள்.

**ஹஸ்தம் 2ம் பாதம்:**

இளம் வயதில் தாயாரை இழப்பவர்களாகவும், நாடகம், நாட்டியம், சங்கீதங்களில் பிரியமுள்ளவர்களாகவும், அகங்காரம், வாயாடித்தனம் கொண்டு திடசரீரீக்கங்களுடன் இருப்பார்கள்.

**ஹஸ்தம் 3ம் பாதம்:**

தரித்திரகுணம் கொண்டவர்களாகவும், நோய்வாய்ப்பட்டு வியாதிகளுடன் கூடினவர்களாகவும், தந்தையை இளம் வயதில்



Hariram Thejus

www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

இழப்பவர்களாகவும், வியாபார குணங்களுடனும், ஸ்திரீகளின் மனதைப் போன்றவர்களாகவும் இருப்பார்கள்.

**ஹஸ்தம் 4ம் பாதம்:**

உயர்ந்த தோற்றத்துடனும், எல்லோரிடமும் சகஜமாகப் பேசிப் பழகுபவராகவும், தாயாருடைய பற்றுதலைக் கொண்டவர்களாகவும், நற்குண நற்செய்கைகளுடனும், சந்தோஷ குணங்களுடனும் இருப்பார்கள்.

## சித்திரை

**சித்திரை 1ம் பாதம்:**

தன் காரியங்களில் காரியவாதியாகவும், ஊர் சுற்றும் பழக்கங்களுடனும், கண்களில் வியாதிகளுடனும், சொன்ன வார்த்தைகளைத் திரும்பத் திரும்பச் சொல்லும் குணங்களுடனும், திரேகத்தில் மச்சங்களுடனும் கூடி இருப்பார்கள்.

**சித்திரை 2ம் பாதம்:**

ஏழ்மை, வறுமைகளுடனும், உயரமான தோற்றத்துடன், ஸ்திர புத்தி இல்லாமலும், வெளியே சுற்றுபவர்களாகவும், கல்வியில் ஊக்கம் கொண்டவர்களாகவும், எதிரிகளுடைய பகைவர்களுடைய குணமறியாது நட்பு கொண்டுமிருப்பார்கள்.

**சித்திரை 3ம் பாதம்:**

தைர்யஸ்தர்களாகவும், படித்தவர்களாகவும், கீர்த்தி பெறுபவர்களாகவும், பராக்ரமசாலிகளாகவும், நல்ல குணங்களுடனும், பரந்த நோக்கமுடையவர்களாகவும் இருப்பார்கள்.

**சித்திரை 4ம் பாதம்:**

திறமைசாலிகளாகவும், பிறருடைய குணமறிந்து நடப்பவர்களாகவும், வெற்றி பெறுபவர்களாகவும் இருப்பார்கள். எதிரிகளிடம் தாழ்ந்து போகுதலும், அடிபணிதல் போன்ற குணமும் இருக்கும்.

## சுவாதி

**சுவாதி 1ம் பாதம்:**

தெய்வீக வழிபாடுகள், ஆசார அனுஷ்டானங்கள், பக்தி, சிரத்தை, பெரியவர்களிடம் மரியாதை, நற்குண நற்செய்கைகள், பெரியமனித சகவாசம், முதலியவைகளைக் கொண்டிருப்பார்கள். தூங்கும் சமயம் அடிக்கடி கனவுகள் இவர்களுக்கு ஏற்படும்.

**சுவாதி 2ம் பாதம்:**

திடதிரேகத்துடனும், புத்தி விசாலத்துடன் நேர்மையுள்ளவர்களாகவும், யோசனைகளை அதிகம் கொண்டவர்களாகவும், போகங்களை அனுபவிப்பவர்களாகவும் இருப்பார்கள்.



Hariram Thejus

https://www.facebook.com/ebooksintamil/

**சுவாதி 3ம் பாதம்:**

கலகங்கள் செய்யும் குணங்களுடனும், நல்ல நடத்தைகள் இல்லாதவனாகவும், பயித்தியக்காரக் குணங்களுடனும் (அசடுகளாகவும்) கெட்ட இருதயம் கொண்டவர்களாகவும் இருப்பார்கள்.

**சுவாதி 4ம் பாதம்:**

துர்சகவாச குணங்களுடனும், முன் கோபியாகவும், பிறரை நம்பும்படிப் பேசும் குணங்களுடனும், கொடியவராகவும் காமாந்தகாரர்களாகவும், மற்றவர்களின் குணமறிந்து பழகுபவர்களாகவும் இருப்பார்கள்.

## விசாகம்

**விசாகம் 1ம் பாதம்:**

கல்வியில் ஊக்கமுள்ளவர்களாகவும், வியாபார நோக்கங்களை அறிந்தவர்களாகவும், ஜோதிஷ சாஸ்திரம் கூறுபவர்களாகவும், மற்றவர்களை ஏமாற்றும் குணம் கொண்டவர்களாகவும், சங்கீதத்தில் பிரியமுள்ளவராகவும், நடக்காத காரியங்களைச் சாதிக்க முயற்சிப்பவர்களாகவும் இருப்பார்கள்.

**விசாகம் 2ம் பாதம்:**

தன்னைப்பற்றிதானே பிரஸ்தாபித்துக்கொள்ளும் குணமும், தந்திரவாதியாகவும், சாஸ்திரங்களைக் கற்பவர்களாகவும், திறமைசாலிகளாகவும் இருப்பார்கள்.

**விசாகம் 3ம் பாதம்:**

குள்ளமாகவும், திரேகபலம் கொண்டவர்களாகவும், எல்லா விதங்களையும் புரிந்து கொள்பவர்களாகவும், திருடக்கூடிய குணத்தையும் சண்டைப் பிரியர்களாகவும் இருப்பார்கள்.

**விசாகம் 4ம் பாதம்:**

செல்வந்தர்களாகவும், திறமைசாலிகளாகவும், பேசுவதில் சாமர்த்தியம் கொண்டவர்களாகவும், ஞானோபதேசம் செய்பவர்களாகவும், தானதருமம் செய்யும் குணம் கொண்டவர்களாகவும், போகத்தைப் பெற்று அழகுடையவர்களாயுமிருப்பார்கள்.

## அனுஷம்

**அனுஷம் 1ம் பாதம்:**

படிப்பில் ஊக்கத்தையும், பல புஸ்தக ஆராய்ச்சிகள் செய்பவர்களாகவும், ஆசார சீலர்களாகவும், வேதம், சாஸ்திரங்களில் பற்றுதல் கொண்டவர்களாகவும், மேன்மையான பதவி, அந்தஸ்திலும், உண்மை, நேர்மைகளுடன், வாக்கு நாணயங்களுடன், பந்துமித்ரர்களை ரக்ஷிக்கும் குணங்களுடன் இருப்பார்கள்.



www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

**அனுஷம் 2ம் பாதம்:**

அரசாங்க கௌரவங்களைப் பெறுபவர்களாகவும், மற்றவர்களை அறிந்து நடக்கும் குணங்களுடனும், சங்கீதத்தில் பிரியமும், பெருந்தன்மை, விசேஷ நற்குணங்களுடன் இருப்பார்கள்.

**அனுஷம் 3ம் பாதம்:**

திறமைசாலிகளாகவும், அழகாகவும், தாழ்ந்த குரலில் பேசுபவர்களாகவும், கலைகளில் பற்றுதல் கொண்டவர்களாகவும், தர்ம சிந்தனையுடனும், ஊர் சஞ்சரிப்பவர்களாகவும் இருப்பார்கள்.

**அனுஷம் 4ம் பாதம்:**

பிறரிடம் பேசுவதற்கு வெட்கப்படுபவர்களாகவும், மற்றவர்களால் புகழையும் பெற்று, அதிகமாகப் புத்திர சந்தானங்களில்லாமல் இருப்பார்கள்.

## கேட்டை

**கேட்டை 1ம் பாதம்:**

கலைகளில் தேர்ச்சியையும், எழுதுவதில் கீர்த்தியையும், தன்னைப்பற்றி பெருமையாகப் பேசும் சுபாவங்களையும், பிற ஸ்திரீகளை நேசிப்பதும், தர்மகுணம் கொண்டவர்களாகவும், தைர்யஸ்தர்களாகவும் இருப்பார்கள்.

**கேட்டை 2ம் பாதம்:**

முன்கோபக் குணங்களும், குறும்புத்தனம் கொண்டும், வியாதி நோய் நிரம்பியும், சங்கீதத்திலும், கலைகளிலும் பிரியம் கொண்டவர்களாகவும், அழகாய்ப் பேசும் திறனுடனும் இருப்பார்கள்.

**கேட்டை 3ம் பாதம்:**

வியாதிகளை உடையவர்களாகவும், தாழ்மையான புத்திகளுடன், மாடு ஆடுகளை வளர்ப்பவர்களாகவும், பிறருடைய காரியங்களில் தலையிட்டு, தான்முன் நின்று செய்கிறவர்களாகவும், கலகங்களில் பிரியம் கொண்டவர்களாகவும் இருப்பார்கள்.

**கேட்டை 4ம் பாதம்:**

கலகங்கள், குரூர புத்தி, வஞ்சனைக் குணம், தாய்வீட்டின் பெருமைகளைக் கூறுபவர்களாகவும், கெட்ட நடத்தைகளைக் கொண்டவர்களாகவும், பிறரை ஏமாற்றும் குணங்களுடன் இருப்பார்கள்.

## மூலம்

**மூலம் 1ம் பாதம்:**

அற்ப எண்ணங்கள், அற்ப குணங்கள், நன்றியை உடனே மறப்பவனும், பாவ எண்ணங்களைப் பெற்றவர்களாகவும், சோம்பலில்லாமல் சுறுசுறுப்பான குணங்களுடனும், செல்வந்தர்களாகவும் இருப்பார்கள்.



**மூலம் 2ம் பாதம்**

கல்வியில் ஊக்கம் கொண்டவர்களாகவும், பொய் சொல்லும் குணமும், மாந்திரீகம் தெரிந்தவர்களாகவும், இருதய நோயினால் சிரமப்படுபவர்களாகவும் இருப்பார்கள்.

**மூலம் 3ம் பாதம்**

அழகான அங்கலக்ஷணங்களுடன், சோம்பேறிகளாகவும், ஊர் சுற்றுபவர்களாகவும், மாந்திரீகம், பில்லி, சூன்யம், ஏவல் முதலியன செய்பவர்களாகவும், காமாந்தகாரர்களாகவும், பழங்களைப் புசிப்பதில் ஆசையுள்ளவர்களாகவும் இருப்பார்கள்.

**மூலம் 4ம் பாதம்**

திரேக பலங்களைப் பெற்றவர்களாகவும், சாஸ்திரங்கள் கல்வியில் திறமை கொண்டவர்களாகவும், காரியம் சாதிப்பதில் சாமர்த்தியசாலிகளாகவும், சத்ருக்களை வெல்லும் குணங்களுடனும் இருப்பார்கள்.

## பூராடம்

**பூராடம் 1ம் பாதம்**

நடுத்தர ஆயுள் கொண்டும், கல்வியில் திறமைகளையும், புத்தி சாதுர்யங்களையும், நீண்ட கைகளையும், சுக சௌகர்யங்களுடனும், மற்றவர்களால் புகழைப் பெற்றும், பிறருக்கு உபகாரம் செய்பவர்களாகவும் இருப்பார்கள்.

**பூராடம் 2ம் பாதம்**

தாழ்மையான புத்திகளையும், பந்து ஜனங்கள், நண்பர்கள் என்ற சமூகத்தினரிடையே வெறுக்கப்பட்டவர்களாகவும், கெட்ட நடத்தையும், ஸ்திரீவர்க்கத்தினரால் வெறுக்கப்பட்டவர்களாகவும், திருடராகவும் இருப்பார்கள். தாயை சிறுவயதிலேயே இழக்கலாம்.

**பூராடம் 3ம் பாதம்**

சிறு வயதில் தாயை இழப்பவர்களாகவும், குஷ்டரோக வியாதி போன்ற நோய்களுடனும், செல்வந்தர்களாகவும், பிடிவாத குணங்களுடன் மூர்க்கராகவும், உரக்கப் பேசும் குணங்களுடனும் இருப்பார்கள்.

**பூராடம் 4ம் பாதம்**

தைரியஸ்தனாகவும், திடகாத்திர திரேகத்துடனும், வாதிக்கும் குணங்களுடனும், திருடும் அற்ப புத்திகளுடனும், உரத்துக்



https://www.facebook.com/ebooksintamil/

Hariram Thejus

www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

சுத்திப்பேசும் குணங்களுடனும், பலவானாகவும், சுயகாரியப் புலியாகவும், பெண் ஜனங்களால் வெறுக்கப்பட்டவர்களாகவும் இருப்பார்கள்.

## உத்திராடம்

**உத்திராடம் 1ம் பாதம்**

கல்வியில் பிரியம், அழகான தோற்றம், சாமர்த்தியம், கலைகளில் பிரியத்துடன், திறமைகளைப் பெற்றவர்களாகவும், செல்வந்தர்களாகவும், பொறுமை உடையவர்களாகவும், கீர்த்திகளைப் பெற்றவர்களாகவும் இருப்பார்கள்.

**உத்திராடம் 2ம் பாதம்**

கல்வியில் ஊக்கமும், சகல சாஸ்திரங்களும் அறிந்தவர்களாகவும், பிரசங்கம் செய்பவர்களாகவும், தரும சிந்தனை இல்லாதவர்களாகவும், ஈகை அற்றவர்களாகவும், பலசாலிகளாகவும் இருப்பார்கள்.

**உத்திராடம் 3ம் பாதம்**

பிறரிடம் தூஷணையான பேச்சுக்களையும், அகங்காரப் பேச்சுக்களையும், கொண்டவர்களாகவும், கர்வம், கொடூர குணங்களுடனும், கெட்ட எண்ணங்களுடனும், முன்கோபத்துடனும், தன்னைப் பற்றி பிரமாதமாகப் பேசியும் வருவார்கள்.

**உத்திராடம் 4ம் பாதம்**

அழகானத் திரேக தோற்றத்தையும், தைர்யஸ்தராகவும், காரியங்களைச் சாதிப்பதில் சாமர்த்தியசாலிகளாகவும், வியாபார நோக்கங்களுடனும் பந்துஜன நண்பர்களிடம் நல்லவிதமாகப் பேசும், பழகும் குணங்களுடனும், சுறுசுறுப்புள்ள குணங்களுடனும், தனவான்களாகவும் இருப்பார்கள்.

## திருவோணம்

**திருவோணம் 1ம் பாதம்**

திடதிரேகத்துடன், திறமைசாலிகளாகவும், கர்வம்கொண்டவர்களாகவும், தெய்வீக வழிபாடுகளில் பற்றுதல்களுடன், பெரியவர்கள், கல்விகற்றவர்கள், ஆசாரியனிடத்தில் பக்தி, சிரத்தை, மரியாதை குணங்களுடன் தர்ம சிந்தனை கொண்டவர்களாகவும் இருப்பார்கள்.

**திருவோணம் 2ம் பாதம்**

திறமைசாலிகளாகவும், தனவான்களாகவும், காமகுணம் கொண்டவர்களாகவும், பெரியவர்களிடம் பக்தி விசுவாசத்துடன் நடப்பவர்களாகவும், பந்துமித்ர, நண்பர்களுடன் வாழ்பவர்களாகவும், கஞ்சராகவும், மற்றவர்களைப் புரிந்துகொண்டு நடப்பவர்களாகவும் இருப்பார்கள்.

**திருவோணம் 3ம் பாதம்**

பொதுக்காரியங்களில் பற்றுதல் கொண்டவர்களாகவும், தயவு தாக்ஷண்யம் இல்லாதவர்களாகவும், சதா சிந்தனைகள், கவலைகள் கொண்டவர்களாகவும், உடல் நோய்களுடனும், செல்வத்துடனும், மற்றவர்களைப் புரிந்துகொண்டு நடப்பவர்களாகவும் இருப்பார்கள்.

**திருவோணம் 4ம் பாதம்**

தானதருமக் குணம் கொண்டவர்களாகவும், செல்வம், செல்வாக்குடனும், நிலபுலன், வீடு, மாடு கன்றுகளைக் கொண்டவர்களாகவும், கெட்ட நடத்தை உடையவர்களாகவும், சிறந்த அறிவாளிகளாகவும், உத்தம தியாகிகளாகவும் இருப்பார்கள்.

## அவிட்டம்

**அவிட்டம் 1ம் பாதம்**

அவசர புத்தியைப் பெற்றவர்களாகவும், காரியங்களை யோசித்துச் செய்யும் குணம் இல்லாதவர்களாகவும், சுக சௌகரியங்களைக் கொண்டவர்களாகவும், பூமி, வீடு பெற்றவர்களாகவும், செல்வாக்கையும் செல்வத்தையும் பெற்றவர்களாகவும் இருப்பார்கள்.

**அவிட்டம் 2ம் பாதம்**

மனைவியின் பேச்சுக்களுக்கு மதிப்பைக் கொடுக்கிறவர்களாகவும், அகங்காரம், முன்கோபம் கொண்டவர்களாகவும், சஞ்சலங்களைப் பெற்றவர்களாகவும், ஏழ்மை, எளிமை, அசடுகளாகவும், ஏமாற்றும் குணம் கொண்டவர்களாகவும் நிதானபுத்தியுடனும் இருப்பார்கள்.

**அவிட்டம் 3ம் பாதம்**

நெடியர்களாகவும், நீண்டு, உயர்ந்த கம்பீரத் தோற்றத்துடன், அழகாகவும், நீதி, நேர்மை, உண்மையானவர்களாகவும், அபிமானங்களைக் கொண்டவராகவும், திடமனதுடன், நல்லவர்களாகவும் இருப்பார்கள்.

**அவிட்டம் 4ம் பாதம்**

கோப குணங்களுடன், திரேகத்தில் அடர்ந்த ரோமங்களுடன், காம குணங்களைக் கொண்டவர்களாகவும், பிறரை ஏமாற்றும் குணமும், கொடிய நோக்கங்களுடனும், கர்வம் கொண்டவர்களாகவும், செல்வமும், செல்வாக்கையும் பெற்று இருப்பார்கள்.





https://www.facebook.com/ebooksintamil/

Hariram Thejus

www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

## சதயம்

**சதயம் 1ம் பாதம்**

அழகான வசீகரத் தோற்றங்களுடன், தான தருமம் செய்யும் குணங்களுடன், மாடுகள் கன்றுகள் பால் பாக்யங்களுடன், விசால நோக்கங்கள், பொறுமையுடன், நல்ல நடத்தையுடனும், அற்ப வருமானங்களைப் பெற்றும் இருப்பார்கள்.

**சதயம் 2ம் பாதம்**

கோப குணங்களைப் பெற்றவர்களாகவும், நினைத்த காரியங்களை முடிக்கும் குணம் கொண்டவர்களாகவும், நற்குண நற்செய்கைகள் கொண்டும், ஏமாற்றிப் பணம் பறிக்கும் தன்மையையுடையவராயும், தானதருமம் செய்யும் நோக்கம் இல்லாதவர்களாகவும் இருப்பார்கள்.

**சதயம் 3ம் பாதம்**

நல்ல குணம், நற்செய்கைகளுடன், பிரபல நோக்கங்களுடன், எண்ணின காரியங்களைச் செய்து முடிப்பவர்களாகவும், முன்கோப குணத்துடனும் இருப்பார்கள்.

**சதயம் 4ம் பாதம்**

எக்காரியத்தையும் நன்கு, தீர யோசிப்பவர்களாகவும், நல்லவர்களாகவும், மனதில் கொண்ட காரியங்களை முடிப்பவர்களாகவும், திறமைகளைக் கொண்டவர்களாகவும், வேலைகளில் ஊக்கம் கொள்பவர்களாகவும், மற்றவர்களால் புகழும் பெற்றிருப்பார்கள்.

## பூரட்டாதி

**பூரட்டாதி 1ம் பாதம்**

கபட நாடக நடிகர்களாகவும், மற்றவர்களின் நோக்கத்தை அறிந்து, அதற்கேற்றவாறு நடித்துக் காரியம் சாதிக்கும் குணம் கொண்டவர்களாகவும், மனைவிக்கு ஆடை ஆபரணங்களைப் போட்டு அழகு பார்ப்பவர்களாகவும், திடமான சரீரத்துடன், பக்தியைக் கொண்டவர்களாகவும் இருந்து, சுக, சௌகர்யங்களுடன் வாழ விரும்புவார்கள்.

**பூரட்டாதி 2ம் பாதம்**

மனைவியிடம் ஆசைகள் கொள்பவராகவும், மனைவியிடம் விசுவாசங்களைக் கொண்டவர்களாகவும், மாந்திரிகக் குணமும் பக்தியும் கொண்டவர்களாகவும், அசடு அல்லது பயித்தியக்கார குணங்களுடன், பெரிய மனித சகவாசங்களுடன், மற்றவர்கள் யாரும் கேவலமாகக் கூறுதபடியும் நடந்துகொள்வார்கள்.



Hariram Thejus

**பூரட்டாதி 3ம் பாதம்**

படித்த அறிஞர்களாகவும், கவிகளாகவும், ஆசிரியர்களாகவும், நாகரீகக் குணங்களுடனும், எல்லாருடன் சகஜமாகப் பழகும் குணங்களுடனும், பித்த சம்மந்தமான நோய்களுடனும், மற்றவர்களுடைய வீட்டில் ஆகாரங்களை உண்பதில் பிரியம் கொள்பவர்களாகவும் ஆசைகளைக் கொண்டவர்களாகவும் இருப்பார்கள்.

**பூரட்டாதி 4ம் பாதம்**

பந்து மித்ர நண்பர்களால் போற்றப்படும் குணங்களுடன், அழகிய அங்க லக்ஷணங்களுடன், தொழிலில் கீர்த்தி பெறுபவர்களாகவும், வாக்கு நாணயங்களைக் கொண்டவர்களாகவும், நீதி நேர்மையுடனும் இருப்பார்கள்.

## உத்திரட்டாதி

**உத்திரட்டாதி 1ம் பாதம்**

ஸ்திரமான நோக்கங்களைக் கொண்டவர்களாகவும், அழகான வாக்கு வன்மைகளுடன், செல்வாக்கு, செல்வத்தைப் பெற்றும், பக்தி சிரத்தைகளுடன், கல்வியில் சிறந்தவர்களாகவும் இருப்பார்கள்.

**உத்திரட்டாதி 2ம் பாதம்**

திறமைசாலிகளாகவும், ஸ்திர புத்தி இல்லாதவர்களாகவும், அழகாக ஆடை ஆபரணங்களுடன், அங்கலக்ஷணங்களைக் கொண்டவர்களாகவும், நற்குணங்களுடன், இழிவான நண்பர்களைப் பெற்று சஞ்சலத்துடன் இருப்பார்கள்.

**உத்திரட்டாதி 3ம் பாதம்**

தேவாலய, தெய்வீக வழிபாடுகளைப் பெற்றவர்களாகவும், புறம் பேசும் குணங்களுடனும், மிருகத் தன்மை பெற்றவர்களாகவும்; முன்கோபக்காரர்களாகவும், ரோமங்களைத் திரேகத்தில் கொண்டவர்களாகவும் இருப்பார்கள்.

**உத்திரட்டாதி 4ம் பாதம்**

பெரிய குடும்பத்தைப் போஷிப்பவர்களாகவும், கல்வியில் சிறந்த கவிஞர்களாகவும், நண்பர்களின் கலக வார்த்தைகளைக் கேழ்ப்பவர்களாகவும், விவசாயத் துறையில் வாழ்பவர்களாகவும், தாராள குணங்களுடனும், சஞ்சலங்களுடனும் இருப்பார்கள்.

## ரேவதி

**ரேவதி 1ம் பாதம்**

மனைவியிடம் பிரியம் கொண்டு அவளுடைய பேச்சிற்கு அதிக மதிப்பை அளிப்பவர்களாகவும், அழகான தோற்றம், மச்சங்களை உடையவர்களாகவும், படித்தவர்களாகவும், சண்டையிடும்



https://www.facebook.com/ebooksintamil/

www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

குணத்துடனும், எல்லாருடனும் சகஜமாகப் பழகுபவர்களாகவும் இருப்பார்கள்.

**ரேவதி 2ம் பாதம்**

நெடிந்த திரேகத்துடன், தைர்யத்துடன், எளிமையான வாழ்க்கையுடனும், கலகங்களில் பிரியம் கொண்டவர்களாகவும், சுயநலக்காரர்களாகவும், தன்னைப்பற்றி மேலாக நினைப்பவர்களாகவும் இருப்பார்கள்.

**ரேவதி 3ம் பாதம்**

ஏழ்மை, எளிமை வாழ்க்கையுடன் பாவங்களைச் செய்பவர்களாகவும், செல்வமில்லாதவர்களாகவும், நற்குணங்களுடனும் இருப்பார்கள்.

**ரேவதி 4ம் பாதம்**

நீதி, நேர்மை, சத்தியம், சத்ருக்களை வெல்லும் குணம் இவைகளோடு, சுகங்களைப் பெற்றும் வாழ்க்கையை நடத்துவார்கள்.

---



Hariram Thejus

# பாலாரிஷ்டம்

1. லக்னத்திலிருந்து 6, 8ல் சந்திரன், பாபக்கிரஹ வீட்டிலிருந்தும், பாவக்கிரஹ பார்வை பெற்றிருந்தாலும் சிசுவுக்கு அரிஷ்டம்.

2. 5ல் சனி, ராகு, கேது இருந்தால் சிசுவிற்கு அரிஷ்டம்.

3. லக்னத்தில் செவ்வாய் இருந்து, குரு பார்வை இல்லாமலிருந்தால் சிசுவுக்கு அரிஷ்டம்.

4. செவ்வாய் 1, 6, 8ல் பாபக்கிரஹத்துடன் நின்றாலும், சூரியன் 1, 8ல் பாபக்கிரஹங்களுடன் நின்றாலும் சிசுவுக்கு அரிஷ்டம்.

5. 8ல் பாபக்கிரஹங்கள் சேர்ந்திருந்தாலும், 6, 8, 12ல் சனி செவ்வாய் சேர்ந்திருந்தாலும்—சிசுவுக்கு அரிஷ்டம்.

6. 1, 7ல் பாபகிரஹத்துடன் சந்திரன் சேர்ந்திருந்தாலும், 1–7–12ல் நீசபலத்துடன் சந்திரன் பாபகிரஹங்களுடன் கூடியிருந்தாலும், 1–7–12ல் பாபிகள் இருந்தாலும் சிசுவுக்கு அரிஷ்டம்.

7. கேந்திரங்களில் நட்பு கிரஹம் சேர்ந்திருந்தால் அரிஷ்ட நிவாரணமாகும்.

8. சூரியன் நீசனாகி 9ல் இருந்தாலும், அந்த 9ல் சந்திரன் பாபருடன் கூடிநின்றாலும், அரிஷ்டம் உண்டாகும்.

9. சூரியன், சனி, செவ்வாய், க்ஷீணசந்திரன் இவர்கள் கூடி 1–9–12ல் இருக்க, குரு பார்வை இல்லாவிட்டாலும், 1, 5, 8, 9, 12 இந்த வீடுகளில் சூரியன், சந்திரன், செவ்வாய் மூவரும் கூடிநின்றாலும், அரிஷ்டம்.

10. லக்னம் விருச்சிகமாயிருக்க, முன் 6 வீடுகளில் பாபக்கிரஹங்களும், பின் 6 வீடுகளில் சுபக் கிரஹங்களும் இருந்தாலும் அரிஷ்டம்.

11. கிரகங்களே பாராமல் சூரியன் 9ல் இருந்தாலும், உதயம் விருச்சிகமாக இருந்து 6ல் பாபிகள் நின்றாலும், அரிஷ்டம்.

12. லக்னம் மேஷம், விருச்சிகமாயிருக்க, 8ல் சனி நின்று அவரை சுபர் பாராதிருந்தாலும், அரிஷ்டம்.

13. செவ்வாயும் சனியும் கலந்து கோணங்களில் இருக்க சந்திரனை குரு பாராதிருந்தால் அரிஷ்டம்.

14. லக்னத்தில் க்ஷீணசந்திரனிருக்க 2–8–12ல் பாபிகள் இருக்க, இலக்ன கேந்திரத்தை சுபர் பாராதிருந்தால் அரிஷ்டம்.



https://www.facebook.com/ebooksintamil/

www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

15. பூசம், சித்திரை, பூராடம் இந்த நக்ஷத்திரங்களில் 3-வது பாதத்தில் பிள்ளை பிறந்தாலும்,

16. ஜென்மத்தில் சந்திரனோடு பாபிகள் சேர்ந்திருந்தாலும்,

17. ஜென்மத்தில் ராகு, சனி, 4ல் செவ்வாய் 7ல் சூரியன் இருந்தாலும்,

18. 7ல் சனி செவ்வாய் கூடி நின்றாலும்,

19. 1, 2, 3, 7 இவ்வீடுகளில் சந்திரனிருக்க, 4, 8ல் பாவிகள் இருந்தாலும்,

20. 9, 11ல் சனி, செவ்வாய், பாம்பு இம்மூவர் கூடி இருந்தாலும்,

21. இராகு, கேது இவர்களுள் ஒருவர், 4ல் தனியாயிருந்தாலும்,

22. 3—8 இவ்வீடுகளில் சுக்கிரன் பாவரோடு கூட, பாவர் பார்வையிருந்தாலும்,

23. சந்திரன் க்ஷீணராயிருக்க 1—8 இந்த ஸ்தானங்களில் பாவரிருந்தாலும்,

24. இலக்கினத்தில் இருவரிருக்க, 8ல் சந்திரர் நிற்க, சனியானவர் ஜன்மத்தையும், 8ம் வீட்டையும் பார்த்தபோதிலும்,

25. 12ம் அதிபர் ஜன்மத்திலும், 6ம் அதிபர் 7லும் இருக்க, 6—12ல் பாவர் இருந்தாலும்,

26. 2ம் அதிபர் ஜன்மத்திலும், 8ம் அதிபர் 7லும் இருக்க, பாவர்கள் 2—8ம் வீடுகளில் இருந்தாலும்,

27. 1ல் ஒரு பாவியும், 7ல் ஒரு பாவியும் இருக்க, சந்திரன் பாவருடன் சேர்ந்து, சுப நோக்கின்றி எந்த இராசியிலிருந்த போதிலும்,

28. க்ஷீண சந்திரன் 1ல் இருக்க, 8லும் கேந்திரங்களிலும் பாவர்களிருந்தாலும்,

29. 4—7—8 இந்த ஸ்தானங்களில் இரண்டு பாவர்கள் நடுவில் சந்திரன் நின்றாலும்,

30. சந்திரன் எந்த ராசியிலாயினும், 9ம் நவாம்சையைப் பெற்று சுபநோக்கில்லாதிருக்க 5—9ல் பாவர்களிருந்தாலும்,

31. இலக்கினத்தில் சந்திரனிருக்க, 7ல் பாவரிருந்தாலும்,

32. இலக்கினத்தில் செவ்வாய் சுப பார்வையில்லாதிருக்க, 6—அல்லது 8ல் சனி சுப பார்வையில்லாதிருந்தாலும், சிசுவுக்கு அரிஷ்டம் உண்டாகும்.



33. இலக்கினம் விருச்சிகமாயிருந்து, 6ல் பாவர் கூடிநின்றால், சிசுவுக்கு அரிஷ்டம். ஆயினும் குரு பார்வையிருந்தால் நிவாரணம்.

34. 1ல் சனியும் பாம்பும் இருக்க, 7ல் சந்திரனிருந்தாலும், 7ல் சூரியனும் செவ்வாயும் கூடிநின்றாலும், அச்சிசு 10—தினத்திலே இறக்கும்.

35. 3—8ல் சுக்கிரன் பாவருடன் கூடிநிற்க, அவருக்கு பாவர் பார்வையுண்டாகுமாயினும், 5ல் சனி அல்லது இராகு கேதுக்களிருந்தாலும் குழவிக்கு அரிஷ்டம்.

36. ஞாயிற்றுக்கிழமையும் — பரணியும்; திங்கட்கிழமையும்- சித்திரையும்; செவ்வாய்க்கிழமையும் —உத்திராடமும்; புதன் கிழமையும் — அவிட்டமும்; வியாழக்கிழமையும் — கேட்டையும்; வெள்ளிக்கிழமையும் — பூராடமும்; சனிக்கிழமையும்—ரேவதியும் கலந்த தினங்களிற் பிறந்த குழந்தைகளுக்கு அரிஷ்டம் உண்டாகும்.

37. ஜன்ம லக்னத்திலும், சந்திர லக்னத்திலும் 3ம் வீட்டிலும் பாவர்களிருக்க, இம்மூன்று அதிபர்களும் பலஹீனர்களாயிருப்பின் சிசு பிறந்த மூன்று மாதங்களுக்குள் மரிக்கும்.

38. ஜன்ம லக்கினம் பாவர் வீடாயிருக்க, அதில் பாவர்கள் கூடியிருக்க அல்லது அந்த பாவிகள் 8ல் இருந்தால் அச்சிசு,பிறந்த 10 நாளைக்குள் இறக்கும்.

39. ஜன்ம லக்னம் பாவர் வீடாயிருக்க, அதில் பாவர்கள் கூடியிருக்க, அல்லது அப்பாவர்கள் 4—8ல் ஆயினும் இருந்தால் அச்சிசு பிறந்த பத்து நாளைக்குள் இறக்கும்.

40. 6—8ல் சந்திரனிருக்க, அவருக்குப் பாவிகள் பார்வையுண்டாகுமாயின் அந்த சிசு ஒரு மாதத்தில் இறக்கும்.

41. ஜன்ம லக்கினம், சந்திர லக்கினம், சந்திர லக்கினத்திற்கு 7ம் வீடு, இம் மூவிடங்களிலும் பாவர்களிருக்க இம் மூன்று அதிபர்களும் பலஹீனமாயிருப்பார்களாயின் சிசு மாதம் மூன்றுக்குள் மரிக்கும்.

42. மேற்கண்ட சந்திரனைச் சுபர் பார்த்தால் அச்சிசு 8-வரு பிழைத்திருக்கும்.

43. மேற்கண்ட சந்திரனை சுபரும் பாவரும் கலந்து பார்த்தால் அச்சிசு 4—வரு பிழைத்து இருக்கும்.

44. மேற்கண்ட சந்திரனை எவர்களும் பாராதிருந்தால் அச்சிசு 1—வரு பிழைத்திருக்கும்.

---

குறிப்பு: குரு பார்வையிருப்பின் அதற்கும் மற்ற கிரகங்களின் கூட்டுச் சேர்க்கையை அறிந்து பலன் சொல்லவேண்டும்.



https://www.facebook.com/ebooksintamil/
Hariram Thejus
www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

## சிசுவுக்கும் தாய்க்கும் அரிஷ்டம்

ஜென்மத்தில் சூரியன் இருக்க, 6, 7, 8ல் பாவர் சேர்ந்திருந்தால் தாய்க்கும் குழந்தைக்கும் அரிஷ்டம்.

6ல் சந்திரனும் 7ல் செவ்வாயுமிருந்தால் இருவருக்கும் அரிஷ்டம்.

ஜென்மத்தில் சந்திரன் சுக்ரன் இருந்து, 7ல் சனி இருந்தால் இருவருக்கும் அரிஷ்டம்.

சனி, சந்திரன் 4-ல் இருந்தால் தாயார் — குழந்தைக்கு அரிஷ்டம்.

சுபர் பார்வை இல்லாமல் லக்னத்தில் சந்திரன் இருந்தால் குழந்தை, தாயார்—அரிஷ்டம்.

5ல் சந்திரன் இருந்தால் தாயாருக்கு அரிஷ்டம்.

லக்னத்தில் சந்திரன் சுக்ரன் இருக்க, சனி 7ல் இருந்து ஒரே பாதத்தில் இருந்தால் தாயார் குழந்தை—அரிஷ்டம்.

கிரஹண காலத்தில் பிறந்த குழந்தையானாலும், லக்னத்தில் சந்திரன், சனிசேர, செவ்வாய் 8ல் இருக்கப் பிறந்தால் குழந்தை, தாயார்—அரிஷ்டம்.

ரேவதி, பூசம், ஆயில்யம், மகம், சித்திரை, பூராடம், உத்திராடம் இந்த நக்ஷத்திரங்களில் 1ம் பாதத்தில் சிசு பிறந்தால் தாயாருக்கு—அரிஷ்டம்.

மூலம் 4ல் சிசு ஜெனனமானால் தாயாருக்கு—அரிஷ்டம்.

உத்திரம், விசாகம்—2ம் பாதத்தில் சிசு பிறந்தால் தாயாருக்கு—அரிஷ்டம்.

## சிசு, தகப்பனார், மற்றவர்களின் அரிஷ்டம்

6ல் சூரியனும், சூரியனுக்கு 7ல் செவ்வாய், சனி, இருந்து, சந்திரனும் பாவரும் நடுவில் இருந்தால் சிசுவுக்கும், தகப்பனுக்கும் ஆகாது.

12ம் அதிபர் 9லும், சனி சூரியன் 12லும் இருந்தால் தகப்பனார், சிசுவுக்கு—அரிஷ்டம்.

5ல் சூரியன் சந்திரனோடும் செவ்வாயுடனும் கூடி நின்றால் பிதா, சிசுவுக்கு—அரிஷ்டம்.

சூரியனுக்கு 8ல் செவ்வாய், சனியோடு கூடி சுப பார்வை இல்லாதிருந்தால் பிதா, சிசுவுக்கு அரிஷ்டம்.



Hariram Thejus

https://www.facebook.com/ebooksintamil/

சந்திரனுக்கு 7, 8, 9ல் பாவர்கள் இருந்தால் பிதாவுக்கும் குழந்தைக்கும் அரிஷ்டம்.

5ல் சந்திரன், செவ்வாய் சனியுடன் சேர்ந்திருந்தால் பிதாவுக்கும், குழந்தைக்கும் அரிஷ்டம்.

8ல் சனி, செவ்வாய் பாவருடன் சேர, சூரிய கிரகணமாக இருந்தால் பிதாவுக்கு அரிஷ்டம்.

ஆயில்யம், பூராடம்—நக்ஷத்திரங்களின் 3ம் பாதத்தில் சிசு பிறந்தால் பிதாவுக்கு அரிஷ்டம்.

உத்திராடம், ரேவதி—நக்ஷத்திரங்களின் 2ம் பாதத்தில் பிறந்தால் பிதாவுக்கு—அரிஷ்டம்.

உத்திரம், அனுஷம்—முதல் பாதத்தில் பிறந்தால் பிதாவுக்கு—அரிஷ்டம்.

அவிட்டம் 4ம் பாதத்தில் பிறந்தால் பிதாவுக்கு—அரிஷ்டம்.

பூராடம் முதல் பாதமும், பூசம் 2, 3 பாதமும், சித்திரை 1, 2 பாதங்களும், உத்திரம் 1ம் பாதத்திலும் சிசு பிறந்தால் மாதா பிதா இருவருக்கும் அரிஷ்டம் ஏற்படும்.

ஆயில்யம் 2ம் பாதத்தில் பிறந்தால், தமையனுக்கு—அரிஷ்டம்

மூலம் 1ல் பிறந்தால் சிறிய தகப்பனுருக்கு—அரிஷ்டம்.

சித்திரை 1ம் பாதம், விசாகம் அனுஷம் மூலம் 4வது பாதத்திலும், சதயம் பூரட்டாதி 1ம் பாதத்திலும், மகம் 2லும், அனுஷம் மூலம் 3லும், பூராடம் 4வது பாதத்திலும், ரோஹிணி முழு நக்ஷத்திரமும், சிசு பிறந்தால், பாட்டன், பாட்டி, மாமா (அம்மான்) ஆகியவர்கள் அரிஷ்டம்.



www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

## சிசுவுக்கு கெண்டங்கள்

ஜனன நட்சத்திரம் பூசம் அல்லது பூராடமாயிருந்து, இலக்கினாதிபதி பலஹீனராய் 2ல் இருக்க, 8ல் கிருஷ்ணபக்ஷ சந்திரனும், 7ல் செவ்வாயும் இருந்தால் சிசுவுக்கு 8நாள் வரையில் கெண்டம்.

விருச்சிக ராசியில் கிருஷ்ணபக்ஷ சந்திரனும், 1—7ம் வீட்டில் சனியும், சுபர் கேந்திரத்திலுமிருந்து ஜலராசியில் உதயமானாலும் சிசுவுக்கு 8 நாள் வரையில் கெண்டம்.

5ம் வீடு கடகமாயும், அதில் செவ்வாயும், 6—8—12ல் கிருஷ்ண சந்திரனும் 5—9ல் குருவானவர் சூரியனோடு கூடி இருந்தாலும் சிசுவுக்கு 8 நாள் வரையில் கெண்டம்.

சுபர் 8லும், ஜன்ம நக்ஷத்திரத்துக்கு மூன்றாவது நக்ஷத்திரத்தில் சூரிய சந்திரர் கூடியும், அவர்களுக்கு 7ல் இராகுவும் இருந்தால் 7—நாள் கெண்டம்.

மீன லக்கினத்தில் பிறந்து, சூரியன், சந்திரன், செவ்வாய் கடகத்திலுமிருந்தால் 4 நாள் கெண்டம்.

சூரியன் 4—8ம் வீட்டிலிருந்து சுக்கிரன், 5—9ல் பாவருடன் கூடியிருந்தால் 5 நாள் கெண்டம்.

இலக்கினேசன் பலஹீனனாய் சந்திரனுக்கு 7ல் சூரியனும் செவ்வாயும் கூடிநின்றால் 6 நாள் கெண்டம்.

ஜன்ம லக்கினம் மேஷம், விருஷபம், மிதுனம், கடகம், சிம்மம், கன்னி இவற்றுள் ஒன்றாயிருந்து, லக்னத்திற்கு 4ம் வீட்டில் பாவர் நின்றாலும் 7 நாள் கெண்டம்.

துலாம், விருச்சிகம், தனுசு, மீனம் இவற்றுளொன்று லக்கினமாயிருந்து சந்திரனுக்கு 8ல் பாவர் நின்றாலும் 7 நாள் கெண்டம்.

இலக்கினாதிபர் 12ல் இருந்து, 8ல் சூரியன், 4ல் செவ்வாய், 2ல் சனி இருந்தால் 9 நாள் கெண்டம்.

இலக்கினேசன் பலஹீனனாய் ஜன்மத்தில் சூரியனும், சனியும் கூடியிருக்க இலக்கினாதிபரை செவ்வாய் பார்ப்பாரேயாகில் 30 நாள் கெண்டம்.

இலக்கினம் மேஷ விருச்சிகமாயிருந்து சூரியனோடு இலக்கினாதிபதி கூடினால் 2 மாதம் கெண்டம்



4ல் சூரியன் நின்று இலக்கினாதிபதி 8ல் இராகுவோடு கூடியிருந்தால் 4 மாதம் கெண்டம்.

பூராடத்தில் கேது விருக்க, தனுசே ஜன்ம லக்னமாகில் 5 மாதம் கெண்டம்.

2—6—8ல் பாவரும், 5ல் சூரியனும் நின்றால் 6 மாதம் கெண்டம்.

இலக்கினாதிபர் பலஹீனராயிருக்க, 8ம் அதிபதியும் செவ்வாயும் கூடி ஜன்மத்தில் இருந்தால் 7 மாதம் கெண்டம்.

8—9—12ல் இலக்கினேசனும் இராகுவும் கூடியிருந்தால் 8 மாதம் கெண்டம்.

4ல் செவ்வாய், 8ல் இராகு, 12ல் சனி இருந்தால் 9 மாதம் கெண்டம்.

இலக்னத்தில் சனியும், 7ல் சூரியன், சந்திரன், செவ்வாய் இம்மூவரும் நின்றால் 10 மாதம் கெண்டம்.

இலக்னம் மீனமாயிருந்து 4ல் கேதுவும், 5ல் செவ்வாயும், 7ல் சூரியனும் இருந்தால் 11 மாதம் கெண்டம்.



https://www.facebook.com/ebooksintamil/

Hariram Thejus

www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

## மாமன், தாய், தந்தை கெண்டம்

(190-ம் பக்கம் காண்க)

**மாமன்:**

லக்னத்துக்கு 5ல் சனியோடு சந்திரனும், சூரியனோடு செவ்வாயும் நின்றால் அம்மானுக்கு அரிஷ்டம். சுபக்கிரஹ பார்வை இருந்தால் அத்தோஷம் நிவாரணம் ஆகும்.

பூசம் 2ம் பாதத்தில் ஜெனனமானால் தாயைப் பெற்ற பாட்டிக்கு அரிஷ்டம். பாட்டியானவள் நல்லபடி இருந்தால் அம்மானுக்கு அரிஷ்டம் ஏற்படும்.

லக்னத்துக்கு 5ல் செவ்வாய் நின்றாலும், அம்மானுக்கு அரிஷ்டம்.

லக்னத்துக்கு 5ல் சனி இருந்தாலும், ராகு இருந்தாலும் குழந்தைக்கு அரிஷ்டம். அம்மானுக்கும் அரிஷ்டம்.

லக்னத்துக்கு 5ல் சந்திரன் இருந்தால் தாய்க்கும் அரிஷ்டம்.

அம்மான்காரகனை புதன் 3, 6, 8, 12லும் நீசம் ஆகினும் — பகை, மாரகர் சேர, பிள்ளைக்கும் அம்மானுக்கும் அரிஷ்டம்.

**தாய்:**

1. லக்னத்திலிருந்து 4வது வீட்டுக்குடையவன், 6வது வீட்டிலிருந்தால் மாதுர் பீடை.
2. லக்னத்திலிருந்து 4வது வீட்டுக்குடையவன், 7ல் இருந்தால் தாய்க்கு அரிஷ்டம்.
3. லக்னத்திலிருந்து 4க்குடையவன் 8ல் இருந்தால் அவமானமுள்ள தாய், அல்லது ஜாதகனுக்கு தாயினால் அவமானம் ஏற்படும்.

**தந்தை:**

1. லக்னத்திலிருந்து 9க்குடையவன் 6ல் இருந்தால் பீடை.
2. ,, ,, 8-ல் இருந்தால் பிதாவுக்கு அங்கஹீனம் — பீடை ஏற்படும்.
3. ,, ,, 9ல் இருந்தால் பிதா தீர்க்க ஆயுள்.
4. ,, ,, 10ல் இருந்தால் பிதுர் தோஷம்.
5. ,, ,, 11ல் இருந்தால் பிதாவுக்கு மாரகம் ஏற்படும்.

**குறிப்பு:** இவைகள் பொது விதிகள். கிரஹங்கள் இருக்கும் தன்மை, பார்வை, தெசாபுக்திகள் அறிந்து பலன் அறிய வேண்டும்.

மேலே சொன்ன இடங்கள் ஆட்சி, உச்சமான வீடுகளாயிருப்பின், பலனை யோசித்து அறியவேண்டும்.



https://www.facebook.com/ebooksintamil/

# லக்னம் முதல் 12 பாவங்களின் பலன்கள்

## 1. லக்ன பாவாதிபதி பலாபலன்கள்

லக்னம் என்பது ஜீவன். இதை 1வது விடாகக் கொள்ள வேண்டும்.

ஜெனனமான **லக்னத்தில்** அவ்வீட்டிற்குடைய கிரஹம் ஆக்ஷியாக இருந்தால், அந்தக் குழந்தை பூரண ஆயுளுடனும், ஸ்திரமான பலத்துடனும் சொத்துக்கள் உடையவனாகவும், கீர்த்தியைப் பெற்றவனாகவும், ஆயுள் வரை நல்ல முறையில் ஜீவன பலத்துடன் இருப்பான்.

லக்னத்தில் நீசக்கிரஹங்களோ, பகைக் கிரஹங்களோ இல்லாமலும், இவைகள் கேந்திரங்களில் இருந்து லக்னத்தைப் பார்க்காமலும் இருந்தால் மிகவும் நலம். தவிர, கேந்திரங்களிலிருந்து சுபகிரஹங்களின் பார்வையைப் பெற்றிருந்தாலும், லக்னத்தில் அவ்வீட்டிற்குடைய உச்சன் அமர்ந்திருந்தாலும், மித்திரர்கள்இருந்து பலம் பெற்றிருந்தாலும், அந்த லக்னத்தில் பிறந்த (உயிர்) ஜாதகன் ஆயுள் வரை பிரதாபம் பொருந்தியும், சந்தோஷங்களுடனும் உயர் பதவியிலும், தெய்வ பக்தி, வழிபாடுகள், மற்றவர்களுடைய கௌரவத்துடனும், பந்து மித்ரர்களுடனும் வாழ்வான்.

லக்னாதிபதி **2-வது** வீட்டில் சுப பலமாய் இருந்தால் வாக்கு வன்மையுடன், கல்வி முதலானவைகளில் தேர்ச்சி உடையவனாகவும், திரேக சுத்தமும், மன அமைதியும் பெற்றவனாகவும், உயர் குடும்பஸ்தனாகவும், மற்றவர்களால் புகழப் பெற்றவனாகவும் இருப்பான். செல்வமும், செல்வாக்கும் உள்ளவனுமாக இருப்பான். குடும்ப விருத்தியுடன் சௌகர்யங்கள் நிறைந்து இருப்பான்.

லக்னாதிபதி **3-வது** வீட்டில் சுப பலமாய் இருந்தால் அந்த ஜாதகன் சகோதர, சகோதரிகளுடனும், கூடி வாழ்பவனாகவும், கலையில் பிரியமுள்ளவனாகவும், பல வேலைக்காரர்களை வைத்து வேலை வாங்கும் அந்தஸ்தைப் பெற்றவனுமாகவும், அதிகாரத்துடனும், செல்வமும் செல்வாக்கும் பெற்றவனுமாகவும் இருப்பான்.

லக்னாதிபதி **4-வது** வீட்டில் சுப பலமாய் இருந்தால் நல்ல குடும்பத்தைப் பெற்றவனாகவும், வீடு, நிலபுலன்கள் உடையவனாகவும், போஜன சௌகர்யங்களைப் பெற்றவனுமாகவும், பந்துக்களின் ஆதரவைப் பெற்றும், தாயாரிடம் அன்புள்ளவனுமா



Hariram Thejus
www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

கவும், கல்வியில் உயர்ந்தவனுமாகவும்; வண்டி வாகனங்களை உடையவனுமாகவும், சுகியாகவும் இருப்பான். மாடு கன்றுகளும், பால் பாக்யத்துடனும் இருப்பான். லக்னத்துக்குடைய கிரஹமும், நான்காவது வீட்டுக்குடைய ஆட்சிக் கிரஹமும் உச்ச கிரஹமும் நான்கில் சேர்ந்திருந்தால் மேலே சொன்ன பலா பலன்களை அந்த லக்னாதிபதி பெறுவான். தாய்வழி மாமன்களின் ஆதரவும், சொத்துக்களும் கிடைக்கும்.

லக்னாதிபதி 5-வது வீட்டில் சுப பலமாய் இருந்தால், புத்திர சந்தானங்களைப் பெற்றவனுமாகவும், புத்திர சந்தானங்களால் சந்தோஷங்களையும் ஆவரவையும் பெற்றவனுமாக இருப்பான். தெய்வீக வழிபாடுகள் நிறைந்தும், மஹான்களின் சத்சங்கத்துடனும், பரோபகார சிந்தனைபெற்றும், பிரதாபங்களைப் பெற்றவனுமாகவும், யோகாப்பியாசங்களைப் பெற்றவனுமாக, விசாலபுத்தியுடன் விளங்குவான்.

லக்னத்துக்குடைய கிரஹம் 6-வது வீட்டில் 6க்குடையவரோடு கூடி அல்லது பார்க்க இருந்தால் அந்த ஜாதகன் வியாதி நிறைந்தவனாக இருப்பான். சத்ருக்கள், விரோதிகள், அவதூறு பேசுபவர்கள் அதிகமாக இருப்பார்கள். கடனுபாதைகள்நிறைந்தவனாகவும் இருப்பான். மன அமைதி இல்லாமல் இருப்பான்.

லக்னத்துக்குடைய கிரஹம் 7-வது வீட்டில் இருந்தால் ஸ்திரீ லோலனாகவும், காமியாகவும், ஆசைகள் உடையவனாகவும், மற்றவர்களின் மனதைக் கவரும் குணங்களுடனும், குடும்பப் பொறுப்பை ஏற்காமல் வெளியே சுற்றுபவனுமாகவும் இருப்பான். எந்தத் தொழிலிலும் ஸ்திரபுத்தியுடன் இருக்கமாட்டான். கவர்ச்சியும், கர்வமும், ''தான்'' என்ற எண்ணமும் தலைதூக்கி இருக்கும் குணத்துடன் இருப்பான். மனைவியின் வழியால் சொத்துக்களையும் லாபங்களையும் பெற்று வாழ்வான்.

லக்னத்துக்குடையவன் 8-வது வீட்டிலிருந்தால் சுப பலமாக ஆயுள் நிறைந்தவனுமாகவும், சிரமத்துடன் குடும்பத்தை நடத்துபவனுமாகவும், பிறர் தூஷணையைக் கொண்டவனுமாகவும், வம்ச பரம்பரையை அற்றவனுமாகவும், ஸ்வீகாரம், தத்து எடுத்துக் கொள்பவனுமாகவும் திரேகத்தில் அங்கஹீனம் அடைந்தவனுமாகவும் இருப்பான். பாபபலமாக—ஆயுள் குறைவு, வறுமை, தண்டனை கடுங்காவல், கேவல ஸ்திதியுள்ளவனாக இருப்பான்.

லக்னாதிபதி 9-வது வீட்டில் சுபபலமாயிருந்தால் பிதுர்க்களுடைய ஆசிர்வாதத்தை பெற்றவனாகவும் தகப்பனாரிடம் அன்பைப் பெற்றும் பாக்கியமும் பெறுவான். பெரியவர்களிடம் பக்தி விசுவாசத்துடனும் பாக்யங்களைப் பெற்றவனுமாக விளங்குவான். சத்தியம் நிறைந்தும், நேர்வழியில் செல்பவனாகவும். தருமத்தை செய்பவனாகவும், தெய்வீக வழிபாடுகள் நிறைந்தவனா



Hariram Thejus

https://www.facebook.com/ebooksintamil/

கவும் இருப்பான். பால் பாக்ய விருத்தியும், புகழையும்பெற்று நல் வாழ்க்கையுடன் விளங்குவான்.—யோகமுடனிருப்பான்.

லக்னாதிபதி லக்னத்துக்குப் 10வது வீட்டில் சுபபலமாய் இருந்தால், ஜீவன பலம் உடையவனாகவும், குடும்பத்தின் பொறுப்பை அறிந்து நடப்பவனாகவும், தெய்வீக வழிபாடுகள் நிறைந்தும், நித்யகர்ம அனுஷ்டானங்களைத் தவறாமல் செய்பவனாகவும், புண்ணிய காரியங்களில் பற்றுதல் கொண்டவனாகவும், இருப்பான். நற்பெயரும் கீர்த்தியும் ஏற்படும். இடைவிடாமல் தொழிலைச் செய்வான். அயற்சியைப் பார்க்கமாட்டான். அரசாங்கத்தில் கீர்த்தியைப் பெறுவான். செல்வாக்கும், அதிகாரமும், உயர்பதவிகளும் நிறைந்து விளங்குவான். மக்களிடையே ஓர் சிறந்த தலைவனாகப் போற்றப்படுவான். ஐசுவர்யங்களுடன், வண்டி வாகனங்களுடன், நிலபுலன்களுடன், மாளிகை போன்ற வீட்டில் வாசம் செய்வான்.

லக்னத்துக்குடையவன் 11வது வீட்டிருந்து சுபபலமாகவிருந்தால் நல்ல லாபங்களுடன் வாழ்வான். லாபகரமான தொழிலைச் செய்பவனாகவும், நற்பெயர், கீர்த்தி, முதலியவைகளைப் பெறுவதுடன், லாபங்களை அடைவான். இவனுக்கு மூத்த சகோதர, சகோதரிகளின் ஆதரவும் நிறைந்து இருக்கும். அவர்களால் புகழ்ச்சியும், லாபங்களும் ஏற்படும். லக்னத்துக்குடையவனை சுபக்கிரஹங்கள் பார்த்தாலும், பதினோராவது வீட்டுக்குடையவன் சுபக்கிரஹமாக, ஆக்ஷியாகவோ, உச்சனாகவோ இருந்தாலும், லக்னாதிபதி நீண்ட ஆயுளைப் பெற்றவனாக இருப்பான். பாபக்கிரஹங்களின் பார்வை சம்பந்தம், அசுபபலனாய் இருந்தாலும் மாரகம் கஷ்ட, நஷ்டம் முதலியனவற்றை அடைவான்.

லக்னாதிபதி 12வது வீட்டில் சுபமாக இருந்தால், எவ்வளவு வருமானம் வந்தாலும் நல்ல செலவுகள் அதிகமாக ஏற்படும். அசுப பலமாகிடில் அகால போஜனம் உடையவனாகவும், சிற்சில சமயம் போஜனமே கிடைக்காமலும், நித்திரை இல்லாமலும், மன அமைதி இல்லாமலும், குடும்பம் அடிக்கடி இடமாற்றத்தை அடையும்படியும் இருக்கும். அலைச்சல் அதிகமாக இருக்கும். திறமையற்றவனென்றும், சோம்பேறி என்றும் மற்றவர்கள் இகழ்வாகக் கூறுவார்கள். வியாஜ்யங்களும் அரசாங்கத்தில் நிந்தனையும் கெட்ட பெயரும் வரும்.

---

## 2. இரண்டாவது பாவாதிபதி பலாபலன்கள்

ஜாதகத்தில் லக்னத்துக்கு இரண்டாவது வீடு, **அந்த லக்னத்தில் பிறந்தவனின்** (ஜாதகனின்.) வாக்கு வன்மை, தனம், குடும்பம், கல்வி, சுக சௌகர்யங்கள் முதலியவைகளைப்பற்றிக் கூறும்.





www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

https://www.facebook.com/ebooksintamil/

லக்னத்துக்கு இரண்டாவது வீட்டுக்குடைய கிரஹம், லக்னத்திலேயே இருந்தாலும் இலக்கினாதிபதி 2ல் இருந்தாலும் வாக்கு வன்மையுடையவனாகவும், செல்வமும் செல்வாக்கும் உள்ளவனுமாகவும், அறிவாளியாகவும், பட்டம் பெற்று உயர் பதவியில் இருப்பவனுமாகவும், குடும்பவிருத்தியை அடைபவனாகவும், பொன் முதலான பூஷணங்களுடனும் இருப்பான். அங்கலக்ஷணங்களுடன், குடும்பத்தை நன்றாகப் போஷிப்பவனுமாகவும், மற்றவர்களால் புகழப் பெற்றவனுமாகவும், சுக சௌகர்யங்களுடன், நீண்ட ஆயுளுடன், கண் பார்வையுடனும் இருப்பான்.

இரண்டாமதிபதி லக்னத்துக்கு இரண்டாவது வீட்டில் ஆக்ஷியாக அமர்ந்திருந்தால், வாக்கு சாதுர்யத்தைப் பெற்றவனாகவும், சத்திய வாக்கைக் கொண்டவனாகவும், கண்டிப்பாகப் பேசுபவனாகவும், செல்வத்தையும் செல்வாக்கையும் பெற்றவனாகவும், பெரிய குடும்பத்தைப் பராமரிப்பவனாகவும், இருப்பான். பிறர் இவர்களுடைய வாக்குக் கட்டுப்பட்டவர்களாக இருப்பார்கள்.

லக்னத்துக்கு இரண்டுக்குடைய கிரஹம், மூன்றாவது வீட்டிலிருந்து அசுபபலமாகியிருந்தால் சகோதரர்கள் அரிஷ்டமும், சகாதர சகோதரிகளால் ஆதரவைப் பெறாதவனாகவும், அடிமையாயும், கல்வியில் ஞானம் இல்லாதவனாகவும், கல்வி பயில முடியாத சந்தர்ப்பங்களுடன் கூடியவனாகவும், செல்வமற்றவனாகவும் இருப்பான்.

லக்னத்துக்கு இரண்டாவது வீட்டுக்குடையவன், லக்னத்துக்கு 4ல் சுபபலமாக இருந்தால், தாயார் வழி, மாமாக்களுடைய ஆதரவைப் பெற்றவனுமாகவும், வீடு, நிலபுலன்கள் உள்ளவனாகவும், பந்துமித்ரர்களின் ஆதரவைப் பெற்றவனாகவும், கல்வியைப் பெற்றவனாகவும், வியாபாரத்தில் ஈடுபாடுள்ளவனாகவும் இருப்பான்.

லக்னத்துக்கு இரண்டுக்குடைய கிரஹம் 5வது வீட்டிலிருந்து 5குடையவன் கெட, புத்திர சந்தான தோஷத்தைப் பெற்றவனாகவும், புத்திரர்களிருந்தாலும் அவர்களின் ஆதரவைப் பெறாதவனாகவும், பெரிய மனிதர்களின் நட்பையும் ஆதரவையும் பெறாதவனாகவும், கூர்மையான புத்தியைப் பெற்றவனுமாகவும், தரும சிந்தனை குறைந்தும் இருப்பான். 5குடைய கிரகம் வலுத்தால் சந்தான லாபம், பிரபுத்வம், செல்வாக்கு, புத்திகூர்மை, பதவி — இவையுண்டாம்.

லக்னத்துக்கு இரண்டுக்குடைய கிரஹம் 6வது வீட்டிலிருந்தால் வியாதி, ரோகங்களைப் பெற்றவனாகவும், தத்தித்தத்திப்பேசும் குணமுடையவனாகவும், புத்திரர்கள் எதிரிகளாகவும் விளங்குவான். கடன்காரர்களின் தொல்லையுடனும் பணச் செலவுகளுடனும் இருப்பான். 6க்குடையோன் சுபபலமானால் வியாதியின்மை— எதிரிகளால் லாபம், கடன் நிவர்த்தி முதலான நல்ல பலனுண்டாம்.



லக்னத்துக்கு இரண்டாவது வீட்டுக்குடைய கிரஹம் 7வது வீட்டிலிருந்து அசுப பலமானால் மனைவியினால் கஷ்டங்களை அனுபவிப்பவனாகவும், சந்தோஷங்கள் குறைந்தவனாகவும் இருப்பான். செல்வத்துடன் இருந்தாலும், ஸ்திரீகள் விஷயமாய் செலவுகள் ஏற்படும்.

லக்னத்துக்கு 2வது வீட்டுக்குடைய கிரஹம் 8வது வீட்டிலிருந்து பாப பலம் பெற்றால் வாக்கு வன்மை இல்லாதவனாகவும், பேச்சில் இனிமை இல்லாதவனாகவும், ஊமைகள் போலவும், தான் போன போக்கில் போய்க் கொண்டிருப்பவனாகவும். எவருடைய பேச்சுக்கும் மதிப்பைக் கொடுக்காதவனாகவும், விரயங்களைச் செய்பவனாகவும் இருப்பான்.

லக்னத்துக்கு 2வது வீட்டுக்குடைய கிரஹம் 9வது வீட்டிலிருந்து 9க்குடையவன் புஷ்டியாகவிருக்க பிதுர்பாக்ய சொத்துக்களைப் பெறும்படி இருக்கும். ஆனால் பிதுர் தோஷங்களினால் விரயம் ஏற்படும். பிற்காலத்தில் (பின்பாதியில்) நல்ல நிலைமையில் இருப்பார்கள். பெரியவர்களுடைய ஆசீர்வாதத்தைப் பெற்றவராகவும், சொத்துக்களை விருத்தி செய்யும் குணத்துடனும் இருப்பார்கள்.

லக்னத்துக்கு 2வது வீட்டுக்குடைய கிரஹம் 10வது வீட்டிலிருந்து, சுப பலமாக, கல்வியில் திறமையுடன் விளங்குவார்கள். சாஸ்திர ஆராய்ச்சிகள், கல்வி விஷயமாக வாதப்பிரதிவாதங்களைப் பெற்ற குணங்களுடனும், பிரபலஸ்தனாகவும், மற்றவர்களை விட, தான் மேலான அந்தஸ்துடன் கூடினவன் என்ற எண்ணங்களுடனும், ஆசிரியர், அதிகாரப் பதவி, ஆசாரியன் போன்றவனாகவும் விளங்குவான். அரசாங்கத்தில் சட்டங்களைப் பயின்றவர்களாக, நல்ல தேஜஸ், செல்வாக்கு, செல்வம் ஆகிய பாக்யங்களுடன் இவர்கள் இருப்பார்கள்.

லக்னத்துக்கு இரண்டாவது வீட்டுக்குடைய கிரஹம் 11வது வீட்டிலிருந்து சுப பலமாக, வாக்கு சாதுர்யத்தினால், விசால புத்தியைப் பெற்றவனாகவும், லேவாதேவி (கொடுக்கல் வாங்கல்—(Banking Business) போன்ற வியாபாரங்களைச் செய்து லாபங்களைப் பெறுபவனாகவும் இருப்பார்கள். சுகசௌகர்யங்கள் நிறைந்தவர்களாக இருப்பார்கள். சகோதர, சகோதரிகளின் ஆதரவு, இவரிடம் இருக்கும். நிலபுலன்கள், வீடு போன்ற சொத்துக்களுடன், மன அமைதியுடன், சந்தோஷமாகவும் சுகமாகவும் குடும்பத்தில் ஈடுபட்டிருப்பார்கள்.

லக்னத்துக்கு இரண்டாவது வீட்டுக்குடைய கிரஹம் 12வது வீடாகிய விரய ஸ்தானத்தில் அசுப பலம் பொருந்தி இருந்தால்— மதிப்பில்லாதவனாகவும், வீண் பேச்சு பேசுபவனாகவும், சதா சுற்றி



https://www.facebook.com/ebooksintamil/
Hariram Thejus
www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

வரும் குணம் கொண்டவனாகவும், சுக சௌகர்யங்களைப் பெறாதவனாகவும், போஜன, சயன சுகவாழ்வு இல்லாதவனாகவும், எல்லோராலும் இகழ்வாக பேசும்படி இருப்பான். வரவுக்கு மேல் செலவு செய்யும் குணமும், கடன்கள் வாங்கத் துணிவு ஏற்படுதலும், தன்மதிப்பைத் தானே கெடுத்துக்கொள்ளும் குணங்களுடன் இருப்பார்கள். அங்கஹீனமுள்ளவர்களாகவும் இருப்பார்கள்.

2க்குடைய கிரஹம் 12வது வீட்டில் சுபபலமாகியிருக்க நல்லவழியில் செலவு செய்ய பணம் வரவு, சயனசுகம், வரவும் செலவும் உடனுக்குடன் நேரிடுதல், பிற இடங்களில் வசித்தல் முதலியன ஏற்படும்.

---

## 3. மூன்றுவது பாவாதிபதி பலாபலன்கள்

லக்னத்துக்கு மூன்றுவது வீட்டுக்குடைய கிரஹத்தின் சுப பலத்தினால் இளைய சகோதர, சகோதரிகளின் விர்த்தி, ஆதரவு, ஒற்றுமை, சுக சௌகர்யங்களையும், எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய புகழ், வெற்றிகளையும், அந்தஸ்து, கலைவளர்ச்சி, யோகங்கள் முதலியவைகளையும் கூறவேண்டும்.

மூன்றுவது வீட்டுக்குடைய கிரஹம், 1வது வீடாகிய லக்னத்தில் சுபபலத்துடன் இருந்தால், இளைய சகோதரவிருத்தி ஏற்படும். பல வேலையாட்களை வைத்து, வேலை வாங்கும்படியான அதிகார யோகமும், அந்தஸ்தும், சினிமா, நாடகம், நாட்டியம் போன்றும், சங்கீதத்திலும் பிரியம் ஏற்படுவதுடன், புகழைப் பெற்று விளங்குவார்கள். திரேக பலமும், போகங்களுடனும், யோகங்களுடனும் இருப்பார்கள். வைரம், பொன், முதலான நகைகளைப் பெற்றவர்களாக இருப்பார்கள். வஸ்திர ஆபரணங்களுடன் உன்னதமான நிலைமையில் இருப்பார்கள். சகோதர சகோதரிகளின் ஆதரவைப் பெற்றவர்களாகவும், செல்வம், செல்வாக்குடன், கீர்த்தி பெற்றும் விளங்குவார்கள்.

மூன்றுவது வீட்டுக்குடைய கிரஹம் லக்னத்துக்கு இரண்டாவது வீட்டிலிருந்தால் சகோதர, சகோதரிகளின் ஆதரவில் காலம் கழிப்பவனாகவும், தைர்யமில்லாதவனாகவும், தேகத்தில் அசௌக்கியங்களும், வியாதிகளும் நிரம்பப் பெற்றவனுமாகவும், இருப்பான். மூன்றுவது வீட்டுக்குடைய கிரஹம் சுபனாகவும், குரூர கிரஹ பார்வைகள் இல்லாமலிருந்தால் இவர்களுக்கு சகோதர சகோதரிகளின் சொத்துகளும் கிடைக்கும். சுப பலஹீனமானால் தாழ்மையான நிலைமையில் வாழ்க்கையை நடத்துவான். சுபகிரஹ சம்பந்தம் முதலியன பெற்றிருந்தால், செல்வத்தைப் பெற்று சந்தோஷங்கள் நிறைந்து விளங்குவான்.



மூன்றுவது வீட்டுக்குடைய கிரஹம் மூன்றில், ஸ்வக்ஷேத்திர பலத்துடன் கூடி இருந்தால் சகோதர, சகோதரிகள் நல்ல அந்தஸ்துடனும், செல்வம், செல்வாக்குடனும் இருப்பார்கள். அவர்களால் இந்த ஜாதகருக்கு சகலவிதங்களிலும் ஆதரவு இருக்கும். அந்தஸ்துடன், அதிகாரப் பதவியில் இருப்பான். கலைகளில் பிரியம் கொண்டவனாக இருப்பான். பலசாலியாகவும், போக பாக்யங்களைப் பெறும் சக்திகளைப் பெற்றும் இருப்பான். தங்கம், பொன், வெள்ளி, ஆடை ஆபரணங்களில் ஆசையுடையவனாகவும், அவைகளைப் பெற்றும் விளங்குவான். தெய்வீக வழிபாடுகள், சாஸ்திரங்கள், பக்தி, விஸ்வாசம் பெற்றவனாகவும் இருப்பான்.

மூன்றுவது வீட்டுக்குடைய கிரஹம் லக்னத்துக்கு நான்காம் வீட்டில் சுபபலமாயிருந்தால் குடும்பத்தில் ஒற்றுமை நிறைந்தும், சுக சௌகர்யங்கள் நிறைந்தும் விளங்கும். சகோதர சகோதரிகள் நீண்ட ஆயுளுடனும், பந்துமித்ர பரசாரக ஜனங்களைப் பெற்றவருமாக விளங்குவார்கள். தாயார், தாய்வழி ஆதரவைப் பெற்றவர்களாகவும், அந்தஸ்து, அதிகாரங்களுடனும், ஆடை ஆபரணங்களுடனும் இருப்பார்கள். குடும்பத்தில் செல்வமும் சுகமும் நிறைந்து விளங்கும்.

மூன்றும் வீட்டுக்குடைய கிரஹம் லக்னத்துக்கு ஐந்தாவது வீட்டிலிருந்தால் புத்திரவிருத்திகளைப் பெற்றவனாகவும், சகோதரர், புத்திரர்கள், பந்து மித்ர ஆதரவைப் பெற்றவர்களாகவும், குடும்பத்தில் சந்தோஷங்கள் நிறைந்தும் விளங்கும். பெரிய மனிதர்கள் சினேகங்களும் ஆதரவும் இருக்கும். சாஸ்திர ஆராய்ச்சிகள் தெய்வீக வழிபாடுகள் நிரம்பப் பெற்றவர்களுமாக இருப்பார்கள்.

மூன்றும் வீட்டுக்குடைய கிரஹம் லக்னத்துக்கு 6வது வீட்டிலிருந்தால் சகோதர சகோதரிகள் பரம எதிரிகளாகவும், திரேக பலம் குறைந்தவர்களாகவும், வியாதிகள் நிரம்பியும், சத்ருக்கள் அடிக்கடி தொல்லை கொடுப்பவர்களாகவும், வியாஜ்யம், அரசாங்கத்தினரால் அவமதிப்பு முதலியனவும் நேரும்.

3ம் வீட்டோன் சுபபலமானால் சத்துரு ஜயம் — தாயாதி மூலம் லாபம், பயம், கிலேசமின்மை உண்டாம்.

லக்னத்துக்கு மூன்றுவது வீட்டுக்குடையவன், லக்னத்துக்கு 7வது வீட்டில் சுபமாய் இருந்தால், ஸ்திரீ லோலனாகவும், பரஸ்திரீகமனனாகவும், தன்னுடைய சுகங்களை, சௌகர்யங்களை அனுபவித்துக்கொள்பவனாகவும், தைர்யஸ்தனாகவும், விளங்குவான். ஸ்திரீ சொத்துக்களைப் பெற முயலுவான். போஜன சுகமும், சயன சுகத்துடனும் இருப்பான். யாதொரு தொழிலுமின்றி சுகவாஸியாக இருப்பான்.

லக்னத்துக்கு மூன்றுக்குடையவன் (கிரஹம்) லக்னத்துக்கு எட்டில் இருந்தால், சகோதரர்களுடன் வியாஜ்யங்களும், திரேக



https://www.facebook.com/ebooksintamil/

Hariram Thejus

www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

அசௌக்கியம், அங்கஹீனம், முதலியவைகளுடன் இருப்பார்கள். வாக்குவன்மை குறைந்தும், சிரமத்துடன் குடும்பத்தை நிர்வகிக்க வேண்டிய பொறுப்புகளும், கடன், அவமானம் உள்ளவனாகவும் வருமானம் குறைந்தும் இருப்பார்கள். — சுபபலமாயிருந்தால் ஆயுட்காலத்தில் கஷ்ட நிவாரணமுண்டாம்.

லக்னத்துக்கு மூன்றுக்குடையவன் லக்னத்துக்கு ஒன்பதாவது வீட்டில் சுபமாயிருந்தால், தைர்யமும் வீர சுபாவங்களும் பொருந்தி பூர்வ புண்ணியத்தினால் வசதி பெற்றவனாகவும், பக்தி விசுவாசம் நிறைந்தவனாகவும் விளங்குவான்.

லக்னத்துக்கு மூன்றுக்குடைய கிரஹம் லக்னத்துக்குப் பத்தாவது வீட்டில் சுபமற்றதாய் இருந்தால், சகோதர, சகோதரிகளின் பலம் குறைந்துவிளங்குவார்கள். அந்தஸ்து இல்லாமலும், ஆதரவு குறைந்தும் இருப்பார்கள். ஆனாலும் ஓரளவு நற்பெயரும், கீர்த்தியையும் பெற்றவர்களாகவும் இருப்பார்கள். தாராள மனதுடையவர்களாக இருப்பார்கள். சாதாரண உத்தியோக விருத்தியினால் ஜீவனமுண்டாம்.

லக்னத்துக்கு மூன்றுக்குடைய கிரஹம் லக்னத்துக்கு 11வது வீட்டில் சுபமாயிருந்தால், சகோதர, சகோதரிகளால் லாபத்தைப் பெற்றும், அன்பு ஆதரவைப் பெற்றும் இருப்பார்கள்.

லக்னத்துக்கு மூன்றுக்குடைய கிரஹம், லக்னத்துக்கு 12வது வீட்டிலிருந்து அசுபமானால் சகோதரர்களிடம் சண்டை சச்சரவுகள் நிறைந்தும், சொத்துக்கள் விரயமேற்பட்டும், அலைச்சலும், மன அமைதி இல்லாமலும், கஷ்டங்களும் நிறைந்து இருக்கும். உத்தியோகஹானி. பிறர் இடத்திலிருப்பான். சயன சுகமற்றவனாவான்.

---

## 4. நான்காம் பாவாதிபதி பலாபலன்கள்

ஜாதகத்தில் லக்னத்துக்கு நான்காம் வீடு, தாய் வீடு ஆகும். தாய்வழி மாமன் வீட்டைப்பற்றிய வழிகளையும், வீடு, வாகனம், சுகம், செல்வம் முதலியவைகளையும் நான்காம் வீட்டிற்குடைய கிரஹத்தின் மூலமாக அறியலாம்.

லக்னத்துக்கு 4க்குடைய கிரஹம், லக்னத்திலேயே சுபபலமாய் இருந்தால் பிரபல பங்களா போன்ற வீடுகள், நிலபுலன்கள், வண்டி வாகனங்கள், மாடு கன்று அபிவிருத்திகளும், பால் பாக்யத்துடன், சுகபோஜனங்களுடனும், சயன சுகங்களுடனும், பலராலும் போற்றப்பட்டவனாகவும், ஸ்திரீ போகங்களை அனுபவிப்பவனாகவும் இருப்பான்.



இவர்களுக்கு தாய் வழியில் பாட்டி, மாமன் முதலானோர் ஆதரவு நிரம்பி இருக்கும். கல்வியில் திறமை யுடையவனாக இருப்பான். லக்னத்துக்கு நான்காவது வீட்டுக்குடையவன் ஆக்ஷியாகவும், உச்சனாகவும் இருந்தால், இந்த ஜாதகர் உயர்ந்த அந்தஸ்தில் ஓர் பெரிய பதவியில் சிறப்புடன் விளங்குவார். சத்ரு வீக்ஷண்யமோ சேர்க்கையோ விரயாதிபதியின் சம்பந்தப்பட்டிருந்தால் இந்த ஜாதகன் வறியவனாகவும் சுகஹீனனாக இருப்பான். நீதி, நேர்மை, பக்தி விசுவாசம் இவர்களிடம் குறைந்து மிருக்கும்.

லக்னத்துக்கு 4வது வீட்டுக்குடைய கிரஹம், லக்னத்துக்கு 2ல் சுபமாயிருந்தால், தாய்வழி ஆதரவையும் சொத்துக்களையும் பெறுவார்கள். தாயார் நோய்வாய்ப்படுவாள். குடும்பத்தில் சுக சௌகர்யங்கள் நிறைந்து விளங்குவார்கள்.

லக்னத்துக்கு 4வது வீட்டுக்குடைய கிரஹம் மூன்றுவது வீட்டிலிருந்தால், அந்த லக்னாதிபதியைவிட அவன் சகோதரன் சிறந்து விளங்குவான். ஜாதகனின் தாயார் வியாதிகளைப் பெறுவாள். குடும்பத்தில் நாளுக்கு நாள் கஷ்டங்களும், நஷ்டங்களும் தோன்றும். விரயங்கள் அதிகமாகும். வருமானத்தைவிட செலவுகளே அதிகமாகும்.

லக்னத்துக்கு 4வது வீட்டுக்குடைய கிரஹம் லக்னத்துக்கு 4வது வீட்டில் ஸ்வக்ஷேத்திரத்திலிருந்தால் பிரபல கிரஹத்தில், நில புலம், வீடு வாசல், மாடு, கன்றுகள், பால் பாக்யம், கீர்த்தி, கல்வியில் திறமை, வண்டி வாகனங்கள் முதலியவைகளுடன் வாழ்வான். பலரும் இவனிடம் மரியாதைகள் கொண்டாடுவார்கள். பந்து மித்திரர்கள், நண்பர்கள் முதலானவர் இவரிடம் பக்தி, விஸ்வாசத்துடனும், புகழ் பேசி வருவார்கள். பணி ஆட்கள் பலரும் சூழ, அரச வாழ்வுக்கு சமமாக இருப்பார்கள். ஸ்திரீ சுகங்கள் நிரம்பப்பெற்றும், ஸ்திரீகளின் சொத்துக்களைப் பெற்றும் இவர்கள் நல்ல சுகபோகங்களுடன், செல்வாக்குடனும் விளங்குவார்கள்.

லக்னத்துக்கு 4வது வீட்டுக்குடைய கிரஹம் லக்னத்துக்கு 5வது வீட்டில் பலமாயிருந்தால், புத்திர சந்தானங்களால் சந்தோஷத்தைப் பெற்றவனாகவும், வண்டி வாகனங்களைப் பெற்றவனாகவும், லாபங்களை உடையவனாகவும், சமூகத்தில் கீர்த்தியையும், செல்வம், செல்வாக்கையும் பெற்றவனாகவும் இருப்பார்கள்.

லக்னத்துக்கு 4வது வீட்டுக்குடைய கிரஹம் 6வது வீட்டிலிருந்தால், சுக சௌகர்யங்களை இழந்தவனாகவும், தாயிடமும், தாயார் வழிகளிலும் விரோதங்களைக் கொண்டவனாகவும், பூர்வீக சொத்துக்களை வியாஜ்யம், சண்டை, சச்சரவுகளில் செலவு செய்பவனாகவும் வியாதி, பீடை இவைகளைப் பெற்றவனாகவும் இருப்பான். சுபபலமானால் வியர்தி கஷ்டம்; பரிகாரத்தினால் நிவாரணம் உண்டாம்.



https://www.facebook.com/ebooksintamil/

Hariram Thejus

www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

லக்னத்துக்கு 4க்குடைய கிரஹம் லக்னத்துக்கு 7ல் அசுப பலமாய் இருந்தால், தாயார், மாமன் வழியில் மனைவி வருவாள். வருமானமும், செலவும், எப்பொழுதும் சரிசமமாக இருந்துவரும். கஷ்டமும் சுகமும் உடனுக்குடன் ஏற்படும். வீடு மாறி மாறி குடி இருக்கும்படி இருக்கும். வாகனங்களும் அடிக்கடி மாற்றவேண்டி இருக்கும். ஆனாலும் சுப கிரஹ பார்வை, அல்லது உச்ச கிரஹப் பார்வை பெற்றிருந்தால் குடும்பத்தில் சந்தோஷங்களும், செல்வமும், சுகமும் நிறைந்து விளங்கும். மனைவியின் போக்கின்படி ஜாதகர் இருப்பார்கள்.

லக்னத்துக்கு 4வது வீட்டுக்குடைய கிரஹம் லக்னத்துக்கு 8வது வீட்டில் இருந்தால் தாயார் வறிய குடும்பத்தில் பிறந்தவளாக இருப்பாள். தாய்வழி ஆதரவு குறைந்திருக்கும். வறுமையும், அவமானங்களும் நிறைந்தவனாகி ஜாதகன் வாழ்க்கையை நடத்துவான்.

லக்னத்துக்கு 4வது வீட்டுக்குடைய கிரஹம் லக்னத்துக்கு 9வது வீட்டில் சுபபலமாயிருந்தால், நிலபுலன்கள், வீடு, வாகனங்கள், பால் பாக்யம் முதலியன பெற்று விளங்குவார்கள். தகப்பனார் அன்பைப் பெற்றவனாக இருப்பார்கள். பெரியவர்களிடம் பக்தி விசுவாசத்துடன், தெய்வீக வழிபாடுகளில் நம்பிக்கையும் உடையவர்களாக இருப்பார்கள். சுக சௌகர்யங்களுடன் செல்வத்தையும் பெற்று விளங்குவார்கள்.

லக்னத்துக்கு 4வது வீட்டுக்குடைய கிரஹம் லக்னத்துக்கு 10வது வீட்டில் இருந்தால், பூமி சம்மந்தமான பொருள்களால் லாபத்தைப் பெறுவார்கள். ஜீவன பலம் அதிகமாக இருக்கும். பிரபுக்கள், பெரிய மனிதர்களின் ஆதரவு, செல்வம், செல்வாக்கு, கீர்த்தி இவைகளைப் பெற்று விளங்குவார்கள்.

லக்னத்துக்கு 4வது வீட்டுக்குடைய கிரஹம், லக்னத்துக்கு 11ல் இருந்தால், சுகங்கள் நிறைந்தவனாகவும், பூமி, வியாபாரம் போன்றவைகளால் நல்ல லாபங்களுடன் வாழ்வான். ஆனால் தாயார் மாரகத்தை அடைவாள்.

லக்னத்துக்கு 4வது வீட்டுக்குடைய கிரஹம், லக்னத்துக்கு 12ல் இருந்தால், சுக, சௌகர்யங்கள் குறைந்தும், ஆதரவு அற்றவனாகவும், வறுமை மிகுந்தும், கஷ்டங்களும், நஷ்டங்களும் ஏற்படும். பூமி, காணி நிலங்கள் விரயமாகும். மொத்தத்தில் சிரம வாழ்க்கையை நடத்தும்படி இருக்கும்.

## 5. ஐந்தாவது பாவாதிபதி பலாபலன்கள்

லக்னத்துக்கு ஐந்தாம் வீடு பொதுவாய் புத்திர சந்தானத்தைக் குறிக்கும். பூர்வ புண்ணிய பலன்கள், தூய்மையான எண்ணங்கள், புத்திசாதுர்யம், வித்தை, கல்வியில் திறமை, சத்காலக்ஷேபம், சத்சங்கம், மஹான்களின் நட்பு, யோகாப்பியாசம், பதவி உயர்வு, அந்தஸ்து, முதலான விஷயங்களை லக்னத்துக்கு ஐந்தாவது வீட்டின் கிரஹத்தின் பலத்தை கொண்டு, பலன்களைக் கூறலாம்.



லக்னத்துக்கு ஐந்தாவது வீட்டுக்குடைய கிரஹம் 1-வது வீடாகிய லக்னத்தில் சுபமாய் இருந்தால், புத்திர விருத்தியை பெற்றவனாகவும், அப்புத்திரர்கள் பிரபுத்வம் பெற்று நல்ல உயர் பதவியுடனும், அந்தஸ்துடனும், பக்தி விஸ்வாசங்களுடனுன் இருப்பார்கள். ஜாதகன், தெய்வீக வழிபாடுகளில் ஈடுபட்டு, ஆசாரியன், மஹான்களின் ஆசிகளைப் பெறுவான். அரசாங்கத்திலும், மக்களிடையேயும் நல்ல விருதுகளைப்பெற்று, சிரோ ரத்னமாக விளங்குவான். யோகாப்யாசத்தில் பற்றுதலும், திடதிரேகத்துடன் இருப்பான்.

லக்னத்துக்கு ஐந்தாவது வீட்டுக்குடைய கிரஹம், லக்னத்துக்கு இரண்டில் சுபமாக இருந்தால், அந்த ஜாதகனுக்கு புத்திரர்களால் தனம் சந்தோஷ சுகங்கள் நிறைந்து விளங்கும். பக்தி, விசுவாசம், மரியாதைகளுடன் பிள்ளைகள் இருப்பார்கள். கல்வியில் தேர்ச்சியும், புத்திகூர்மையுடனும் விளங்குவார்கள். புத்திரர்களால் குடும்பத்தில் நல்ல வருமானங்களும் செல்வாக்கும் ஏற்படும். புராண இதிகாஸங்களையும், சாஸ்திர ஆராய்ச்சிகளையும் செய்து குடும்பம் கீர்த்தியுடனும், செல்வத்துடனும் விளங்கும்.

லக்னத்துக்கு ஐந்தாவது வீட்டுக்குடைய கிரஹம், லக்னத்துக்கு மூன்றில் இருந்தால், புத்திரசந்தான தோஷங்களைக்கொண்டவனாக இருப்பான். புராணங்கள், சாஸ்திரங்கள், தெய்வீக வழிபாடுகளில் பற்றுதல் உள்ளவனாக இருப்பான் — மக்களால் நன்மையற்றவனாகயிருப்பான்.

லக்னத்துக்கு ஐந்தாவது வீட்டுக்குடைய கிரஹம், லக்னத்துக்கு நான்கில் பலத்துடன் அமர்ந்திருந்தால், புத்திர விருத்திகளைப் பெற்றிருப்பார்கள். குடும்பத்தை கௌரவத்துடன் போஷிப்பவர்களாகவும், வண்டி வாகனங்களைப் பெற்றவர்களாகவும், நிலபுலன், வீடு முதலியவைகளைப் பெற்றும், அரசாங்கத்தில் நற்பெயர், கீர்த்தி பெற்றவர்களாக இருப்பார்கள். பெரிய மனிதர்களின் சிநேகமும் படித்தவர்களின் நட்பும், அந்தஸ்தும் உடையவர்களாக இருப்பார்கள்.

லக்னத்துக்கு ஐந்தாவது வீட்டுக்குடைய கிரஹம், லக்னத்துக்கு ஐந்தில் தனது சொந்த வீட்டில் புஷ்டியாக இருந்தால், புத்திரர்கள் உயர் பதவியில், கல்வி கேள்விகளில் நல்ல ஞானங்களுடன் இருப்பார்கள். படித்த அறிவாளிகளின் சமூகத்திலும் சுற்றத்திலும் வாழ்க்கையை நடத்துவார்கள். பெரியவர்களிடம் பக்தி, விசுவாசங்களுடன், அரசாங்கத்தில் உயர் பதவியில் இருப்



https://www.facebook.com/ebooksintamil/
Hariram Thejus
www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

பார்கள். செல்வமும், செல்வாக்கும், நிலபுலன்கள் வீடு முதலியன நிறைந்து விளங்கும். வண்டி வாகனங்கள் இருக்கும். அதிகாரப் பதவியில் இருப்பார்கள். ராஜயோகம் ஏற்படும். ஐந்தாவது வீட்டில் சுபகிரஹ சேர்க்கையும், உச்ச சேர்க்கைகளும் பெற்றிருந்தால், மக்களிடையே ஓர் மாணிக்கமாக, ராஜதந்திரியாக விளங்குவார்கள். நன்மதிப்புடன் விளங்குவார்கள்.

லக்னத்துக்கு ஐந்தாவது வீட்டுக்குடைய கிரஹம், லக்னத்துக்கு ஆறுவது வீட்டிலிருந்தால், புத்திர தோஷத்தையுடையவராக இருப்பார்கள். புத்திரர் பிறக்காமலிருக்கலாம். அப்படி இருந்தாலும், புத்திரர்கள் விரோதமான நிலையில் இருப்பார்கள். புத்திரர்களால் நன்மைகளையோ, லாபங்களையோ அடையமுடியாது. சஞ்சலம் இருக்கும். இவர்களுக்கு ஞாபக சக்தி இல்லாமலும், திடதிரேகங்கள் இல்லாமலும், புத்தி குறைவும், பெரியவர்களிடம் விரோதங்களும் இருந்துவரும். வியாஜ்யங்கள், வழக்குகள் அடிக்கடி தோன்றி மறையும். சுபபலமானால் சாந்தி பரிகாரத்தால் ரோக பீடை நிவாரணம்.

லக்னத்துக்கு ஐந்தாவது வீட்டுக்குடையவன் லக்னத்துக்கு ஏழில் இருந்தால், புத்திரசந்தான தோஷத்தை உடையவனாகவும், மனைவி, மனைவியின் குடும்பத்தினரால் மன அமைதி இல்லாதவனாகவும், இருப்பார்கள். தாராள மனதுடையவராகவும், சுற்றத்தாரால், நண்பர்களால் நற்பெயருடனும் விளங்குவான்.

லக்னத்துக்கு ஐந்தாவது வீட்டுக்குடையவன், லக்னத்துக்கு எட்டில் இருந்தால் புத்திரசந்தானதோஷம் உண்டு. சிரமமாக குடும்பத்தை நடத்துவார்கள். நல்ல வருமானம் இருக்காது. மக்கள் இருப்பின் கஷ்டம் வறுமைக்குள்ளாவார்கள்.

லக்னத்துக்கு ஐந்தாவது வீட்டுக்குடையவன் லக்னத்துக்கு ஒன்பதாவது வீட்டில் சுபபலமாயிருந்தால், புத்திரர்கள் விருத்தியும், புத்திரர்களால் சந்தோஷங்களும் சுக, சௌகர்யங்களும் ஏற்படும். கல்வியில் திறமையுடனும், பிரகாசத்துடனும் விளங்குவார்கள். பிதுர் பாக்ய சொத்துக்கள் கிடைக்கும். பெரியவர்களிடம் பக்தி, விசுவாசத்துடன் இருப்பார்கள். அதிகாரப் பதவியில் அந்தஸ்துடன், செல்வம் நிறைந்து விளங்குவார்கள். சாஸ்திரங்களில் தேர்ச்சியும், தெய்வீக வழிபாடுகளில் பற்றுதலுடன், சத்தியம், தருமம், நீதிபோன்றவைகளைக் கடைப்பிடித்து நல்ல போக பாக்யங்களுடன் விளங்குவார்கள்.

லக்னத்துக்கு ஐந்தாவது வீட்டுக்குடைய கிரஹம், லக்னத்துக்குப் பத்தில் இருந்தால், புத்திரசந்தான விருத்தி ஏற்படும். அரசாங்கத்தில் உயர் பதவியில் இருப்பார்கள். சத் காலக்ஷேபத்தில் பற்றுதல் உள்ளவர்களாகவும், தெய்வீக வழிபாடுகளைப் பரப்புவதில் ஆர்வம் பெற்றவர்களாகவும் இருப்பர்ர்கள். சுக சௌகர்



https://www.facebook.com/ebooksintamil/

யங்களுடனும், சந்தோஷங்களுடனும் இவர்களது வாழ்க்கை அமையும். சுபபலமானால்தான் மேற்சொன்ன பலனுண்டாம்.

லக்னத்துக்கு ஐந்தாவது வீட்டுக்குடைய கிரஹம், லக்னத்துக்கு பதினொன்றில் அமர்ந்திருந்தால் புத்திரசந்தானங்களால் சந்தோஷங்களும், குடும்பம், அமைதியையும் ஆனந்தத்தையும் பெற்று விளங்கும். பெரிய மனிதர்களின் ஆதரவும், நட்பும் இருக்கும். அரசாங்கத்தில் உயர் பதவிகளும், கௌரவங்களும் கூடினவர்களாக இருப்பார்கள்.

லக்னத்துக்கு ஐந்தாவது வீட்டுக்குடைய கிரஹம், லக்னத்துக்கு பன்னிரெண்டாவது வீட்டில் அமர்ந்திருந்தால், மனைவிக்கு அடிக்கடி கர்ப்பச் சிதைவுகளும், புத்திரசந்தான தோஷமும் ஏற்படும். ஆரோக்யம் கெடும். தன விரயமும், நஷ்டங்களும் கவலைகளும் தோன்றிவரும். பந்துக்களும், நண்பர்களும் ஒற்றுமையுடன் இருக்கமாட்டார்கள். அமைதி இல்லாமல் காலத்தை நடத்தவேண்டி இருக்கும்.

## 6. ஆறுவது பாவாதிபதி பலாபலன்கள்

லக்னத்துக்கு ஆறுவது வீடு சத்ருஸ்தானம், ரோக ஸ்தானம் என்பது. கடனுபாதைகள், வியாதி, பகைவர்களின் தொல்லை, ராஜதண்டனை, சிறைப்படுதல், விரோதங்கள், விஷ பீடைகள், திருட்டுப்போதல் ஆகிய விஷயங்களை ஆறுவது வீட்டைக்கொண்டும் கிரஹத்தைக் கொண்டும் பார்க்கவேண்டும்.

லக்னத்துக்கு ஆறுவது வீட்டுக்குடைய கிரஹம், 1வது வீடாகிய லக்னத்தில் இருந்தால், சதா வியாதிகளும், நோய், நொடிகளும் இருக்கும். மனதில் தைர்யமில்லாதவராகவும், எதிலும் பயமும் தலையெடுத்திருக்கும். பகைவர்களால் இவர்களுக்கு சதா தொல்லைகள் இருக்கும். கடன்காரர்களின் தொல்லை இருந்துவரும். சர்வ ஜாக்கிரதையுடன் இவர்கள் இருத்தல் வேண்டும். சுபபலமானால் பரிகாரத்தினால் கஷ்டம் ஒருவாறு சாந்தியாகும்.

லக்னத்துக்கு ஆறுவது வீட்டுக்குடைய கிரஹம், லக்னத்துக்கு இரண்டாவது வீட்டிலிருந்தால் வாக்குவன்மை இருக்காது. ஸ்திரமான பேச்சுக்கள் வராது. வழவழப்பாக இருப்பார்கள். கண்டிப்பு இருக்காது. அதிகமாகக் கடன்களை வாங்கி செலவு செய்வார்கள். அனாவசியமான செலவுகள் ஏற்படும். கல்வியில் ஊக்கம் உண்டாகாது. அசௌக்கியங்கள் ஏற்படும். கண்பார்வை மங்கி இருக்கும். குடும்பம் நாளுக்கு நாள் க்ஷீண தசையை அடையும் — பேச்சினால் விரோதமுண்டாம்.



Hariram Thejus
www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

லக்னத்துக்கு ஆறுவது வீட்டுக்குடைய கிரஹம், லக்னத்துக்கு மூன்றில் அமர்ந்திருந்தால் சகோதர சகோதரிகள் விரோதிகளாகக் காக்ஷி அளிப்பார்கள். குடும்பத்தில் ஒற்றுமை இருக்காது. கடன் வாங்கி உணவு உண்பான்.

லக்னத்துக்கு ஆறுவது வீட்டுக்குடைய கிரஹம், லக்னத்துக்கு நான்கில் அமர்ந்திருந்தால் தாயாருடைய உடல் நலம் பாதிக்கும். தாயார் விரோதியாக இருப்பாள். குடும்பம் பூரணமான செளகர்யங்களுடன் இருக்காது. பூமி காணி நிலம், வீடுகள் இருந்தாலும், வருமானம் குறைந்திருக்கும். கடன் உபாதையினால், விற்கவேண்டிவரும். அடமானம் முதலியன வைக்கும்படியும் இருக்கும். சிரமமான வாழ்கையுடன் இருப்பார்கள்.

லக்னத்துக்கு ஆறுவது வீட்டுக்குடைய கிரஹம், லக்னத்துக்கு ஐந்தில் இருந்தால், புத்திரதோஷம் ஏற்படும். அல்லது கடன், விரோதம், கஷ்டம் ஏற்படும். கெட்ட எண்ணங்கள் உதயமாகும். பாப காரியங்களைத் துணிந்து செய்பவனாகவும், பிறரை ஏமாற்றும் சக்திகளுடனும் இருப்பான். இருதயத்தில் நோய் இருக்கும்.

லக்னத்துக்கு ஆறுவது வீட்டுக்குடைய கிரஹம், லக்னத்துக்கு ஆறுவது வீட்டில் தனது சொந்த வீட்டில் ஆக்ஷியாக இருந்தால், சத்ரு பயம் அதிகமாகும். கடன் தொல்லைகள் அதிகமாகும். வியாதிகள் ஏற்படும். எல்லோரும் கலகங்கள் செய்பவர்களாகவும் மனஸ்தாபத்தை உண்டாக்குபவர்களாகவும் இருப்பார்கள். ராஜதண்டனை, சிறைவாசம், வறுமை முதலானவற்றை அனுபவிக்கும்படி இருக்கும். சுபதிருஷ்டியுடன் இருப்பின் எதிரிகளாலேயே வெற்றி, நன்மை உண்டாகும்.

லக்னத்துக்கு ஆறுவது வீட்டுக்குடைய கிரஹம், லக்னத்துக்கு ஏழில் அமர்ந்திருந்தால், மனைவி, மனைவியின் வழியிலும் ஆதரவு இருக்காது. விரோதங்கள் நிறைந்து விளங்கும். மனம் அமைதி இருக்காது. குடும்பத்தில் சந்தோஷங்களும் குறையும். வியாதிகள் ஏற்படும். ரத்தம் கெடுதல், சரும வியாதிகள் ஏற்படும்.

லக்னத்துக்கு ஆறுவது வீட்டுக்குடைய கிரஹம், லக்னத்துக்கு எட்டாவது வீட்டில் இருந்தால், வறுமைகள் நிறைந்தும், பொருள்களை விற்று குடும்பம் நடத்துதலும், வருமானங்கள் இல்லாமலும் இருப்பார்கள். திருட்டுபோகுதலும், வியாதிகளும், சண்டை சச்சரவுகளும், அவமானங்களும் இராஜதண்டனையும் நேரிடும்.

லக்னத்துக்கு ஆறுவது வீட்டுக்குடைய கிரஹம், லக்னத்துக்கு ஒன்பதாவது வீட்டிலிருந்தால் பித்ரு பாக்ய சொத்துக்கள் விரயமாகும். வியாஜ்யங்களால் அழியும். பிறர் ஏமாற்றிவிடுவார்கள். நம்பிக்கை துரோகம் ஏற்படும். மனதில் நீதி நேர்மைகள் குறைந்து, பாப காரியங்களில் ஈடுபடுவார்கள். பெரியவர்களிடையேயும், சுற்றத்தாரிடமும் விரோதங்கள் ஏற்படும். இகழ்ச்சி ஏற்படும்.



லக்னத்துக்கு ஆறுக்குடைய கிரஹம் லக்னத்துக்குப் பத்தாவது வீட்டில் அமர்ந்திருந்தால், அவன் சம்பாதிக்கும் வழியானது, திருட்டுத்தனமாகவும், மோசம் செய்வதாகவும் இருக்கும். பிறர் பொருளையே நம்பி இருப்பான். வம்பு பேசியும், ஊர் சுற்றியும் குடும்பம் நடத்துவான். மற்றவர்களினால இகழ்ச்சியே இருக்கும். சோம்பேறி என்றும், அயோக்யன் என்றும் பெயர் எடுப்பான். வாழ்க்கை சுக்ங்களுடன் இருக்காது. மனதில் பயமும், ராஜ. தண்டனை, சிறைவாசம், மக்களின் அதிருப்தி இவைகளுடன் இருப்பான். பாபபலமானால் மேற்படி பயனுண்டாம். சுபபலமானால் சகல பிரச்னைகளில் வெற்றி, லாபம் அடைவான்.

லக்னத்துக்கு ஆறுவது வீட்டுக்குடைய கிரஹம், லக்னத்துக்கு 11வது வீடாகிய லாபஸ்தானத்தில் அமர்ந்தால், பெரிய லாபங்கள் என்று வராது. மூத்த சகோதரன் அல்லது சகோதரி, வியாதிகளுடன் இருப்பார்கள். கடன்கள் அதிகமாகி, கஷ்டங்கள் இருந்துவரும். பாபலமானால், பாபவிருத்தியினால் லாபமுண்டாகும்.

லக்னத்துக்கு ஆறுவது வீட்டுக்குடைய கிரஹம், லக்னத்துக்கு பன்னிரண்டாவது வீடாகிய விரயஸ்தானத்தில் அமர்ந்திருந்தால், சத்ருக்கவால், விரோதிகளால் இடமாற்றம் அடிக்கடி நேரும். அகால போஜனமும், நித்திரைக்குறைவும், சயன சுகக் குறைவு அலைச்சல்களும் அதிகமாகும். அனாவச்யமான செலவுகளும், வியாதிகளும், ஆண்குறியில் நோயும் ஏற்படும்.

---

## 7. ஏழாவது பாவாதிபதி பலபாலன்கள்

### (களத்திரபாவம்)

ஜாதகத்தில் லக்னத்துக்கு ஏழாவது வீட்டின் கிரஹ குணங்களைக் கொண்டு மனைவியின் ரூபலாவண்யங்களையும், சொத்துக்கள் சேர்க்கை, விவாஹப் பொருத்தங்கள், ஆசை, வசியம், பரஸ்திரீகமனம், மாரகம் முதலியவைகளைக் கூறலாம்.

ஜாதகத்தில் லக்னத்துக்கு 7க்குடைய கிரஹம், லக்னத்திலேயே சுபபலமாய் இருந்தால், அவன் கவர்ச்சியைக் கொண்டவனாகவும் அவனிடம் ஸ்திரீகள் அன்பு வைத்து பழகுதல், பேசுதல்,



https://www.facebook.com/ebooksintamil/
Hariram Thejus
www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

புணருதல் ஆகிய யோக பாக்யங்களுடன் இருப்பான். பாப காரியமென்பதை அறியாது காம விரகதாபங்களைக் கொண்டவனாய், ஸ்திரீகளிடம் பழகுவான். தனது தொழிலையோ, ஜீவனத்தையோ சரியாக சிரத்தையுடன் செய்யமாட்டான். கலைகளில் ஊக்கமிருக்கும். இவர்களுக்கு மனைவியின் மூலம் லாபங்கள் ஏற்படும்.

லக்னத்துக்கு ஏழாவது வீட்டுக்குடைய கிரஹம், லக்னத்துக்கு இரண்டாவது வீடாகிய தன ஸ்தானத்தில் இருந்தால், மனைவியின் மூலம் சொத்துக்களும், சம்பாத்யமும் ஏற்படும். மனைவியின் வழியாலும் உறவினர்களாலும் இவன் லாபங்களைப் பெறுவான்.

லக்னத்துக்கு ஏழாவது வீட்டுக்குடைய கிரஹம், லக்னத்துக்கு மூன்றாவது வீட்டில் இருந்தால் களத்திரதோஷம் (மனைவிக்கு மாரகம்) ஏற்பட்டு, மறு விவாகம் செய்துகொள்ளவும் அதிகாரமுண்டு. தவிர ஏழுக்குடைய கிரஹம் மூன்றில் இருந்தால், அதிகமாக காமமோ, பற்றுதல்களோ இருக்காது.

சுபகிரகம் சேர்க்கையாலோ, பார்வையாலோ, இதற்கு விதிவிலக்கு உண்டு. மேலும் குரு பார்வை ஏழாமதிபதிக்கு இருந்து, ஏழாமதிபதி எந்த ஸ்தானத்தில் இருந்தாலும் களத்திர தோஷ பரிஹாரமாகும்.

லக்னத்துக்கு ஏழாவது வீட்டுக்குடைய கிரஹம், லக்னத்துக்கு நான்கில் அமர்ந்திருந்தால் எதிர்பார்க்கும் இன்பத்தை அடைவான். குடும்பத்தை நடத்தும் பொறுப்பையும், யோக்கியதாம்சங்களையும் அவனுக்கு வரும் மனைவி பெற்றிருப்பாள். குடும்பம் கௌரவமான வாழ்க்கைப் பாதையில் செல்லும்.

லக்னத்துக்கு ஏழுக்குடைய கிரஹம், லக்னத்துக்கு ஐந்தாவது வீட்டில் இருந்தால், அவன் களத்திர தோஷத்தை பெற்றவனாகிறான். கலைகளில் பிரியம் இருக்கும். 5குடையவன் வலுத்தால் களத்திர தோஷம் நிவர்த்தியாம்.

லக்னத்துக்கு ஏழுக்குடைய கிரஹம், லக்னத்துக்கு 6வது வீட்டிலிருந்தால், மனைவி ரோகங்கள் வியாதிகளைக் கொண்டவளாக இருப்பாள், கணவனுக்கு எதிராக கலகங்கள், விரோதங்கள் மனஸ்தாபங்களை வியாச்சியம் உண்டாக்குவாள். மனைவியினால் ஆதரவு அல்லது இன்பம் இருக்காது.

லக்னத்துக்கு ஏழுக்குடைய கிரஹம், லக்னத்துக்கு ஏழாவது வீட்டில் அமர்ந்திருந்தால், ஜாதகன் தன் மனைவியின் வீட்டில் அடிமையாக இருப்பான். மனைவியின் செல்வாக்கு அதிகமாக இருக்கும். ஏழுக்குடைய கிரஹம் சுபகிரஹமானால் ஜாதகன் கௌரவங்களுடன் வாழ்க்கை வசதிகளுடன் இருப்பான். ஏழுக்குடைய கிரஹம், நீசனாகவோ, பாவியாகவோ, பகையாகவோ



Hariram Thejus

இருந்தால், அந்த கிரஹத்தின் குணத்துக்குத் தகுந்தபடி மனைவியும் புருஷனும் ஒற்றுமையில்லாமல் சுகவீனர்களாயிருப்பார்கள்.

லக்னத்துக்கு ஏழுக்குடைய கிரஹம், லக்னத்திலிருந்து எட்டாவது வீட்டில் இருந்தால் அவனுக்கு வரும் மனைவியினால் அவன் கஷ்டங்களையோ வறுமையையோ அனுபவிப்பான். குடும்பத்தை ஒழுங்காக நடத்தும் பொறுப்பு அற்றவளாகவும், வீணான ஆசை கொண்டவளாகவும், வருமானக் குறைவுடனும் இருப்பாள். மானத்தைவிட்டு அவமானத்தை அடையும்படியும் இருக்கும். மரண ஹானியும் உண்டாம்.

லக்னத்துக்கு ஏழாவது வீட்டுக்குடைய கிரஹம், ஒன்பதாம் வீட்டிலிருந்தால், பெரியவர்களின் அனுக்ரஹத்தினாலும், பூர்வ ஜென்ம விசேஷங்களினாலும் (புண்ணியங்கள்) சிறு வயதிலேயே திருமணம் நடைபெறும். மனைவியினால் சொத்துக்களும், ஆடை ஆபரணங்களும் இவர்கள் பெறுவார்கள். குடும்பம் ஒற்றுமையுடனும், கௌரவத்துடனும் சிறப்புடன் விளங்கும். இவைகளுக்கெல்லாம் 9குடையவன் வலுப்பெற்றும், சுபபலமாயுமிருக்க வேண்டும்.

லக்னத்துக்கு ஏழுக்குடைய கிரஹம், லக்னத்திலிருந்து பத்தாவது வீட்டில் இருந்தால், வரும் மனைவியினால் ஜீவன பலம் அதிகமாகும். சொத்துக்களும், ஆபரணங்களும் சேரும். இளம் வயதிலேயே இவர்களுடைய திருமணம் நடைபெறும். குடும்பத்தை ஏற்று நடத்தும் பொறுப்பையும் பெற்றிருப்பாள். ஆயினும் சிலருக்கு (களத்திர) மனைவியின் தோஷம் ஏற்படும். சுப கிரஹ பார்வை பெற்றிருந்தால் எல்வித கஷ்டங்களின்றி சந்தோஷ சுகங்களுடன் இருப்பார்கள்.

லக்னத்துக்கு ஏழாவது வீட்டுக்குடைய கிரஹம் லக்னத்திலிருந்து பதினோராவது வீட்டில் லாப ஸ்தானத்தில் அமர்ந்திருந்தால், நல்ல செல்வத்துடனும், சொத்துக்களுடனும் மனைவி வருவாள். மனைவியினால் கணவனின் அந்தஸ்து உயரும். புத்திர பாக்யங்களும் ஏற்படும். சந்தோஷ வாழ்க்கையுடன் இருப்பார்கள்.

லக்னத்துக்கு ஏழாவது வீட்டுக்குடைய கிரஹம் லக்னத்திலிருந்து பன்னிரெண்டாம் வீட்டில் அமர்ந்தால், மனைவியினால் அதிகமான தனச்சேதங்கள் ஏற்படும். மனைவி இன்ப வாழ்க்கையை அனுபவிக்க ஆசைப்படுவாள். கடன்கள் வாங்கியும், சொத்துக்களை விற்றும் குடும்பத்தை நடத்த வேண்டி இருக்கும். குடும்பத்தில் ஒற்றுமை குறைவாக இருக்கும். ஆயினும் போஜன சுகமும், சயன சுகமும் இருக்கும்.

12குடையோன் சுபயோக பலன் பெற்றால் — யாதொரு தொழிலுமின்றி மனைவி இன்பத்துடன் சுகவாசியாக இருப்பாள்.



https://www.facebook.com/ebooksintamil/

www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

## 8. எட்டாவது பாவாதிபதி பலாபலன்கள்

ஜாதகத்தில் லக்னத்திற்கு எட்டாவது வீட்டிற்குடைய கிரஹத்தின் பலாபலனைக் கொண்டு ஆயுளை நிர்ணயிக்க வேண்டும். மொத்தத்தில் எட்டாவது வீட்டிற்குடைய கிரஹம் கஷ்டமான பலன்களையே கொடுப்பான். மரணம், கீழே விழுந்து அடிபடுதல், சிரம வாழ்க்கை, அவமானம், வறுமை, அவதூறு, ஆயுதங்களினுல் ஆபத்தை அடைதல், மனம் அமைதி இல்லாமை, ஜெயில், தண்டனை ஆகியவைகளை லக்னத்துக்கு அஷ்டமாதிபதி அல்லது எட்டுக்குடையவன் கொடுப்பான்.

லக்னத்துக்கு, எட்டிற்குடைய கிரஹம், லக்னத்திலேயே இருந்தால், வியாதி, கடன், வறுமைகளுடன் இருப்பார்கள். சுப கிரஹங்கள் பார்வை, சேர்க்கை இருந்தால் தீர்க்க ஆயுள் உண்டு. சிரமம் குறைந்த வாழ்கையுடனும், சொற்ப கவலைகளுடனும் இவர்கள் வாழ்கையை நடத்துவார்கள் — பாவி, மாரகர் சம்பந்தம், திருஷ்டி பெற்ருல் தீர்க்கமான வறுமை, வியாதி, மரணவிபத்து உண்டாம்.

லக்னத்துக்கு, எட்டுக்குடைய கிரஹம் லக்னத்துக்கு இரண்டில் இருந்தால், வாக்கில் நாணயம் இருக்காது. துர்வார்த்தை, நிந்தனை பிரயோகிப்பார்கள். குடும்பம் சுபிட்சமாகவும் சந்தோஷமாகவும் விளங்காது. செல்வத்தை ஸ்திர நோக்கமில்லாமல் செலவிடுவார்கள். கல்வியில் ஊக்கம் இருக்காது. உடல் பலம் குறைந்து, பித்தன் போன்ற வாழ்கையை நடத்துவார்கள்.

லக்னத்துக்கு எட்டுக்குடைய கிரஹம் லக்னத்துக்கு மூன்றில் இருந்தால், சகோதரர்கள் ஒற்றுமை இருக்காது. தைரியம் குறைந்து, மனதில் ஒருவித பயம் இருந்து கொண்டே இருக்கும். பெரியவர்களால் சேர்த்துவைக்கப்பட்ட சொத்துக்கள் பலவிதங்களில் நாசமாகும்.

லக்னத்துக்கு எட்டுக்குடைய கிரஹம் லக்னத்துக்கு நான்கில் இருந்தால், தாயாரும், தாய்வழி மாமன் முதலானவர்களின் ஆதரவு இருக்காது. குடும்பத்தில் சதா சச்சரவுகள் தோன்றும். சிரமமாக குடும்பத்தை நடத்தும்படி இருக்கும். பிதுரார்ஜித சொத்துக்களும், சம்பாதிக்கும் பொருளும், நஷ்டமாகும். கட்டிடமாக இருந்தால், விழுந்து நாசமாகும். வண்டி வாகனங்களாக இருந்தால் எதிர்பாராத விதத்தில் சிக்கி நஷ்டங்களும், சுக ஹீனமும் ஏற்படும். சுபக்கிரஹ பார்வை பெற்றிருந்தால் மேலே சொன்ன கஷ்ட பலன்கள் குறைந்து இருக்கும்.

லக்னத்துக்கு எட்டுக்குடைய கிரஹம், லக்னத்துக்கு ஐந்தாவது வீட்டில் இருந்தால், புத்திரர்களால் மன அமைதி இல்லாமலும், சதா சஞ்சலமும், கலகங்களும், உடல் நோய் உபாதைகளும் இருந்துவரும். பந்துமித்ரர்களுடன் விரோதங்கள் இருக்கும். அலைச்சல் அதிகமாகும். ஸ்திரமான எண்ணத்துடன் எக்காரியத்திலும் பிரவேசிக்க முடியாது.



https://www.facebook.com/ebooksintamil/

லக்னத்துக்கு எட்டாவது வீட்டுக்குடைய கிரஹம் லக்னத்துக்கு ஆருவது வீட்டில் இருந்தால், திரேகம் மெலிந்து, கெட்ட எண்ணங்களைக் கொண்டவனுகவும், தந்திரவானுகவும், பகைவர்களை வெல்லக்கூடிய சக்திகளைப் பெற்றவனுகவும் இருப்பார்கள். திரேக வலிமையற்று கீழ்த்தனம் மேலிட்டவர்களாகவும், புத்திர சந்தான பாக்யமில்லாது, ஸ்வீகாரம், தத்து போன்று மாற்ருர் பிள்ளைகளை வளர்த்துக் கொண்டும், அற்ப ஆயுளுடனும் இருப்பார்கள்.

லக்னத்துக்கு எட்டுக்குடைய கிரஹம், லக்னத்துக்கு ஏழாவது வீட்டிலிருந்தால், மனைவியை அன்புடன் வைத்துக்கொள்ளாமலும், மனைவி அற்ப ஆயுளைக் கொண்டவளாகவும், ஸ்திரீயினுல் கலகம், அவமானம், வறுமை முதலியன ஏற்படும். இகழ்ச்சியுடன் காலம் கழிப்பான். ஆயுள் தீர்க்கம் உண்டு.

லக்னத்துக்கு எட்டுக்குடைய கிரஹம், லக்னத்துக்கு எட்டில் ஆக்ஷியாக அமர்ந்திருந்தால், சஞ்சலத்துடனேயே வாழ்க்கையை நடத்துவான். நன்மை தீமைகள் அறியாது, லாப நஷ்டங்களை அறியாது, எண்ணின மாத்திரத்தில் எதையும் செய்துவிட்டு, அவமானத்தையும் அலைச்சல், முதலியவைகளையும் அடைவான். பிறர் சொன்னுலும் கேட்கமாட்டான். ஆயுள் தீர்க்கம் உண்டு.

லக்னத்துக்கு எட்டுக்குடைய கிரஹம் லக்னத்துக்கு ஒன்பதில் இருந்தால், பிதுர்பாக்ய சொத்துக்கள் நாசமாகும். புத்திரர்களால் கடன் ஏற்படும். பந்துமித்ரர்களுடனும், நண்பர்களுடனும் விரோதத்துடனும், அபிப்பிராயபேதத்துடனும் நடப்பார்கள்.

லக்னத்துக்கு எட்டுக்குடைய கிரஹம் லக்னத்துக்கு பத்தில் இருந்தால், செய்யும் தொழிலில் ஸ்திரமாக ஊன்றி வேலையில் இருக்கமாட்டார்கள். அடிக்கடி வேலையில் மாறிக் கொண்டிருப்பார்கள். பெரிய மனிதர்களிடமும், அரசாங்கத்திலும், கெட்ட பெயருடன் இருப்பார்கள். சுபக் கிரஹ சம்பந்தம் பெற்றிருந்தால் வாழ்கை பிரகாசத்துடன் விளங்கும். தீர்க்க ஆயுளுடன் இருப்பான். ஜீவனத்தைச் சமாளித்து நடத்துவார்கள்.

லக்னத்துக்கு எட்டுக்குடைய கிரஹம் லக்னத்துக்கு 11-ல் இருந்தால், மூத்த சகோதர சகோதரிகளுக்கு கண்டமும், ஆயுள் அற்பமாயும் இருக்கும். புத்திரர்களால் லாப மேற்படும். நேர்முகமான வழியில்லாது, பலவித வழிகளிலிருந்தும் லாபத்தை பெற முயலுவார்கள்.



Hariram Thejus
www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

லக்னத்துக்கு எட்டுக்குடையவன் லக்னத்துக்கு 12ல் இருந்தால், புத்திர ஹானி தோஷம் உண்டு. ஊர் சுற்றும் குணமும், எப்பொழுதும் மன அமைதி இல்லாமலும், தகாத வழிகளில் செல்வத்தை இழந்து சுகபோகங்களை அனுபவித்தும் வாழ்க்கையைக் கழிப்பார்கள்.

---

## 9. ஒன்பதாவது பாவாதிபதி பலாபலன்கள்

### (பாக்யஸ்தானம்)

ஜாதகத்தில் லக்னத்துக்கு ஒன்பதாவது வீட்டின் கிரஹ குணத்தைக் கொண்டு, பிதுருக்கள், தகப்பனுர், பாக்கியம் ஆராய்ந்து கூறவேண்டும். பாக்யஸ்தானம் என்றும், பிதா, குரு, உபதேசம், தானதருமங்கள், பால் பாக்யம், பூமிகள், வீடு, யோகாப்யாசம் முதலியவைகளை லக்னத்துக்கு ஒன்பதாவது வீட்டுக்குடைய கிரஹம் கொடுப்பார்.

ஜாதகத்தில் லக்னத்துக்கு ஒன்பதாவது வீட்டுக்குடைய கிரஹம், லக்னத்திலே இருந்தால், பெரியவர்களிடமும், பிதா, குரு, தெய்வம், ஆகியவர்களிடம் பக்தி விசுவாசத்தைக் கொண்டவர்களாக இருப்பார்கள். பிதுர் சொத்துக்கள் கிடைக்கும். தான தருமங்களைச் செய்பவனுகவும், சாஸ்திர ஆராய்ச்சியில் பற்றுதல் உள்ளவனுகவும், தெய்வீக வழிபாடுகளை போதிப்பவனுமாகவும், வீடு, பூமி, வண்டி, வாகனம், பரிசாரகஜனங்கள், ச(ழ)கத்தில் பெரிய பதவிகளுடனும், சந்தோஷ சௌகர்யங்களுடனும், புத்திர விருத்திகளுடனும் வாழ்வான்.

லக்னத்துக்கு ஒன்பதாவது வீட்டுக்குடைய கிரஹம், லக்னத்துக்கு இரண்டில் இருந்தால் செல்வம், செல்வாக்குடனும், பிதுராஜ்ஜித சொத்துக்களைப் பெற்றவனுகவும், குடும்பம் உயர்நிலையிலும் இருப்பா.ர்.

லக்னத்துகசு ஒன்பதாவது வீட்டுக்குடைய கிரஹம், லக்னத்துக்கு மூன்றில் இருந்தால், பிதுர்தோஷத்தைப் பெற்றவனுகவும், பிதுர் சொத்துக்களை இழந்தவனுகவும், இளைய சகோதர, சகோதரிகளால் ஆதரவைப் பெற்றவனுமாகவும் இருப்பார்கள்.

லக்னத்துக்கு ஒன்பதாம் வீட்டுக்குடைய கிரஹம், லக்னத்துக்கு நான்கில் இருந்தால், தகப்பனுர் ஆதரவுடன், தாயின் ஆதரவு, மாமன் ஆதரவைப் பெற்றவர்களாகவும் இருப்பார்கள். பூமி, வீடு, வண்டி, வாகனம், பணி ஆட்கள், உறவினர்களின் ஆதரவு முதலிய செல்வாக்குடன் இருப்பார்கள்.

லக்னத்துக்கு ஒன்பதாவது வீட்டுக்குடையவன், லக்னத்துக்கு ஐந்தில் இருந்தால், புத்திரர்களால் பிரபல யோகத்துடன் விளங்கு



வார்கள். பித்ருக்களின் சொத்துக்கள் இருக்கும். அரசாங்கத்தில் பெரிய பதவிகளில் சிறந்து விளங்குவார்கள். பூமி, வீடு போன்ற சொத்துக்களுடனும், வண்டி வாகனங்களுடனும், பணி ஆட்களுடனும், செல்வாக்குடனும் விளங்குவார்கள். தெய்வீக வழிபாடுகள் நிறைந்து குடும்பம் பிரகாசத்துடன் இருக்கும்.

லக்னத்துக்கு ஒன்பதாவது வீட்டுக்குடைய கிரஹம், லக்னத்துக்கு ஆறுவது வீட்டில் இருந்தால் பிதுராஜ்ஜித சொத்துக்கள் கடன்களினுல் இழக்க நேரிடும். புத்திர தோஷம் ஏற்படும். வியாதி, பீடைகளுடன் இருப்பார்கள்.

லக்னத்துக்கு ஒன்பதாம் வீட்டுக்குடைய கிரஹம், லக்னத்துக்கு ஏழாவது வீட்டிலிருந்தால் குடும்பத்திற்கு அடக்கமும், லக்ஷ்மீகரமும் பொருந்திய மனைவி வருவாள். புத்திர சந்தானங்களால் சௌகர்யங்கள் நிறைந்து விளங்கும். பிதாவின் சொத்துக்களால் பலனைப் பெறுவார்கள்.

லக்னத்துக்கு ஒன்பதாம் வீட்டுக்குடைய கிரஹம், லக்னத்துக்கு எட்டாவது வீட்டில் அமர்ந்திருந்தால், தகப்பனுருடைய சொத்துக்களை மற்றவர்கள் அபகரித்துக் கொள்வார்கள். புத்திர தோஷம் ஏற்படும். பிதாவின் உடல்நிலை சரியிருக்காது. சில சமயம் அங்கஹீனமும் ஏற்படலாம்.

லக்னத்துக்கு ஒ(ன்)பதாம் வீட்டுக்குடைய கிரஹம், லக்னத்துக்கு ஒன்பதாவது வீட்டில், ஆக்ஷியாக இருந்தால், தகப்பனுர் தீர்க்க ஆயுளுடன் கூடினவராகவும், தான தருமங்களும், தெய்வீக வழிபாடுகளும் குடும்பத்தில் நிறைந்து விளங்கும். புத்திரர்களால் புகழும், லாபங்களும் உண்டாகும். தகப்பனுருடைய சொத்துக்கள் ஸ்திரமாக கிடைக்கும். சமூகத்தில் சிறப்புடன் குடும்பம் உன்னத நிலையில் இருக்கும். பணி ஆட்களும், பந்து மித்ரர்களும், அறிவாளிகளும், ஆதரவுடன் இருப்பார்கள்.

லக்னத்துக்கு ஒன்பதாவது வீட்டுக்குடைய கிரஹம், லக்னத்துக்கு 10ல் இருந்தால் செல்வாக்குள்ள குடும்பமாகவும், அரசாங்கத்தில் உயர் பதவியில் இருப்பார்கள், தகப்பனுருடைய சொத்துக்கள் சிறந்த முறையில் விருத்தியாகும். பெரியவர்களிடத்திலும், தெய்வீக வழிபாட்டிலும், தான தருமங்களைச் செய்பவராகவும் சிறந்து விளங்குவார்கள். வீடு, நிலபுலன்கள், பணி ஆட்கள், பந்துக்கள், பெரிய மனிதர்களின் நட்பு முதலியன இருக்கும்.

லக்னத்துக்கு ஒன்பதாவது வீட்டுக்குடையவன், லக்னத்துக்கு 11-ல் இருந்தால், தகப்பனுர் செல்வாக்கில் இருந்தாலும், நாளடைவில் தாழ்மையை அடைவார். தகப்பனுர் சொத்துக்கள் நிற்காது. குடும்பம், சகல சௌகர்யங்களுடன் சிறந்து விளங்கும். தெய்வீக வழிபாடுகள் நிறைந்து விளங்கும்.



https://www.facebook.com/ebooksintamil/

Hariram Thejus

www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

லக்னத்துக்கு ஒன்பதாம் வீட்டுக்குடைய கிரஹம், லக்னத்துக்கு 12வது வீட்டில் இருந்தால், தகப்பனுருடைய சொத்துக்கள் நிலைக்காது. வியாஜ்யம், வழக்குகளிலும், அனுவசியமாகவும் இழக்க நேரிடும். இன்ப சுகங்களுக்காக, தன விரயம் ஏற்பட்டு, அதனுல் சிற்றின்பங்களை அனுபவிப்பார்கள்.

---

## 10. பத்தாவது பாவாதிபதி பலாபலன்கள்

ஜாதகத்தில் லக்னத்துக்குப் பத்தாவது வீடு, ஜீவனஸ்தானம், ராஜ்யஸ்தானம், கர்மஸ்தானம் என்று கூறப்படும். அவ்வீட்டுக்குடைய கிரஹத்துக்கு ஜீவனஸ்தானுதிபதி, ராஜ்யாதிபதி என்று பெயர். அக் கிரஹம் வலிமை பெற்றதாக இருந்தால் பிரசித்திகளையும், யோக போக வாழ்க்கைகளையும் கொடுக்கும். அரசாங்கத்தில் பெரிய அங்கம் வகிப்பது, சொத்துக்களுடன் கூடி இருப்பது, வெளிநாடு செல்லுவது. தான தருமம் போன்ற புண்ணிய கருமங்களைச் செய்வது, ஆடை ஆபரணங்கள், நகைகள் முதலியன அணிவது, வண்டி வாகனத்துடன், அதிகாரத்திலும் செல்வத்திலும், செல்வாக்கிலும் உயர்ந்து விளங்குவார்கள்.

லக்னத்துக்குப் பத்தாவது வீட்டுக்குடைய கிரஹம், லக்னத்திலேயே இருந்தால், சொத்துக்கள், செல்வம், அதிகாரம், செல்வாக்கு, சுக சௌகர்யங்கள், கல்வி, ஞானம், தான தருமம், தெய்வீக வழிபாடுகள், அரசாங்கத்தில் உயர்பதவி, கௌரவம், நல்ல வருமானம் முதலியவைகளுடன் இருப்பார்கள். நற்பெயரும், பந்து மித்ர, நண்பர்கள், அறிவாளிகள் முதலானவர்கள் நட்புடன் இருப்பார்கள்.

லக்னத்துக்கு பத்தாவது வீட்டுக்குடைய கிரஹம், லக்னத்துக்கு இரண்டில் இருந்தால், நல்ல தேஜஸ்ஸு‥ன், அழகுகளுடன், வாக்குவன்மை, திறம்பட பேசும் சக்தி, தை‥யம், தனவானுகவும், செல்வந்தனுகவும், செல்வாக்குடனும், நாகரீக குணங்களுடனும் பிரபல சிநேகங்களுடன் இருப்பார்கள். சொத்துக்கள் வண்டி, வாகனங்கள் அமைந்திருக்கும்.

லக்னத்துக்கு பத்தாவது வீட்டுக்குடைய கிரஹம், லக்னத்துக்கு மூன்றில் இருந்தால், சகோதரர்கள் இருந்தாலும், புகழுடன் இருக்கமாட்டார்கள். சகோதர தோஷம் உண்டு.

லக்னத்துக்கு 10வது வீட்டுக்குடைய கிரஹம், லக்னத்துக்கு நான்கில் இருந்தால், பெரிதான மதிப்புள்ள வீடு, நிலபுலன்கள், அழகான குடும்பம், வண்டி வாகனங்கள், பணி ஆட்கள், செல்வம், செல்வாக்கு, பாக்யம் தாய், தாய்வழி ஆதரவு முதலியவை உண்டாகும். நான்காவது வீட்டில் லாபாபதியான 11வது வீட்டுக்குடையவனும் 10வது வீட்டுக்குடையவனுடன் சேர்ந்து இருந்தால்



https://www.facebook.com/ebooksintamil/

பூமியிலிருந்து பொன்சுரங்கம் போன்றும், புதையல் முதலியவற்றையும் பெறுவான்.

லக்னத்துக்கு பத்தாவது வீட்டுக்குடைய கிரஹம், லக்னத்துக்கு 5-ல் இருந்தால், புத்திரவிருத்தியும், பிரபல சந்தோஷ செல்வாக்குடன் கூடின குடும்பத்துடன், பெரிய மனித நட்பையும் பெற்று, கௌரவமான வாழ்க்கையுடன் விளங்குவான். அரசாங்கத்தில் உயர்பதவிகளுடனும், தெய்வீக வழிபாடுகள், சாஸ்திரங்களைக் கற்றறிந்தும், பிரபல யோகங்களுடன் விளங்குவான்.

லக்னத்துக்கு 10வது வீட்டுக்குடையவன் லக்னத்துக்கு 6வது வீட்டிலிருந்தால், தந்திர புத்தியுடையவனுகவும், பிறர் பொருளை அபகரிக்கும் குணம் கொண்டவனுயும், திடதிரேகம், தேஜஸ், அந்தஸ்து இவை இல்லாதவனுகவும் இருப்பான்.

லக்னத்துக்கு 10வது வீட்டிற்குடைய கிரஹம், லக்னத்துக்கு 7வது வீட்டில் இருந்தால், களத்திர தோஷம் ஏற்படும். மனைவி ஒற்றுமையுடன் இருக்கமாட்டாள். கணவனின் பேச்சுக்கு மீறியும், தகாதவழிகளில் கேவலமாக இருப்பாள். 2,3 களத்திரங்கள் உண்டு என்னலாம். மனைவிமூலம் பொருள் சேரும்.

லக்னத்துக்கு 10வது வீட்டுக்குடைய கிரஹம், லக்னத்துக்கு 8-ல் இருந்தால், நீண்ட ஆயுளுடன் இருப்பார்கள். புத்திர தோஷம் ஏற்படும். மனைவியுடன் திருப்தியான சந்தோஷங்களில் ஈடுபடமுடியாது. ஸ்வீகாரம் தத்து, அபிமானம் போன்ற பிள்ளைகள் இவர்களுக்கு வருவாாகள்.

லக்னத்துக்கு 10வது வீட்டுக்குடைய கிரஹம், லக்னத்துக்கு 9-ல் அமர்ந்திருந்தால், தகப்பனுரின் சொத்துக்கள் விரயம் ஆகும். புந்திரவிருத்தி இருக்காது. சிரம வாழ்க்கைகளை அனுபவிக்கும்படி இருக்கும். தெய்வீக வழிபாடுகள் நிறைந்து விளங்குவார்கள். அரசாங்க ஆதரவையும், பெரிய மனிதர்களின் நன்மதிப்பையும் பெறுவார்கள். தானதருமங்களிலும், சத்திய வழிகளிலும் நடப்பார்கள். பிற்கால வாழ்க்கை சிறப்புடன் அமையும்.

லக்னத்துக்கு 10வது வீட்டுக்குடையவன், லக்னத்துக்கு 10-ல் ஆக்ஷி பெற்றிருந்தால், உலக விஷயங்கள் அனைத்தையும் அறிந்தவனுக இருப்பான். பெரிய மனிதர்களின் ஆதரவு இருக்கும். உறவினர்களின் ஆதரவு இருக்கும். ஜீவனபலம் பெரிதானதாக அமையாது. சமபலனுக அமையும். தெய்வீக வழிபாடுகளில் பற்றுதல் இருக்கும். தானதருமம், புண்ணிய காரியங்களைச் செய்து, கீர்த்தி பெறுவார்கள்.

லக்னத்துக்கு 10வது வீட்டுக்குடைய கிரஹம், லக்னத்துக்கு 11வது வீட்டில் அமர்ந்திருந்தால், செய்யும் காரியங்கள் ஒவ்



Hariram Thejus

www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

லொன்றிலும் பிரமாதமான லாபத்தைப் பெறுவார்கள். ஆனால் மூத்த சகோதர சகோதரிகள் சிரமபலனை அனுபவிப்பார்கள். மாரகமும் ஏற்படலாம்.

லக்னத்துக்கு 10வது வீட்டுக்குடைய கிரஹம், லக்னத்துக்கு 12வது வீட்டில் இருந்தால், அனாவசியமான செலவுகளும், பொருள்கள் நஷ்டமும், கஷ்டமும் ஏற்படும். போஜன சுகமும், சயன சுகமும் இருக்கும். புத்திரர்களால் கஷ்டங்களும், நஷ்டங்களும் உண்டு. சொத்துக்கள் அழியும்.

---

## 11. பதினோராவது பாவாதிபதி பலாபலன்கள்

### (ஏகாதச பாவம்)

ஜாதகத்தில் 11வது வீட்டிற்குடைய கிரஹம் லாபங்களையும், வாக்கு வன்மைகளையும், மூத்த சகோதர, சகோதரிகளுடைய பலத்தையும் குறிக்கும்.

லக்னத்துக்கு 11வது வீட்டுக்குடைய கிரஹம் லக்னத்திலேயே இருந்தால், பெரிய படிப்பாளியாகவும், வாக்கு வன்மைகளைப் பெற்றும், சாதுர்யமாகப் பேசும் குணத்தையும் பெற்றிருப்பான். எந்தத் தொழிலில் ஈடுபட்டாலும் நல்ல லாபங்களைப் பெறுவான். குடும்பம் செல்வத்துடனும் செல்வாக்குடனும் விளங்கும். மூத்த சகோதரர்கள் நல்ல சுக சௌகர்யங்களுடன் இருப்பார்கள்.

லக்னத்துக்கு 11வது வீட்டுக்குடைய கிரஹம் லக்னத்துக்கு இரண்டில் இருந்தால், சட்டங்கள் பயின்ற வழிக்கறிஞனைப் போலும், நல்ல தேஜஸ், நல்ல வருமானம், லாபங்கள், கௌரவங்கள், செல்வாக்கு, அதிகாரம் முதலியன ஏற்படும்.

லக்னத்துக்கு 11வது வீட்டுக்குடைய கிரஹம், லக்னத்துக்கு 3-ல் அமர்ந்திருந்தால், மூத்த சகோதர, சகோதரிகள் நல்ல அந்தஸ்துடன் இருப்பார்கள். சகோதரர்களின் ஆதரவுடன் வர்கள் இருப்பார்கள்.

லக்னத்துக்கு 11வது வீட்டுக்குடைய கிரஹம் லக்னத்துக்கு 4ல் அமர்ந்திருந்தால், குடும்பம் பூரணபலத்துடன் விளங்கும். பணி ஆட்களுடனும், செல்வாக்குடனும் விளங்குவார்கள். தெய்வீக வழிபாடுகளும், நேர்வழிகளிலும் செல்பவர்களாகவும் இருப்பார்கள். தாய், தாய்வழி ஆதரவைப் பெற்றிருப்பார்கள். லாபங்கள் ஏற்படும். பூமி, கட்டிடங்கள், வண்டி, வாகனங்கள் இருக்கும். சந்தோஷங்களுடன் குடும்பம் விளங்கும்.



https://www.facebook.com/ebooksintamil/

லக்னத்துக்கு 11வது வீட்டுக்குடைய கிரஹம் லக்னத்துக்கு 5ல் இருந்தால், புத்திரர்களால் பெரிய புகழுடன் குடும்பம் விளங்கும். தகப்பனார் செய்யும் தொழிலைப் பிள்ளைகளும் செய்து, பிரபல செல்வந்தர்களாக விளங்குவார்கள். பெரிய மனிதர்கள் நட்பும், அரசாங்க ஆதரவு, அந்தஸ்து முதலியன ஏற்படும். செல்வாக்குடன் குடும்பம் விளங்கும்.

லக்னத்துக்கு 11வது வீட்டுக்குடைய கிரஹம் லக்னத்துக்கு 6வது வீட்டில் இருந்தால், வரும் லாபங்களெல்லாம், கடன்காரர்களுக்குக் கொடுக்கும்படி நேரிடும். செய்தொழிலில் சத்ருக்கள், வஞ்சகர்கள் இருப்பார்கள். கடன் அதிகமாகும். சஞ்சலம் நிறைந்திருப்பார்கள்.

லக்னத்துக்கு 11வது வீட்டுக்குடைய கிரஹம் லக்னத்துக்கு 7-ல் அமர்ந்திருந்தால், மனைவியின் மூலம் அதிர்ஷ்ட பாக்யங்களை அடைவார்கள். திருமணம் ஆனநாள் முதல் பிரபல யோகங்களுடன், செல்வம், செல்வாக்குடன் விளங்குவார்கள். லாபங்கள் பெருகும். புத்திரர்களால் மேலும் குடும்பம் பிரகாசங்களுடன் அமையும். ஸ்திர சொத்துக்களும், பால் பாக்யம், வண்டி வாகனங்கள் சேரும். அரசாங்கத்திலும், பொதுப்பணியிலும், தெய்வீக வழிபாடுகளிலும், சாஸ்திர ஆராய்ச்சிகளிலும், பதவிகளிலும், சிரோபூஷணமாக விளங்குவார்கள்.

லக்னத்துக்கு 11வது வீட்டுக்குடைய லாபாதிபதி லக்னத்துக்கு **8-வது வீடாகிய அஷ்**டமத்தில் அமர்ந்தால், பற்பல விதமான தொழில்களைச் செய்ய மனம் ஈடுபடும். கையிலிருக்கும் செல்வம் போய், சஞ்சலத்துடனேயே காலம் கழிப்பார்கள். மூத்தோர் மரணம் உண்டாகும்.

லக்னத்துக்கு 11-வது வீட்டுக்குடைய லாபாதிபதி கிரஹம், லக்னத்துக்கு 9-வது வீட்டில் (பிதா, பாக்யவீடு) அமர்ந்திருந்தால், பிதா செய்யும் தொழிலை அபிவிருத்தி செய்து, பெரிய லாபங்களைப் பெறுவார்கள். புத்திரர்களால் குடும்பம் பிரக்கியாதி பெறும். பூமி, காணி, கட்டிடங்கள், மாடுகன்று பால் பாக்யம் விருத்தியாகும். வண்டி வாகனம் வரும். அரசாங்கத்திலும், உயர் நண்பர்களாலும், தெய்வீக அருளினாலும், உயர் பதவிகளைப் பெறுவார்கள். ஆனந்தத்துடனும், அதிகாரங்களுடனும் இவர்களது வாழ்க்கை அமையும்.

லக்னத்துக்கு 11-வது வீட்டுக்குடைய லாபாதிபதி கிரஹம் லக்னத்துக்கு 10-வது வீடாகிய ஜீவனஸ்தானம், அதாவது ராஜ்ய ஸ்தானத்தில் அமர்ந்திருந்தால், கௌரவமான உத்தியோகத்தில் இருந்து லாபங்களைப் பெறுவார்கள். ஆடம்பரங்களின்றி அமைதியான குடும்பமாக அமையும். சுக சௌகர்யங்கள் நிறைந்து விளங்கும். தெய்வீக வழிபாடுகள் நிறைந்திருக்கும்.



Hariram Thejus
www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

லக்னத்துக்கு 11-வது வீட்டுக்குடைய லாபாதிபதி கிரஹம், லக்னத்துக்கு 11-வது வீட்டில் ஆக்ஷியாக அமைந்தால், பெரிய லாபங்களை எதிர்பார்க்க முடியாது. சமபலன்களே ஏற்படும். கௌரவமான. குடும்பமாகவும், தெய்வீக வழிபாடுகள் நிறைந்தும் இருக்கும். பிற்காலத்தில் தனவந்தராக விளங்குவார்கள். மூத்த சகோதரசகோதரிகள் நிலையான அந்தஸ்துடனும், சுக சௌகர்யங்களுடனும் இருப்பார்கள். அவர்களுடைய ஆதரவும் சமபலனாகவே இருக்கும்.

லக்னத்துக்கு 11-வது வீட்டுக்குடைய லாபாதிபதி கிரஹம், லக்னத்துக்கு 12-வது வீட்டில் விரயஸ்தானத்தில் அமர்ந்திருந்தால், பொருள் விரயங்கள் ஏற்படும். கடன் தொல்லைகள், வியாதிகள் முதலியன ஏற்படும். போஜன வசதிகளும், நித்திரை சுகங்களும் இருக்கும். ஆயினும் அமைதி குறைந்தே இருப்பார்கள்.

## 12. பன்னிரண்டாவது பாவாதிபதி பலாபலன்கள்

லக்னத்துக்கு 12-வது வீடு, விரயங்களைக் கொடுக்கும் வீடாகும். தவிர மோக்ஷ சாதனங்களையும் 12-வது வீட்டுக்குடைய கிரஹம் கொடுப்பார்.

லக்னத்துக்கு 12-வது வீட்டுக்குடைய கிரஹம், லக்னத்தில் அமர்ந்திருந்தால், சிரமங்களின்றி வேளையில் போஜனத்தையும், நித்திரை சுகங்களையும் கொடுப்பார். சிலவு செய்து வசதி பெறுவான்.

லக்னத்துக்கு 12-வது வீட்டுக்குடைய கிரஹம், லக்னத்துக்கு **2-வது வீடாகிய** தனஸ்தானத்தில் இருந்தால், தனவிரயங்களைக் கொடுப்பான். பேச்சிற்கு மதிப்பு இருக்காது. கல்வியில் ஊக்கம் இருக்காது. அவசியமில்லாத அனாவசியப் பேச்சுகளைப் பேசி வருவார்கள். ஊர்சுற்றிவரும் வழக்கம் இருக்கும்.

லக்னத்துக்கு 12-வது வீட்டுக்குடைய கிரஹம், லக்னத்துக்கு **3-வது வீட்டில்** இருந்தால் இளைய சகோதர சகோதரிகளால் விரயம் ஏற்படும். பிதுரார்ஜித சொத்துக்களை இழப்பார்கள்.

லக்னத்துக்கு 12-வது வீட்டுக்குடைய கிரஹம், லக்னத்துக்கு 4-ல் அமர்ந்திருந்தால் குடும்பச் செலவுகள் அதிகமாகும். போஜன சுகமும், சயன சுகமும் அதிகமாகும். பந்துக்கள், நண்பர்களால் செலவுகள் ஏற்படும். விருந்தினருக்குச் செலவு செய்வான்.

லக்னத்துக்கு 12-வது வீட்டுக்குடையவன் லக்னத்துக்கு 5-ல் இருந்தால், தேவாலய தரிசனங்கள், திருப்பணிகள், பெரிய மனிதர்கள், பிள்ளைகள் முதலானவர்களால் செலவுகள் ஏற்படும். மூத்த சகோதரர்கள் விரயத்தை உண்டுபண்ணுவார்கள்.

லக்னத்துக்கு பனிரெண்டாவது வீட்டுக்குடையவன் 6-ல் இருந்தால், தகாத வழிகளில் ஈடுபட நேரிடலாம். வியாதிகள் ஏற்படும். பொருள் நஷ்டமாகும்.

லக்னத்துக்கு 12-க்குடையவன் 7-வது வீட்டில் அமர்ந்திருந்தால், ஸ்திரீ வழிகளால் அதிக செலவை ஏற்பான். காமவேட்கையில் பொருள் விரயம் ஆகும்.

லக்னத்துக்கு 12-வது வீட்டுக்குடையவன் லக்னத்துக்கு 8-ல் அஷ்டமத்தில் இருந்தால், வியாஜ்ஜியங்கள், வழக்குகள் முதலியன ஏற்பட்டு அவைகளால் செலவுகளும், உடல் அசௌக்கியம் காரணமாக செலவுகளும் ஏற்படும்.

லக்னத்துக்கு 12-வது வீட்டுக்குடைய கிரஹம் லக்னத்துக்கு 9-ல் பிதுர் பாக்யஸ்தானத்தில் இருந்தால் தகப்பனாருடைய சொத்துக்களை விற்கும்படியும், சகோதரர்களால் நஷ்டமும் கஷ்டமும் செலவுகளும் அதிகமாகும். கடனுக்கும், வியாச்சியத்துக்கும் பாக்கிய நஷ்டமாம்.

லக்னத்துக்கு 12-வது வீட்டுக்குடைய கிரஹம், லக்னத்துக்குப் 10-ல் இருந்தால், செய்யும் தொழிலில் முடக்கமும், வருமானமில்லாது போதலும், தொழிலைவிட்டு விலகுதலும் ஏற்படும். தன் போக்காக சுற்றுதலும் செலவுகளும், பொருள் நஷ்டமும் ஏற்படும்.

லக்னத்துக்கு 12-வது வீட்டுக்குடைய கிரஹம், லக்னத்துக்கு 11-ல் இருந்தால், ஓரளவு வருமானம் இருக்கும். பிள்ளைகளாலும், தேவாலய தரிசன வழிபாடுகள், தான தருமங்களாலும், மூத்த சகோதரர்களாலும் செலவுகளும், நஷ்டமும் ஏற்படும்.

லக்னத்துக்கு 12-வது வீட்டுக்குடைய கிரஹம் லக்னத்துக்கு 12-ல் ஆக்ஷியாக அமர்ந்திருந்தால், உடல் நலமில்லாமலும், எப்பொழுதும் செலவுகளை செய்பவனுமாகவும், நல்ல போஜனம், நித்திரைகளை அனுபவிப்பவனுமாகவும் இருப்பார்கள். இதனால் சொத்துக்கள் விரயம் ஆகும்.



https://www.facebook.com/ebooksintamil/

Hariram Thejus

www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

# சந்திர ராசி பலன்

## மேஷ ராசியில் பிறந்தவர் பலன்

அசுவணி-பரணி-கிருத்திகை 1-ம் பாதம் இந்த நக்ஷத்திரங்களில்—அதாவது, மேஷராசியில் பிறந்தவர்கள்—பூமி, காணி நில புலன்கள், வீடு, விவசாயத் தொழிலில் மேன்மை, ஆள், அதிகாரங்களுடனும் இருப்பார்கள். அரசாங்கத்தாரால் கௌரவிக்கப் படுவார்கள். அற்ப ஆசைகள் இல்லாதவர்களாகவும், வாக்கு வன்மையும், கோப குணம், முரட்டு சுபாவங்களுடனும், கம்பீர மான தோற்றங்களுடனும், தெய்வீக வழிபாடுகள், சாஸ்திர, ஆசார அனுஷ்டானங்கள் நிரம்பப் பெற்றவர்களாகவும் இருப்பார்கள். பொன் ஆபரணங்களையும், பட்டுப் பீதாம்பரங்களையும், வஸ்திரங்களையும் பெற்றிருப்பார்கள். கல்வியில் திறன் பெற்றிருப்பார்கள். மெலிவான, இளைத்த சரீரத்துடன், நீண்ட கழுத்து, கை கால்களுடன் இருப்பார்கள். நீண்ட ஆயுளுடன், திரேக பலத்துடனிருப்பார்கள். மேஷ ராசி என்பது மேடான ராசி என்றும், இந்த ராசியில் பிறந்தவர்கள் மேன்மையான அந்தஸ்துடன், கீர்த்தி, செல்வாக்கு, சுகம் இவைகளைப் பெற்றிருப்பார்கள் என்று பொதுவாக சாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது.

---

## ரிஷப ராசியில் பிறந்தவர் பலன்

கிருத்திகை 2,3,4 பாதங்கள், ரோஹிணி, மிருக சீருஷம் 1,2, பாதங்கள் இவைகளாகிய நக்ஷத்திரங்களில் பிறந்தவர்கள், அதாவது ரிஷபராசிக்காரர்கள் பருத்த உடலும், கம்பீரமான தோற்றமும், மெதுவான செய்கைகளையும், மந்தமான குணங்களுடன், கல்வி, கணிதம், சாஸ்திரங்களை ஓரளவு கற்றும், தேவாலய, தெய்வீக வழிபாடுகளுடன், பக்தி, சிரத்தையுடன் இருப்பார்கள். ஆடை ஆபரணம், நகைகள், செல்வம் முதலியவைகளைப் பெற்றிருப்பார்கள்.

வேடிக்கையாகப் பேசும் குணங்களுடன், புத்திரர்களிடத்திலும், மற்றும் குழந்தைகளிடத்திலும் பிரியமாகப் பேசியும் பழகும் குணமும் இருக்கும். புளிப்பு, காரம் வஸ்துவில் பிரியம் அதிகம். தாங்கள் தாராள குணத்துடன் செலவு முதலியவைகளைச் செய்யாமல், பிறரை செய்யும்படிச் சொல்லி, அதனால் பலன்களைத் தாங்கள் பெறுவார்கள்.



வண்டி-வாகனங்களுடன், செல்வத்துடனும், செல்வாக்குடனும் இவர்கள் 80 வயதுக்கு மேலும் சரீர சுகங்களுடன் இருப்பார்கள்.

---

## மிதுன ராசியில் பிறந்தவர் பலன்

மிருக சீருஷம் 3,4 பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 பாதங்களில் பிறந்தவர்கள் மிதுனராசிக்காரர்கள் ஆவார்கள். அதிகமான எண்ணங்களையும், நோக்கங்களையும் பெற்று, கல்வியில் தேர்ச்சியும், கணிதத்தில் வன்மையும், பேச்சில் சாமர்த்தியத்தையும், சதா சிரித்துப்பேசும் குணமும், கபடமும் தந்திரங்களும், சுயநலக் காரியவாதிகளாகவும் இருப்பார்கள். தெய்வீக வழிபாடுகளும், ஆசார அனுஷ்டானங்களில் நம்பிக்கையும், கீர்த்தியையும் பெற்றிருப்பார்கள்.

நீண்ட திரேகமும், உடலமைப்பையும், கருமை நிறமாகவும், பித்த சம்பந்தமான வியாதிகளுடனும், தைர்யஸ்தர்களாகவும், இருப்பார்கள். தான் செய்யும் தொழிலில் கண்டிப்பும், கறுரும், கண்ணியமும் நிறைந்திருக்கும். எழுதுவதில், கலைத்துறையில் ஆர்வமும், திறமையும் பெற்றிருப்பார்கள். செல்வத்துடனும், செல்வாக்குடனும் தங்களது திறமையினால் முன்னேற்றத்தை அடைவார்கள். ஆயுள் 70 வரையில் தீர்க்கமெனக் கூறலாம்.

---

## கடகராசியில் பிறந்தவர் பலன்

புனர்பூசம் 4-ம்பாதம், பூசம், ஆயில்யம் ஆகிய நக்ஷத்திரங்களில் பிறந்தவர்கள் கடகராசிக்காரர்கள்.

சிவந்த மேனியுடன், திரேக அங்கலக்ஷண அவயவங்களுடன் இருப்பார்கள். கல்வியில் திறமையையும், தெய்வீக வழிபாடுகளையும், ஆசார அனுஷ்டானங்களையும் அறிந்திருப்பார்கள். பேச்சில் சாமர்த்தியமும், பணவிஷயங்களில் சுயநலப் புலிகளாகவும், பிறரை ஏமாற்றும் குணம் கொண்டவர்களாகவும், கெட்டிக்கார குணத்துடனும், தன்னைத் தானே புகழ்ந்து பேசிக்கொண்டும், தங்களது குழந்தைகளிடம் ஒருவித தனி அன்புடனும், மற்றக் குழந்தைகளிடம் மேலுக்கு அன்பைக் காட்டியும், பந்துமித்ரர்கள், நண்பர்களிடத்தில் பிரியமில்லாமல், பிரியம் கொண்டவர்கள் போல பழகும் சுபாவமும், சதா ஸ்த்ரீகளுடன் உறவாடியும், பழகி வருதலும், சமூகத்தில் துன்மார்க்கன், மோசக்காரன் என்ற பெயருடனும் விளங்குவார்கள்.



https://www.facebook.com/ebooksintamil/

Hariram Thejus

www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

தகப்பனுர், தாயாரிடம் மரியாதை கொள்ளாமலும், பெரியோர்களிடம் பணிவு இல்லாமலும், தனக்கு நிகர் யாருமில்லை என்ற எண்ணங்களுடன் கர்வத்துடன் இருப்பார்கள்.

ஸ்திர சொத்துக்களையும், செல்வத்தையும் கூட பார்க்கத்திலேயே விருத்தி செய்து கொள்வார்கள். சரும நோயும், பித்த சம்பந்தமான வியாதிகளும், கொடிய நோய்களும் உண்டாகலாம்.

கிரஹ பலங்களுடன் பிறக்கும் கடகராசிக்காரர்கள் தீர்க்க ஆயுளுடன் 90 வயது இருப்பார்கள்.

---

## சிம்ம ராசியில் பிறந்தவர் பலன்

மகம், பூரம், உத்திரம் 1-ம் பாதம் ஆகிய நக்ஷத்திரங்களில் பிறந்த சிம்ம ராசிக்காரர்கள், சூரியனைப் போன்று விளங்குவார்கள். தைர்யமும், வாக்குவன்மையும், தெய்வீக தேவாலய வழிபாடுகளுடன், ஆசார அனுஷ்டானங்களிலும் சிறந்து விளங்குவர். கல்வியில் ஊக்கமும், சாஸ்திர ஆராய்ச்சிகளில் தேர்ச்சியும் அடைவர். வேதங்களில் பற்றுதல் இருக்கும். பெரிய மனிதர்களின் நட்பும், சகவாசமும், அந்தஸ்தும் ஏற்படும். சமூகத்தில் கீர்த்தியுடனும், பிரபலத்துடனும் விளங்குவார்கள். உன்னதப் பதவியில் செல்வம், செல்வாக்கு, ஸ்திர சொத்துக்களுடன் இருப்பார்கள். குடும்பம் சிறப்புடன் இருக்கும். புத்திர பாக்யங்களுடன் வாழ்வார்கள்.

சிம்ம ராசியில் பிறந்தவர்கள் சிவபெருமான் அருளைப் பெற்று இருப்பார்கள். அதிகமாக உணவு புசிப்பார்கள். வியாதிகள் ஏற்பட்டாலும் உடனே குணமாகும். தொழிலில் ஊக்கத்துடன் விளங்குவார்கள். தன்னுடைய அந்தஸ்துக்குக் குறைவாக இருப்பவர்களிடம் அலக்ஷியத்துடனும், அதிகாரங்களுடனும், சிறிது கர்வம் கொண்டவர்போல நடந்துகொள்வார்கள். கோபமும், படபடப்பும் தலையெடுத்திருக்கும்.

சிம்ம ராசியில் பிறந்தவர்கள் கிரஹ பலத்துடன் ஜாதகம் அமைந்திருந்தால் 80 வயதுகளுக்குக் குறைவில்லாமல் நல்ல சுக சௌகர்யங்களுடன் இருப்பார்கள்.

---

## கன்யா ராசியில் பிறந்தவர் பலன்

உத்திர நக்ஷத்திரம் 2, 3, 4 பாதங்கள், ஹஸ்தம், சித்திரை 1,2 பாதங்களில் பிறந்த கன்யா ராசிக்காரர்கள் பிரசித்தி கொண்ட



குடும்பத்தில் பிறந்தாலும், தரித்திரத்தையும், வறுமையையும் அனுபவிக்க நேரிடும். தெய்வீக வழிபாடுகளில் சிறந்தவர்களாகவும், ஆசார சீலர்களாகவும், நீதி, நேர்மை, பண்புகளுடன் கூடியவர்களாகவும் இருப்பார்கள். எக்காரியங்களிலும், எவ்வித தொழிலிலும் அவர்கள் ஞானத்தைப் பெற்றிருப்பார்கள். சமூக சேவைகள் செய்ய பிரியம் கொண்டவர்களாகவும், தங்களது பிற்காலத்தில் செல்வத்துடனும், செல்வாக்குடனும் சிறப்புடன் விளங்குவார்கள். தானதருமங்கள் செய்வதிலும், தன் நிலையையும் மறந்து பிறருக்கு உபகாரங்கள் செய்வதையும் லக்ஷியமாகக் கொண்டிருப்பார்கள்.

கன்யா ராசியில் பிறந்தவர்களை முக்கியமாகத் தாயாதிகளும், உற்றார் உறவினர், நண்பர்களும் ஏமாற்றி செல்வத்தையும், பொருளையும் அபகரிப்பார்கள். ஆயினும் கன்யாராசிக்காரர்கள் பொறுமை குணங்களுடன், தங்களது மெதுவான சுபாவத்துடனும், அன்பு கலந்த பேச்சுக்களினாலும், எதிர்காலத்தில் சிறப்பைப் பெறுவார்கள்.

சுபக்கிரஹங்கள் பார்வையுடனும், பலத்துடனும் பிறந்த கன்யாராசிக்காரர்கள் சுக சௌகர்யங்களுடன் 70 ஆண்டுகாலம் ஜீவித்திருப்பார்கள்.

---

## துலா ராசியில் பிறந்தவர் பலன்

சித்திரை நக்ஷத்திரம் 3,4 பாதங்கள், சுவாதி, விசாகம் 1,2,3 பாதங்களில் பிறந்த துலாராசிக்காரர்கள் செல்வம் மிகுந்த குடும்பத்தில் செல்வாக்குடன் இருப்பார்கள். நல்ல ஐசுவரியமும், தனதான்யங்களும், பூமி, காணி, வீடு போன்ற சொத்துக்களையும், வண்டி வாகனங்களையும், மாடு கன்றுகளுடன் பால் பாக்யத்தையும் பெற்று இருப்பார்கள்.

குடும்பத்தில் அதிகமான நபர்கள் இருப்பார்கள். பெரிய மனிதர்கள், செல்வாக்கு அதிகாரம் உயர்பதவி கொண்டவர்களின் நட்பைப் பெற்றிருப்பார்கள். பந்துமித்ரர்கள் குடும்பத்தில் ஆதரவுடன் இருப்பார்கள். தார்மீக குணங்களும், தெய்வ வழிபாடுகளும் நிறைந்து விளங்கும். ஆசார அனுஷ்டானங்களைச் செய்து வருவார்கள்.

துலா ராசியில் பிறந்தவர்கள் பேச்சில் ஆணித்தரமாகவும், வியாபார நோக்கங்கள் கொண்ட பேச்சாகவும் பேசுவார்கள். (GIVE and TAKE POLICY). அதிகமாக மற்றவர்களுடன் நெருங்கிப் பழக மாட்டார்கள். தங்கள் குடும்பத்தைவிட்டு, மற்றவர்களின் விவகாரங்களில் தலையிட மாட்டார்கள். துலா ராசியில் பிறந்த ஆண்களுக்கு இரண்டு மனைவிகள் இருக்கலாம்.



https://www.facebook.com/ebooksintamil/
Hariram Thejus
www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

சுபகிரஹங்கள் பார்வையுடனும், பலங்களுடனும் பிறந்த துலாராசிக்காரர்கள் ஆயுள்பாவம் 85 ஆண்டுகளுடன் சுக, சௌகர்யங்கள் நிரம்பப் பெற்று விளங்குவார்கள்.

---

## விருச்சிக ராசியில் பிறந்தவர் பலன்

விசாக நக்ஷத்திரம் 4-ம் பாதம், அனுஷம், கேட்டை நக்ஷத்திரங்களில் பிறந்த விருச்சிகராசிக்காரர்கள் எப்பொழுதும் சுறுசுறுப்பும், ஊக்கமும் கொண்டவர்களாக எடுத்த காரியங்களில் திறமையையும் வெற்றியையும் பெறத் தீவிரமாக முனைவார்கள். தைர்யம் மிக அதிகம் உண்டு. பயந்து நடக்கும் சுபாவம் இருக்காது. எதையும் நேருக்கு நேராகச் செய்வார்கள். கல்வியில் திறமையும், ஆசார அனுஷ்டானங்களில் பற்றுதலையும், பெரியவர்களிடம் பக்தி, விசுவாசத்துடனும் இருப்பார்கள். பரந்த நோக்கங்களுடன் கொண்ட பேச்சுக்களோடு, பெரிய காரியங்களைத் தந்திரங்களினாலும், உபாயங்களையும் கொண்டு முடிக்க முயலுவார்கள். நல்ல குணங்களுடன் பழகுவார்கள்.

விருச்சிக லக்னத்தில் பிறந்தவர்கள், மனைவியிடம் அன்பாக நடந்து கொள்வார்கள். மனைவியின் பேச்சுகளுக்கு அதிக மதிப்பைக் கொடுப்பார்கள். தாய் தந்தையிடம் அதிகப்பிரியமாக நடந்துகொள்வார்கள். இவர்களது வாழ்க்கையில் சிரமங்களும், சிக்கலான விஷயங்களும், சண்டை சச்சரவுகளும் அதிகமாக எதிர்ப்படும். ஆயினும் தங்களது திறமையால், சமாளித்து வெற்றி பெறுவார்கள்.

பொதுவாக கிரஹபலத்துடன் பிறந்த விருச்சிகராசிக்காரர்களுக்கு ஆயுள் பாவம் 85க்கு மேலும் உண்டு என்று கூறலாம். புத்தி சாதுர்யத்தினாலும் தைர்யத்தினாலும் கடைசிமூச்சுவரை, உழைப்பையும் உற்சாகத்தையும் கொண்டிருப்பார்கள்.

---

## தனுர் ராசியில் பிறந்தவர் பலன்

மூலம், பூராடம், உத்திராடம் 1-ம் பாதம் ஆகிய நக்ஷத்திரங்களில் பிறந்த தனுர்ராசிக்காரர்கள் ப்ருஹஸ்பதி கிரஹமாகிய குருபகவான் வீட்டில் ஜெனனமாவதால், சிறு வயதிலிருந்தே கல்வி, ஞானம், கொண்டவர்களாகவும், நல்ல சகவாசங்களையும், நீதி, நேர்மை, பண்பு ஆகிய நல்லொழுக்கங்களைக் கொண்டவர்களாகவும் வளர ஆரம்பிப்பார்கள். தெய்வீக வழிபாடுகள், ஆசார அனுஷ்டானங்கள், பெரியவர்களிடம் பக்தி, விசுவாசங்



களுடன் கூடினவர்களாக இருப்பார்கள். தனக்கு சமமாகவும், உயர் அந்தஸ்து, பதவி, செல்வாக்கு படைத்தவர்களிடம் நட்பைக் கொள்ளுவார்கள். கீழோரிடம் வெறுப்பைக் கொள்ளுவார்கள். அதிகமாக வெளியே சுற்றும் பழக்கம் இருக்கும்.

தனுர் ர்ாசியில் பிறந்தவர்கள் தங்களது கல்வி, அறிவு திறமைகளால் உயர் பதவியை அரசாங்கத்தில் பெறுவார்கள். அதிகாரங்களுடனும், அந்தஸ்துடனும் இருப்பார்கள். பிறருடைய குற்றங்களை, குணங்களை, வெகு எளிதில் கண்டு கொள்வார்கள். துர்குணம், கொலை செய்பவர்கள், திருடுபவர்கள் இவர்களை வெகு சுலகமாகக் கண்டுபிடிப்பார்கள்.

தனுர்ராசியில் பிறந்தவர்கள் நடுத்தரவயது அடையும் சமயம், சில சிரமங்களை அனுபவிக்க நேரிடும். பிந்திய வயதில் அபார கீர்த்திகளுடனும், சன்மானங்களுடனும், சந்தோஷ சுகங்களுடனும், செல்வங்களுடனும், செல்வாக்குடனும், பூமி, வீடு போன்ற சொத்துக்களுடன், வண்டி வாகனங்களுடன், குடும்பத்தில் சகல சௌபாக்யங்களுடன் ஆனந்தமாக வாழ்வார்கள்.

கிரஹ பலங்களுடன் கூடின தனுர்ராசிக்காரர்கள் அடிமை வாழ்வைப் பெறுமல் 80 ஆண்டுகள் ஆயுள் பாவத்துடன், திடகாத்திர திரேகத்துடன் இருப்பார்கள்.

---

## மகர ராசியில் பிறந்தவர் பலன்

உத்திராடம் 2, 3, 4 பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1, 2 பாதங்கள் ஆகிய நக்ஷத்திரங்களாகிய மகர ராசியில் பிறந்தவர்கள், சிவந்த மேனியையும், பெரிய கண்களையும், திரேகத்தில் மச்சங்களையும், நீண்டு உயர்ந்த கம்பீர திரேகக் கட்டையும் பெற்றிருப்பார்கள். கல்வி, கேள்விகளில் பிரகாசத்தையும், ஆசார அனுஷ்டா்னங்களில் சிறந்தும், தெய்வீக வழிபாடுகளை அறிந்தும், இருப்பார்கள். வாசனைத் திரவியங்களில் பிரியமும், ஆடை ஆபரணங்களில் ஆசைகளும், அந்தஸ்துக்கு ஏற்ற இடங்களில் ஆகாரம் கொள்வதும், யாரையும் லக்ஷியம் செய்யாமல் தன் இஷ்டம் போலக் காரியங்களைச் செய்து வெற்றி பெற்று வாழ்வார்கள்.

மகரராசியில் பிறந்தவர்களின் குடும்பம் செல்வம், செல்வாக்குடன் கீர்த்தி பெற்று இருக்கும். புத்திர சந்தானங்களுக்கு குறைவிருக்காது. மனைவியிடம் அதிகமான பிரியத்துடனும், மனைவியின் போக்கின்படி நடந்து கொள்ளும் சுபாவத்தையும் பெற்றிருப்பார்கள். தனக்கு நிகர் யாரும் கிடையாது என்ற நோக்கத்துடன் இருப்பார்கள்.



https://www.facebook.com/ebooksintamil/

Hariram Thejus

www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

மகரராசியில் பிறந்தவர்கள் பிறக்கும்போது செல்வந்த குடும்பத்தில் பிறந்து, நடுத்தர வயதில் சில சிரமங்களை அனுபவித்து, பிற்காலத்தில் பெரிய அந்தஸ்தையும், செல்வ சுகங்களையும், ஸ்திர சொத்துக்களையும் பெறுவார்கள். குடும்பம் சந்தோஷமாக இருக்கும்.

கிரஹங்கள் பலத்துடன் பிறக்கும் மகரராசிக்காரர்களுக்கு ஆயுள் பலம் 70 ஆண்டுகளுக்குக் குறைவில்லாமல் இருக்கும்.

## கும்ப ராசியில் பிறந்தவர் பலன்

அவிட்டம் 3,4 பாதங்கள், சதயம், பூரட்டாதி 1,2,3-பாதங்களில் பிறந்த கும்பராசிக்காரர்கள், மெலிந்த திரேகத்துடனும், குள்ளமாகவும், இருப்பார்கள். கல்வியில் ஊக்கமும் ஆசார அனுஷ்டானங்களில் பற்றுதலும், தெய்வீக வழிபாடுகளில் சிறந்தும் இருப்பார்கள். எவ்வளவு படித்திருந்தாலும் மேதைகளாக இருந்தாலும், பிரபலமாக அமைவது கடினம். சுபக்கிரக பார்வை பெற்ற கும்பராசிக்காரர்கள் கீர்த்தி பெறலாம். பித்த சம்பந்தமான வியாதிகளுடனும், மற்றவர்களிடம் காணும் சிறு குற்றம் குறைகளையும் அடிக்கடி இழிவாகப் பேசி, பிரசாரம் செய்து வருவார்கள். தன்னைப்பற்றி பெருமையாகத் தாங்களே பேசிக்கொள்வார்கள்.

கும்பராசியில் பிறந்தவர்கள் மற்றவர்கள் செய்த உபகாரங்களை உடனே மறந்துவிடுவார்கள். பாரபக்ஷம் பார்க்காமல், உடனே தீங்கு செய்வார்கள். பிறர் நன்ருக வாழ்வதைக் கண்டு பொறுக்கமாட்டார்கள்.

கும்பராசியில் பிறந்தவர்கள் ஸ்திரீ ஜனங்களின் நட்பை வெகு எளிதில் பெற்றுவிடுவார்கள். கிரஹங்களின் பலங்களுடன் பிறக்கும் கும்பராசிக்காரர்கள் 80 ஆண்டுகள் ஜீவித்திருப்பார்கள்.

## மீன ராசியில் பிறந்தவர் பலன்

பூரட்டாதி 4-ம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி ஆகிய நக்ஷத்திரங்களில் பிறந்த மீனராசிக்காரர்கள் அழகிய அங்கலக்ஷணங்களுடனும் தோற்றங்களுடனும் இருப்பார்கள். தான் செய்த காரியங்கள், செய்யப் போகும் காரியங்கள் எதையும் வாய்விட்டு சொல்லமாட்டார்கள். எவரிடமும் மனம்விட்டுப் பழகமாட்டார்கள். பயந்த சுபாவங்களுடன் இருப்பார்கள்.



மீனராசியில் பிறந்தவர்கள் சுமாரான கல்வி ஞானங்கள் தெய்வ வழிபாடுகள், ஆசார அனுஷ்டானங்கள் இவைகளை அறிந்திருப்பார்கள். ஆனால் அதை வாழ்க்கையில் கடைப்பிடிப்பார்களா என்பது சந்தேகம். வாசனைத்திரவியங்களிலும், ஆடை, ஆபரணங்களிலும் பிரியம் இருக்கும்.

மீனராசியில் பிறந்தவர்கள் முன் ஜாக்கிரதையுடன் கூடினவர்களாக இருப்பார்கள். பிறர் பொருளை அபகரிப்பார்கள். பிறருடைய உதவிகளினலேயே தங்களது வாழ்க்கையை நடத்துவார்கள். கிரஹபலம் பெற்ற மீனராசிக்காரர்கள் நல்ல செல்வம், செல்வாக்கு சந்தோஷங்களைப் பெற்றிருந்தாலும், அவர்களுக்கு எதிர்பாராதவிதமான கஷ்டநஷ்டங்கள் உடனேயே ஏற்படும். அனேகமாக சிரம வாழ்க்கையைத்தான் அனுபவிப்பார்கள்.

மீனராசியில் பிறந்த ஆண்களுக்கு இரண்டு மனைவிகள் என்று கூறலாம். சிரமமான் வாழ்க்கை வசதிகளுடன் 90 ஆண்டுகள் ஜீவித்திருப்பார்கள். புத்திர சந்தானங்கள் நிறைந்து இருப்பார்கள்.

சுபமஸ்து.



https://www.facebook.com/ebooksintamil/

Hariram Thejus

www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

# தசா புக்தி பலன்கள்

## 1. சூரிய தசை

**1. சூரிய புக்தி**

கர்ப்பத்திற்குக் கொடுமையும், பந்துக்களுக்குக் கேடும், கலகமும், பிராம்மணனால் பீடையும், மனவருத்தமும், தலைநோயும், வலது காதில் வலியும், விசாலமான நீரழிவுரோகமும், சித்திரை மாதத்தில் பீடையும் உண்டாகும். அலைச்சலும் கொடுக்கும்.

**2. சந்திர புக்தி**

அரசரால் மகிழ்ச்சியும், அதிக லாபமும், வாஹனமும், விரிவான விவாகமும், ஸ்த்ரீகளால் பகையும், இடது கண்ணில் வியாதியும், ஆடிமாதத்தில் கொடிய தீங்கும் உண்டாகும்.

**3. செவ்வாய் புக்தி**

மிக்க வருத்தத்தைத் தரும் வியாதியும், சண்டையும், வியாஜ்ஜியமும், நெருப்பு பித்தம் இவற்றால் பீடையும் வரட்சியும், பீடையும், பழகின பந்துக்களுக்குக் கேடும், தனம், பொருள் இவற்றின் சேதமும், தான் தேடிய பொருளுக்கு நாசமும், பூமியினின்றும் வரவேண்டிய பலன் வராமையும் உண்டாகும்.

**4. ராகு புக்தி**

சுகபலனையே சொல்வதற்கில்லாததுடன், மனையாளினால் புருஷனை தன்வசமாக்குவதற்காகக் கொடுக்கப்படும் விஷமருந்தினாலும், ஆயுதத்தாலும் பயமும், புத்திர நாசம், அல்லது உடன் பிறந்த சகோதரர்க்குச் சேதமுண்டாகுதல், அல்லது பாகப் பிரிவினை உண்டாகுதல் இவையும், தனது மகன் தேசாந்திரம் செல்லுதலும் நடக்கும்.

**5. குரு புக்தி**

மித்திர லாபமும், வித்தியாலாபமும், தனலாபமும், புத்திக்குச் சந்தோஷத்தைத் தரும் ராஜசேவையும், புத்திரலாபமும், சுத்தியும், அதிகமான சத்துரு ஜயமும், பின்னும் பல அதிசயமும் உண்டாகும்.

**6. சனி புக்தி**

பயம், பிதா புத்திரபீடை, மனதில் துன்பம், சத்துரு பீடை, சொந்தமான பொருள் நாசம், நாபியை அடுத்து சரீர பீடை, பூமியில் இன்பமே இல்லாமை, எவரும் சத்துருவாதல் ஆகிய இவை நடைபெறும். கவலை, ஸ்தான பேதம் உண்டாம்.

* தசை, புக்தி இவைகள் நடைபெறும் கால அளவுகளை இந்நூலின் முற்பகுதியில் காண்க.



Hariram Thejus

https://www.facebook.com/ebooksintamil/

**7. புத புக்தி**

சுற்றத்தார் பகையும், மனத்திகிலும், சரீரத்தில் பீடையும், கல்லைப் போன்ற கர்ப்பம் அழிந்து போகுதலும், தொப்பிளில் வலியும், வியாஜ்ஜியமும், பேசுந்திறமைக்கு மன்னனால் நாசமும், அதிகம் துக்கமும் உண்டாகும்.

**8. கேது புக்தி**

குற்றமற்ற நினைவு குன்றுதலும், தூரதேசஞ் செல்லுதலும், கேட்டை விளைவிக்கும் விஷபீடையும், வியாஜ்ஜிய முண்டாகுதலும், வேறு வீடு மாறுதலும், தன்னால் பிரிக்கப்படும் உற்றார்மூலம் கேடும், கலகமும் உண்டாகுமே யொழிய நல்லபலன் எதுவும் நடைபெறாது.

**9. சுக்கிர புக்தி**

கல்யாணமாகுதலும், செல்வமும், செம்பொன்னும் உண்டாகுதலும், மனவருத்தமுண்டாகுதலும், சரீர வியாதியும், அழகிய கண்ணில் வியாதி தோன்றலும், சரீரத்தை உருக்கிய முன்னிருந்த வியாதி நீங்குதலும், சுபகாரியம் நடைபெறுதலும் உண்டாகும்.

## 2. சந்திர தசை

**1. சந்திர புக்தி**

ஆச்சரியப்படத்தக்க முறையில் கன்னியின் சேர்தலும், வீரமும், அதில் நோக்க முண்டாகுதலும், இதற்கு முன்னர் நினைத்த காரியங்கள் முடிவு பெறுதலும், மேலும் இந்திரனைப் போல சிறந்த புத்திரன் சுகமாயுண்டாதலும் நடைபெறும்.

**2. செவ்வாய் புக்தி**

இதில் தகுதியற்ற வழக்கு, சண்டை, பயித்தியம், திருட்டு, குளிர் வியாதி, பொருள் நாசம், குஷ்டரோகம், சித்திரை மாதத்தில் அக்கினிபயம், பலம் பொருந்திய கால்விலங்கு, ஸ்த்ரீகள் கலகம் இவைகள் உண்டாகும்.

**3. ராகு புக்தி**

செம்மை பொருந்திய பொன்சேதம், சத்துரு பயம்,வியாதி, புருடரில் சிறந்தோர் மூலம் துன்பம், மிகைப்பட்ட ராஜநிஷ்டூரம், ஜலமூலமும், யோனி மூலமும் சண்டை, பிள்ளைகட்குப் பீடை உண்டாகும்.

**4. குரு புக்தி**

வெற்றி பெறுதலும், குதிரை, யானை, அதிகமான பொருள், தானியம் இவைகளின் சேர்க்கையும், அரசராலின்பமும், கன்றும், பசுப்பிராப்தியும், புத்திர பிராப்தியும் உண்டாகும்.



www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

5. சனி புக்தி

பதிக்குக் கேடு, பசு முதலியவற்றின் கேடு, மனத்தில்துக்கம், களத்திரம், பொருள் இவற்றிற்குச் சேதம், கருத்தவனால் கோள் களுண்டாதல் இவை நடக்கும்.

6. புத புக்தி

உள்ளில் கலகம், போகம், புத்திரலாபம், சிந்தித்த ராஜ யோகம் சேருதல், நினைத்ததெல்லாம் கைகூடுதல், வித்யாலாபம், புரட்டாசி முடிவில் லாபம் இவையுண்டாகும்.

7. கேது புக்தி

அக்னி பீடை, சரீரத்தில் விக்கம், பந்து நஷ்டம், இடது கண்ணில் வியாதி, பயம், தண்டனை, பலர் வெறுப்பு, நாசம், பகை இவையுண்டாகும்.

8. சுக்கிர புக்தி

நிச்சயமாய் வியாதி உண்டாகுதலும், சேர்ந்திடுவோரின் விசனமும், பொருட் சேதமும், சுக்கிர வாரத்தில் விரோத முண் டாகுதலும், பந்து கஷ்டமும், சத்துருவால் காரிய பங்கமும் உண்டாகும்.

9. சூரிய புக்தி

உள்ளில் காய்ச்சலும், புத்தியில் கொதிப்பும், பித்தமும், சரீர உருவம் மாறிவிடுதலும், கண், புத்தி, சரீரம் இவற்றில் கடுமையான வியாதியும், வலியுமுண்டாகுதலும் பலனாக நடக்கும். ஆனால் மரணபயத்தைச் செய்யாது.

## 3. செவ்வாய் தசை

1. செவ்வாய் புக்தி

அற்பமான ஏவல் தொழில் செய்தலும், பசுக்கூட்டம், நாய் இவை கடித்திடுதலும், சித்திரை மாதத்தில் வெற்றிபெற்ற அரச ரால் பயம், வியாதி, ஹிம்சையை உண்டுபண்ணுகின்ற தேளின் மாதமான கார்த்திகை மாதத்தில் நீசரால் வெட்டும், குத்தும் ஆகிய இவைகளுமுண்டாகும்.

2. ராகு புக்தி

கொடிய விஷத்தால் கார்த்திகை மாதத்தில் பந்து நாசமும், இவ்விதமே மேகரோகமும், கட்டிச் சிரங்கும், இருக்குமிடம் விட்டு வேறிடம் போகுதலும், குஷ்டரோகமும், பயங்கரமான பீடையும் உண்டாகும்.

3. குரு புக்தி

குடும்பச் சொத்துக்கு நாசமும், ராஜாக்கள் மூலம் விரோதம் உண்டாகுதலும், வடதிசை தொடங்கி பலவித சத்துருக்களுண் டாகுதலும், குருபுக்தி நடக்கும் நாளில் துன்பமுறுதலும், அரச ரால் செல்வமும் அவரின் உறவும் ஆகிய இவையுண்டாகும்.

4. சனி புக்தி

கலகம், வழக்குச்சண்டை, அதிகமான படையென்ற சரீரத் தில் தினவு உண்டாகுதல், பொருள் நாசம், அழகிய சரீரத்தில் குஷ்டரோகமுண்டாகுதல், தானிருக்கும் நிலை கெட்டுவிடுதல், மனத்திற்கிலேசம் இவைகளுமுண்டாகும்.

5. புத புக்தி

அழகிய ஸ்த்ரீயின் சேர்க்கையும், அதிகம் செல்வமுண்டாகு தலும், சரீரத்திலிருந்து வந்த வியாதி நீங்குதலும் புரட்டாசி மாதத்தில் நிந்திக்கப்படுதலும், பாம்புக் கடியும் உண்டாகும். ஆனால் மேற்சொன்ன தோஷ பலன் வெகு காலம் நீடித்திரா தென்பதாம்.

6. கேது புக்தி

ஸ்த்ரீகள் மூலம் பகையும், சரீரத்தில் வியாதி தோன்றலும், அதிகம் விஷபயமும், ஸ்த்ரீகள் நிமித்தமாக நிந்தையை அடைத லும், அதிகம் சத்துருபீடையும் உண்டாகும்.

7. சுக்கிர புக்தி

வெகு காலமாக எதிர்பார்த்த பொருள் சேர்தலும், அழகிய ஸ்த்ரீயின் சேர்க்கையும், தெய்வ பூசை செய்தலும், பெரியோரின் சேர்க்கையும், சிரங்கு, தேமல், வாகனம் இவற்றை அடைதலும் உண்டாகும்.

8. சூரிய புக்தி

குஷ்டம், கழுத்தில் வியாதி, மனத்தில் துக்கம், நெருப்பால் பயம், பிராம்மணன் மூலம் துன்பமும், குறிப்புறியும் குணமுள்ள மனையாளின் நோய், எவரும் பகைவராதல் ஆகிய இவை உண் டாகும்.

9. சந்திர புக்தி

பூமி லாபமும், பசுக்கள் கர்ப்பந்தரித்தலும், அழகிய பொன், முத்து இன்பம், ஆடை இவையுண்டாகுதலும் ஸ்தலம் மாறுத லும், தளர்ச்சியுண்டாகுதலும் நடைபெறும்.

## 4. ராகு தசை

1. ராகு புக்தி

ராஜாக்கள் மூலம் நாசமும், மனத்தில் துன்பமும், விஷத் தால் பீடையும், மனையாளுக்குத் துன்பம் அதிகமாகுதலும்,



https://www.facebook.com/ebooksintamil/
Hariram Thejus
www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

ஸ்தலம் மாறுதலும், காக்கைக் கொப்பான நிறமுள்ளவனால் கலகமும், கோளும் உண்டாகுதலும் நடைபெறும்.

**2. குரு புக்தி**

இன்பமும், ஆரியரால் செல்வமும், அரசரால் மகிழ்ச்சியும் நினைத்த காரியமெல்லாம் கைகூடுதலும், விவாகமும் நடைபெறும்.

**3. சனி புக்தி**

மனத்தில் துக்கம், வியாதி, ஒருபொழுதும் முடிவுபெறாத வழக்கு சண்டை. இவையுண்டாகுதலும், வாதம், பித்தம் இவை சம்பந்தமான வியாதியுண்டாகுதலும், திருவாதிரை, சுவாதி, சதயம், இந்நக்ஷத்திரங்களில் நோய் மிகுதியுண்டாகுதலும் நடைபெறும்.

**4. புத புக்தி**

முயற்சிக்குத் தக்கபடி வாழ்வில் மேன்மையும், தெய்வ பக்தியும், சில பொருள் வந்து சேர்தலும், ஆச்சரியப்படும்படியான முறையில் குழந்தையுண்டாகுதலும், மேலான நிலையிலுள்ளவர்களுடன் விரோதமும் உண்டாகும்.

**5. கேது புக்தி**

விஷத்தால் பயமும், குழந்தைக்குப் பீடையும், சரீரத்தில் வீக்கமுண்டாகி வியாதி பீடையும், ஸ்த்ரீகளுக்குத் துன்பமும், அரசரால் பயமும் உண்டாகும்.

**6. சுக்கிர புக்தி**

பொன்னும், பொருளும் சேர்தலும், அதிகமான ஆபரணமுண்டாகுதலும், வேறு ஸ்த்ரீயின் சேர்க்கையும், ராஜாக்களால் மகிழ்ச்சியும், வஞ்சனையால் துன்பமும், பீடையும் வந்து பின்பு அவை விலகுதலும் நடைபெறும்.

**7. சூரிய புக்தி**

வலையர்குலத்துடன் சண்டையும், மன்னர் ஆதரவு பெறுதலும், சரீத்திற்றழும்புண்டாகுதலும், மனையாள், பிள்ளை, பிராதா இவர்களுடன் சண்டை போடுதலும், அல்லது இம்மூவர் மூலம் பயமும், இருப்பிடம் விட்டு வேறிடம் போகுதலும் நடைபெறும்.

**8. சந்திர புக்தி**

மதிக்கத்தகுந்த பந்து நாசமும், மனைவியால் பொருட்சேதமும், ஹஸ்தம், திருவோணம் இந்த நக்ஷத்திரமுள்ள தினங்களில் கால், கண் இவ்விடங்களில் நோவுண்டாகுதலும், தனக்கேற்பட்ட ஸ்தலம் விட்டுப் போகுதலும், விஷத்தால் துன்பமும் உண்டாகும்.



**9. செவ்வாய் புக்தி**

அக்கினியால் பயமும், கிலேசமும், அதிகம் பகையும், விஷத்தால் பீடையும், சண்டாளர் இன்பமும், களவும், சண்டையும், மனைவியால் கிலேசமும் நடைபெறும்.

## 5. குரு தசை

**1. குரு புக்தி**

உயர்ந்த பிரதாபம், மிக்க பொருள், தானியம், பூஷணம், பூமி லாபம், ஸ்த்ரீகளின் சேர்க்கையாலின்பம், அரசரால்மகிழ்ச்சி இவைகள் உண்டாகும்.

**2. சனி புக்தி**

வாஹனம், பொருள் இவை உண்டாகுதலும், திடமான கால், கை இவற்றில் வாயு பீடையும், ஸ்த்ரீக்குத் துன்பமும், இருந்த இடத்தில் ஐயமுண்டாகாமையும், இடையில் துன்பம் வந்து நீங்குதலுமுண்டாகும்.

**3. புத புக்தி**

ஆடல்பாடல், ஞானம், பூசை செய்து வருவாயை அடைதலும், வளம் பொருந்திய மாதர், மைந்தர் இவர்களும், செல்வப் பெருக்கும் பெருமையும், புகழும் உண்டாகுதலும் நடைபெறும்.

**4. கேது புக்தி**

திடமான ஸ்த்ரீக்குக் கேடும், தேசமெங்கும் அலைதலும், உற்றார், சுற்றத்தார் பகையும், மனையாள் மூலம் ஓரிடம் விட்டு வேறிடம் போகுதலும் நடைபெறும்.

**5. சுக்கிர புக்தி**

பசு, குதிரை, பலவிதமான உடைகள், நல்ல நிலைமை, பொருட்சேர்க்கை, புரட்டாசி சுக்கிலபக்ஷத்தில் பூமியின் சேர்க்கையும், போகமுண்டாகுதலும், சுற்றத்தாருடன் குணமாகச்சேர்ந்து வாழ்தலும் நடைபெறும்.

**6. சூரிய புக்தி**

நன்மைதரும் அர்த்தலாபமும், எடுத்தகாரியம் கைகூடுதலும், நெருப்பினாலும், காற்றினாலும் பலவிதக் குறையும், வியாதியும், பலர் விரோதமும், பீடையும், வீட்டிற் கலகமும், புத்தியின் முடிவில் காரிய நன்மை உண்டாகுதலும் நடைபெறும்.

**7. சந்திர புக்தி**

பல்லக்கு, முத்து, வெண்குடை, ஆபரணம், நல்லமனையாள், புத்திரன், வித்வான்கள், பொருள் ஆகிய இவைகளின் சேர்க்கையும், நல்ல காரியங்களெல்லாம் தெய்வ சங்கற்பத்தால் நிறைவேறுதலும் நடைபெறும்.



https://www.facebook.com/ebooksintamil/

Hariram Thejus

www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

**8. செவ்வாய் புக்தி**

தீங்கைத் தரும் வினைகளும், திருடராலும் அக்னியாலும், துன்பமும், உற்றார் நாசமும், அல்லது வியாதி உண்டாகுதலும், ஸ்தானம் விட்டு விலகிச் செல்லுதலும், நினைத்த காரியம் முடிந்திடாமையும் நடக்கும்.

**9. ராகு புக்தி**

தொடர்ச்சியாகப் பகையுண்டாகுதலும், சிறு வழக்கும், பொருட்சேதமும், விரோதமும், மனையாளுக்குத் துன்பமும், சூதுகள் மிகையுண்டாகுதலும், தொடர்ச்சியாய் வரும் குடும்பத்தின் பொருள் நாசமும் உண்டாகும்.

## 6. சனி தசை

**1. சனி புக்தி**

தேகத்தில் வியாதி, வேலைக்காரர், புத்திரர், செல்வம், இவற்றின் குறைவு, பந்து கலகம் ஆகிய இவை நடைபெறும்.

**2. புத புக்தி**

குறிப்பறிதலும், கல்வியும், ஞானமும், விருத்தியடையும் நிலையிலுள்ள பொருளும், செல்வமும், ஸ்த்ரீயின் ஸ்வயமாலிங்கனமும், புத்திரன், பந்து உண்டாதல், அரசரால் புகழ்ந்துவாழுதல் ஆகிய இவையும் நடைபெறும்.

**3. கேது புக்தி**

வலதுகாலில் வலுவான வாதரோகமும், பித்த சம்பந்தமான ரோகங்காணுதலும், புத்திரன் மூலம் தாரித்திரியமும், விஷ பயமும், பொருள்நாசமும், பெண்களால் துன்பமும், கோளினால் கலகமும் உண்டாகும்.

**4. சுக்கிர புகதி**

இனிமை பொருந்திய நற்கருமம் செய்தலும், நல்லோரின் சினேகமும், எதிலும் வெற்றியும், பெண்களின் சேர்க்கையும், லாபமும், புத்திரன் பந்து இவர்களின் சேர்க்கையும், தனித்தொரு பகையும் உண்டாகும். ஆனால் அந்தப் பகையையும் வென்று விடலாம்.

**5. சூரிய புக்தி**

பலம்பெற்ற ரக்தமேகரோகமும், வயிற்றில் சூலையும், கண்ணில் வியாதியும், திரடகாத்திரர்களான மனைவி, மக்கள் இவர்கள் வியாதியினால் சிதருண்டு போகுதலும், கையில் எரிவும், புக்தி முடியும் வரை கடுமையான வலிவுள்ள வாதபீடையும் உண்டாகும்.



**6. சந்திர புக்தி**

கலகம், பீடை, வீட்டில் வழக்குச்சண்டை, பத்திரமான வேலை, ஆபரணம், பல வளம் தரும் பொருள் இவற்றின் சேதம், இருக்கும் இடம் விட்டு துன்பம் காரணமாய் விலகுதல் இவை நடைபெறும்.

**7. செவ்வாய் புக்தி**

குலத்தில் ஈனமும், அதிகமான கொடிய பகையும், பழியும், தேசம் முழுவதும் அலைதலும், அனைவரும் விரோதமாகுதலும் இருக்குமிடங்களில் ஸ்வர்ணம் திருட்டுப் போகுதலும், ஸ்தான மாறுதலும் நடைபெறும்.

**8. ராகு புக்தி**

ஸ்வர்ண நாசமும், பாம்பு துரத்திக் கடித்தலும், சரீரம் முழுதும் பலவித வியாதி உண்டாகுதலும், அந்நியர் பகையும், அதனால் பலவிதத் துன்பம் உண்டாகுதலும் நடைபெறும்.

**9. குரு புக்தி**

அன்பு நிறைந்த அடியார்களின் சேர்க்கையும், ஆடை ஆபரணமுண்டாகுதலும், ராஜாக்களால் நன்மையும், எதிர் பார்த்த காரியம் கைகூடுதலும், மின்னல் போன்ற கொடியுடனே சுற்றத்தார் அதிகமாக உண்டாகுதலும் நடைபெறும்.

## 7. புத தசை

**1. புதன் புக்தி**

சுற்றமும், துணையும் பலன் தரக்கூடிய பொருள் லாபம், அதிக பாக்கியம், நன்மை பயக்கும் ஞானம், வித்யை, எதிர் பார்த்த காரியம் முடிவு பெறல் ஆகிய இவையும் நடைபெறும்.

**2. கேது புக்தி**

பெரிய இடம் விட்டு மாறுதல், வியாதியால் பீடை உண்டாகுதல், பொருட்சேதம், உற்றார்கேடு, மருந்திடு குணத்தால் துன்பம், அதிகமான மனக்கிலேசம் இவை உண்டாகும்.

**3. சுக்கிர புக்தி**

அருமை தங்கிய மக்கட்பேறும், ஸ்த்ரீயுடன் போகமும், பந்து சினேகமும், வித்யையும், பற்பல ஆபரணமுண்டாகுதலும், வேறுதேசம் போனவர் திரும்ப வந்து சேருதலும், விவாகமும் உண்டாகும்.

**4. சூரிய புக்தி**

அக்னிபயம், கிலேசம், பூமியில் தனக்குற்றவளான மனையாளுக்குப் பீடை, விரோதம், இடையூறு, அரசரால் துன்பம் ஆகிய இவை உண்டாகும்.



https://www.facebook.com/ebooksintamil/

Hariram Thejus

www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

5. சந்திர புக்தி

அதிகமான சோகையென்னும் வியாதி கண்டு புறங்கால் வீக்க முண்டாகுதலும், பெண் காரணமாகக் கலக முண்டாதலும், அதிகமான பீடை உண்டாகுதலும், தப்பிதம், துன்பம் இவை உண்டாகுதலும், பூமியின் கண்ணுள்ள மனிதரோடெல்லாம் பகை யுண்டாகுதலும் நடைபெறும்.

6. செவ்வாய் புக்தி

பித்தரோகம், காமாலை, தலைவலி, அன்னியர் விரோதம், ஆயுதத்தால் பீடை, இவையும், முன்னொரு பகையும், புக்தி முடியும்வரை கலகமே உண்டாகுதலும் நடைபெறும்.

7. ராகு புக்தி

இருக்குமிடம் விட்டுப்போகுதலும், நீசராலும், விஷத்தாலும் பயமும், சண்டையுண்டாகுதலும், மனத்துன்பம், அர்த்த நாசம், ஸ்வப்பனம், தலைவலி, பித்தம், ஆகாரக் குறைவு ஆகிய இவை உண்டாகுதலும் நடைபெறும்.

8. குரு புக்தி

இன்பமும், ராஜமரியாதையும், மனதில் சந்தோஷமும், புத்திரப் பிராப்தியும், பந்துச் சேர்க்கையும், பத்னிவிவாகமும், அதிகம் பாக்கிய முண்டாகுதலும் நடைபெறும்.

9. சனி புக்தி

ஒவ்வொரு நாளும் நன்மை இல்லாது போகுதலும், எதிர்த்து வரும் பகையுண்டாதலும், வலது காலில் நோயுண்டாகி திக்கை நோக்கிச் செல்லுதலும், உத்திராட நக்ஷத்திரத்தில் துன்பமும், உற்றார் கேடுண்டாதலும், மனதிற் கிலேசமுண்டாதலும் நடைபெறும்.

## 8. கேது தசை

1. கேது புக்தி

தனக்கு மிக்க வேண்டியவர்களான மனைவி, மக்கள், சகோதரர் இவர்களின் வெறுப்பு உண்டாகுதலும், புரட்டாசி மாதத்தில் காலில் விலங்குண்டாகுதலும், அந்த புரட்டாசி மாதமானது ஆயுர்ப்பாவ விஷயத்தில் முடிவு செய்யப்பட்ட ஆண்டின் முடிவான மாதமாக இருக்குமாகில் அம்மாதத்தில் மிகவும் பீடையுண்டாகுதலும் நடைபெறும்.

2. சுக்கிர புக்தி

மனைவியும், மக்கட்பேறும், கன்று, காலியுண்டாகுதலும், நினைத்த காரியமெல்லாங் கைகூடுதலும், புக்தியின் முடிவில் பீடை உண்டாகுதலும், மனையாளுக்குப் பீடை உண்டாகி விலகுதலும் நடைபெறும்.



3. சூரிய புக்தி

இருக்குமிடம் விட்டு வெளிதேசஞ்சென்று பிறகு திரும்பி வருதலும், சரீரமெங்கிலும் ஜ்வரம், தலைநோய் இவை உண்டாகுதலும், மனதினில் கிலேசமுண்டாகுதலும் நடைபெறும்.

4. சந்திர புக்தி

ஸ்த்ரீகள் மூலம் வழக்குச் சண்டை, புத்திரர்கட்குப் பீடை, கன்று, காலியுண்டாகுதல், ஸ்வர்ணாபரண முண்டாகுதல், தீமை வந்து விலகுதல் ஆகிய இவை நடைபெறும்.

5. செவ்வாய் புக்தி

இடையூறு, பயம், அர்த்தஹானி, கூட்டங்கூடி சண்டை இடுதல், வழக்காடுதல், பற்பல விரோதமுண்டாகுதல், எதிலும் தடையேற்படுதல், பெண்களாற் கேடு, அதிகம் நெருப்பால் பயம் ஆகிய இவை நடைபெறும்.

6. ராகு புக்தி

அவசியம் விஷபயமுண்டாகுதலும், ஸ்த்ரீகட்குப் பீடையுண்டாகுதலும் அரசனுக்குக் கேடுண்டாகுதலும், இகபோக அர்த்தநாசமும், கீர்த்தி நிலைநிற்காமையும் ஆகிய இவை நடைபெறும்.

7. குரு புக்தி

அர்த்தலாபம், அரசர்சேர்க்கை, விஷபயமுண்டாகி விலகுதல், லக்ஷ்மீபோல் அழகு பொருந்திய மனையாள் சேர்க்கை, அதிகம் செல்வமுண்டாகுதல், ஆகிய இவை நடைபெறும்.

8. சனி புக்தி

பலவகையில் பொருட்சேதமாகுதலும், இடம் மாறுதலும், சரீரத்தில் சொறி சிரங்குண்டாகுதலும், சந்திரன் போன்ற முகமுள்ள ஸ்த்ரீகளின் பீடையும், மனதினில் கிலேசமும் ஆகிய இவை நடைபெறும்.

9. புத புக்தி

ஸ்தானம் விடுபடுதலும், தனது சுற்றத்தாரால் பயமுண்டாகுதலும் புத்திர சோகமும், எண்ணிய காரியம் கை கூடாமையும் நடைபெறும்.

## 9. சுக்கிர தசை

1. சுக்கிர புக்தி

ஆபரணங்கள், முத்துக்குடை, குதிரை, யானை இவைகளுண்டாகுதலும், துன்பம் நீங்கி இன்பம் பெறும் நாளில் பொருட்களின் சேர்க்கையும், எளிமை அல்லது பரிதாப நிலையும், தோளில்,



https://www.facebook.com/ebooksintamil/

Hariram Thejus

www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

அல்லது வமிசத்தில் துக்கமும் ஆகிய இவை ஐப்பசி மாதத்தி லுண்டாகுதலும் நடைபெறும்.

**2. சூரிய புக்தி**

துன்பம், தனக்குறைவு, அரசருடன் கொடிய பகையுண்டாகு தல், மனைவிமக்கள் ஓடிவிடுதல், பலருடன் வழக்குண்டாதல், மனத்தினில் தியானம் செய்யப்படும் தெய்வ விரோதம் உற்றார் பகை ஆகிய இவை நடைபெறும்.

**3. சந்திர புக்தி**

நினைத்த காரியங் கைகூடுதல், மனையாற்பகை, இன்பந்தரும் மாதர்களுடன் சேர்க்கை ஆகிய இவை நடைபெறும்.

**4. செவ்வாய் புக்தி**

நினைத்தபடி பூமியுண்டாகுதலும், ஸ்த்ரீ மூலம் கருமநாச மும், இஷ்ட தேவதையைப் பூசித்தலும், இருவர் மூலம் பகை யுண்டாகுதலும், கண்ணில் நோயும், சரீரத்தில் குஷ்டமும் உண் டாகி விலகுதலும் ஆகிய இவை நடைபெறும்.

**5. ராகு புக்தி**

முனியைப் போன்று தவஞ்செய்தலும், புத்திரனால் அதிகம் கலகங்கள் உண்டாகுதலும், மருந்து சாப்பிடுவதால் விஷம் தலைக் கேறி அங்குமிங்கும் அலைதலும் நடைபெறும்.

**6. குரு புக்தி**

தானியம், அர்த்தம் இவற்றின் லாபமும், பிராம்மணர் களால் மிகவதிசயம் உண்டாகுதலும், ரேவதி நக்ஷத்திரம், உத்திர நக்ஷத்திரம் இவையுள்ள காலங்களில் வருத்தமுண்டாகுதலும் நடைபெறும்.

**7. சனி புக்தி**

மூலநோயினாலே கைகால் முடங்கித் திரும்புதலும், அந்த ரோகத்தினின்றும் மீளுதலும், துன்பமும், சரீரத்தில் ரோகமும், ஆலஹால விஷம் போன்று அன்னத் துவேஷமும் உண்டாகும்.

**8. புதன் புக்தி**

மனைவிமக்கள் சிறப்பும், பொருளுண்டாகுதலும், கல்வி, ஞானம், வாயினாற் பாடுதல், நல்ல சிவந்த நிறமுள்ளவனால் பல நன்மையுண்டாகுதல் ஆகிய இவை நடைபெறும்.

**9. கேது புக்தி**

துஷ்ட மிருகத்தால் அதிகத்துன்பம் உண்டாகுதலும், இஷ்ட மான மனையாளின் அனுபவத்தினால் நோயுண்டாகுதலும், நிச்சய மாய் வீட்டில் விஷந்தீண்டி மீளுதலும் ஆகிய இவை நடைபெறும்.



Hariram Thejus

https://www.facebook.com/ebooksintamil/

# கோசார பலன்

'கோ' என்னும் ஸம்ஸ்கிருதச் சொல்லுக்கு 'கிரஹங்கள்' என்று பொருள். 'சாரம்' என்பதற்கு 'அசைதல்' என்று பொருள். ஆகவே, கிரஹங்களின் அசைவினால் ஒரு தனிமனிதனுக்கு ஏற் படக்கூடிய பலனையே கோசாரபலன் என்பர்.

அதாவது—அவரவர் ஜனன காலத்தையொட்டி கணிக்கப் படுவது ஜாதகம். ஜாதகரீதியாக வரக்கூடிய பலனை ஜாதகப்பலன் என்பர். இதையே தசாபுக்தி பலன் என்றும் கூறலாம்.

ஆகாயத்தில் தினந்தோறும் அசைந்துகொண்டேயிருக்கும் கிரஹங்களின் அமைப்பைக் கொண்டு அறியப்படும் பலன் கோசார பலன்.

ஆகவே, ஒருவருடைய வருங்காலத்தைப்பற்றிக் கூறவேண்டு மானால் ஜாதகபலன், கோசாரபலன் இரண்டையும் அறிந்து முடிவுசெய்து கூற வேண்டும். அதாவது:—

(1) ஜாதகரீதியாக நல்ல பலன்தரக்கூடிய தசாபுக்திகள் நடக்க வேண்டியிருந்து, அதேசமயத்தில் கோசாரத்தில் கிரஹங் கள் நல்ல பலனைத் தருவனவாக அமைந்தால் அந்த நல்ல பலன் கள் விசேஷமாக நடக்கும்.

(2) ஜாதகபலன் நல்லதாக இருந்து, கோசாரம் கெட்ட தானால் நல்லபலன் அந்த குறிப்பிட்ட காலத்தில் குறைந்திருக்கும். நல்ல பலன்களுக்குத் தடையாம்.

(3) ஜாதக பலன் நன்றாக இராமல் கோசாரம் நன்றாக இருந்தால், அந்தக் கால அளவில் கொஞ்சம் நல்ல பலன் ஏற்படும்.

(4) ஜாதக பலன் கோசார பலன் இரண்டும் கெடுதலாக இருந்தால் அதிகமாகக் கெடுதி ஏற்படும்.

ஆகவே, கோசார பலன் ஒவ்வொருவருடைய வாழ்க்கை யிலும் இன்றியமையாததாகும். இந்நாளையப் பத்திரிகைகளில் வெளியாகும் தினப்பலன், வாரப்பலன், மாதப்பலன், போன்றவை களெல்லாம் அந்த அந்த காலத்தில் ஆகாயத்தில் நகர்ந்துகொண்டு இருக்கும் கிரகங்களின் நிலையையொட்டியதேயாகும்.



www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

அவரவருடைய ஜாதகத்தில் சந்திரன் உள்ள ராசிக்கு:—

## சூரியன்

1-ல் இருந்தால் : ஆயாசம், செல்வாக்குக் குறைவு, அலேச்சல், நோய்.
2-ல் " : பணநஷ்டம், கண்நோய்.
3-ல் " : புதிய பதவி, மதிப்பு, தனலாபம், சத்ருஜயம், ஆரோக்கியம்.
4-ல் " : ஸ்த்ரீவிரோதம், நோய்.
5-ல் " : நோய், பகைவர் பீடை.
6-ல் " : ஸ்தானலாபம், தனலாபம், சத்ருநாசம், ஆரோக்கியம்.
7-ல் " : தாழ்மை, சஞ்சாரம், வயிற்றுவலி.
8-ல் " : அரசாங்கபயம், நோய்.
9-ல் " : ஆபத்து, தாழ்மை.
10-ல் " : முயற்சியால் எல்லாம் ஜயம்.
11-ல் " : ஸ்தான லாபம், நோய் நீங்குதல், தொழிலில் லாபம், அரசாங்கத்தால் நன்மை.
12-ல் " : இடமாற்றம், பணநஷ்டம்.

## சந்திரன்

1-ல் இருந்தால் : போஜன சுகம், ஸ்த்ரீ லாபம், சயனசுகம்;
2-ல் " : காரியவிக்னம், மானஹானி, பண நஷ்டம்.
3-ல் " : ஸ்த்ரீபோகம், வஸ்திர தனலாபம், ஜயம்.
4-ல் " : ஜலபயம், யாரிடத்திலும் அவநம்பிக்கை, பந்து பீடை, தனநாசம்.
5-ல் " : வாய்வு பீடை, சஞ்சலம், காரிய நஷ்டம்.
6-ல் " : சுகம், நோய் நீங்கல், சத்ருநாசம்.
7-ல் " : போஜனசுகம், சயனசுகம், தனலாபம்.
8-ல் " : விஷபயம், துக்கம், கலகம்.
9-ல் " : கட்டுப்படுதல், பயம், வயிற்றுநோய்.
10-ல் " : ஆக்ஞையிடுதல், முயற்சிகளுக்குரிய பலன்கள் கிடைத்தல்.
11-ல் " : பந்துவரவு, தனலாபம், சுகம்.
12-ல் " : காரிய விக்னம், தனநஷ்டம்.



Hariram Thejus

https://www.facebook.com/ebooksintamil/

## செவ்வாய்/கேது

1-ல் இருந்தால் : காரியவிக்னம், நோய், சத்ரு பீடை.
2-ல் " : திருடர்பயம், நெருப்பு பீடை, விசாரம், ராஜ கோபம், சத்ரு பாதை.
3-ல் " : தனலாபம், சத்ருஜயம், முருகன் அருள்.
4-ல் " : துஷ்டர்சேர்க்கை, வயிற்றுவலி, சுரம், ரத்தப் போக்கு.
5-ல் " : சத்ருபயம், நோய், புத்திர துக்கம்.
6-ல் " : தங்கம், செப்பு முதலிய பாத்திர லாபம், சத்ருக்கள், பயம் இவற்றினின்றும் விடுபடுதல்.
7-ல் " : நோய், மனைவிகலகம், சத்ருபீடை, அலேச்சல்.
8-ல் " : காயம், கட்டி, ரத்தப்போக்கு, க்ஷயரோகம், பித்த மயக்கம்.
9-ல் " : தனநாசம், நோய், தோல்வி.
10-ல் " : வியாதி, சத்ரு, சொரி சிரங்கு, திருடன், ஆயுதம், இவற்றால் பீடை. பின் பாகத்தில் காரியானுகூலம், காரியவிக்னம்.
11-ல் " : தனலாபம், சுகம்.
12-ல் " : தனநஷ்டம், கண்நோய், பித்த மயக்கம்.

## புதன்

1-ல் இருந்தால் : பந்துகலகம், விரோதம், வேறு தேசவாசம், தனநஷ்டம்.
2-ல் " : அவமானம் உண்டாதல், அபவாதம், மிகத் தாழ்மையான நிலே, கோபம்.
3-ல் " : அரசாங்கபயம், சத்ருபயம்.
4-ல் " : தனலாபம், குடும்பசுகம்.
5-ல் " : மனைவிமக்கள் பிரிவு.
6-ல் " : வெற்றி, சுபம், பதவிபேறுதல்.
7-ல் " : மனைவி, பிரிவு, கலகம்.
8-ல் " : வெற்றி, புத்ரசுகம், வஸ்திர தனலாபம், மகிழ்ச்சி.
9-ல் " : உடல்நலம் குன்றுதல், தீங்கு.
10-ல் " : தனலாபம், சுகம், ஸ்த்ரீபோகம்.
11-ல் " : மனைவிமக்கள் சுகம், மகிழ்ச்சி.
12-ல் " : தோல்வி, சத்ருபீடை, நோய்.



www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

## குரு

1-ல் இருந்தால் : நிலைமாற்றம், கலகம், மந்தநிலை.
2-ல் " : தனலாபம், சத்ருஜெயம்.
3-ல் " : பதவிநீக்கம், விக்னம்.
4-ல் " : பந்து-சகோதரமூலம் துக்கம், சுகமின்மை.
5-ல் " : பணலாபம், புத்திரலாபம், ஸ்த்ரீசுகம்.
6-ல் " : சுகவீனம்.
7-ல் " : பணலாபம், விவாகாதி சுபம், செல்வாக்கு.
8-ல் " : துக்கம், நோய் கட்டுப்படுதல், நிலைமாற்றம், மரணத்திற்கொப்பான கஷ்டம்.
9-ல் " : மனைவிமக்கள் சுகம், தனலாபம், வெற்றி.
10-ல் " : பதவி துறத்தல், பணநஷ்டம்.
11-ல் " : நினைத்தது ஜயம், தனலாபம், ஸ்தான லாபம்.
12-ல் " : தூரதேசம் போதல், துக்கம், தன நஷ்டம், நிலைமாற்றம்.

## சுக்ரன்

1-ல் இருந்தால் : போஜனசுகம், ஸ்த்ரீ சுகம், சயனசுகம்.
2-ல் " : தனலாபம், ராஜாங்க கௌரவம், சுகம்.
3-ல் " : மித்திரன், சரீர ஆரோக்கியம், மரியாதை, புத்திரன் பிறத்தல், புதிய ஸ்தானம் கிடைத்தல், சந்தோஷம்.
4-ல் " : பந்துக்கள் சேர்க்கை, செல்வாக்கு.
5-ல் " : தனலாபம், மித்ரலாபம், குருதரிசனம்.
6-ல் " : காரிய விக்னம்.
7-ல் " : பெண்மூலம் பலவித உபத்திரவங்கள்.
8-ல் " : வாழ்க்கை வசதி, ஸ்த்ரீசுகம்.
9-ல் " : தனலாபம், ஸ்த்ரீசுகம், மகிழ்ச்சி.
10-ல் " : ஸ்த்ரீமூலம் கலகம், அவமானம்.
11-ல் " : மிஷ்டான்னம், தனலாபம்.
12-ல் " : தனலாபம், வஸ்திராபரணாதி லாபம்.

## சனி/ராகு

1-ல் இருந்தால் : நெருப்புபயம், வேறுதேசம் போதல், பந்து நாசம், ரோகம்.



https://www.facebook.com/ebooksintamil/

2-ல் ,, : குடும்பப் பிரிவு, தனநஷ்டம், தூரதேச சஞ்சாரம், திருட்டு பயம்.
3-ல் ,, : நாற்கால் பிராணி லாபம், சுகம், காரிய ஜயம்.
4-ல் ,, : தாயின் பிரிவு, வேறு தேசவாசம், கலகம்.
5-ல் ,, : மனைவி மக்கள் பிரிவு, துக்கம்.
6-ல் ,, : சத்ரு ஜயம், ரோக நிவ்ருத்தி, வெற்றி.
7-ல் ,, : தாழ்ந்த பெண் சேர்க்கை, தூரதேசம் செல்லுதல்.
8-ல் ,, : முயற்சி விக்னம், பந்துப் பிரிவு, வேறு தேசம் செல்லுதல்.
9-ல் ,, : சத்ரு விருத்தி, க்ட்டுப்படுதல், காரிய ஹானி.
10-ல் ,, : மார்வலி, வித்தை, புகழ் நாசம்.
11-ல் ,, : ஸ்த்ரீ போகம், தனலாபம், தானிய லாபம்.
12-ல் ,, : பலவித துக்கம், தனநஷ்டம், தூரதேசம் செல்லுதல்.

குறிப்பு: அந்த அந்த வருஷத்துப் பஞ்சாங்கத்தை வைத்துக் கொண்டு ஒரு குறிப்பிட்ட மாதத்தில் அல்லது வாரத்தில் கிரகங்களுடைய சஞ்சாரத்தைக் கட்டத்தில் அமைத்துக் கொள்ளவும். பிறகு தமது சந்திர ராசியிலிருந்து அந்த அந்தக் கிரகம் எந்த இடத்தில் இருக்கிறதென்பதை எழுதி, அதற்கு நேராக அந்தக் கிரகம் அந்த ஸ்தானத்தில் இருப்பதால் ஏற்படும் பலனை எழுதவும். இப்படி ஒன்பது கிரகங்களுக்கும் எழுதிய மொத்த பலனைக் கூர்ந்து கவனிக்கவேண்டும். அப்பொழுது நல்ல பலன் அதிகமானால் நல்லதே நடக்குமென்றும், கெட்டது அதிகமானல் கெட்டது நடக்குமென்றும், இரண்டும் கலந்து இருந்தால் நல்லதும் கெட்டதும் நடக்குமென்றும் முடிவு செய்யவேண்டும். ஒன்பது கிரகங்களில் சனியும் குருவும் ஒரு ராசியில் முறையே 2½ வருஷங்களும், ஒரு வருஷமுமாக சஞ்சாரம் செய்வதால் பொதுவாக அவர்களுடைய கோசார நிலையையொட்டியே நல்லதோ கெட்டதோ நடைபெறும் என்று உணரவேண்டும்.

---



Hariram Thejus

www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

## கோசாரத்தில் குரு பலன்

''ஜென்மராமர் வனத்திலே சீதையை சிறைவைத்ததும்
தீதிலாதொரு மூன்றிலே துரியோதனன் படைமாண்டதும்
இன்மை யெட்டினில் வாலி பட்டமிழந்து போம்படியானதும்
ஈசனுரொரு பத்திலே தலையோட்டிலே இரந்துண்டதும்
தர்மபுத்திரர் நாலிலே வனவாசமப்படி போனதும்
சத்தியமாமுனி யாறிலே யிருகாலிலே தலை பூண்டதும்
வன்மையுற்றிட ராவணன்முடி பன்னிரண்டில் விழ்ந்ததும்
மன்னுமா குருசாரி மாமனை வாழ்விலாதுறு மென்பவே.''

ஜென்மத்தில் குரு நின்றால்:—சிறைப்படுதல்.
மூன்றில்:- தன்னுடைய குடும்ப நாசம்.
நான்கில்:- இடம் மாறுதல்.
ஆறில்:- கைகால்களில் பந்தனம் கிடைத்தல்.
எட்டில்:- தன்னுடைய கீர்த்தி மறைதல்.
பத்தில்:- தரித்திரமாகிப் பிச்சை எடுத்தல்.
பன்னிரண்டில்:- கெண்டதோஷம் ஏற்படுதல்.

(மற்ற 2,5,7,9,11 ராசிகளில் சுபம்)

## கோசாரத்தில் சனியின் பலன்

''பனிரெண்டே ழெட்டொன்பான்
    பத்தைந்தை நான்கிரண்டொன்றிற்றன்
சனியனே யிருந்தா நட்டந்
    தன முயிர் சேதமாகும்
தனிச்சிறை மானபங்கந்
    தன்னறி வாலே மோசம்
மனை விட்டு மாடிவிட்டு
    மறுநகர மேகுவானே.''

ஜென்மத்தில் சனி நிற்பதால்:-வியாதி வரும், அலைச்சல்.
இரண்டில்:-உயிருக்கு பயம், பணக்கஷ்டம்.
நான்கில்:-வேறு நகரம் குடிபோகுதல், முடக்கம்.
ஐந்தில்:-புத்திர சோகம், புத்திமந்தம்.
ஏழில்:-மனைவிக்குத் தோஷம்.
எட்டில்:-வியாதி, வறுமை.
பத்தில்:-ஜீவன பங்கம்.
பன்னிரண்டில்:-தரித்திரம், சயனசுகவீனம். 3, 6, 11-ல் நன்று.



Hariram Thejus

https://www.facebook.com/ebooksintamil/

## ஏழரை யாண்டுச் சனி

ஒரு மனிதனின் ஜாதகத்தில் சந்திரன் உள்ள ராசிக்கு 12-வது ராசி, 1-வது ராசி, 2-வது ராசி இவைகளில் கோசாரப்படி சனி பகவான் (ஒவ்வொரு ராசியிலும் இரண்டரை வருடங்கள் வீதம்) சஞ்சாரம் செய்வதையே $(3 \times 2\frac{1}{2} = 7\frac{1}{2})$ ஏழரைநாட்டுச் சனி என்பார்கள். இதை ஏழரை ஆண்டுச் சனியெனலாம்.

இந்த ஏழரை ஆண்டுக் காலத்தில் தனி மனிதனுடைய வாழ்க்கையில் பண நஷ்டம், உத்யோக நஷ்டம், பலவித நோய்கள், சிறை வாசம், தண்டனை போன்ற பலவிதமான இன்னல்கள் உண்டாகும்.

இந்த $7\frac{1}{2}$ ஆண்டுக் சனி ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் மூன்று முறை வரலாமென்றும், முதல் $7\frac{1}{2}$ ஆண்டுச் சனியை 'மங்கும் சனி' என்றும், இரண்டாவதை 'பொங்கும் சனி' என்றும், மூன்றாவதை 'மரணச் சனி' என்றும் கூறுவதுண்டு.

தசாபுக்திகள் அனுகூலமாக இருப்பவர்களுக்கு ஓரளவு சிரமம் குறைவாக இருக்கலாம். ஆயினும் சனிபகவானுக்கு முறைப்படி தக்க புரோகிதர்களைக்கொண்டு சாந்தி செய்வதுடன், கீழ்க்கண்ட ஸ்லோகங்களையும் ஸதா ஜபம் செய்துகொண்டிருந்தால், சிரமங்கள் வந்தாலும் அவை சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கிவிடும்:

### சனி ஸ்தோத்ரம்

''கோணஸ்த$^{2}$: பிங்க$^{3}$ளோ ப$^{3}$ ப்$^{4}$ ரு:
    க்ருஷ்ணோ ரௌத்$^{3}$ராந்தகோ யம: |
ஸௌரீ ஸனைஸ்சரோ மந்த$^{3}$:
    பிப்பலாதே$^{3}$ந ஸம்ஸ்துத: ||

நமஸ்தே கோணஸம்ஸ்த்தா$^{2}$ய
    பிங்க$^{3}$ளாய நமோஸ்து தே |
நமஸ்தே ரௌத்$^{3}$ ர தே$^{3}$வாய
    நமஸ்தே சாந்தகாய ச ||

★ பொதுவாக ரிஷபம், துலாம், மகரம், கும்ப ராசிக் காரர்களுக்கும் $7^{1}/_{2}$ச் சனி பாதகம் அதிகம் இராது என்பது சிலர் கருத்து



www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

https://www.facebook.com/ebooksintamil/

# ஜாதக யோகங்கள்

ஜாதகத்தில் ஒரு கிரஹத்திற்கும் மற்றொரு கிரஹத்திற்கும் உள்ள சம்பந்தம்தான் ''யோகம்'' என்பார்கள். இம்மாதிரி யோகங்கள் சுமார் 300க்கு மேற்பட்டவை. அவைகளிலே முக்கியமான சிலவற்றை இங்கு குறிப்பிட்டுள்ளோம்.

## சந்திர யோகங்கள்

1. துருதுரா யோகம்:— சந்திரனுக்கு முன்னும் பின்னும் ராசிகளில் சூரியன், ராகு கேதுவைத் தவிர இதர கிரஹங்கள் இருப்பின், இந்த யோகம் ஏற்படும். இதனுடைய பலன்கள், சம்பத்து, வாகனங்கள், நல்ல குணங்கள்.

2. அநபா யோகம்:— சந்திரனுக்கு 12-வது ராசியில் ராகு கேதுக்களைத் தவிர கிரகங்கள் இருப்பது, இதன் பலன்கள்; நல்ல ஆரோக்கியமும் பேரும் புகழும் உண்டாகும்.

3. சுநபா யோகம்:— சந்திரனுக்கு 2-ல் சூரியன் ராகு கேதுக்களைத் தவிர மற்ற கிரகங்கள் இருப்பது. உழைத்து சம்பாதித்தல், நல்ல புத்திமான், ராஜாவுக்குச் சமானம்.

4. கேமத்துருமம்:-- சந்திரனுக்கு பின்னும் முன்னும் கிரகங்கள் இல்லாமை. இது ஒரு பொல்லாத யோகம். தரித்திரமும் பீடையும் உண்டாகும்.

**ஆனால் சந்திரனுக்கு கேந்திரத்தில் ஏதேனும் ஒரு கிரஹம் இருந்தால் இந்த தோஷ பரிஹாரமாகும்.**

5. கேசரி யோகம் அல்லது கஜகேசரி யோகம்:— சந்திரனுக்கு ஏதேனும் ஒரு கேந்திரத்தில் (1,4,7,10-ல்) பிரஹஸ்பதி இருப்பது. இது ஒரு நல்ல யோகம். நல்ல பெயரும் புகழும் உண்டு. தீர்க்க ஆயுள், பண வருவாய் பகைவர்களை வெல்லும் திறமை.

6. சந்திரமங்கள யோகம்:— சந்திரன், செவ்வாய் சேர்க்கை. இதன் பலன்கள் நிலச் சொத்து, பேரும் புகழும். ஆயினும் சில சமயத்தில் மனக்கோளாறு அல்லது சஞ்சலம் உண்டாகலாம்.

7. அதி யோகம்:-- சந்திரனுக்கு 6,7,8 வீடுகளில் சுபர்கள் குரு, புதன், சுக்கிரன் ஒன்றாகவோ அல்லது தனித்தனியாகவோ நிற்பது. இது ஒரு பலமான யோகம். இந்த யோகம் உடையவர்கள் பெரும்பாலும் மிகப்பெரிய உத்தியோகங்களிலே இருப்பார்கள். போலீஸ் முதலான துறைகளிலே ஈடுபடுவோர். நல்ல பண



Hariram Thejus

https://www.facebook.com/ebooksintamil/

வசதி உண்டு. பேரும் புகழும் உண்டு. இதேபோல் லக்னத்திற்கு 6,7,8-ல் சுபர்கள் இருந்தால் அது லக்ன அதியோகம் எனப்படும். அதுவும் ஒரு நல்ல யோகமே.

8. சகட யோகம்:— சந்திரனுக்கு குரு 8 அல்லது 12-ல் இருந்தால் சகடம் எனப்படும். இந்த யோகத்தில் பிறந்தவர்கள் சக்கரம் போல் நிலையில்லாத வாழ்க்கையே பெறுவர். சதா கஷ்டங்கள் ஏற்படும்.

## சூரிய யோகங்கள்

1. வேசி யோகம்:— சூரியனுக்கு 2-ல் சந்திரன். ராகு கேதுக்களைத் தவிர ஏதேனும் கிரஹம் இருப்பது. பண வருவாய், சத்ருக்கள் ஜெயம்.

2. வாசி யோகம்:— சூரியனுக்கு 12-ல் சந்திரன் ராகு கேதுக்களைத் தவிர மற்ற கிரஹம் இருப்பது, பேரும் புகழும் உண்டாகும்.

3. சுப உபயசாரி யோகம்:— சூரியனுக்கு இரு பக்கங்களிலேயும் (இருராசிகளிலேயும்) கிரகங்கள் இருப்பது. நல்ல பண வருவாய், பேரும் புகழும் உண்டாகும்.

## பஞ்ச மஹாபுருஷ யோகங்கள்

1. பத்ர யோகம்:-- புதன் ஆட்சி அல்லது உச்சத்தில் லக்னத்திற்கோ அ சந்திரனுக்கோ கேந்திரத்தில் நிற்பது. கம்பீரத் தோற்றம், சபைகளில் பேசும் திறமை, நல்ல பண வருவாய்.

2. ருசக யோகம்:— அங்காரகன் ஆட்சி அல்லது உச்சத்தில் நின்று லக்னத்திற்கோ அல்லது சந்திரனுக்கோ கேந்திர திரிகோணங்களில் இருப்பது. நல்ல பேரும் புகழும், தீர்க்காயுள், பண வருவாய், சத்ருக்களை வெல்லும் திறமை, உத்தரவுகளைப் பிறப்பிக்கும் பெரிய உத்தியோகங்கள்.

3. சச யோகம்:— சனி பகவான் ஆட்சி உச்சங்களில் மது கேந்திரத்தில் நிற்பது. நல்ல படிப்பு, சொத்து, வாகனங்கள் பெரிய உத்தியோகம். ஆயினும் பொல்லாத குணம் உள்ளவன்.

4. ஹம்ஸ யோகம்:— குரு பகவான் ஆட்சி உச்சம் பெற்று லக்னத்திற்கோ, சந்திரனுக்கோ கேந்திரத்தில் நிற்பது. நல்ல பேருள்ள சீமான், பண வருவாய் உண்டு.

5. மாலவ்ய யோகம்:— சுக்கிரன் ஆட்சி உச்சம் பெற்று லக்னத்திற்கோ சந்திரனுக்கோ, கேந்திரத்தில் நிற்பது. நல்ல தோற்றமுள்ள தேகமுடையவன், பேரும் புகழும் உள்ளவன், தனவான், வாகனங்கள் உள்ளவன். காமம் அதிகம் உள்ள ஜாதகன்.



www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

https://www.facebook.com/ebooksintamil/

### அஷ்டலக்ஷ்மீ யோகம்

இராகு 6-ல் நின்று குரு கேந்திரத்தில் இருப்பானாகில் இந்த யோகமாகும். எல்லாவித சுகங்களும் சந்தோஷங்களும் உண்டு.

### தர்ம கர்மாதிபதி யோகம்

9க்கும் 10க்கும் அதிபதிகள் ஒன்று கூடுவதோ அல்லது பார்ப்பதோ அல்லது பரிவர்த்தனமோ உண்டெனில், இந்த யோகமாகும். நல்ல புத்திமான். பெரும் பதவி, பண வசதி பேரும் புகழும் உண்டாகும்.

### அகண்ட சாம்ராஜ்ய யோகம்

2, 9 அல்லது 11க்குடையவள் ஆட்சி உச்சம் பெற்று பலமாகி நின்று, குரு ஐந்துக்கோ அல்லது பத்துக்கோ அதிபதியாகி கேந்திரங்களில் இருந்தால் இந்த யோகமாகும். தீர்க்க ஆயுள், நல்ல பண வசதி, பேரும் புகழும் உண்டாகும்.

### வசுமதி யோகம்

சுபக்கிரகங்கள் உபசய வீடுகளில் (3, 6, 10, 11) இருப்பது. நல்ல பண வசதி பேரும் புகழும், பெரும் உத்யோகம்.

### குரு சண்டாள யோகம்

பிரஹஸ்பதிக்கு ராகு, கேது அல்லது சனியின் சேர்க்கை.

ஜாதகன் மதப்பற்று இல்லாதவன். கடவுள் பேரில் நம்பிக்கை இல்லாதவன்.

### கால சர்ப்ப யோகம்

லக்னமும் எல்லாக் கிரஹங்களும் ராகு கேது இவர்களின் மத்தியில் இருப்பது. கால சர்ப்ப யோகத்தில் பிறந்தவர்கள் அனேக கஷ்டங்களை அனுபவித்து தன்னுடைய சுய உழைப்பினால் முன்னேறக் கூடியவர்கள்.

### விபரீத ராஜ யோகம்

துர்ஸ்தானம் என்று சொல்லக்கூடிய 6, 8, 12 அதிபதிகள் ஒன்று கூடியோ அல்லது தனித்தனியாகவோ 6, 8, 12 வீடுகளில் இருப்பது. இந்த ஜாதகத்தில் பிறந்தவர்கள் ஏழையாய் இருந்தாலும் ஒருசமயத்தில் திடீரென நினைக்க இயலாத ராஜ யோகத்தை அடைந்து பணக்காரர் ஆகிவிடுவார்கள்.

### நீசபங்க ராஜ யோகம்

கிரகங்கள் தம் நீச ராசியில் இருந்தால் நீசராவார். ஆயினும் இவர்கள் நின்ற ராசிநாதன் ஆட்சியோ உச்சமோ பெற்றாலும், அல்லது லக்னத்திற்கோ சந்திரனுக்கோ கேந்திரத்தில் இருந்தாலும் நீசம் பங்கமாகி, 'ராஜயோகம்' வருகிறது.



இவர்களுக்கும் திடீர் சம்பத்துகளும் பெயரும் புகழும் உண்டாகும்.

**குறிப்பு:**— ஜாதகங்களிலே நல்ல யோகங்கள் இருப்பது மட்டும் போதாது. அக்கிரகங்களின் தசைகள் வயது காலத்தில் வந்தால்தான் யோகங்களுக்கும் பலன் உண்டு. மற்றும் யோகக் கிரகங்கள் துர்ஸ்தானங்களில் இல்லாமல் நல்ல இடங்களில் அமர வேண்டும். அசுபக்கிரகங்களின் சேர்க்கையோ பார்வையோ உண்டானால் யோகபங்கமாகும்.

## தசா புக்திகளில் சாந்திகள்

### சூரிய தசையில்

சூரிய புக்தியில் ருத்ராபிஷேகம்,
சந்திர புக்தியில் துர்க்கா பூஜை,
செவ்வாய் புக்தியில் ஸ்ரீ சுப்ரஹ்மணியருக்கு அர்ச்சனை,
ராகு புக்தியில் துர்க்கா ஜபம்,
குரு புக்தியில் நமக மந்த்ர பாராயணம்,
சனி புக்தியில் ஈசுவர பூஜை,
புதன் புக்தியில் விஷ்ணு பூஜை,
கேது புக்தியில் சூரிய நமஸ்காரங்கள்,
சுக்ர புக்தியில் லக்ஷ்மீ மந்த்ர ஜபம்.

### சந்திர தசையில்

சந்திர புக்தியில் துர்க்காஸூக்த ஜபம், எருமை தானம்,
செவ்வாய் புக்தியில் ஸ்கந்த பூஜை, சூரிய நமஸ்காரம்,
ராகு புக்தியில் மிருத்யுஞ்ஜய ஜபம்,
குருபுக்தியில் சிவபூஜை,
சனி புக்தி எருமை தானம்,
புதன் புக்தி ஸ்ரீ ஸூக்த ஜபம்,
கேது புக்தி ஆடு தானம்,
சுக்ர புக்தி லக்ஷ்மீ பூஜை,
சூரிய புக்தி கோதானம்.

### செவ்வாய் தசையில்

செவ்வாய் புக்தியில் சூரிய நமஸ்காரம்,
ராகு புக்தியில் மிருத்யுஞ்ஜயஜபம்,



https://www.facebook.com/ebooksintamil/
Hariram Thejus
www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

குரு புக்தியில் சிவபூஜை,
சனி புக்தியில் மிருத்யுஞ்ஜய ஜபம்.
புதன் புக்தியில் சூரிய பிரார்த்தனை.
கேது புக்தியில் ஸ்ரீருத்ர ஜபம்.
சுக்ர புக்தியில் துர்க்கா பூஜை.
சூரிய புக்தியில் கோதானம்.
சந்திர புக்தியில் கௌரீ பூஜை.

### புதன் தசையில்

புதன் புக்தியில் துர்க்கா பூஜை,
கேது புக்தியில் எருமை தானம்,
சுக்ர புக்தியில் சுத்த வெள்ளைப் பசு தானம்,
சூரிய புக்தியில் சூரிய நமஸ்காரம்,
சந்திர புக்தியில் துர்க்கா தேவீ பூஜை, ஜபம்,
செவ்வாய் புக்தியில் ஸ்கந்த பூஜை,
ராகு புக்தியில் சிவ ஸஹஸ்ரநாம அர்ச்சனை,
குரு புக்தியில் மிருத்யுஞ்ஜய ஜபம்,
சனி புக்தியில் எருமை தானம்.

### குரு தசையில்

குரு புக்தியில் ஸ்ரீருத்ர ஜபம்.
சனி புக்தியில் மிருத்யுஞ்ஜய ஜபம்.
புதன் புக்தியில் கோதானம்.
கேது புக்தியில் சிவார்ச்சனை.
சுக்ர புக்தியில் ஸ்ரீகிருஷ்ண மந்திர ஜபம்.
சூரிய புக்தியில் சூரிய நமஸ்காரம்.
சந்திர புக்தியில் ஆடு தானம்.
செவ்வாய் புக்தியில் ஆடு தானம்.
ராகு புக்தியில் தில ஹோமம்.

### சுக்ர தசையில்

சுக்ர புக்தியில் பூர்ண கும்ப தானம்.
சூரிய புக்தியில் சூரிய நமஸ்காரம்.
சந்திர புக்தியில் கௌரீ பூஜை.
செவ்வாய் புக்தியில் ஸ்கந்த பூஜார்ச்சனை.
ராகு புக்தியில் கௌரீ பூஜை.
குரு புக்தியில் ஸஹஸ்ரநாமார்சனை, ருத்ர ஜபம்.



Hariram Thejus

சனி புக்தியில் எருமை தானம்.
கேது புக்தியில் ஆடு தானம்.

### சனி தசையில்

சனி புக்தியில் பிராம்மண பூஜை.
புத புக்தியில் எருமை தானம்.
கேது புக்தியில் மிருத்யுஞ்ஜய ஜபம்.
சுக்ர புக்தியில் ஐந்து ஆடுகள் தானம்.
சூரிய புக்தியில் சூரிய நமஸ்காரம்.
சந்திர புக்தியில் வெள்ளைப்பசு தானம்.
செவ்வாய் புக்தியில் எருமை தானம்.
ராகு புக்தியில் எருமைக்கடா தானம்.
குரு புக்தியில் ஆடு தானம்.

### இராகு தசையில்

இராகு புக்தியில் தங்க ஸ்த்ரீ பிரதிமை தானம்.
குரு புக்தியில் ருத்ர ஜெபம்.
சனி புக்தியில் ருத்ராபிஷேகம்.
புத புக்தியில் விஷ்ணு ஸஹஸ்ரநாம ஜபம்.
கேது புக்தியில் நாக பிரதிஷ்டை பூஜை.
சுக்ர புக்தியில் துர்க்கா பூஜை.
சூரிய புக்தியில் சூரிய நமஸ்காரம்.
சந்திர புக்தியில் மிருத்யுஞ்ஜய ஜபம்.
செவ்வாய் புக்தியில் ஸ்கந்த மந்த்ர ஜபம்.

### கேது தசையில்

கேது புக்தியில் பிராம்மண போஜனம்.
சுக்ர புக்தியில் கௌரீபூஜை.
சூரிய புக்தியில் சிவார்ச்சனை.
சந்திர புக்தியில் மிருத்யுஞ்ஜய ஜபம்.
செவ்வாய் புக்தியில் கௌரீ பிரதிமை தானம்.
இராகு புக்தியில் எருமை தானம்.
குரு புக்தியில் தில தானம்.
சனி புக்தியில் மிருத்யுஞ்ஜய ஜபம்.
புத புக்தியில் ஐந்து ஆடுகள் தானம்.

**குறிப்பு:** ஒவ்வொரு புக்தி நடக்கும் போதும் அந்த கிரகத்திற்குரிய கிழமைகளில் விசேஷ பூஜை செய்து, அன்னதானம் செய்து வரவேண்டும்.



https://www.facebook.com/ebooksintamil/

www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

# விவாஹப் பொருத்தங்கள்

கணவன்—மனைவி என்ற பிணைப்பை வாழ்க்கையில் ஒவ்வொருவருக்கும் புனிதமான முறையில், அக்னி தேவனின் அருளோடு, பெரியோர்கள், வேதியர், பந்துமித்ர உறவினர்கள் பலரும்சேர்ந்து மங்களகரமான வாத்தியங்களுடன் அவரவர் ஆசார, அனுஷ்டான சம்பிரதாய முறைப்படி, சந்தோஷமாகச் செய்து வைக்கும் சுப காரியமே விவாஹம் என்பதாகும். இந்த சந்தோஷ நாளை எப்பொழுதும் மறக்க முடியாது. பெண்ணைக் கன்யாதானம் செய்து கொடுக்கும் பெற்றோர்களும், மருமகளாக அடையும் பாக்யம் செய்த பிள்ளை வீட்டாரும் இந்த விவாஹ நாளை ஒற்றுமையையும் சகல க்ஷேமங்களையும் சந்தோஷங்களையும் வாழ்க்கையில் ஏற்படுத்தும் ஓர் நல்ல எதிர்காலமென்று வரவேற்பார்கள். இல்வாழ்க்கை என்ற இன்ப வாழ்க்கைக்கு மணப்பெண்ணின் வருகையை அதிர்ஷ்டமாக எண்ணி மகிழ்வான் பணைப்பிள்ளை.

இப்படிப்பட்ட சுபச் சடங்கான விவாஹம் அவரவர் மரபுக்கு ஏற்ற வழக்கங்களின் வழியாக இன்றும் நடைபெறுகின்றது. விவாஹ நாள் முதல் கணவன், மனைவி என்று இருவரும் பிணைக்கப் பட்டு விடுகிறார்கள்.

### மனப் பொருத்தம் முக்கியம்

எனவே, விவாஹம் நடத்துவதற்குமுன் எவ்வளவோ விஷயங்களை நாம் அனுசரித்துப் பார்க்கவேண்டும். சதிபதிகளை ஆயிரங்காலத்துப் பயிர் என்றும், வாழையடி வாழையாக வாழ வேண்டுமென்றும், பெருவாழ்வு வாழ வேண்டுமென்றும் பெரியவர்கள் ஆசீர்வதிப்பார்கள். வளம் பெற்ற வாழ்க்கையாக அமைய வேண்டுமானுல், முதலில் ''மனப்பொருத்தம்'' மிகவும் அவசியம். பந்துத்துவம் அல்லது உறவுமுறை போய் விடுமே என்று நிர்ப்பந்தப்படுத்தி விவாஹம் செய்வதுகூடாது. பணத்துக்காக ஆசை கொண்டு, பெரிய இடம் என்று விவாஹம் செய்வதும் தவறு. 'கோத்திரமறிந்து பெண்ணைக் கொடு' என்றுர்கள். இதில் எவ்வளவோ பொருள்கள் அடங்கிக் கிடக்கின்றன. இதனை மனதில் முக்கியமாகக் கொண்டு நடத்தவேண்டும். ஆக எதிர்காலத்தில் இன்பத்துடன் வாழவேண்டிய சதிபதிகளின் இஷ்டத்தை மனதை அறிந்து விவாஹம் செய்தல் வேண்டும்.

### சகுனம் பார்த்தல்

சிலர் சகுனங்கள் பார்த்தும் சாமுத்ரிகா லக்ஷணங்களைப் பார்த்தும் விவாஹம் செய்வார்கள். ஸ்ரீமத் ராமாயணத்தை



https://www.facebook.com/ebooksintamil/

படிக்கக் கேட்டு, அந்த சுப சகுனத்தைக்கொண்டும், புஷ்பங்களை அம்பாளின் சந்நிதியில் வைத்து சகுனம் பார்த்தும் செய்கிறுர்கள். ஜாதகங்கள் இல்லாதவர்களுக்கு இவை உதவியாக இருக்கும். வேதங்களில் ஒன்றுன ஜோதிஷ சாஸ்திரத்தை அறிந்தவர்கள் ஜாதகத்தைப் பூரணமாக நம்பிச்செய்வார்கள்.

முன்காலத்தில் பெண்கள் ருதுவாகும்முன்பே விவாஹம் செய்யவேண்டும் என்ற நியமம் இருந்துவந்தது. எல்லாவித வருணத்தாரும் (பிரம்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திர ஜாதியினர்) இதன்படி செய்து வந்தார்கள். இக்காலத்தில் அப்படிப்பட்ட விவாஹங்களை பார்ப்பது மிகவும் துர்லபம். விவாஹத்தை ருது ஆவதற்கு முன்பே செய்யவேண்டும் என்று சாஸ்திரம் கூறுகிறது. ஆயினும், ராஜாங்க சட்டத்தை அனுசரிப்பது இன்றியமையாதது.

## விவாஹப் பொருத்தங்கள்

விவாஹத்திற்கு பொருத்தம் பார்க்க முயன்றுல், அனேக விதமான பொருத்தங்களைப் பார்ப்பதென்பது சிரமம். தினப் பொருத்தம், கணப் பொருத்தம், யோனிப் பொருத்தம், ரஜ்ஜுப் பொருத்தம், வசியப் பொருத்தம், வேதைப் பொருத்தம், ராசிப் பொருத்தம், ராசி அதிபதி பொருத்தம், ஸ்த்ரீ தீர்க்கப் பொருத்தம், நாடிப் பொருத்தம், கிரக மைத்திரம், மகேந்திரப் பொருத்தம், ஜாதிப் பொருத்தம் என்பன போன்ற பல பொருத்தங்களைப் பார்க்கலாம். ஆயினும் அவைகளில் 10 பொருத்தங்களைப் பார்ப்பது வழக்கத்திலுள்ளது. அவை யாவன:—

### 1. தினப் பொருத்தம்: (ஆயுராரோக்ய விருத்தி)

பெண்ணின் நக்ஷத்திரம் முதல் புருஷன் நக்ஷத்திரம் 2, 4, 6, 8, 9, 11, 13, 15, 18, 20, 24. 26வதான எண்ணிக்கையில் இருந்தால் உத்தமம். இந்த எண்ணிக்கையில் இல்லாதிருந்தால் அந்த ஜாதகத்தை விலக்கிவிடலாம்.

ஜன்ம நக்ஷத்திரம் முதல் 10-வது நக்ஷத்திரம் கர்ம நக்ஷத்திரம்.

7-வது நக்ஷத்திரம் வதம்

19-வது நக்ஷத்திரம் அனுஜென்மம்

22-வது நக்ஷத்திரத்தின் 4-வது பாதம் வைநாசிகம்

27-வது நக்ஷத்திரம் ம்ருத்யு நக்ஷத்திரம்- 27வது நக்ஷத்ரம் வேறு ராசியாகில் நீக்கவும், ஒரே ராசியாகில் உத்தமம்.

ஸ்திரீ புருஷர்களுக்கு ரோஹிணி, திருவாதிரை, மகம், விசாகம், திருவோணம், ஹஸ்தம், உத்திரட்டாதி, ரேவதி ஆகிய



Hariram Thejus

www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

8 நக்ஷத்திரங்கள் ஏக நக்ஷத்திரங்களானால், அதாவது இருவர் பிறந்ததும் ஒரே நக்ஷத்திரமானால் நன்கு பொருந்தும், உத்தமம்.

பூரம், உத்திரம், சித்திரை, புனர்பூசம், பூசம், அசுவதி, கார்த்திகை, பூராடம், உத்திராடம், மிருகசீர்ஷம், அனுஷம் இந்த 10ம் ஏக நக்ஷத்திரமானால் மத்யமம்.

மற்ற 8 நக்ஷத்திரங்களாகிற பரணி, ஆயில்யம், ஸ்வாதி, கேட்டை, மூலம், சதயம், அவிட்டம், பூரட்டாதி ஏக நக்ஷத்திரங்களானால் விலக்கவேண்டும்.

பரணி, பூராடம், ஆயில்யம், ஹஸ்தம், மிரிகசீர்ஷம், சதயம் இந்த ஆறு நக்ஷத்திரங்களும் ஏக நக்ஷத்திரங்களாக வந்தால் சுபமாகச் சில நூல்களில் சொல்லப்பட்டிருக்கிறது.

ஸ்த்ரீ நக்ஷத்திரத்திலிருந்து 7-வது நக்ஷத்திரமாக புருஷனுடையதானால் வதம் என்றும், புருஷ நக்ஷத்திரத்திலிருந்து பெண் நக்ஷத்திரம் 22-வது நக்ஷத்திரம் வைநாசிகம் என்றும் சொல்லப்படும். இந்த வத—வைநாசிகத்தை ஒதுக்க வேண்டும்.

ஆனால் திருவாதிரைக்கு—உத்திரமும்; பூரத்திற்கு — அனுஷமும்; பூசத்திற்கு—சித்திரையும்; புனர்பூசத்திற்கு—ஹஸ்தமும்; பூரட்டாதிக்கு—ரோஹிணியும்; வத வைநாசிகமானால் சுபம். கெடுதலில்லை.

உத்திராடத்திற்கு—ரேவதியும்; மூலத்திற்கு — பூரட்டாதியும் பரணிக்கு—பூசமுமானால் வத வைநாசிக தோஷமில்லை.

ஏகராசியில் பெண் நக்ஷத்திரம் முந்தியது விரும்பத்தக்கதல்ல. ஏக ராசியிலும் பரணி, அவிட்டம், பூசம் இவை புருஷ நக்ஷத்திரங்களாக வந்து பெண் நக்ஷத்திரத்திற்கு முந்தியதானாலும் விலக்க வேண்டியவை.

சதையம், அசுவினி, ஹஸ்தம், ஸ்வாதி க்ருத்திகை, பூராடம், ரோஹிணி, மகம் இந்த எட்டும் ஏக ராசியில் ஸ்த்ரீ முன்வந்தால் செய்யலாம்.

## 2. கணப் பொருத்தம் : (மங்களம்)

**தேவகண நக்ஷத்திரங்கள் :**

அசுவினி, மிருகசீருஷம், புனர்பூசம், பூசம், ஹஸ்தம், சுவாதி அனுஷம், திருவோணம், ரேவதி (9)

**மானுஷகண நக்ஷத்திரங்கள் :**

பரணி, ரோகிணி, திருவாதிரை, பூரம், உத்திரம், பூராடம், உத்திராடம், பூரட்டாதி, உத்திரட்டாதி (9)



**ராக்ஷஸகண நக்ஷத்திரங்கள் :**

கிருத்திகை, ஆயில்யம், மகம், சித்திரை, விசாகம், கேட்டை, மூலம், அவிட்டம், சதயம் (9)

பெண்ணும், பிள்ளையும் (ராக்ஷஸகணம் தவிர) ஒரே கணமாக இருந்தால் நலம்.

பெண் தேவகணமும் பிள்ளை மனுஷகணமுமாக இருந்தால் மத்திமம்; அதாவது, பரவாயில்லை.

பெண் தேவகணமும், பிள்ளை ராக்ஷஸ்கணமுமாக இருந்தால் பொருந்தாது.

பெண் மனுஷகணமும், பிள்ளை ராக்ஷஸகணமுமாக இருந்தால் பொருந்தாது.

புருஷன் ராக்ஷஸகணமும், ஸ்த்ரீ மனுஷ்யகணமுமானால் மற்ற பொருத்தங்களைக்கொண்டு ஒப்புக்கொள்ளலாம். இது மத்திம பலனைத்தான் கொடுக்கும்.

ஸ்த்ரீ ராக்ஷஸத்தை, வேறு எந்த கணத்துடன் சேர்த்தாலும் இரண்டும் ராக்ஷஸ கணமாகச் சேர்ந்தாலும் பொருந்தாது.

## 3. மாஹேந்திரப் பொருத்தம் : (ஸம்பத்து விருத்தி)

பெண் நக்ஷத்திரம் முதல் ஆண் நக்ஷத்திரம் வரை எண்ணின தொகை 4,7,10,13,16,19,22,25 ஆக வருமானால் மாஹேந்திரப் பொருத்தம் உண்டு. தம்பதிகளுக்குச் சம்பத்தைக் கொடுக்கும்.

## 4. ஸ்த்ரீ தீர்க்கம் : (ஸகல ஸம்பத்விருத்தி)

பெண்ணின் நக்ஷத்திரம் முதல் ஆண் நக்ஷத்திரம் வரை எண்ணினால் 13 நக்ஷத்திரங்களுக்குக் கீழாக ஆண நக்ஷத்திரமிருந்தால் பொருந்தாது. 13க்குமேல் இருந்தால் மிக்க சுபம் உண்டாகும். சிலர் ஏழு நக்ஷத்திரங்கள் மேல் இருந்தாலும் சேர்க்கலாம் என்பர்.

இதனுடைய பலன்:— தீர்க்க சுமங்கலியாக வாழ்ந்து சுமங்கலியாகவே முடிதல்.

## 5. யோனி கூடம்: (தம்பதிகளின் அன்யோன்ய நட்பு)

(ஒவ்வொரு நக்ஷத்திரத்திற்கும் ஒவ்வொரு மிருகம் உண்டு. ஆண், பெண்களின் நக்ஷத்திர மிருகங்களுக்கிடையே பகை இருந்தால் பொருந்தாது.



https://www.facebook.com/ebooksintamil/
Hariram Thejus
www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

| நக்ஷத்திரம் | மிருகம் | | பகை மிருகம் |
|---|---|---|---|
| அசுவினியும் சதயமும்— | குதிரை | × | எருமை |
| பரணி—ரேவதி— | யானை | × | சிங்கம் |
| பூசமும்—கிருத்திகையும்— | ஆடு | × | குரங்கு |
| ரோகிணி—மிருகசீருஷம்— | சர்ப்பம் | × | கீரி, |
| மூலமும்—திருவாதிரையும்— | நாய் | × | மான் |
| ஆயில்யமும்—புனர்பூசமும் | பூனை | × | எலி |
| மகமும்—பூரமும்— | பெருச்சாளி | × | பூனை |
| உத்திரமும்-உத்திரட்டாதியும்— | பசுக்கள் | × | புலி |
| ஸ்வாதியும்—ஹஸ்தமும்— | எருமைக்கடா | × | குதிரை |
| விசாகமும்—சித்திரையும்— | புலி | × | பசு |
| கேட்டையும்—அனுஷமும்— | மான் | × | நாய் |
| பூராடமும்—திருவோணமும்— | குரங்கு | × | ஆடு |
| பூரட்டாதியும்—அவிட்டமும்— | சிங்கம் | × | யானை |
| உத்திராடம்— | கீரி | × | பாம்பு |

இவைகளில் பகையுள்ள ஆண் பெண் நக்ஷத்திரங்களை சேர்க்கக் கூடாது.

| | | |
|---|---|---|
| பாம்பு × கீரி | | |
| யானை × சிங்கம் | | |
| குரங்கு × ஆடு | | |
| மான் × நாய் | } | ஜென்ம விரோதிகள் |
| எலி × பூனை | | |
| குதிரை × எருமை | | |
| பசு × புலி | | |

மேலே சொல்லப்பட்ட இரண்டு நக்ஷத்திரங்களில் முதல் நக்ஷத்திரம் ஆணுகவும், இரண்டாவதைப் பெண்ணுகவும் அறிந்து விவாகம் செய்தல் நலம். ஓரே இனமாக யோநி ஏற்படுவதால் தம்பகளுக்குள் ஒற்றுமை அதிகம் உண்டு. உதாரணமாக, அசுவினி சதயம் இவற்றில் அசுவினி ஆணுகவும், சதயம் பெண்ணுகவும், இரண்டும் பொருந்தியுள்ளது. இதைப்போல பார்த்துச் செய்யவும்.

## 6. ராசிப் பொருத்தம் : (வம்ச விருத்தி)

பெண் எந்த ராசியில் பிறந்தவள் என்பதையும், பிள்ளை எந்த ‌ில் பிறந்தவன் என்பதையும் தெரிந்துகொள்ள வேண்டும்.



பெண்ணின் ராசியிலிருந்து பிள்ளையின் ராசியை எண்ணிக் கொண்டு வந்தால், பிள்ளையின் ராசி 6; 12, 2, 8 இப்படியாக வரின் துக்கம், கலகம், சுமாரான பலனைத் தரும் வாழ்க்கை என்று அறியவேண்டும்.

புருஷ ராசியிலிருந்து எண்ணிய பெண் ராசியின் எண்ணிக்கை 6, 12, 2, 8 ஆக இருந்தாலும் மேலே சொன்ன பலன்கள் தான் ஏற்படும்.

பெண்ணின் ராசியும், புருஷனின் ராசியும் ஓரே ராசியாக இருந்தால் சுபம். 7-வது ராசியாக இருந்தால் சுபம். 7-வது ராசியாக வருவதிலும் கும்ப-சிம்மமும், கடக-மகரமும் உதவாது.

1, 3, 4, 5, 9, 10, 11ஆக வந்தாலும் சுமாராகக்கொள்ளலாம்.

## 7. ராசி அதிபதிப் பொருத்தம்: (சந்ததி விருத்தி)

| கிரகம் | நட்பு | சமம் | பகை |
|---|---|---|---|
| சூரியனுக்கு | ..சந், அங், குரு | புதன் | சு, சனி, ரா, கேது |
| சந்திரனுக்கு | ..சூரியன், புதன் | அ.கு.சு, சனி | ராகு, கேது |
| அங்காரனுக்கு | ..சூரி, சந், குரு | சுக், சனி | புத, ராகு, கேது |
| புதனுக்கு | ..சூரியன், சுக் | அங், குரு, சனி, ராகு, கேது | சந்திரன் |
| குருவுக்கு | ..சூரி, சந், அங் | ..சனி, ரா, கே | புதன், சுக்கிரன் |
| சுக்கிரனுக்கு | ..பு, சனி, ரா, கேது | அங்காரகன், குரு | சூரியன், சந்திரன் |
| சனிக்கு | ..பு, சுக், ரா, கேது | குரு | சூரி, சந், அங் |
| இராகுக்கு } கேதுக்கு } | ..சனி, சுக்கிரன் | புதன், குரு | சூரி, சந், அங் |

(1) வதூவரர்களின் ராசி அதிபதிகள் மேற்கண்ட கட்டத்தில் காட்டியபடி, ஒருவருக்கொருவர் நட்பு கிரகமாக இருந்தால் உத்தமம்.

(2) ஒருவருக்குச் சமமாகவும் மற்றொருவருக்கு மித்திரமாகவும் இருந்தாலும் உத்தமம்.



https://www.facebook.com/ebooksintamil/
Hariram Thejus
www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

(3) ஒருவருக்குச் சத்துருவாகவும் மற்றொருவருக்கு மித்திரமாகவும் இருந்தால் மத்திமம்.

(4) ஒருவருக்குச் சமமாகவும் மற்றொருவருக்குச் சத்துருவாகவும் இருந்தால் பொருத்தமில்லை.

(5) இருவருக்கும் சத்துருவானாலும் பொருத்தமில்லை.

## 8. வசியப் பொருத்தம் : (அன்யோன்ய வசியம்)

| பெண் ராசி | வரன் ராசி |
|---|---|
| மேஷம் | சிங்கம், விருச்சிகம் |
| ரிஷபம் | கடகம், துலாம் |
| மிதுனம் | கன்னி |
| கடகம் | விருச்சிகம், தனுசு |
| சிம்மம் | மகரம் |
| கன்னி | ரிஷபம், மீனம் |
| துலாம் | மகரம் |
| விருச்சிகம் | கடகம், கன்னி |
| தனுசு | மீனம் |
| மகரம் | கும்பம் |
| கும்பம் | மீனம் |
| மீனம் | மகரம் |

மற்ற ராசிகள் பொருந்தா.

இந்தப் பொருத்தமிருந்தால் தம்பதிகளிடையே நல்ல ஒற்றுமை நிலவும்.

## 9. ரஜ்ஜுப் பொருத்தம் : (தீர்க்க சுமங்கலியாயிருப்பாள்)

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | மிருகசீர்ஷம் | சித்திரை | அவிட்டம் | சிரஸு |
| 2. | ரோகிணி, | திருவாதிரை | அஸ்தம் | கண்டம் |
| | சுவாதி | திருவோணம் | சதையம் | ,, |
| 3. | கிருத்திகை | புனர்வசு | உத்திரம் | உதரம் |
| | விசாகம் | உத்திராடம் | பூரட்டாதி | ,, |
| 4. | பரணி | பூசம் | பூரம் | ஊரு |
| | அனுஷம் | பூராடம் | உத்திரட்டாதி | ,, |
| 5. | அசுவினி | ஆயில்யம் | மகம் | பாதம் |
| | கேட்டை | மூலம் | ரேவதி | ,, |



மணப்பெண், பிள்ளைகளுடைய நக்ஷத்திரங்கள் ஒரே ரஜ்ஜுவாக இல்லாமலிருப்பதே ரஜ்ஜுப்பொருத்தமெனப்படும். ஒரே ரஜ்ஜுவாக இருப்பது :-

சிரசு ரஜ்ஜுவானால் : புருஷன் மரணம்.
கண்டரஜ்ஜுவானால் : பெண் மரணம்
உதரரஜ்ஜுவானால் : புத்ர தோஷம்
ஊரு ரஜ்ஜுவானால் : பண நஷ்டம்
பாதரஜ்ஜுவானால் : பிரயாணத்தில் தீமை

எனவே, ஒரே ரஜ்ஜுவில்லாமல் பார்த்துச் செய்தால் அந்த பெண் தீர்க்க ஸுமங்கலியாக வாழ்வாள்.

## 10. வேதைப் பொருத்தும் : (துக்கம் தீங்குதல்)

| | |
|---|---|
| அசுவினிக்கு—கேட்டை— | வேதையாகும் |
| பரணிக்கு—அனுஷம்— | ,, |
| கிருத்திகைக்கு—விசாகம் | ,, |
| ரோஹிணிக்கு—சுவாதி— | ,, |
| திருவாதிரைக்கு—திருவோணம் | ,, |
| புனர்பூசத்திற்கு—உத்திராடம் | ,, |
| பூசத்திற்கு—பூராடம்— | ,, |
| ஆயில்யத்திற்கு—மூலம்— | ,, |
| மகத்திற்கு—ரேவதி— | ,, |
| பூரத்திற்கு—உத்திரட்டாதி— | ,, |
| உத்திரத்திற்கு—பூரட்டாதி— | ,, |
| ஹஸ்தத்திற்கு—சதயம்— | ,, |

வேதை என்றால், ஒன்றுக்கொன்று தாக்குதல் என்று பொருள். எனவே, வேதையில் இருக்கும் நக்ஷத்திரங்கள் பொருந்தா. தவிர, மிருகசீர்ஷம், சித்திரை, அவிட்டம், இம்மூன்று நக்ஷத்திரங்களுக்குள் ஒன்றுக்கொன்று வேதையுண்டு. ஆகவே அவை பொருந்தா. ஒன்றுக்கொன்று வேதை இல்லாமலிருந்தலே வேதைப் பொருத்த மெனப்படும்.

## நாடி பொருத்தம்

| | | | | |
|---|---|---|---|---|
| → | அசுவினி | பரணி | க்ருத்திகை | |
| | திருவாதிரை | மிருகசீர்ஷம் | ரோஹிணி | ← |
| → | புனர்வசு | பூசம் | ஆயில்யம் | |
| | உத்திரம் | பூரம் | மகம் | ← |
| → | ஹஸ்தம் | சித்திரை | ஸ்வாதி | |
| | கேட்டை | அனுஷம் | விசாகம் | ← |
| → | மூலம் | பூராடம் | உத்திராடம் | |
| | சதயம் | அவிட்டம் | திருவோணம் | ← |
| → | பூரட்டாதி | உத்திரட்டாதி | ரேவதி | |

ஸ்த்ரீ புருஷ நக்ஷத்திரங்கள் வெவ்வேறு நாடியில் இருப்பது நன்று.



https://www.facebook.com/ebooksintamil/
Hariram Thejus
www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

முக்யமாக பித்தம் என்கிற மத்ய நாடியில் இருப்பது நல்லதல்ல.
இதை மேலும் இவ்வாறு பிரிப்பதும் உண்டு

| | | | | |
|---|---|---|---|---|
| → | அசுவினி 1 | அசு 2 | அஸ் 3 | |
| | பரணி 2 | பரணி 1 | அஸ் 4 | ← |
| → | பரணி 3 | பரணி 4 | க்ருத். 1 | |
| | க்ருத் 4 | க்ருத் 3 | க்ருத் 2 | ← |

……… இந்த க்ரமத்தில் பார்ப்பது வழக்கம்

## முக்கியமான பொருத்தங்கள்

| | |
|---|---|
| தினப்பொருத்தம் | |
| கணப்பொருத்தம் | இந்த 5 பொருத்தங்களும் |
| யோனிப்பொருத்தம் | இருந்தால் விவாஹம் |
| ராசிப்பொருத்தம் | செய்யலாம். |
| ரஜ்ஜுப்பொருத்தம் | |

வதூவராகளின் நக்ஷத்திரங்களைக்கொண்டு பார்க்கும் இந்த பொருத்தங்களுடன் ஜாதக ரீதியாக அங்காரக தோஷம், ஸதிபதிகளின் ஒற்றுமை, ஆயுள், சந்தான பாக்யம், அதிர்ஷ்ட யோகங்கள் இவைகளையும் பார்க்க வேண்டும். முக்கியமாக ஆயிரங் காலத்துப் பயிர்களாக இருக்க வேண்டிய ஸதிபதிகளுக்கு மனப் பொருத்தம் இருக்க வேண்டும். வலுக்கட்டாயமாக விவாஹங்களைச் செய்தல் கூடாது.

### ஜாதகத்தைப் பொருத்தும் விதம் :

எந்த ஜாதகமாயினும் முதன்முதலில் தனித்தனியே இரு பாலரின் (பெண்-பிள்ளை) ஆயுளையும், தசாபலன்களையும் அறிந்து கொள்ள வேண்டும். ஏழாமிடத்தைக் கொண்டு, இந்த ஜாதகத்துக்கு இது பொருந்துமா என்று பார்த்துக் கொள்ளல் நலம். பின், மேலே சொல்லப்பட்டுள்ள தசப்பொருத்தங்களும் சரியாக இருந்தாலும், லக்னம், சந்திரன், சுக்கிரன் இந்த மூன்றையும் லக்னம் போல் வைத்துக் கொண்டு, இதற்கு 2, 4, 7, 8, 12 ஆகிய இந்த இடங்களில் பாபிகள் இல்லாமலிருக்கிறார்களா என்று பார்த்து யோசித்துப் பொருத்த வேண்டும்.

பாபிகள் இருப்பின், இருபாலருக்கும் அப்படியே இருக்க வேண்டும். ஒருவருக்கு (பெண்ணுக்கு) லக்னத்துக்கு 2-ல் செவ்வாய் இருந்து, பிள்ளைக்கு லக்னத்துக்கு 8லோ, சந்திரனுக்கு 12லோ, அல்லது சுக்கிரனுக்கு 7லோ இருந்தாலும் போதும். அதாவது அந்தப் பாப சம்பந்தம், ஏதாவது ஒரு இடத்தில் இருத்தல் வேண்டும். இதற்கு 'தோஷஸாம்யம்' என்று பெயர்.

### குடும்பத்திற்கு ஆகாத நக்ஷத்திரங்கள் :

பெண் நக்ஷத்திரம் மூலமானால் மாமனருக்கு ஆகாது.



பெண் நக்ஷத்திரம் ஆயில்யமானால் மாமியாருக்கு ஆகாது.
பெண் நக்ஷத்திரம் கேட்டையானால் மூத்த மைத்துனருக்கு ஆகாது.
பெண் நக்ஷத்திரம் விசாகமானால் இளைய மைத்துனருக்கு ஆகாது.

சுத்தமான ஜாதகங்களாக இருந்தால் மேற்கண்ட நக்ஷத்திர தோஷங்கள் அனுபவத்திற்கு வருவதில்லை. இந்த தோஷங்கள் ஆண் நக்ஷத்திரத்துக்குக் கிடையாது என்பது அறியத்தக்கது.

### மிகச் சிறந்த நக்ஷத்திரங்கள் :

விவாஹப் பொருத்தத்தைப் பார்க்காமலே, மிருக சீருஷம், மகம், சுவாதி, அனுஷம்-இந்த நான்கு நக்ஷத்திரங்கள் பெண் அல்லது ஆண் நக்ஷத்திரமாக இருந்தால் விவாஹம் செய்யலாம்.

## வதூவரர் ராசிகளுக்கு ஷஷ்டாஷ்டகதோஷம்

பெண் ராசிக்குப் பிள்ளை ராசி 6-வதாக வந்தால் பிள்ளை ராசிக்குப் பெண் ராசி 8-வதாக வரும். அதேபோல் பெண் ராசிக்குப் பிள்ளை ராசி 8-வதாக வந்தால் பிள்ளை ராசிக்குப் பெண் ராசி 6-வதாக வரும். இதற்கு (6) அஷ்டக (8) தோஷம் என்று பெயர். இந்த மாதிரியான ஷஷ்டாஷ்டகங்கள் உள்ள வதூவரர்களுக்கு விவாகம் செய்தால் அவர்கள் வாழ்க்கை எப்பொழுதும் சண்டை சச்சரவுகள் நிறைந்ததாக இருக்குமென்றும் அந்த தம்பதிகளிடையே ஒற்றுமை இருக்காதென்றும் கூறுவர்.

ஆனால் இம்மாதிரி அமையும் ஷஷ்டாஷ்டகங்களில் சில அனுகூல ஷஷ்டாஷ்டகங்களும் உண்டு. இவைகளில் மேற் கூறியதோஷம் கிடையாது. தம்பதிகளுக்கு ஒற்றுமையே இருக்கும். அவைகளைக் கீழே காண்க :—

ராசி என்பது சந்திரன் இருக்கும் இடம்

## அனுகூல ஷஷ்டாஷ்டகம்

| | | | |
|---|---|---|---|
| (1) மேஷத்திற்கும் | — | கன்னிக்கும் | ஷஷ்டாஷ்டக தோஷம் இல்லை |
| (2) தனுசுக்கும் | — | ரிஷபத்திற்கும் | |
| (3) துலாத்திற்கும் | — | மீனத்திற்கும் | |
| (4) கும்பத்திற்கும் | — | கடகத்திற்கும் | |
| (5) மிதுனத்திற்கும் | — | விருச்சிகத்திற்கும் | |

அதாவது மேஷ ராசி பெண் ராசியாக இருந்து புருஷன் ராசி கன்னியாக (6-வது ராசியாக) இருந்தால் ஷஷ்டாஷ்டக தோஷம் இல்லை. இதேபோல் மற்றவைகளையும் தெரிந்து கொள்வது. மேற்கண்ட வகையில் இல்லாத ஷஷ்டாஷ்டகமானால் பொருந்தாது.



https://www.facebook.com/ebooksintamil/

Hariram Thejus

www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

**த்வி-த்வாதச தோஷமில்லை:**

மீனம், ரிஷபம், கடகம், கன்னி, விருச்சிகம், மகரம் என்பவை பெண் ராசியாக இருந்தால் அவற்றிற்கு 12-வது ராசியாக வரும் ஆண் ராசியோடு த்வித்வாதச (2,12) தோஷ மில்லை.

## அங்காரக தோஷம் அல்லது செவ்வாய் தோஷம்.

லக்னம், சந்திரன், சுக்ரன் ஆகியநிலைகளுக்கு 2,4,7,8, 12 ஆகிய இடங்களில் செவ்வாய் இருந்தால் தோஷ ஜாதகமாகக் கொள்ளவேண்டும். மற்ற பாபக் கிரகங்கள் இருந்தாலும் இப்படியே. செவ்வாய், மேஷம், விருச்சிகம், மகரத்திலிருந்தால் தோஷமில்லை. சூரியன், குரு, சனி ஆகியவர்களுடன் சேர்ந்தோ, அல்லது பார்க்கப் பட்டிருந்தாலோ தோஷமாகாது. இந்த செவ்வாய் தோஷம் தம்பதிகளில் ஒருவருக்கு இருந்து மற்றொருவருக்கு இல்லாமலிருந்தால் தோஷமாகும். ஆகவே, இப்படி இருப்பவர்களுக்கு விவாஹம் செய்யக்கூடாது. இவை சாதாரண பொது விதி. ஆனால் தேவகேரளம் முதலிய சாஸ்திர கிரந்தங்களில் செவ்வாய் தோஷ பரிகாரமாக பல காரணங்கள் கூறப்பட்டுள்ளன. அந்த பரிகாரமும் இல்லாவிட்டால்தான் ஜாதகங்களை ஒதுக்கவேண்டும்.

1. கடக லக்னம், சிம்ம லக்னம் என்ற இந்த இரண்டு லக்னங்களிலும் பிறந்தவர்களுக்கு செவ்வாய் எங்கிருந்தாலும் அங்காரக தோஷம் இல்லை.
2. செவ்வாய் இருக்கும் 2—மிடம் மிதுனம் அல்லது கன்னியாகில் தோஷமில்லை.
3. ,, ,, 4—மிடம் மேஷம், விருச்சிகமாகில் தோஷமில்லை.
4. ,, ,, 7—மிடம் கடகம், மகரமாகில் தோஷமில்லை.
5. ,, ,, 8—மிடம் தனுசு, மீனமாகில் தோஷமில்லை.
6. ,, ,, 12—மிடம் ரிஷபம், துலாமாகில் தோஷமில்லை.
7. சிம்மம் அல்லது கும்பத்தில் செவ்வாய்இருந்தால்தோஷமில்லை
8. குருவுடன் சேர்ந்தால் தோஷமில்லை.
9. சந்திரனுடன் சேர்ந்தால் தோஷமில்லை.
10. புதனுடன் சேர்ந்தாலும் புதன் பார்த்தாலும் தோஷமில்லை.
11. சூரியனுடன் சேர்ந்தாலும் சூரியன் பார்த்தாலும் தோஷமில்லை.



2. செவ்வாய் இருக்கும் ராசியின் அதிபதி லக்னத்திற்கு 1,4,5,7, 9,10 இவைகளில் எங்கு இருந்தாலும் தோஷமில்லை.
3. 8,12-லுள்ள செவ்வாய் இருக்கும் ராசி மேஷம், சிம்மம், விருச்சிகம், மகரமாகில் தோஷமில்லை.
4. தனது உச்ச வீடான மகரத்திலாவது, சொந்த வீடான மேஷ விருச்சிக ராசிகளிலாவது செவ்வாய் இருந்தால் தோஷமில்லை.
5. சனி, ராகு, கேது இவர்களுடன் கூடியாவது, இவர்களால் பார்க்கப்பட்டாவது செவ்வாய் இருந்தால் தோஷமில்லை.
6. செவ்வாய் தன் மித்திரர்களான சூரியன், சந்திரன், குரு இவர்கள் வீட்டில்—அதாவது சிம்மம், கடகம், தனுசு, மீனம் இந்த ராசிகளில் எங்காவது செவ்வாயிருந்தால் தோஷமில்லை.

## விவாஹப் பொருத்தம் உள்ள நக்ஷத்திரங்கள்

| வரிசை எண் | பெண்ணினுடைய நக்ஷத்திரம் | பொருந்தக் கூடிய வரனின் நக்ஷத்திரங்கள் | பொருந்தாத நக்ஷத்திரங்கள் |
|---|---|---|---|
| 1. | அசுவினி<br>மகம்<br>மூலம் | பரணி, ரோகி, திருவாதி, பூச, பூரம், ஹஸ்தம், சுவாதி, அனுஷ, பூராடம், திருவோ, சதை, உ—டாதி | கிருத், மிருகசி, புனர், உத்திரம், சித்தி, விசாக, உத்-டம், அவிட், பூரட்டாதி |
| 2. | பரணி<br>பூரம்<br>பூராடம் | கிருத்திகை, மிருக, புனர், ஆயி, உத்திரம், சித்தி, விசா, கேட். உ-டம், அவிட், பூரட்டாதி, ரேவ | ரோஹி, திருவாதி, பூசம், அஸ்தம், சுவாதி, அனுஷ, திருவோ, சதை, உ-டாதி |
| 3. | கிருத்திகை<br>உத்திரம்<br>உத்திராடம் | ரோஹி, திருவாதி, பூச, மகம், ஹஸ், சுவாதி, அனு, மூலம், திருவோ, சதை, உ—டாதி, அசு | மிருக, புனர், ஆயி, சித்தி, விசா, கேட்டை, அவிட், பூரட்டாதி, ரேவதி |



https://www.facebook.com/ebooksintamil/

Hariram Thejus

www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

| வரிசை எண் | பெண்ணினுடைய நக்ஷத்திரம் | பொருந்தக் கூடிய வரனின் நக்ஷத்திரங்கள் | பொருந்தாத நக்ஷத்திரங்கள் |
|---|---|---|---|
| 4. | ரோகிணி<br>ஹஸ்தம்<br>திருவோணம் | மிரு, புனர், ஆயி, பூர, சித், விசா, கேட், பூரா, அவிட், பூரட், ரேவதி, பரணி | திருவா, பூசம், மகம், சுவாதி, அனுஷ, மூலம் சதயம், உ-டாதி, அசுவ |
| 5. | மிருகசீர்ஷம்<br>சித்திரை<br>அவிட்டம் | திருவா, பூசம், மகம், உத்ரம், சுவாதி, அனு, மூலம், உ-டம், சதை, உ-டாதி, அசுவ, கிருத் | புனர், ஆயில், பூரம், விசா, கேட், பூராடம், பூரட், ரேவதி, பரணி |
| 6. | திருவாதிரை<br>சுவாதி<br>சதையம் | புனர், ஆயி, பூரம், ஹஸ், விசா, கேட், பூரா, திருவோ, பூரட், ரேவ, பரணி, ரோகி, | பூசம், மகம், உத்திரம், அனுஷம், மூலம், உ-டம் உ-டாதி, அசு, கிருத்திகை |
| 7. | புனர்வசு<br>விசாகம்<br>பூரட்டதி | பூசம், மகம், உத்ரம், சித், அனு, மூலம், உ-டம், அவிட், உ.டாதி, அசு, க்ருத், மிரு | ஆயில், பூரம், ஹஸ்தம், கேட்டை, பூ-டம், திருவோணம், ரேவதி, பரணி, ரோகிணி |
| 8. | பூசம்<br>அனுஷம்<br>உத்திரட்டாதி | ஆயில், பூரம், ஹஸ், சுவா, கேட், பூராடம், திருவோ, சதை, ரேவதி, பரணி, ரோகி, திருவா, | மகம், உத்ரம், சித்தி, மூலம், அவிட், அசுவி, கிருத், மிருகசீர்ஷம் |
| 9. | ஆயில்யம்<br>கேட்டை<br>ரேவதி | மகம், உத்ரம், சித், விசா, மூலம், உ-டம் அவிட், பூரட்டாதி, அசுவ, கிருத், மிருக, புனர்வசு | பூரம், ஹஸ், சுவாதி, பூராடம், திருவோ, சதை, பரணி, ரோகி, திருவாதிரை |

பெண்-ஹஸ்தம் (கன்னி) - ஆண்- புனர்வசு (மிதுனம்): 22-வது நக்ஷத்ரம், 3-ம் பாதம் வரை ராசி அதிபதிகள் புதன் சேர்க்கலாம்.



Hariram Thejus

https://www.facebook.com/ebooksintamil/

## தடைபபட்டுவரும் விவாஹமும் பரிகாரமும்

ஆண் பெண் ஜாதகங்களில் லக்னத்திலிருந்து 3, 7, 9 இடங்களில் பாபக் கிரஹங்கள் இருந்தாலும், லக்னத்துக்கு 7க்குடையவனுடைய தசை நடந்தாலும், விவாஹம் தடைப்பட்டும் பலவிதமான கஷ்டங்களுடனும் நடக்கும். இன்னும் பல காரணங்களினாலும் விவாஹம் தடைப்படலாம். பெற்றோர்கள் மனச்சஞ்சலம் கொள்வர். இப்படிப்பட்ட ஜாதகர்கள் பரிஹாரம் செய்தல் மிகவும் அவசியம். முக்கியமாக சுமங்கலிப் பிரார்த்தனைகள் செய்தல் வேண்டும். ஸ்ரீமஹாலக்ஷ்மி, கௌரி ஆகிய அம்பாளுக்கு பூஜை செய்தல் வேண்டும். அம்பாளின் அனுக்ரஹத்தைப்பெற அம்பாளுக்கு அபிஷேகம் செய்தல் வேண்டும். சுமங்கலிகளுக்கு போஜனம் செய்வித்து, தம்தம் சக்திக்கு ஏற்றபடி வஸ்திர தானம் செய்து வெற்றிலைபாக்கு மஞ்சள் குங்குமம் புஷ்பத்துடன் தக்ஷிணையும் கொடுத்து நமஸ்கரித்து அவர்களுடைய ஆசீர்வாதத்தைப் பெற்றால் தடைப்பட்டு நிற்கும் விவாஹம், தடைகளில்லாது நடந்தேறும். சிரமம் இருக்காது.

## சாந்திகள்

### (நடைமுறையில் பலன் கொடுத்தவைகள்)

வெள்ளிக்கிழமைதோறும் விவாஹம் ஆக வேண்டிய கன்னிப் பெண் செய்ய வேண்டிய ஸ்ரீமஹாலக்ஷ்மி பூஜா விதி.

சுக்லபக்ஷ வெள்ளிஅன்று ஆரம்பித்து—8 வெள்ளிக்கிழமைகள் இந்த லக்ஷ்மி பூஜை செய்யவேண்டும். ஐந்து முகங்களுடன் கூடிய குத்து விளக்கை நன்றாகச் சுத்தி செய்து, ஐந்து முகங்களையும் ஜோதி நன்கு பிரகாசமாக ஏற்றிவைத்து, அந்த ஜோதிர் மண்டலத்தில் ஸ்ரீமஹாலக்ஷ்மியை ஆவாஹனம் செய்து, ஷோடசோபசார, அஷ்டோத்தர நாமாவளிகளுடன் ஆராதித்து, பாலாவது, பால் பாயசமாவது அல்லது சர்க்கரான்னம், உளுந்தவடை நிவேதனம் செய்து, 5 ஸுமங்கலிகளுக்கு முடிந்த அளவு தாம்பூலாதிகளைக் கொடுத்து, அன்று ஒருவேளை போஜனத்துடன் இருக்கவேண்டும். எட்டாவது வெள்ளிக்கிழமைஅன்று, உபநயனம் ஆகி, 12 வயதிற்கு உட்பட்டு, சிகை வைத்துக்கொண்டு இருக்கும் இரண்டு சிறுவர்களை, அச்வினீ குமாரர்களாக பாவித்து, அன்று காலை, அவர்களை எண்ணை ஸ்நானம் செய்துகொள்ளச்செய்து, நூதன வஸ்திரம், திலகம் கொடுத்து பூஜைக்குப்பின், திருப்தியாக போஜனம் செய்வித்து, தீர்த்த பாத்திரமும் தக்ஷிணையும் கொடுத்து வாசல்வரை கொண்டுவிட்டு வர வேண்டும். பின் 5 ஸுமங்கலிகளை ஆராதித்து, ஜோதிர் மண்டலத்தில் ஆவாஹனம் செய்யப்பட்டுள்ள ஸ்ரீமஹா லக்ஷ்மியை யதாஸ்தானம் செய்யவேண்டும்.



www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

மேலும் இந்த தினங்களில், ஸ்ரீமத் ராமாயணம் பாலகாண்டம் 73வது ஸர்க்கமான ஸ்ரீஸீதா விவாஹ கட்டத்தை தினமும் 3 முறைகள் பாராயணம் செய்து பசும்பால் அமுது செய்விக்க வேண்டும்.

அல்லது

ஸ்ரீமத் பாகவதத்தில், தசம ஸ்கந்தத்தில், ஸ்ரீருக்மிணி கல்யாண வைபவத்தைக்கூறும் ஸர்க்கத்தை 2 முறைகள் பாராயணம் செய்து அவலும், வெண்ணெயும் நிவேதனம் செய்வேண்டும்.

ஆரம்பம்—ஸங்கல்பம்—சரியாகச் செய்யவேண்டும்.

......நாம் யார் ..........................................................................

நக்ஷத்திரம்.....ராசி....லக்னம்..கோத்ரம்....முதலியவைகளை முறைப்படி சொல்லி, ஸமஸ்த ஆதித்யாதி நவக்ரஹ பரிஹாரார்த்தம், விவாஹ ப்ராப்த்யர்த்தம் ஸ்ரீ மஹாலக்ஷ்மீ பூஜாம் கரிஷ்யே.......

இந்த முறைகளைக் கடைப்பிடித்துத் தவறுமல், நியமமாகச் செய்தால், எல்லாவிதமான தோஷங்களும் விலகி கன்னிகைகளுக்கு விவாஹமாகி சகல சௌபாக்யங்களும் உண்டாகும் என்பது ஸர்வநிச்சயம். அனுபவ உண்மை.

## விவாஹம் நடத்துவதற்கான முகூர்த்தம்

**மாதங்கள்:-** சித்திரை, வைகாசி, ஆனி, ஆவணி, கார்த்திகை, தை, பங்குனி மாதங்களில் விவாஹம் செய்யலாம்.

**பக்ஷமும் திதிகளும்: சுக்ல பக்ஷத்தில்:** துவிதியை, திருதியை, பஞ்சமி, சப்தமி, ஏகாதசி, திரயோதசி,
**கிருஷ்ண பக்ஷத்தில்:** துதியை, திருயை, பஞ்சமி.

**கிழமைகள்:** திங்கள், புதன், வியாழன், திருதியை, ஞாயிறு. குரு, சுக்ரன் அஸ்தமனமில்லாத காலம் பார்த்துச் செய்ய வேண்டும்.

**லக்னங்கள்:** ரிஷபம், மிதுனம், கடகம், சிம்மம், கன்னி, துலாம், தனுசு, கும்பம், மீனம் இந்த லக்னங்கள் சுபம் தரும். இந்த லக்னங்களுக்கு 7, 8-ம் இடங்களில் கிரகங்கள் இல்லாமல் சுத்தமாக இருக் வேண்டும்.

**நக்ஷத்திரங்கள்:** ரோஹிணி, மிருகசீருஷம், மகம், உத்திரம், ஹஸ்தம், சுவாதி, அனுஷம், மூலம், உத்திராடம், திருவோணம், உத்திரட்டாதி, ரேவதி.

**தாராபலம்:** மேற்கண்ட நக்ஷத்திரங்கள் வதூவரர்களின் நக்ஷத்திரத்திலிருந்து 2,4,6,8நக்ஷத்திரங்களாக இருத்தல்வேண்டும்.

ஸ்த்ரீயின் ஜன்ம நக்ஷத்ரம் விவாஹத்திற்குகந்தது. அது முஹூர்த்தத்திற்கு ஒப்புக் கொள்ளப்பட்ட நக்ஷத்ரமாக இருக்கவேண்டும்.



https://www.facebook.com/ebooksintamil/

## கசரம் பார்க்கும் விதம்

விவாஹ முஹூர்த்தம் வைக்கும் நாளில், சூரியன் சஞ்சாரம் செய்கிற நாள் முதலாக (அன்று) முகூர்த்த தினத்தின் நக்ஷத்திரம் வரை எண்ணி வந்தால், அந்தத் தொகையை ஒன்பதால் வகுத்தபிறகு 3, 4, 5, 9 ஆகியவை மீதமாக வந்தால் கசரயோகம் ஆகும்.

1, 2, 6, 7, 8 ஆகியவை மிகுதியாக வந்தால் கசரமில்லை. இது சுபமாகும்.

பொது: ஒவ்வொரு சுபகாரியங்களிலும் கசரயோகத்தை விலக்கியே சுபம் செய்தல் வேண்டும். கசர யோகமுள்ள நாட்களில் எதுவும் செய்யக்கூடாது. அப்படிச் செய்தால் விவாகத்தில் ஸ்த்ரீக்கு வைதவ்யத்தையும் உபநயனத்தில் பூணூல் இழத்தலையும், சீமந்தத்தில் சிசு நாசத்தையும், யாத்திரையில் தப்பாத மரணத்தையும் தரும். இதற்கு எவ்வித பரிகாரமும் கிடையாது. ஆகையினுல் கசரயோகம் இல்லாத நாட்களிலேயே சுபங்களைச்செய்ய வேண்டும்.

ரோஹிணியில் சூரியன் சஞ்சாரம்-முஹூர்த்தநாள் உத்திரம்: ரோஹிணி முதல் உத்திரம் வரை 9 — 9 ஆல் வகுக்க மீதி 0 இதை 9-ஆக பாவிக்க வேண்டும்.

## த்ரி ஜேஷ்டை

ஸ்ரீமந்தபுத்ரனுக ஆனி மாதத்தில் பிறந்த ஆணுக்கும், ஸ்ரீமந்த புத்ரியாக ஆனி மாதத்தில் பிறந்த பெண்ணுக்கும், ஆனி மாதத்தில் விவாஹம் செய்வதுகூடாது. இதனுல் குடும்பவாழ்க்கை பாதிக்கப்படும். சுக சந்தோஷங்களும், சந்ததியும் இருக்காது—இதற்குதகுந்த பரிகாரம் எங்கும் கூறப்படவில்லை என்கிறது காலாமிருதம்.

## விவாஹ காலத்தில் கிரஹ ப்ரீதி

முகூர்த்த லக்னத்தின்போது முக்கியமான ஸ்தானங்களில் கிரஹங்கள் இருந்தால் அவர்களுக்குப் ப்ரீதி செய்யவேண்டும்.

### தானம் செய்ய வேண்டிய பொருள்கள்:

சூரியனுக்கு கோதுமை; சந்திரனுக்கு பச்சரிசி; அங்காரகனுக்கு துவரை: புதனுக்கு பச்சைப்பயிறு; வியாழனுக்கு கடலை; சுக்ரனுக்கு மொச்சை; சனிக்கு எள்; ராகுவுக்கு உளுந்து; கேதுவுக்கு கொள்ளு— ஆகிய நவதான்யங்களுடனும் தாம்பூலதக்ஷிணையுடனும் தானம் செய்து, பிறகு சுபங்களைச் செய்ய வேண்டும். எல்லா சுப காரியங்களிலும் முதலில் நவக்கிரக ப்ரீதி செய்த பின்பே சுபம் செய்யவேண்டும்.



Hariram Thejus

www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

## விவாஹ கால "வதூகிருக பிரவேசம்"

திருமணம் செய்து கொண்ட தம்பதிகள் முகூர்த்த நாளிலிருந்து 16 நாட்களுக்குள் இரட்டைப்பட்ட நாட்களில் நூதன வதூக்ருஹ ப்ரவேசமென்கிற கிருஹப்ரவேசம் செய்யவேண்டும். இக்காலத்தை தவற விடுபவர்கள் விவாஹமான 3 அல்லது 5 வருஷங்களில் ஒற்றைப்பட்ட தினத்தில் செய்யவேண்டும்.

## உபநயனம்

பிராமணர்களும் மற்றும் க்ஷத்ரிய வைசியர்களும் உபநயனம் செய்யவேண்டியது மிகவும் அவசியம். "கர்ப்பாஷ்டம" வயதில் செய்வது சிரேஷ்டம். 7 வயது முதல் 11 வயதுக்குள் உபநயனம் செய்யவேண்டும் என்பது சாஸ்திர நியமம். 16க்குமேல் செய்தால் பிராம்மண்யம் வராது.

உத்தராயண காலத்தில் தை, மாசி, பங்குனி, சித்திரை, வைகாசி, ஆனி இந்த மாதங்களில், அசுவினி, ரோஹிணி, மிருகசீருஷம், புனர்பூசம், பூசம், உத்திரம், ஹஸ்தம், சித்திரை, சுவாதி அனுஷம், உத்திராடம், திருவோணம், அவிட்டம், சதயம், உத்திரட்டாதி, ரேவதி ஆகிய நக்ஷத்திரங்களில், ஞாயிறு, திங்கள், புதன், வியாழன், வெள்ளி ஆகிய நாட்களில் சுக்ல பக்ஷம் துவிதியை, திருதியை, பஞ்சமி, சப்தமி, ஏகாதசி, திரயோதசி; கிருஷ்ணபக்ஷமாக இருந்தால் துதியை, திருதியை, பஞ்சமி ஆகிய திதிகளில், அஷ்டம சுத்தமுள்ள ரிஷபம், மிதுனம், கடகம், கன்னி துலாம், தனுசு, மீனம் ஆகிய லக்னங்களிலும், ருக்வேதக்காரர்களுக்கு குருவும், யஜுர் வேதக்காரர்களுக்கு சுக்ரனும், சாம வேதக்காரர்களுக்கு அங்காரகனும் (குஜன்) அதர்வண வேதக்காரர்களுக்கு புதனும் அஸ்தமனமடையாதிருக்கையில், விடியற்காலங்களில் அதாவது சூரியன் உதயமாகி ஆறு நாழிகைக்குள், கசர யோகம், பஞ்சக அசுபம் இவை இல்லாத லக்னத்தில், எவ்வித தோஷமும் இல்லாதிருக்கையில் உபநயனம் செய்வித்தல் வேண்டும்.

ஜென்ம நக்ஷத்திரம், ஜென்ம நக்ஷத்திரத்துக்கு 7, 10, 16, 18, 23, 25, 27 இந்த நக்ஷத்திரங்களிலும் ஜென்மாஷ்டம ராசியிலும் உபநயனம் செய்தல்கூடாது.

## பஞ்சகம் (பொது)

விவாஹம், உபநயனம், சீமந்தம், கிரஹப்ரவேசம், நிஷேகம், பும்ஸவனம், யாத்திரை முதலிய சகல கர்மாக்களிலும் பஞ்சகம் பார்க்கவேண்டும்.

**பஞ்சகம்பார்க்க:—** பஞ்சகம் பார்க்க வேண்டிய காலம்வரையில் ஞாயிறு முதலாக அன்றைய வாரம் வரையும், பிரதமை முதலாக அன்றைய திதி வரையும், அசுவினி முதல் அன்றைய நக்ஷத்திரம் வரையும், மேஷம் முதல் அப்போதைய லக்கினம் வரையும் எண்ணிக் கண்ட தொகையுடன் லக்கின துருவத்தைக் கூட்டி ஒன்பதில் வகுத்த மிச்சம் 3—5—7—9 உத்தமம். மற்ற 1—2—4—6—8 நீக்கப்படும்.

**லக்கினத் துருவம்:—** மேஷத்திற்கு 5, ரிஷபத்திற்கு 7, மகரத்திற்கு 2, கும்பத்திற்கு 4, மீனத்திற்கு 6 துருவமாகும்; மற்ற ராசிகட்குத் துருவமில்லை. சிலர் பஞ்சக அங்கங்களில் ஒன்றாகிய துருவ அங்கத்தை விட்டு விடுகிறார்கள்.

1—மிருத்தியு பஞ்சகம்—ரத்தின தானம். 2— அக்கினி பஞ்சகம்—சந்தனக்குழம்பு தானம். 4—ராஜ பஞ்சகம்—எலுமிச்சம் பழ தானம். 6—சோர பஞ்சகம்—தீபதானம். 8— ரோக பஞ்சகம்—தானிய தானம் இவ்வாறு கண்டுகொள்க.

அவசியமாய்ப் பார்க்கவேண்டும்பொழுது மத்தியானத்தில் ராஜபஞ்சகமும், அக்னி பஞ்சகமும்; ராத்திரியில் சோர பஞ்சகமும், ரோக பஞ்சகமும்; எல்லாக் கர்மங்களிலும் மிருத்யு பஞ்சகமும் ஆகா; இன்னுமொருபக்ஷம். உபநயனத்தில் ரோக பஞ்சகமும், விவாகத்தில் ராஜ பஞ்சகமும், கிருகத்துக்கு அக்கினி பஞ்சகமும் சோர பஞ்சகமும், எல்லாக் கர்மங்களிலும் மிருத்யு பஞ்சகமும் நீக்கப்படும்.

## விசேஷ அம்சங்கள் விதிவிலக்குகள்

இதுவரை அந்தந்த ஸம்ஸ்காரங்களுக்குரிய காலங்கள் சொல்லப்பட்டன. தோஷமற்ற நாள், நக்ஷத்ரம், லக்னம் முதலியன கிடைக்காத சமயங்களிலும், சங்கடவிஷயமாய், நிர்ப்பந்தமாய் குறிப்பிட்ட தினத்திலோ காலத்திலோ வேறு வழியில்லாமல் செய்ய நேரிடும்பக்ஷத்தில்—அவைகளுக்கு விதிவிலக்குகள் கூடிய வரை இங்கு சொல்லப்படுகின்றன. செய்யத்தக்கவை, செய்யத்தகாதவை இவைகளைக் கொடுத்திருப்பதால் அவரவர்கள் ஸௌகர்யப்படியும், கால தேச வர்த்தமான, அவஸரத்தை முன்னிட்டும் விலக்கக்கூடியதை விலக்கி, கூடியவரை தோஷமற்ற காலங்களில் செய்யவேண்டியவைகளைச் செய்தால் நற்பலன் ஏற்படும் என்பது முன்னோர் பழக்கம். பிராமணர்களுடைய அனுக்ஞையின்பேரில் எதையும் செய்ய ஆரம்பிக்க வேண்டும்.

**ஜன்மத்ரயங்களில் விலக்க வேண்டியவை:**

ஜன்ம—அனுஜன்ம— த்ரிஜன்மங்களில் — கோத்ரங்களை உத்தேசித்து அவ்விடத்தில் செய்யும் சிரார்த்தமும், யாத்ரையும், சிகித்ஸையும், ருது ஸங்கமமும், எண்ணை தேய்த்துக்கொள்ளுதலும், சௌளமும், உபநயனமும், விவாஹம் முதலான சரீர ஸம்ஸ்கார கர்மங்களும் செய்யத்தகாதவை.

https://www.facebook.com/ebooksintamil/





Hariram Thejus

www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

இன்னும் ஆயுதப்பயிற்சி, பும்ஸவனம், ஸீமந்தம், ஔஷத ஸேவை, க்ஷௌரம், யுத்தம், வாத்யஅப்யாஸம், யானை, குதிரை ஏற்றம் இவைகளும் விலக்க வேண்டியவை.

வாகனமேறுவது (நூதனமாக), ஸாஹஸமான கார்யங்கள், ஸமாவர்த்தனம், அஷ்டவிரதம், அன்னப்ராசனம், மருந்துண்ணல் மாம்ஸரக்தாதி ஸேவை, வாஸ்து பிரதிஷ்டை, கோயில்கட்டடம் ஆகியவையும் ஜன்மத்ரியங்களில் செய்யத்தகாதவை.

**ஜன்மத்ரயங்களில் செய்யக்கூடியவை:**

தேவப்ரதிஷ்டை, தான்ய ஸங்கிரஹம், கிருஷி, வியாபாரம், ஸ்வாமி தர்சனம், தீர்த்த யாத்ரை, தானம், ஜபம், ஹோமம், நூதன வஸ்த்ர, பூஷணதாரணம், நடைபாவி கிணறு வெட்டுதல், ராஜாபிஷேகம், ஆண்டு நிறைவு, சாந்தி கருமங்கள், தீக்ஷாரம்பம், ஸங்கடவிஷயத்தில் உபநயனம், விவாஹம் இவைகளும் செய்யலாம்.

எஜமானன், சிநேகிதர்கள் இவர்களைப் பார்க்கவும், நூதன வஸ்திரம் தரிக்கவும், அன்னப்பிராசனம், வித்யாரம்பம், விதை விதைத்தல் இவைகளும் செய்ய சுபம்.

தேவதா விரதங்கள், சைவ, பாஞ்சராத்ர தீக்ஷை, அக்நி ஆதானம், அக்னி ஸந்தானம், கிருஹ, கிராமாதி பிரவேசம், விஷ்ணுபலி, அங்குரார்ப்பணம், கிருஹ யக்ஞம், மஹாதானம், ஜாதகர்ம, நாமகரணங்கள் இவைகளும் செய்யலாம்.

பெண்ணுக்கு ஜன்ம நக்ஷத்திரத்திலும், பிள்ளைக்கு அனு ஜன்ம, திரிஜன்ம நக்ஷத்திரங்களிலேயும் விவாஹம் செய்யலாம்.

**ஜன்மராசியில் செய்யத்தக்கவை:**

ஜன்மராசியில் யாத்திரை, விவாஹம், கிருஹ கிராம பிரவேசம், ஸீமந்தம், ஸமாவர்த்தனம், ஔஷதம், உபாகர்மம், ஆகியவை செய்ய சுபம்.

**ஜன்மாஷ்டம ராசியில் செய்யத்தக்கவை:**

தனுர்ஜனம் செய்தல், விருந்துண்ணல், உத்யோகம் பார்த்தல், யுத்தம் செய்தல், வாஹனம் ஏறுதல், ஆயுத அப்யாஸம் இவைகள் செய்யலாம்.

**தியாஜ்ய விஷயம்:**

லக்னத்திற்கு ஆரம்பத்தில் த்யாஜ்யம் வந்தால் த்யாஜ்யம் முடிந்ததும் சுபகார்யம் அந்த லக்னத்தில் செய்யலாம். லக்னமுடிவில் தியாஜ்யம் வரும்பக்ஷத்தில் அந்த லக்னத்தை விலக்கவேண்டும்.



சந்திரன் குருவின் அம்சத்திலிருந்து குருவினால் பார்க்கப்பட்டால் த்யாஜ்யதோஷம் இல்லை.

சந்திரன் 10-ல் இருந்து குருவினால் பார்க்கப்பட்டாலும் த்யாஜ்ய தோஷம் விலகும். ரோஹிணி, திருவோணம், ஹஸ்தம், மிருகசீருஷம், அனுஷம், பூசம், உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி இந்த நக்ஷத்திரங்களுக்கு தியாஜ்ய தோஷம் கிடையாது.

## திதி-வார-நக்ஷத்திர-லக்ன தியாஜ்யங்கள்

### 1. திதித்யாஜ்யம்

கீழே அந்தஅந்த திதிகளுக்கு எதிரே குறிப்பிட்டுள்ள நாழிகைக்குமேல் 4-நாழிகை தியாஜ்ய காலமாகும்.

| | | |
|---|---|---|
| பிரதமை | 24 | நாழிகை |
| துதியை | 72 | ,, |
| திருதியை | 55 | ,, |
| சதுர்த்தி, நவமி | 5 | ,, |
| பஞ்சமி, ஷஷ்டி | 54 | ,, |
| சப்தமி | 31 | ,, |
| அஷ்டமி | 20 | ,, |
| தசமி | 33 | ,, |
| ஏகாதசி | 1 | நாழிகை |
| துவாதசி | 15 | ,, |
| திரயோதசி | 26 | ,, |
| சதுர்த்தசி | 7 | ,, |
| பூர்ணை | 29 | ,, |
| அமாவாசை | 6 | ,, |

### 2. வாரத் தியாஜ்யம்

கீழ்க்கண்ட நாழிகைக்குமேல் 3¾ நாழிகை தியாஜ்யகாலம்.

| | | |
|---|---|---|
| ஞாயிறு | 32 | நாழிகை |
| திங்கள், புதன் | 42 | ,, |
| செவ்வாய், வியாழன் | 31 | ,, |
| வெள்ளி | 21 | ,, |
| சனி | 14 | ,, |



https://www.facebook.com/ebooksintamil/

Hariram Thejus

www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

### 3. நக்ஷத்திரத் தியாஜ்யம்

கீழ்க்கண்ட நாழிகைக்கு மேல் 4—நாழிகை தியாஜ்யம்

| | | |
|---|---|---|
| அசுவனி | 50 | நாழிகை |
| பரணி, பூரா, உத்திரம் | 24 | ,, |
| கார், புனர், மகம் | 30 | ,, |
| ரோஹிணி | 40 | ,, |
| மிரு, சுவா, விசா, கேட் | 14 | ,, |
| திருவாதிரை | 21 | ,, |
| பூச, பூர, சித், உத்ரா | 20 | ,, |
| ஆயில்யம் | 32 | ,, |
| உத்திர, சதயம் | 18 | ,, |
| அஸ்தம் | 21 | ,, |
| அனு, திருவோ, அவி | 10 | ,, |
| மூலம் | 56 | ,, |
| பூரட்டாதி | 16 | ,, |
| ரேவதி | 30 | ,, |

### 4. லக்ன த்யாஜ்யம்

(a) மேஷம், ரிஷபம், தனுசு, கன்னி, இந்த நான்கு ராசிக்கும் ஆதியில் (முதலில்) புஜங்கம் எனும் (விஷம்) ¾ நாழிகை

(b) கடகம், விருச்சிகம், மீனம், மகாம், இந்த நான்கு ராசிகளுக்கம் முடிவில் வராஹம் எனும் (விஷம்) ¾ நாழிகை

(c) துலாம், மிதுனம், கும்பம், சிம்ஹம், இந்த நான்கு, ராசிகளுக்கும் நடுவில் க்ருத்திரம் எனும் (விஷம்) ¾ நாழிகை



https://www.facebook.com/ebooksintamil/

**சந்திராஷ்டமம்** (பொது): சந்திரன் அஷ்டம ராசியில் வந்தால் அது சந்திராஷ்டமம். அதில் ஸகல சுபகார்யங்களும் விலக்க வேண்டும். விலக்காவிடில் தோஷம்.

**சந்திராஷ்டம பேதங்கள்:** 6-வது நக்ஷத்திரமான ஸாதக தாரையில் வரும் சந்திராஷ்டமமும், 8-வது நக்ஷத்திரமான மைத்ர தாரையில் வரும் சந்திராஷ்டமமும், 9-வது நக்ஷத்திரமான பரம மைத்ர தாரையில் வரும் சந்திராஷ்டமமும், தோஷமில்லை.

5-வது நக்ஷத்திரமான ப்ரத்யரதாரையில் வரும் சந்திராஷ்டமமும், 7-வது நக்ஷத்திரமான வததாரையில் வரும் சந்திராஷ்டமமும், ஜன்ம சந்த்ராஷ்டமமும் விலக்க வேண்டியவை.

ஸாதக சந்திராஷ்டமம் சுத்தம். மைத்ர சந்திராஷ்டமம் சோபனம். பரம மைத்ர சந்திராஷ்டமம் மங்களம். இவைகளிலே சுப கர்மங்கள் செய்யலாம்.

ப்ரத்யர சந்திராஷ்டமம் அசோபனம். வத சந்திராஷ்டமம் அனுயுஷ்யம். ஜன்ம சந்த்ராஷ்டமத்திற்கு அக்ஷேமம் என்றுபெயர். இவைகளில் சுபகார்யங்கள் விலக்கப்பட வேண்டும்.

சந்திராஷ்டமத்தில் ஸர்வகாலத்திலும் க்ஷெளரம் செய்து கொள்ளவே கூடாது.

**பத்தினி கர்ப்பமாய் இருக்கும்போது விலக்கவேண்டியவை:**

ஒருவனுடைய பத்னீ கர்ப்பிணியாயிருக்கும்போது க்ஷெளரம், சவத்தின் பின் போகுதல், நகங்களை அறுத்தல், சிரார்த்தத்தில் நிமந்த்ரணம் இருத்தல், வீடு கட்டுதல், தூரதேச யாத்திரை, விவாஹம் செய்தல், ஸமுத்ர ஸ்னானம் இவைகள் செய்யக்கூடாது. முக்யமாய் 5 மாதத்துக்குமேல் அனுஷ்டிக்காவிடில் ஆயுள் க்ஷயிக்கும் என்று கூறப்பட்டுள்ளது.

மேலும் பீஜாவாபனம், பிரதிஷ்டை, உத்ஸவம், மலையேறுதல் இவைகளும் செய்யத்தகாதவை.

**அபிஜித்:** அபிஜித் முஹுர்த்தம் என்பது பகல் 12 மணி. அந்த முஹுர்த்தமானது எல்லா தேசங்களிலும் முக்யமானது.

எத்தனை அவகுண தோஷங்கள் லக்னத்திற்கு இருந்தாலும், அவைகளையும், திதிவாராதி தோஷங்களையும், நவக்ரஹ தோஷங்களையும் போக்கி, ஜயத்தைச் செய்யும் இந்த அபிஜித் முகூர்த்தம்.

ஆனால் இந்த வேளையில் க்ஷெளரமும், உபநயனமும் மட்டில் செய்யக்கூடாது.



Hariram Thejus

www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

**கோதூளி லக்னம்:** சூரிய உதயகாலத்தையும், அஸ்தமன காலத்தையும் கோதூளி லக்னம் என்று பெரியோர் சொல்வார்கள். அந்த லக்னத்திற்கு திதி, வார, நக்ஷத்ர, யோக, கரணாதி கிரஹ தோஷங்கள் ஒன்றும் பார்க்காமல் சுபகார்யங்கள் செய்யலாம்.

**குரு பலம்:** குரு லக்னம், கேந்திரம், திருகோணம், உச்சம், இவைகளில் இருந்தாலும், திதி வாராதி தோஷங்கள் பார்க்க வேண்டாம்.

**ரோஹிணி சந்திர பலம்:** ரோஹிணியில் சந்திரன் சஞ்சரிக்கையில் திதி வாராதி தோஷங்களும், நவக்ரஹ தோஷங்களும், குளிகன் முதலான தோஷங்களும் பார்க்க வேண்டாம்.

**12 லக்னங்களிலும் செய்யத்தகாதவை**

| | |
|---|---|
| மேஷத்தில் விவாஹம் | துலாத்தில் கிருஷி |
| ரிஷபத்தில் சிரார்த்தம் | விருச்சிகத்தில் பொன்னேர் பூட்டுதல், |
| மிதுனத்தில் யாத்ரை | தனுசில் கிணறு வெட்டுதல் |
| கடகத்தில் தோப்பு வைப்பது | மகரத்தில் ஓடம் விடுதல் |
| சிம்மத்தில் பெண்ணைப்பார்ப்பது | கும்பத்தில் க்ஷௌரம் |
| கன்னியில் நிஷேகம் | மீனத்தில் வித்யாப்யாஸம் |

இவைகள் ஒருபொழுதும் செய்யக்கூடாது.

**விஷமாஸ, மலமாஸங்கள்**

எந்த மாஸத்தில் பூர்ணிமை, அமாவாஸை இல்லையோ அந்த மாஸத்திற்கு **விஷமாஸம்** என்று பெயர்.

எந்த மாதத்தில் இரண்டு பூர்ணிமையோ, இரண்டு அமாவாசையோ வருகிறதோ அதற்கு **மலமாஸம்** என்று பெயர்.

விஷ மாஸத்திலும், மலமாஸத்திலும் சுபகார்யங்களை விலக்க வேண்டும்.

ஆனால் **சித்திரை, வைகாசி மாதத்திற்கு** இந்த **தோஷம் கிடையாது.**

**ஸம்ஸ்பர்ச மாஸம். அம்ஹஸ்பதி மாஸம்.**

ஒரு மாதத்தில் ஸங்க்ரமணம் (மாதப் பிறப்பு) இல்லாவிடில் அந்த மாஸத்திற்கு **ஸம்ஸ்பர்சம்** என்றும், ஒரு மாதத்தில் இரண்டு ஸங்க்ரமணம் வந்தால் அந்த மாதத்திற்கு **அம்ஹஸ்பதி** என்றும் பெயர். இந்த இரண்டு மாதத்திலும் சுபகார்யங்களை விலக்கவேண்டும்.



https://www.facebook.com/ebooksintamil/

ஆனால் தனுசு, மீனம், கடகம் இவைகளிலே குரு பிரகாசமாக இருந்தால் இந்த 3 மாதங்களிலேயும், தன் வர்கத்தில் குரு இருந்து சூரியன் தன் உச்ச மித்ர க்ஷேத்ரத்திலிருந்தாலும் சூரியன் சுயாம்சத்திலிருந்து சுபரால் பார்க்கப்பட்டாலும் மேலே சொன்ன மாஸதோஷங்கள் நீங்கிவிடும்.

## சுபகாரியங்களுக்குச் சிறந்த நக்ஷத்திரங்கள் முதலியன

**நாமகரணம்:** அசு, ரோ, மிரு, புன, பூச, உத் அஸ், சித், சுவா, அனு; மூல, உத்ரா, திருவோ, அவி, சதை, உத்ர, ரேவ.

திவி, திரு, பஞ், சப், தச, ஏகா, திர.

ரிஷ, சிம், விரு, கும்.

8மிடம் சுத்தி.

**அன்னப்பிராசனம்:** அசு, ரோ, மிரு, புன, பூச, உத், அஸ், சித், சுவா, அனு; உத்ரா, திருவோ, அவி, சதை, உத்ர, ரேவ.

திவி, திரு, பஞ், சப், தச, திர.

ரிஷ, மிது, கட, கன், துலா, தனு, மீனம்.

10மிடம் சுத்தி.

**காது குத்த:** மிரு, திருவா, புன, பூச, அஸ்; சித், திருவோ, அவி, ரேவதி.

திவி, திரி, பஞ், சப், தச, ஏகா, திர.

ரிஷ, மிது, கட, கன், துலா, தனு, மகர, மீனம்.

3,8-மிடம் சுத்தி.

(பகலில் இரண்டு திதி நக்ஷத்திரங்கள் சேரக்கூடாது)

**முடிவாங்கல்:** அசு, ரோ, மிரு, புன, பூச, உத், அனு, சித், சுவா, உத்ரா, திருவோ, அவி, சதை, உத்ர, ரேவ.

திவி, திரி, பஞ், சப், தச, திர.

ரிஷ, மிது, கட, கன், துலா, தனு, மீன.

8-மிடம் சுத்தி.

**வித்தியாப்பியாசம்:** அசு, புன, பூச, அஸ், சித், சுவா, அனு, திருவோ, ரேவதி.

திவி, திரி, பஞ், சப், தச, ஏகா, திர.

மேஷ, மிது, கட, கன், துலா, தனு, மகர, மீனம்.

4,8-மிடம் சுத்தி.



https://www.facebook.com/ebooksintamil/
Hariram Thejus
www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

**உபநயனம்:** அசு, ரோ, மிரு, புன, பூச, உத், அஸ், சித், சுவா, அனு, உத்ரா, திருவோ, அவி, சதை, உத்ர, ரேவ.
திவி, திரி, பஞ், சப், தசமி.
சந்திரனில்லாத சுப லக்கினங்கள்.
8-மிடம் சுத்தி.

**மங்கலியஞ் செய்தல்:** அசு, ரோ, மிரு, புனர், பூசம், மக, உத், அஸ், சுவாதி, அனு, உத், திரு, அவி, சதை, உத்ர, ரேவ.
திவி, திரி, பஞ், சப், தச, ஏகா, துவா, திர.
ரிஷப, மிது, கட, கன், துலா, தனு, மீன.
2, 8-மிடங்கள் சுத்தி.
(தம்பதிகளுக்குச் சந்திரபலம், தாராபலம் இருக்கவேண்டும்.)

**விவாகம்:** அசு, ரோ, மிருக, புனர், பூச, மக, உத், அஸ், சுவா, அனு, மூல, உத்ரா, திருவோ, அவி, சதை, உத்ர, ரேவ.
துதி, திரி, பஞ், சப், தச, ஏகா, திர.
7-மிடம் சுத்தி.
ரிஷப, மிதுன், கட, கன், துலா, தனு, கும்

**அபிஷேகம்:** அசு, ரோ, மிரு, புன, பூச, உத், அஸ், சித், சுவாதி, அனு, மூல, உத்ரா, திருவோ, அவி, சதை, உத்திரட்.
ரேவ.
துதி, திரி, பஞ், சப், தச, திர.
ரிஷ, மிது, கட, கன், துலா, தனுர், மீன.
1, 7, 8 இடங்கள் சுத்தி.

**சீமந்தம் :** ரோ, மிரு, புன, பூச, உத், அஸ், உத்திரா, திரு, உத்திரட், ரேவ.
துதி, திரி, பஞ், சப், தச, திர.
சிம், விருச், நீங்கிய லக்கினமும்
உத்தமம்.
8-மிடம் சுத்தி.

**பும்ஸவனம்:** அசு, ரோ, மிரு, புன, பூச, உத், அஸ், சித், சுவா, அனு, மூல, உத்ரா, திருவோ, அவி, சதை, உத்ர, ரேவ.
துவி, திரி, பஞ், சப், தச, திரி.
மிது, கட, கன்னி, நீங்கிய லக்கினமும்.
8-ம் இடம் சுத்தி. உத்தமம்.



https://www.facebook.com/ebooksintamil/

**கிருகாரம்பம்:** ரோ, மிரு, புன, பூச, உத், அஸ், சுவாதி, அனு, மூல,
உத்ரா, திருவோ, அவி, சதை, உத், ரேவதி.
துதி, திரி, பஞ், சப், தச, ஏகா, திர.
ரிஷ, மிது, சிம், கன், விரு, தனுர், கும்ப, மீன. உத்தமம்.
8, 12-ம் இடங்கள் சுத்தி.

**கிருகப்பிரவேசம்:** ரோ, மிரு, புன, பூச, உத், அஸ், சுவாதி, அனு, மூல, உத்ரா, திருவோ, அவி, சதை, உத்ர, ரேவதி.
துதி, திரி, பஞ், சப், தச, ஏகா, திர.
ரிஷ, மிது, சிம்மம், கன், விருச், தனுர், கும்ப, மீனம்.
குரு, சுக்ர அஸ்தமனமும் எதிர் சுக்ரனுமாகாது.
8, 12-ம் இடம் சுத்தி உத்தமம்.

**யாத்திரை, பிரயாணம்:** அசு, ரோ, மிரு, புன, பூச, உத், அஸ், அனு, மூல, உத்ரா, திருவோ, அவி, சதை, உத்ர, ரேவ.
துதி, திரி, பஞ், சப், தச, திர.
மேஷம், மிது கட, கன், துலா, தனுர், மகர, மீன.
வாரசூலை, யோகினி கூடாது.

**கிணறு வெட்ட :** ரோ, பூச, மகம், உத்திரம், அஸ், அனு உத்ரா, திருவோ, அவி, சதை, உத், ரேவதி.
துதி, திரி, பஞ், சப், தச, திர.
ரிஷ, கட, துலா, விருச், மகர, கும்ப, மீன.
பாதாள யோகினி கூடாது.
4-ம் இடம் சுத்தி.

**தேவப் பிரதிஷ்டை:** உத்தராயணத்தில் மாசி தவிர மற்ற மாதங்களில்,

அசு, ரோ, மிரு, புன, பூச, உத்ரம், அஸ், சுவா, அனு, உத்ரா, திருவோ, அவி, சதை, உத்ரட், ரேவதி.
துதி, திரி, பஞ், சப், தச, ஏகா, திர.
ரிஷ, சிம், விருச், கும்ப.
8-ம் இடம் சுத்தி. உத்தமம்.

**ஏர் உழுவதற்கு:** ரோ, புன, பூச, உத், அஸ், அனு, உத்ரா, உத்ரட், ரேவதி.
துதி, தி[illegible] [illegible]ஞ், சப், தச, ஏகா, திர.
ரிஷ, மிது, கட, கன், துலாம், தனு, மகர, மீனம் உத்தமம்.
ஆகாச, பாதாள யோகினி கூடாது.



Hariram Thejus
www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

**ஆபரணம் பூணுதல்:** அசு, ரோ, புன, உத், அஸ், சித், சுவா, அனு; உத்ரா, திரு, அவி, சதை, உத்ரட், ரேவதி.

துதி, திரி, பஞ், சப், தச, ஏகா, திரயோ.

ரிஷ, மிது, சிம்ம, கன், விரு, தனு, கும்ப, மீனம்.

6-ம் இடம் சுத்தி, உத்தமம்.

**வியாதியஸ்தர் மருந்துண்ண:** அசு, ரோ, மிரு, புன, பூச, உத், அஸ்த, சித், சுவாதி, அனு, உத்ரா, திரு, அவி, சதை, உத்ர, ரேவ.

துதி, திரி, பஞ், சப், ஏகா, துவா, திர.

மேஷ, கடக, துலாம், மகர.

ஞாயிறு நன்று.

3, 7, 8-ம் இடம் சுத்தி. உத்தமம்.

**ஆடு, மாடு முதலியவை வாங்க, விற்க:** அசு, புன, அஸ், சுவா, விசாகம், அவி, சதை, ரேவ.

துதி, திரி, பஞ், சஷ், சப், தச, ஏகா, துவா, திர.

மேஷ, மிது, சிம்ம, கன்னி, விருச், தனுர், மகர, மீனம், உத்தமம்.

திரு, ரோ, மிரு, பூச, மகம், பூர, அனு, மூல, பூர, திருவோ, பூரட்டாதியும் மத்திமம்.

திங்கள், வியாழன், சனி உத்தமம்.

———



https://www.facebook.com/ebooksintamil/

# ஸ்த்ரீ ஜாதகம்

பிறப்பு, படிப்பு, யோகம், போகம், ஸந்தானம், சம்பத்து, குடும்பம், திருமணம், ஆயுள், லாபம், ஆரோக்யம், விரயம் முதலிய எல்லா விஷயங்களையும் புருஷர்களுடைய ஜாதகத்தில் பார்ப்பது போலவே பெண்களுடைய ஜாதகங்களிலும் பார்த்துப் பலனைச் சொல்லவேண்டும். எனவே, பொதுவாக ஜாதக பலன்கள் பார்ப்பதிலோ, பலன் கூறுவதிலோ எவ்வித வித்தியாசமும் பாராட்ட வேண்டியதில்லை.

ஆயினும், படைப்பில் ஆண், பெண் என இரு ஜாதி இருப்பதால், சில அம்சங்களில் பாகுபாடு உள்ளமையை மஹர்ஷிகள் கூர்ந்து நோக்கி, அந்த மாறுபட்ட அம்சங்களையும் அவற்றின் பலாபலன்களையும் தமது நூல்களில் குறிப்பிட்டுள்ளார்கள்.

**ஸ்த்ரீ ஜாதகத்தின் தனித்தன்மை**

*யத்யத் பும்ப்ரஸவே க்ஷமம் தததிலம்*
*ஸ்த்ரீணம் ப்ரியே வா வதேத்*
*மாங்கள்யம் நிதநாத் ஸுதாம்ஸ்ச நவமாத்*
*லக்நாத் தநோஸ் சாருதாம் |*
*பர்த்தாரம் ஸுபகத்வ மஸ்த பவநாத்*
*ஸங்கம் ஸதீத்வம் ஸுகாத்*
*ஸந்தஸ் தேஷு சுபப்ரதாஸ்*
*த்வஸுபதா: க்ரூரா: ததீஸாந் விநா ||*

—பலதீபிகை

இதன் பொருள்:— புருஷ ஜாதகத்திற்குச் சொன்ன பலாபலன்களெல்லாம் பெண் ஜாதகத்திற்கும் பொருந்தும். ஆயினும் விசேஷமாவது:—

(1) ஒரு பெண்ணின் மாங்கல்யத்தை ஜாதகத்தில் 8-வது பாவத்தைக்கொண்டும்,

(2) சந்ததியை 9-வது பாவத்தைக் கொண்டும்

(3) உடலழகை லக்னத்தைக்கொண்டும்

(4) கணவனைப் பற்றியும் அதிருஷ்டங்களைப் பற்றியும் 7-வது பாவத்தைக் கொண்டும்

(5) அவள் கணவனுடன் சேருதல், அவளுடைய கற்பு இவைகளை 4-வது பாவத்தைக் கொண்டும் அறிந்து சொல்ல வேண்டும்.



Hariram Thejus

www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

அதாவது—மேற்கண்ட பாவங்கள் என்னும் ஸ்தானங்களில் சுபக்ரஹங்கள் இருந்தால் நன்மையுண்டாகும்.

பாபக்கிரஹங்கள் இருந்தால் தீமையுண்டாகும்.

பாபக்ரஹமானாலும் தன் ஸ்தானத்தில் அமர்ந்தால் தோஷமில்லை. அதாவது அந்தஅந்த பாவாதிபதி தன் வீட்டிலிருந்தால் அவன் இயற்கையாகப் பாபக்ரஹமானாலும் அந்த தீயபலனைக் கொடுக்கமாட்டான்.

இவைகள்தான் ஆண் ஜாதகத்தைக்காட்டிலும் பெண் ஜாதகத்தில் குறிப்பாகக் கவனிக்க வேண்டிய சிறப்பான அம்சங்கள்.

## ஜனன கால ஜாதகபலன்கள்

**மஹாபாக்யவதி யோகம்**

ஒரு பெண் துதியை, திருதியை, பஞ்சமி, ஸப்தமி, தசமி, ஏகாதசி, திரயோதசி என்னும் ஏதாவது ஒரு நல்ல திதியிலும், சுக்ரவாரத்திலும், பூரம், அவிட்டம், ரோகிணி இவைகளில், ஏதாவது ஒரு நக்ஷத்திரத்தில் சுபமான மிதுனம், கன்னி முதலிய பலம் பெற்ற லக்னத்தில் பிறந்தாளானால் அவள் பிறந்தது முதல் ஆயுள்வரை மஹாபாக்யவதியாக விளங்குவாள்.

**பெண்ணின் அழகு**

மிதுனம் அல்லது கன்னியாலக்னத்தில் பிறந்து, அதில் புதன் இருந்தாலும், கடக லக்னமாக இருந்து அதில் சந்திரன் இருந்தாலும், சந்திரனும் புதனும் கூடி லக்னத்திற்கு 6-மிடத்திலிருந்தாலும், பிறந்த லக்னம் சரலக்னமாகி அதில் சந்திரன் இருந்தாலும், 8மிடத்தில் சூரியன் இருந்தாலும் மஹாலக்ஷ்மிபோல் அழகும் ஐசுவரியமும் நிறையப்பெற்றவளாவாள்.

## ருதுகாலப் பலன்கள்

**இன்னின்ன வகை ருது என்பது**

1) ருது காலத்திலே லக்னத்திலாவது 7லாவது செவ்வாய் நின்றால் பக்குவ காலத்திய ருது வெனப்படும்

2) குரு 1-ல் அல்லது 7-லிருந்தால் **விவாக கால** ருதுவாகும்.

3) சுக்ரன் 1-ல் அல்லது 7-லிருந்தால் **ஸம்யோக கால** ருது வெனப்படும். (சம்யோகம்-கணவன் சேர்க்கை)



4) மற்ற கிரகங்களும் அவ்வாறு இருந்தால் அவர்களின் பலத்தைக் கொண்டு நன்மை தீமைகளை உரைக்க வேண்டும்.

**ருதுவான நக்ஷத்திரபலன்**

உத்திராட நக்ஷத்திரம் முதல் மிருகசீருஷ நக்ஷத்திரம் வரையில் பெண்கள் ருதுவானால் மிகவும் விசேஷம்.

திருவாதிரை முதல் உத்திரம் நக்ஷத்திரம் வரையில் ருதுவானால் மத்திமம்.

அஸ்தம், சித்திரை நக்ஷத்திரம் வாழ்க்கையில் திருப்தி அளிக்காது.

சுவாதி, விசாகம், அனுஷம், கேட்டை, மூலம், பூராடம் ஆக 6 நக்ஷத்திரங்களில் ருதுவானால் மாங்கல்ய பலம் குறையும் என்று ருது சாஸ்திரம் கூறுகிறது.

**ருது வார பலன்**

ஞாயிறு புத்திரர் குறைவாக இருப்பர்.

திங்கள் பதிவிரதையாக இருப்பாள்.

செவ்வாய் மாங்கலிய பலம் குறைவாகும்.

புதன் விசேஷ சம்பத்து உண்டாகும்.

வியாழன் நல்ல செல்வம் படைத்தவளாவாள்.

வெள்ளி ஆரோக்கியமாக இருப்பாள்.

சனி சோரம் போவாள்.

**ருது ஆகிய இடம்**

மேஷ, சிம்ம லக்னத்தில் வீட்டின் பின்புறம் வெளி இடத்தில் ருதுவாவாள்.

ரிஷபம் தோட்டத்தில் ருது ஏற்படும்.

துலாம், கன்னி பண்டிகை, விரதம் முதலிய காலங்களில் ருதுவாவாள்.

விருச்சிகம், மிதுனம் சூரிய உதய காலத்தில் ருது உண்டாகும்.

தனுசு, கும்பம் தூக்கத்தில் தானறியாமலே ருதுவாவாள்.

கடக, மகர, மீனம் சந்தோஷமான சமயத்தில் ருது ஏற்படும்.



https://www.facebook.com/ebooksintamil/

Hariram Thejus

www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

### ருது கிரகப் பலன்

லக்கினத்திற்கு ஏழில் எட்டில் சனி, ராகு, கேது, செவ்வாய் நின்றால் பலன் குறைவு.

புதன், குரு நிற்பதால் செல்வப்பெருக்கு உண்டாகும்.

சுக்ரன் நிற்பதால் கணவன், மனைவி ஒற்றுமை குறையும்.

### ருதுகால ஜாதகம்

பெண்களுக்கு ஜனன காலத்தைப்போலவே முதல் ருது காலமும் மிகவும் முக்கியமானதென ஜோதிஷ சாஸ்திரத்தில் கருதப்படுகிறது. அப்பொழுதே அவள் 'பெண்' என அழைக்கப் படும் பெண்மைக்கு உரியவளாகையால் அந்த முதல் ருது காலத் திற்கு அமைக்கப்படும் ஜாதகமும் முக்கியமானதுபோலும்.

ருது கால ஜாதகம் மட்டுமின்றி ஒரு பெண் ருதுவாகும் வாரம், நக்ஷத்திரம், லக்னம் இவைகளைக்கொண்டு பொதுவாக அவளுடைய வருங்கால வாழ்க்கையைப்பற்றியும் நூல்களில் குறிக் கப்பட்டுள்ளன. அவற்றை விளக்கியபின் பெண் ஜாதக பலன்களை யும் அறியவேண்டும்.

## வீடு வாசல் கட்ட

## வாஸ்து சாஸ்திரம்

**1. அடிமனை கோல (வீட்டிற்கு அஸ்திவாரம் போட)**

(1) சித்திரை, வைகாசி, ஆனி, பங்குனி, தை மாதங்களில்

(2) குரு, சுக்ரன் இருவரும் அஸ்தங்கததோஷம் அடையாமல் பிரகாசமாக இருக்கும்பொழுது

(3) அசுவனி, ரோகிணி, மிருகசீர்ஷம், புனர்வசு, மகம், உத்திரம், ஹஸ்தம், சித்திரை, சுவாதி, அனுஷம், கேட்டை, உத்திராடம், திருவோணம், அவிட்டம், சதை யம், உத்திராடம், திருவோணம், ரேவதி என்ற நக்ஷத் திரங்களில்

(4) ரிக்தை, பௌர்ணமி, அமாவாசை தவிர மற்ற திதிகளில்

(5) திங்கள், புதன், வியாழன், வெள்ளி, சனி இவர்களின் வாரங்களில்

(6) இவர்களுடைய லக்னங்களில்

அடிமனைகோலினால் நன்மையுண்டாகும்.



https://www.facebook.com/ebooksintamil/

**2. வீடுகட்ட ஆரம்பிக்க**

ஆனி, புரட்டாசி, மார்கழி, பங்குனி என்ற இந்த மாதங் களில் வீடு கட்டும் வேலை எதுவும் செய்யக்கூடாது. அப்படிச் செய்தால் வீட்டு எஜமானனாவது, எஜமானியாவது மரணமடை வார்கள்.

மேற்கண்ட மாதங்களிலும் ஆடி மாதத்திலும் வாஸ்து நிர்மாணம், கிருகப்பிரவேசம் செய்தால் தரித்திரனாகிவிடுவான்.

**3.** க்ருஹ ப்ரவேசத்திற்கு நல்ல காலம்

(1) சித்திரை, வைகாசி, ஆவணி, ஐப்பசி, கார்த்திகை, தை என்னும் மாதங்களில்—

(2) அசுவனி, ரோகிணி, மிருகசீர்ஷம், புனர்வசு, பூசம், உத்திரம், ஹஸ்தம், சுவாதி, மூலம், உத்திராடம், திருவோணம், அவிட்டம், சதையம், உத்திரட்டாதி, ரேவதி என்னும் நக்ஷத்திரங்களில்—

(3) திங்கள், புதன், வியாழன், வெள்ளி, சனி என்ற வாரங் களில்—

(4) 2-ம் இடம் சுத்தியுள்ள ரிஷபம், மிதுனம், சிம்மம், கன்னி, விருச்சிகம், கும்பம் என்ற லக்னங்களில்

கிரகப்பிரவேசம் செய்யவேண்டும்.

**4. முடிக்காமல்** கிருஹப்பிரவேசம்: **கூடாது.**

மேற்கூரை கட்டாமலும்

கதவு போடாமலும்

சுவர், தரை பூசாமலும்

பஞ்ச மகாயக்ஞம் செய்யாமலும்

பிராமண போஜனம் செய்விக்காமலும்

வீட்டில் பிரவேசித்தால் அந்த வீட்டில் பேய் புகுந்து விடும். பிராணஹானியும் ஏற்படும். ஆகவே மேற்கண்டவைகளை முடித்த பிறகே கிருகப்ரவேசம் செய்யவேண்டும்.



Hariram Thejus

www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

**கிணறு வெட்டுவதன் குணம்**

| | | |
|---|---|---|
| வீட்டிற்குக் கிழக்கில் | .. | விபத்து |
| தென்கிழக்கில் | .. | புத்திர நாசம் |
| தெற்கில் | .. | மனைவி பீடை |
| தென்மேற்கில் | .. | தனக்கு ஆபத்து |
| மேற்கில் | .. | சரீரசுகம் |
| வடமேற்கில் | .. | ஆயுதத்தால் பயம் |
| வடக்கில் | .. | செல்வம் |
| வடகிழக்கில் | .. | நல்வாழ்வு |

பதினாறு சாணுக்குக் கீழே ஊற்று தோன்றினால் உத்தமம்.

## பிரயாணம் செய்ய

திங்க ளொடு சனியிரண்டுங் கிழக்கேயாகா
தெற்கு முகம் போக வென்றால் வியாழ மாகா
தங்குகின்ற விடமிருந்து மேற்கே போக
தம்பியடா வெள்ளி ரவி ஆகாதாகா
அங்கெனவே வடக்குமுகம் பிரயாணந்தான்
அப்பனே செவ்வாயும் புதனுமாகா
இங்கிவைகள் சிவனார்கைச் சூலமாகும்
ஏற்க நாள் போக வென்றால் சூக்ஷங்கேளே.

யாத்திரை, ஊர் பிரயாணம் செல்லுபவர்கள், சனி திங்கள் கிழமைகளில் கிழக்குப்பக்கம் போகக்கூடாது.

வியாழக்கிழமைகளில் தெற்கே போகலாகாது.

வெள்ளிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை தினங்களில் மேற்கே போகலாகாது.

செவ்வாய்க்கிழமை, புதன்கிழமை தினங்களில் வடக்கே, போகக்கூடாது.

அந்தந்த இடங்கள் அந்தந்த கிழமைகளில் வாரசூலையாகும். அப்படி அவசியமாய் போக வேண்டியதாக இருந்தால் சூரியோதயத்தில் வடக்கிலும், சூரியன் உச்சியில் வரும் மத்தியானத்தில் கிழக்கிலும், சூரியன் அஸ்தமயமான சாயங்காலவேளையில் தெற்கிலும், நடுராத்திரியில் மேற்கு முகமாகவும் போகலாம். இதனால் கெடுதலில்லை. அந்தந்த சமயங்களில் அந்தந்த ஸ்தானத்தில் வார சூலை கிடையாது.



https://www.facebook.com/ebooksintamil/

## பிரயாணத்திற்கு ஸாத்விக-ராஜஸ-தாமஸ வேளைகள்

| | உதயாதி நாழிகைகள் | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கிழமை | 1-4 | 5-8 | 9-12 | 13-16 | 17-20 | 21-24 | 25-28 | 29-32 | 33-36 | 37-40 | 41-44 | 45-48 | 49-52 | 53-56 | 57-60 |
| ஞாயிறு | தா | ஸா | ரா | தா | ஸா | ரா | தா | ஸா | ரா | தா | ஸா | ரா | தா | ஸா | ரா |
| திங்கள் | ஸா | ரா | தா | ஸா | ரா | தா | ஸா | ரா | தா | ஸா | ரா | தா | ஸா | ரா | தா |
| செவ்வாய் | ரா | தா | ஸா | ரா | தா | ஸா | ரா | தா | ஸா | ரா | தா | ஸா | ரா | தா | ஸா |
| புதன் | தா | ஸா | ரா | தா | ஸா | ரா | தா | ஸா | ரா | தா | ஸா | ரா | தா | ஸா | ரா |
| வியாழன் | ஸா | ரா | தா | ஸா | ரா | தா | ஸா | ரா | தா | ஸா | ரா | தா | ஸா | ரா | தா |
| வெள்ளி | ரா | தா | ஸா | ரா | தா | ஸா | ரா | தா | ஸா | ரா | தா | ஸா | ரா | தா | ஸா |
| சனி | தா | ஸா | ரா | தா | ஸா | ரா | தா | ஸா | ரா | தா | ஸா | ரா | தா | ஸா | ரா |

ஸாத்வீகம் — விசேடம்-உத்தமம்
ராஜஸம் — மத்திமம்
தாமஸம் — அதமம்

1 நாழிகை = 24 நிமிடம்



Hariram Thejus

www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

## பரஸ்தானம்

பரஸ்தானம் என்பதற்கு வேறு இடத்தில் தங்குதல் என்று பொருள். அதாவது, நாம் ஒரு குறிப்பிட்ட நாளில் வெளியூருக்குப் பிரயாணம் தொடங்கவேண்டும். ஆனால், பஞ்சாங்க ரீதியாக அந்தக் குறிப்பிட்ட நாள் வாரசூலை, யோகினி, தாராபலம் சந்திர பலம் இல்லாத நாளாக இருக்கின்றது. பிரயாணமோ அவசியம் செய்தாகவேண்டும்.

மற்றொரு விதம்:— இந்நாட்களில் விமானங்கள், ரயில்கள், பஸ்ஸுகள் இவைகளின்மூலம் தூரப்பிரயாணம் செய்ய வேண்டுமானால் நாம் நினைத்தபோது டிக்கெட்டு கிடைப்பதில்லை. ஆகவே, முன்கூட்டியே ரிஸர்வேஷன் செய்துகொள்ளவேண்டும். ஆனால் டிக்கெட் கிடைத்து நாம் பிரயாணம் செய்யவேண்டிய நாளோ வாரசூலை, யோகினி முதலிய தோஷங்கள் நிறைந்ததாக உள்ளது. தோஷங்கள் உள்ள நாளில் பிரயாணம் செய்தால் பலவிதமான சிரமங்கள் ஏற்படலாம். இந்த சங்கடமான நிலையில் என்ன செய்ய வேண்டுமென்றால், தாம் பிரயாணம் புறப்பட வேண்டிய நாளுக்கு இரண்டு அல்லது மூன்று நாட்களுக்குள்ளாக நல்ல சமயத்தில் தாம் இருக்கும் ஊரிலேயே வேறு வீட்டிற்குத் தம் சமான்களுடன் போயிருந்து (மறுபடியும் தம் வீட்டிற்குத் திரும்பி வராமல்) குறிப்பிட்ட நாளில் பிரயாணம் செய்தால் தோஷமுள்ள நாட்களில் பிரயாணம் செய்வதால் ஏற்படக்கூடிய எந்த சிரமமும் ஏற்படாமல் பிரயாணம் வெற்றிகரமாக முடியும்.

இதற்குச் சௌகரியமில்லாதவர்கள் தமது சாமான்களை, முன்கூட்டியே நல்ல நாளில் வெளியூருக்கு அனுப்பிவிட்டு தாம் மட்டும் குறிப்பிட்ட நாளில் பிரயாணம் செய்யலாம்.

இந்நாட்களில், பத்திரிகைகளில் ஆகாய விமானம், ரயில், மோட்டார் இவைகளால் ஏற்படும் விபத்துக்களைப்பற்றி பிரசுரமாகாத நாட்களே இல்லையெனலாம். இத்தகைய விபத்துக்களெல்லாம் காலபலத்தைப்பற்றிச் சிந்தியாமல் பிரயாணம் செய்வதால் ஏற்படுகின்றனவென்பதை சாஸ்திர அறிஞர்கள் நிரூபித்துக்காட்டியிருக்கிறார்கள்.

ஆகவே, ரிஸர்வேஷன் செய்துகொள்பவர்கள் தாம் பிரயாணம் செய்யவேண்டிய நாள் தோஷமுள்ளதாக இருந்தால் நல்ல நாளில் வீட்டை விட்டுப்புறப்பட்டு அதே ஊரில் வேறுஇடத்தில் தங்கிவிட்டு, குறிப்பிட்ட நாளில் பிரயாணம் தொடங்கினால் நன்மையுண்டாகும் என்பதை இந்தப் பரஸ்தானம் என்ற நமது புராதனமுறை நமக்கு அறிவுறுத்துகின்றது. இதைப் பின்பற்றுவதில் எவ்வித சிரமமோ நஷ்டமோ இல்லையன்றோ!



### யாத்திரா தானம்

நல்ல காரியங்களை உத்தேசித்து வெளியூர் செல்லும் காலத்தில், முன்னதாகவே பிராம்மணருக்குத் தன்னால் இயன்ற காணிக்கையை, வெற்றிலைப்பாக்குடன் வைத்து தானம் செய்து, நமஸ்கரித்து, பிறகு வெளியூர் செல்லுதல் நல்லது.

## சகுனங்கள்

ஏதாவது ஒரு காரியத்தை முன்னிட்டு வெளியில் புறப்படும் போது எதிரே வரும் சகுனங்களைக்கொண்டு காரிய ஜயம் உண்டாகும், உண்டாகாது என்று அறியலாம். சுபசகுனமானால் புறப்பட்டுச் செல்லலாம். அசுபசகுனமானால், அப்பொழுது நின்றுவிட்டு வேறுசமயம் செல்லலாம்.

### 1. சுப சகுனங்கள்

| | | |
|---|---|---|
| பசு | அன்னம் | |
| யானை | முத்துமாலை | |
| குதிரை | சாமரம் | |
| காளைமாடு | அக்ஷதை | |
| கன்றுடன் கூடிய பசு | எள் | |
| கன்னிகை | சலவைத்துணி | |
| இரட்டை பிராம்மணர் | மாம்ஸம் | |
| தாசி | நெய் | |
| நீசன்• | பால் | |
| சவம் | சங்கு சப்தம் | |
| தயிர் | சுபவார்த்தை | கேட்டாலும் |
| புஷ்பம் | கருடன் | |
| பழங்கள் | வலியன் | |
| எரியும் நெருப்பு | காடை | இடமானாலும் |
| இரண்டு நிறைகுடங்கள் | காக்கை | |
| தாமரைப்பூ | மயில் | |
| சந்தனம் | செம்போத்து | வலமானாலும் |
| தான்யம் | கிளி | |
| பொரி | | |

காரிய ஜயம் உண்டாகும்.



https://www.facebook.com/ebooksintamil/

Hariram Thejus

www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

## 2. அசுப சகுனங்கள்

| | |
|---|---|
| பாம்பு | சிவந்த புஷ்பம் |
| பன்றி | ஈரத்துணி |
| முயல் | உப்பு |
| குயவன் | இடருதல் |
| எண்ணெய்த்தலை | துணியவிழ்தல் |
| அவிழ்ந்த தலை | அழுகை |
| சடையன் | கலகம் |
| மூக்கரையன் | தும்மல் |
| சதா திரிபவன் | தடைவார்த்தை கேட்டல் |

இவற்றால் காரியத்தில் தோல்வியுண்டாகும்.

## தினபலன் பார்க்கும் வழி

(1) 176, 177 பக்கங்களில் மேல் வரிசையில் உள்ள அறைகளில் உங்கள் ஜன்ம நக்ஷத்திரம் எந்த அறையில் இருக்கிறது என்பதைப் பாருங்கள்.

(2) பஞ்சாங்கத்தைப் பார்த்து அன்றைய நக்ஷத்திரம் என்ன என்பதைப் பாருங்கள். பிறகு அன்றைய நக்ஷத்திரம் உங்கள் ஜன்ம நக்ஷத்திரம் உள்ள அறைக்குக் கீழே எந்த அறையில் உள்ளதென்பதைக் கவனியுங்கள்.

(3) பிறகு, அந்த நக்ஷத்திரத்திற்கு நேராக 10-வது அறையில் உள்ள கிரகம் எது என்பதைத் தெரிந்துகொள்ளுங்கள்.

(4) அதன்பிறகு, 175, 178 பக்கங்களிலுள்ள அந்த கிரகத்திற்குரிய பலனைப் படியுங்கள். அதுவே உங்கள் ஜன்ம நக்ஷத்திர ரீதியாக அன்றைய பலன் என்று தெரிந்து கொள்ளுங்கள்.

உதாரணம்:—

ஒருவருடைய ஜன்ம நக்ஷத்திரம் ரோகிணி. இது மேல்வரிசையில் 4-வது அறையில் உள்ளது. அன்றைய நக்ஷத்திரம் சதையம். அப்படியானால் அன்றைய பலன் என்ன என்பதை அறிவோம். 4-வது அறையிலுள்ள ரோகிணிக்குக் கீழே சதையம் 3-வது அறையில் உள்ளது. அந்த சதையத்திற்கு நேராக 10-வது அறையில் செவ்வாய் என்றிருப்பதால் அன்றைய தினத்திற்கு அதிபதி செவ்வாய். ஆகவே செவ்வாய்க்குரிய பலனே அன்றைய பலன் என்று அறியவேண்டும். (இப்பலன்களை அடுத்த பக்கம் காண்க)





**1. சூரியன்**

தலைவலி, மனதுக்குத் தாபம், வீட்டைவிட்டு வெளியில் திரிதல், அதிகாரிகளுடனும், பகைவர்களுடனும், சச்சரவுகள், அகால போஜனம், பெரியோர்கள் பேட்டி, மகான்களின் தரிசனம், முயற்சியில் வெற்றி, அதிக பண லாபம்.

**2. சந்திரன்**

அதிகாரிகளின் பேட்டி, காரிய சாதனை, தூரதேசத்திலிருந்து செய்தி, நண்பர் சேர்க்கை, சுகபோஜனம், மனக்களிப்பு, இனியது புசித்தல், பெண்கள் சல்லாபம், முயற்சியில் வெற்றி.

**3. செவ்வாய்**

பணம் சம்பாதிப்பதில் ஊக்கம், தூரத்திலிருந்து செய்தி வருதல், பணமுடை, அலைச்சல், சாகசம் புரிதல், பிறர் உதவியை நாடுதல், வீண் மனஸ்தாபம், உஷ்ணம், ஜுரபீடை, முயற்சி பலிக்காமை.

**4. புதன்**

சுபச் செய்தி, தனலாபம், வியாபாரி நட்பு, சுற்றத்தினர் நண்பர் வருகை, சினிமா, டிராமா முதலிய கேளிக்கைகளில் ஈடுபடுதல், அழகிய ஆடையாபரணங்கள் அணிதல், கொள்முதல் விற்பனைகளில் திறமை, லாபச் செயல்களில் ஈடுபடுதல்.

**5. குரு**

தூய உடை, உற்சாகம், நற்காரியம் செய்தல், நல்லோர் சேர்க்கை, பந்துமித்திரர் வருகை, படுக்கை சுகம், தனலாபம், அரசினர் பேட்டி, காரியானுகூலம்.

**6. சுக்ரன்**

மனக்களிப்பு, சங்கீத கோஷ்டி, புதிய முயற்சி, பிரயாணம், தன லாபம், கேளிக்கைகளில் ஈடுபடுதல், வேறு இடத்தில் வசித்தல், இனியது புசித்தல், ஸ்த்ரீ சுகம், மகான்களின் தரிசனம், பந்துமித்திரர் சேர்க்கை.

**7. சனி**

வீண் சிரமம், மயக்கம், திருட பயம், சஞ்சலம், வீண்செலவு, வீண் பிரசங்கம், வீண் அலைச்சல், தகாத செயல், முயற்சி பலிக்காமை. (ராகு, கேது பலன்களை 178-ம் பக்கம் பார்க்க)



https://www.facebook.com/ebooksintamil/

Hariram Thejus

www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

## தின பலனுக்கான கிரகம் எது?

(இதைப் பார்க்கும் வழியை 174-ஆம் பக்கம் பார்க்க)

| ஜன்ம நக்ஷத்திரம் / பஞ்சாங்க ரீதியாக அன்றைய நக்ஷத்திரம் | (1) அசுவினி<br>மகம்<br>மூலம் | (2) பரணி<br>பூரம்<br>பூராடம் | (3) கிருத்திகை<br>உத்திரம்<br>உத்திராடம் | (4) ரோகிணி<br>ஹஸ்தம்<br>திருவோணம் | (5) மிருக<br>சீர்ஷம்<br>சித்திரை<br>அவிட்டம் | (6) திருவாதிரை<br>சுவாதி<br>சதையம் | (7) புனர்வசு<br>விசாகம்<br>பூரட்டாதி | (8) பூசம்<br>அனுஷம் உத்<br>திரட்டாதி | (9) ஆயில்யம்<br>கேட்டை<br>ரேவதி | (10) கிரகம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | ரோகிணி<br>ஹஸ்தம்<br>திருவோ | மிருக<br>சித்திரை<br>அவிட் | திருவாதி<br>சுவாதி<br>சதை | புனர்<br>விசாகம்<br>பூரட்டாதி | பூசம்<br>அனுஷம்<br>உத்.டாதி | ஆயில்யம்<br>கேட்டை<br>ரேவதி | அசுவினி<br>மகம்<br>மூலம் | பரணி<br>பூரம்<br>பூராடம் | கிருத்தி<br>உத்திரம்<br>உத்திராடம் | சூரியன் |
| (2) | பூசம்<br>அனுஷம்<br>உ.டாதி | ஆயில்<br>கேட்<br>ரேவ | அசு<br>மகம்<br>மூலம் | பரணி<br>பூரம்<br>பூராடம் | கிருத்தி<br>உத்திரம்<br>உ.டம் | ரோஹி<br>ஹஸ்த<br>திருவோ | மிரு<br>சித்தி<br>அவிட் | திருவா<br>சுவாதி<br>சதையம் | புனர்<br>விசா<br>பூ.டாதி | சந்திரன் |
| (3) | கிருத்<br>உத்திரம்<br>உ.டம் | ரோகி<br>ஹஸ்த<br>திருவோ | மிருக<br>சித்<br>அவிட் | திருவா<br>சுவாதி<br>சதையம் | புனர்<br>விசா<br>பூ.டாதி | பூசம்<br>அனுஷ<br>உ.டாதி | ஆயில்<br>கேட்<br>ரேவதி | அசுவி<br>மகம்<br>மூலம் | பரணி<br>பூரம்<br>பூராடம் | செவ்வாய் |
| (4) | புனர்<br>விசா<br>பூ.டாதி | பூசம்<br>அனுஷ<br>உ.டாதி | ஆயில்<br>கேட்டை<br>ரேவதி | அசு<br>மகம்<br>மூலம் | பரணி<br>பூரம்<br>பூராடம் | கிருத்<br>உத்திரம்<br>உ.டம் | ரோகி<br>ஹஸ்தம்<br>திருவோ | மிருக<br>சித்தி<br>அவிட் | திருவா<br>சுவாதி<br>சதையம் | புதன் |
| (5) | பரணி<br>பூரம்<br>பூ.டம் | கிருத்<br>உத்திரம்<br>உ.டம் | ரோகி<br>ஹஸ்தம்<br>திருவோ | மிருக<br>சித்தி<br>அவிட் | திரு<br>சுவாதி<br>சதை | புனர்<br>விசா<br>பூரட் | பூசம்<br>அனுஷ<br>உத்.டாதி | ஆயில்<br>கேட்<br>ரேவதி | அசு<br>மக<br>மூலம் | குரு |
| (6) | திருவா<br>சுவாதி<br>சதை | புனர்<br>விசா<br>பூ.டாதி | பூசம்<br>அனு<br>உ.டாதி | ஆயில்<br>கேட்<br>ரேவதி | அசுவ<br>மகம்<br>மூலம் | பரணி<br>பூரம்<br>பூ.டம் | கிருத்<br>உத்திர<br>உ.டம் | ரோகி<br>ஹஸ்<br>திருவோ | மிருக<br>சித்<br>அவிட் | சுக்கிரன் |
| (7) | அசுவ<br>மகம்<br>மூலம் | பரணி<br>பூரம்<br>பூராடம் | கிருத்<br>உத்ர<br>உ.டம் | ரோகி<br>ஹஸ்<br>திருவோ | மிருக<br>சித்<br>அவிட் | திருவா<br>சுவா<br>சதை | புனர்<br>விசா<br>பூ.டாதி | பூசம்<br>அனு<br>உ.டாதி | ஆயி<br>கேட்<br>ரேவ | சனி |
| (8) | மிருக<br>சித்தி<br>அவிட் | திருவா<br>சுவாதி<br>சதை | புனர்<br>விசா<br>பூரட் | பூசம்<br>அனு<br>உ.டாதி | ஆயில்<br>கேட்<br>ரேவதி | அசு<br>மகம்<br>மூலம் | பரணி<br>பூரம்<br>பூ.டம் | கிருத்<br>உத்-ரம்<br>உ.டம் | ரோகி<br>ஹஸ்தம்<br>திருவோ | ராகு |
| (9) | ஆயில்யம்<br>கேட்டை<br>ரேவதி | அசுவினி<br>மகம்<br>மூலம் | பரணி<br>பூரம்<br>பூராடம் | கிருத்<br>உத்ரம்<br>உ.டம் | ரோகி<br>ஹஸ்த<br>திருவோ | மிருக<br>சித்தி<br>அவிட் | திருவாதி<br>சுவாதி<br>சதை | புனர்<br>விசா<br>பூரட்டாதி | பூசம்<br>அனு<br>உ.டாதி | கேது |







https://www.facebook.com/ebooksintamil/

Hariram Thejus

www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

(175-ம் பக்கத் தொடர்ச்சி)

**8. ராகு**

வீண் செலவு, சாப்பாட்டில் வெறுப்பு, தீயவர் சேர்க்கை, சிக்கல்கள், வீண் மனஸ்தாபம், திருட்டு பயம், அலேச்சல், காரிய விக்கினம், வியாபார விவகார கோஷ்டி.

**9. கேது**

உடல் நலிவு, மனக்கலக்கம், பெண்களுடன் விவாதம், பிறரால் துன்பம், அகால போஜனம், சாதுக்கள் தரிசனம், புண்ணிய கதை கேட்டல், விசித்திரப்பொருள் காட்சி, மறைந்த பொருள் கிடைத்தல், கடினமான பேச்சு.

## தின பலன் (மற்ருெரு முறை)

அவரவர்கள் பிறந்த நக்ஷத்திரம் முதல் அன்றைய நக்ஷத்திரம் வரை எண்ணின தொகையுடன், ஞாயிற்றுக்கிழமை முதல் அன்றைய நாள், ஆகிய மொத்த நாட்களின் தொகையையும், பிரதமை முதல் அன்றைய திதி வரையில் எண்ணி அந்தத் தொகைகளின் எண்ணிக்கையையும் கூட்டி 9ஆல் வகுத்தால் வரும் மீதி 1. ஒன்ருக இருந்தால் வியாகூலம். 2. சுபம், சம்பத்து. 3. துர் வார்த்தை, அவதூறு 4. குடும்ப க்ஷேமங்கள், பந்துக்களால் சுபம். 5. பெண்களிஞல் சந்தோஷம், ஸ்திரீகளால் நன்மை. 6. சுப செளகர்யம். 7. கலகம், மன அமைதி இல்லாமை, 8. உடல் அசெளக்கியம். 9. உபதேச வார்த்தைகள், தெய்வீக வழிபாடுகள் நடக்கும் எனக் கொள்க.

## மாத பலன்

அவரவர்கள் பிறந்த நக்ஷத்திரம் முதல் எந்த மாதத்திய பலனே அறிய விரும்புகிருேமோ அந்த மாதம் பிறந்த நக்ஷத்திரம் வரை எண்ணி வரும் தொகையை 7ஆல் பெருக்கி, 8ஆல் வகுத்தால் வரும் மீதியானது 1 ஆக இருந்தால் அம்மாதம் வியாதிகளின் தொல்லே இருக்குமென்றும், 2 ஆக இருந்தால் லாபங்கள் ஏற்படுமென்றும், 3ஆக இருந்தால் செலவுகள் ஏற்படுமென்றும், 4 ஆக இருந்தால் அலேச்சலும் அகால போஜனமும் உண்டென்றும், 5 ஆக இருந்தால் சுகபோஜனம், மன அமைதி, சந்தோஷங்களும், 6 ஆக இருந்தால் ஐசுவர்யமும் நல்ல வருமானங்களும் இருக்குமென்றும் 7 ஆக இருந்தால் கலகங்களும், மனஸ்தாபங்களும் ஏற்படுமென்றும், 8ஆக இருந்தால் தீமையான பலன்களும், மரணம் போன்றவைகளேக் கேட்கும்படி இருக்குமென்றும் மாதபலன்களே அறியலாம்.



https://www.facebook.com/ebooksintamil/



| | | |
|---|---|---|
| 1<br>சூரியன் | 2<br>சந்திரன் | 3<br>செவ்வாய் |
| 4<br>புதன் | 5<br>வியாழன் | 6<br>வெள்ளி |
| 7<br>சனி | 8<br>ராகு | 9<br>கேது |

## ஆருடம் சொல்லும் விபரம்

ஆருடம் கேட்க வந்தவர்களே, ஒன்பது எண்களுக்குள் ஒன்றை சொல்லச் சொல்லி, அந்த எண் எந்த கிரஹத்தைக் குறிக்கின்றதோ, அக்கிரஹத்தின் பலனேக்கூறலாம். அல்லதுமேலே இருக்கும் சக்கரத்தில் விரல் வைக்கச் சொல்லி, அதிலிருந்து அந்த எண்ணிற்குடைய கிரஹ பலனேக் கூறலாம்.

எண். 1 சூரியன்:

சூரியன் உதயமானதால் பொருள் கிடைக்கும். போனவரும் வந்து சேருவார்கள். நாணயமுண்டாகும். தொடுத்த வழக்கானது வெல்லும். உயர்பதவி உண்டாகும்.

எண். 2. சந்திரன்:

சந்திரன் தோன்றியதால் பந்துமித்ர நண்பர்களாலும் ஸ்திரீகளாலும் உதவி உண்டு. தோஷங்கள் நீங்கி, நோய்கள் அகலும். தாய்வழியில் ஆதாரம் ஏற்படும்.

எண். 3. செவ்வாய்:

செவ்வாயில் கேட்டதிஞல் தீயானது பரவுவதுபோல, கலகங்களும் சண்டை சச்சரவுகளும் தோன்றும். வியாதி பீடைகள் வரும். எல்லாரும் விரோதிகளாக மாறுவார்கள். வீட்டைவிட்டுப் போகும்படி இருக்கும்.



Hariram Thejus

www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

எண். 4. புதன்:

புதன் கிரஹத்தின் பலத்தினிலே கேட்டதால் வித்தைகள் விருத்தியாகும். வியாபாரம் செய்யலாம். நற்பலிதமுண்டு. பிணிகள் அகலும். பிரிந்த பெண்கள் வருவார்கள்.

எண். 5. வியாழன்:

குரு கிரஹ பலம் உமக்கு இருக்கிறது. குடும்பத்தில் சுப காரியப் பிரயத்தனம் நடத்தலாம். சுட்மாக கலியாணம் நடக்கும். உத்யோகம் கிடைக்கும். தெய்வ பலம் பூரணமாக இருக்கிறது. நினைப்பது நடக்கும்.

எண். 6. வெள்ளி:

சுபக் கிரஹமான சுக்ரன் உமது பக்கம் இருக்கிறார். சந்தோஷங்கள் உண்டு. திருமணம் நடைபெறும். கௌரவங்கள் ஏற்படும். செல்வம் உண்டாகும். புத்திரர்களால் ஜெயம் உண்டு.

எண். 7. சனி:

சனி பகவான் உதயமானதால், சேதமும் பொல்லாப்பும் நேரும். பயம் தோன்றும். எக்காரியத்தைச் செய்ய முனைந்தாலும் தடைப்படும். சனிபகவான் ப்ரீதி செய். சுபமாகும்.

எண். 8. ராகு:

ராகு கிரஹத்தின் பலம் அதிகமாக இருக்கிறது. பொருள் சேதமும், அசௌக்யங்களும் கடன் உபாதைகளும் இருக்கும். எடுத்த காரியம் தடைபடும். முருகர் பூஜை செய்.

எண். 9. கேது:

கேது உதயமானதால் இஷ்டதெய்வத்தை வழிபடுதல் வேண்டும். சந்தேகங்களும், பயமும் தொழில் தேக்கமும் இருக்கும். திருடர் பயம் உண்டு. நஷ்டங்களுண்டு. சண்டிகேசுவரியைப் பிரார்த்தித்து வா. சுபமாக முடியும்.



https://www.facebook.com/ebooksintamil/

ஸ்ரீ:

# பலகரை ஆரூடம்

## ஆரூடம் சொல்லும் விபரம்

ஆரூடம் கேட்க வந்தவர்களை எதிரில் உட்காரச் சொல்லுங்கள். பன்னிரண்டு பலகரையை அவர்களிடம் கொடுத்து, அவர்கள் கேட்க வந்த காரியங்களை அவர்கள் மனதில் நினைத்துக் கொள்ளச் சொல்லுங்கள். இஷ்டதெய்வத்தை மனதில் தியானித்து, பலகரையை கீழே உருட்டும்படி சொல்லுங்கள். அப்படி உருட்டிய பலகரையில் எத்தனை நிமிர்ந்திருக்கின்றன என்பதை எண்ணிக்கொண்டு கீழே கூறியுள்ள பலனைக் கூறுங்கள்.

## 1. ஒரு பலகரை மாத்திரம் நிமிர்ந்திருந்தால்

ஒன்றின் பலன் யாதெனில், ஆவலாக மனதில் நினைத்த காரியம் முடிவாகும். குடும்பத்தில் சந்தோஷங்கள் நிலவும். மருந்து உண்ண பிணியானது மறையும். பால் பாக்யங்கள் ஏற்படும். பெண்களால் செல்வமானது பெருகும். பந்துக்கள் வருவார்கள். பழனி முருகன் பக்கத்தில் துணை இருப்பான்.

## 2. இரண்டு பலகரைகள் நிமிர்ந்திருந்தால்

இரண்டின் பலன் யாதெனில், நினைத்த காரியம் சற்று தாமதமாக முடிவடையும். இருந்துவரும் நோயானது இன்னும் ஒரு மாதத்தில் குணமாகும். தூரதேசம் சென்றுள்ளவர்கள் ஓராண்டு காலத்துக்குள் திரும்புவார்கள். வெற்றியுடன் வழக்கு முடியும். காணாத பொருள் கிடைத்துவிடும். தீராத நோய் தீர்க்கும் திருப்பதி வெங்கடாசலபதியை நினைத்தால், தானாக முடியும். தயக்கம் வேண்டாம்.

## 3. மூன்று பலகரை நிமிர்ந்திருந்தால்

மூன்றின் பலன் யாதெனில், குறையாக முடியும் முயற்சித்த காரியம். கைப்பொருளும் நஷ்டமாகி, கஷ்டங்களும் நேரிடும். செய்தொழிலில் சண்டை சச்சரவேயாகும். பேசிய வார்த்தைகளும் பயனில்லாமல் போகும். பெற்றெடுத்த பாலகரும் பகையாவார்கள். நண்பர்களால் நாடி வரும் சில கலகங்களும் சேமித்த பொருளும் சேதமாகும். செய்ய மறந்துவிட்டாய் பூஜை. சீக்கிரமே செய்தால் சகலமும் தீரும். துர்க்கை பூஜையைச்செய்.

## 4. நான்கு பலகரை நிமிர்ந்திருந்தால்

நான்கின் பலன் யாதெனில், நினைத்த காரியம் நிச்சயமாய் ஜெயமாகும். மனம் போல மேலோரின் உதவி உண்டாம். தொழி



Hariram Thejus
www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

வில் விருத்தியுடன் தனமும் உண்டாம். மாடு மனை பூமி வர மஹாலக்ஷ்மி அருளும் உண்டு. எதிர்ப்பட்ட கண்டம் எளிதில் தொலைந்தது. தீர்க்கமான வயதும் உண்டு. திருமூர்த்தியின் அருளும் உண்டு. திருச்செந்தூர் முருகனை தினமும் பூஜை செய்வாய்.

**5. ஐந்து பலகைகள் நிமிர்ந்திருந்தால்**

ஐந்தின் பலன் யாதெனில், நீ நினைத்த பொருள் உனைத் தேடியே வந்திடும். போகும் பயணமதில் பொன் பொருள் வந்து சேரும். நோயும் கவலையும் போகும். வீடுவிட்டுப் போன நாற்கால் ஜீவன் வந்து சேரும். ஐயமுறாதே. ஆண்டனை நீ நம்பு. அவன் அருளும் உனக்கு வந்திடும்.

**6. ஆறு பலகரை நிமிர்ந்திருந்தால்**

ஆறின் பலன் யாதெனில், நினைத்தது நீராகும். பொல்லாத விதியானது உனை நாட, பேயினால் மனையாளுக்கு பாதையுண்டாம். கால் போகும் பாதையெல்லாம் கஷ்டம் நேரும். நாடிப்போகும் இடமெல்லாம் நகைப்பே செய்வார். வருத்தமே அதிகமாக உமக்குத் தோன்றும். வீட்டை விட்டு வெளியேறும் வாய்ப்பை அடைவீர். ஆஞ்சநேயர் அனுக்ரஹத்தை அடைய முயன்றால் சுகமனைத்தும் அடைந்திடுவீர்.

**7. ஏழு பலகரை நிமிர்ந்திருந்தால்**

ஏழின் பொருள் யாதெனில், ஏழுமலையான் ஆசியுண்டு. எவர் மூலமும் கிடைத்திடும் எண்ணின பொருள் யாவும். சண்டையுடன் போனவர் சிரித்துக்கொண்டே வருவார். மாதம் ஒன்றிற்குள்ளே மனைதனிலே மகிழ்ச்சி உண்டு. பண்ணின புண்ணியத்தால் புத்திரனைப் பெற்றிடுவீர். செய்தொழிலில் செயமுண்டு. செம்மையான லாபம் உண்டு மனையிலே சந்தோஷத்தோடு மாடும் கன்றும் வந்து சேரும். ஏழுமலையானை நினைத்து வழிபடு.

**8. எட்டு பலகரை நிமிர்ந்திருந்தால்**

எட்டின் பலன் யாதெனில் எட்டாது உன் எண்ணம். போன பொருள் போனதுதான். பொல்லாத கிரகம் உனைப் பார்க்க, பித்தனாக நீ இருக்கிறாய். நலியும் நோயும் சேர்ந்து நாலாவிதமும் ஆட்டும். பொல்லாப்பு உண்டாகும். பாகப்பிரிவினையும் உண்டாம். பொருள்கள் சேதமாகும். பொறுமையுடன் பிரார்த்திப்பாய் அப்பா! சூரியனின் அருளைப்பெற்றால் சந்தோஷமாய் நீ இருப்பாய்.

**9. ஒன்பது பலகரை நிமிர்ந்திருந்தால்**

ஒன்பதின் பலன் யாதெனில், ஓடிவிட்டது உன் தொல்லை. நினைத்த பொருளைப் பெற்றிடுவாய். வழக்கும் வெற்றி காணும்.



பிணியும் பனிபோல் மறையும். பணம் வந்திட பந்துஜனமும் வந்து சேரும். உன்னத பதவி மக்கள் உன்பால் வைப்பார்கள் மனதை. இஷ்ட தேவதையை நீ பூஜித்து வந்தால் எதிலும் வெற்றியே தவிர தோல்வியே இல்லை. ராமனின் ஆசி உண்டு. ராமாயணத்தைப் படித்து வா.

**10. பத்து பலகரை நிமிர்ந்திருந்தால்**

பத்தின் பலன் யாதெனில், பழிகள் வந்து சேரும். செய்தொழிலில் சங்கடங்கள் பல உண்டு. நஷ்டங்களும், கவலைகளும் நசுக்கிவிடும். விஷ ஜுரங்கள் கண்டிடும். இடம்விட்டு இடம் மாறும். எதைச் செய்தாலும் பகையாக முடியும். பணமும் சமயத்தில் கிடைக்காது. பெண்சாதியும் பகையாக இருப்பாள். தினமும் குரு பகவானைப் பிரதக்ஷிணம் செய்தால் பலவிதங்களிலும் கஷ்ட நஷ்டங்கள் குறைந்து அமைதி ஏற்படும். விநாயகக்கடவுளைப் பூஜை செய். வினைகள் தீரும்.

**11. பதினொரு பலகரை நிமிர்ந்திருந்தால்**

பதினொன்றின் பலன் யாதெனில் பலமான லாபங்களுண்டு. எண்ணின காரியம் எளிதில் முடியும். குடும்பத்தில் இருந்துவந்த கவலைகள் தீர்ந்து மனைவிக்குக் கரு உண்டாகும். உத்தியோகம் கிடைக்கும். உயர்பதவிகள் கிடைக்கும். பந்துக்கள் வந்திடுவார்கள். பால் பாக்யம் சேரும். சுபகாரியங்கள் நடந்திடும். தினமும் தேவி பூஜை செய்துவந்தால் சீக்கிரத்தில் பலன்களையடைவீர்கள்.

**12. பன்னிரண்டு பலகரை நிமிர்ந்திருந்தால்**

பனிரண்டின் பொருள் யாதெனில், பொருள் விரயம்தான் ஏற்படும். போன பொருள் வராது. களவு போகும். வம்புவழக்கு வியாஜ்யங்கள் வந்து சேரும். பெண்களால் சண்டைகள் ஏற்படும். உயிருக்கும் கெண்டம் ஏற்படும். மொத்தத்தில் செல்வம் சீரழியும். முருகக் கடவுளைப் பிரார்த்தனை செய்து வழிபட்டால், விரயங்கள் மறையும். வெற்றிகள் ஏற்படும்.

சுபம்



https://www.facebook.com/ebooksintamil/

Hariram Thejus

www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

## ஸ்ரீ சகாதேவர் அற்புத ஆருட சக்கரம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 20 | 103 | 17 | 60 | 41 | 86 | 11 | 2 | 100 |
| 72 | 45 | 30 | 16 | 68 | 15 | 50 | 36 | 9 |
| 40 | 94 | 34 | 74 | 62 | 23 | 85 | 84 | 56 |
| 65 | 55 | 101 | 21 | 89 | 52 | 73 | 67 | 3 |
| 48 | 25 | 33 | 12 | 104 | 10 | 106 | 24 | 66 |
| 78 | 19 | 70 | 107 | 22 | 37 | 47 | 13 | 7 |
| 61 | 27 | 95 | 26 | 1 | 81 | 6 | 105 | 35 |
| 46 | 102 | 87 | 96 | 91 | 54 | 79 | 44 | 38 |
| 97 | 63 | 71 | 5 | 51 | 14 | 99 | 75 | 8 |
| 83 | 88 | 42 | 57 | 18 | 39 | 82 | 31 | 43 |
| 98 | 90 | 64 | 92 | 53 | 49 | 76 | 69 | 28 |
| 77 | 32 | 93 | 29 | 58 | 80 | 59 | 108 | 4 |

இதைப் பார்க்கும் விதம்: தாம் நினைத்த காரியம் நிறைவேறுமா என்று அறிய விரும்புபவர்கள் தமது இஷ்ட தேவதையை தியானித்து, மேற்கண்ட கட்டத்தில் ஏதாவது ஓர் எண்ணைக் கண்ணை மூடிக்கொண்டு தொடவும். அதன் பலனை அடுத்த பக்கங்களில் பார்க்கவும்.





## ஸ்ரீ சகாதேவர்
## அற்புத ஆருட சக்கர பலன்

(இதற்கான கட்டத்தை 184-ம் பக்கம் பார்க்க)

1. நினைத்த காரியம் ஜயம்;பெரியோர்உதவி;செல்வச்சேர்க்கை.
2. காரிய தாமதம்; பிணி நீங்கும்; தேடினுல் போன சொத்து கிடைக்கும்.
3. காரியத் தோல்வி; கலகம்; பொருள்சேதம்; அரசர்கொடுமை.
4. தாமதமாக வெற்றி; பிறர் உதவியால்பொருள்;வீட்டிலிருந்து போன ஜீவன் துயரத்தில் உள்ளது.
5. புகழுடன் வேலை முடியும்; வழக்கில் வெற்றி, ஆண்பிள்ளை பிறக்கும்; சுப காரியம்.
6. போன பொருள் கிடைக்காது; தொழிலில் பகை; எதிலும் பயனில்லை.
7. நினைத்த தொழில் பலிதம்; வழக்கில் வெற்றி; வீடு, மனை வாங்கலாம்.
8. களவு போனது கிடைக்காது; பந்து விரோதம்; நோய் தாமதமாக நீங்கும்.
9. பொருள் லாபம்; போனவர் வருவர்; பெண்சேர்க்கை;தொழிலில் லாபம்.
10. எண்ணம் கைகூடாது; பகை; போனவர் மீளார்; தெய்வக் குற்றம்.
11. தொழிலில் துக்கம்; அடுத்தது பகை; மனைவி பிரிவாள்; எதிலும் நஷ்டம்
12. நினைத்தது ஜயம்; பழைய சண்டை நிவ்ருத்தி; பொருள்,பால் பாக்யம்.
13. காரிய விக்னம்; மனைவியால் பாதை; எத்தொழிலும்நஷ்டம்.
14. போகும் வேலை சித்தியாகும்; பகை வெற்றி; உத்தியோக விருத்தி.
15. நினைத்தது தாமதமாகும்; மருந்தால் நோய் நீங்கும்; கலகம் வந்து நீங்கும்.
16. பெரியோர் உதவி; நினைத்தது ஜயம்; தேடுவது கிட்டும்; ஸகலமும் லாபம்.
17. கைவிட்டுப்போனது கிடைக்காது; எதிலும் நஷ்டம்; மூன்று மாதம் பொறுக்க.



Hariram Thejus

www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

https://www.facebook.com/ebooksintamil/

18. நினைத்தது தாமதமாகும்; பிணி நீங்காது; பெற்றோர் பகை; பிரயாணத்தில் தீமை.
19. ராஜாங்க உதவி; வெற்றி; கன்னியால் பொருள்; போன ஜீவன் வந்து சேரும்.
20. காரிய விக்னம்; வியாகூலம்; சிறைபயம்; பொருள் விரயம்.
21. எதிலும் வெற்றி; கூட்டுவியாபாரலாபம்; கொடுக்கல்வாங்கல்.
22. நல்லோர் பகை; காரிய ஹானி; விட்டுப் பிரிந்தவள் சேர மாட்டாள்.
23. நண்பர் விரோதம்; ஒருவனால் காரியத்தடை; போனவர் வர தாமதம்.
24. நினைத்தது உடனே பலிதம்; பெண் வந்து சேருவாள்; நட்புப் பெருக்கு.
25. காரிய தாமதம்; வழக்கில் கஷ்டம்; ஓடினவர் வரமாட்டார்.
26. காரியசித்தி; வழக்கில்வெற்றி; போனது பொருளோடு வரும்.
27. பெண்ணால் காரிய ஹானி; மனக்கலக்கம்; 1 மாதம் பொறு.
28. ஆண் பெண் சென்றவர் மீள்வர்; தொழில் லாபம்; வழக்கில் வெற்றி.
29. ஒருவனால் குற்றம் சேரும்; அலைச்சல்; வழக்கில் கெடுதி.
30. போனவர் வருவர்; பொருள் லாபம்; பெண்ணால்காரியசித்தி.
31. பிரிந்து போனது வராது; காரிய விக்னம்; பாகப் பிரிவினை; தாமதம்.
32. மனைவியால் தீமை வந்து நீங்கும்; அனைத்தும் தாமதம்; மூன்று மாதம் பொறு.
33. செல்லும் காரியம் முடியும்; மாதர் சிநேகம்; உத்யோகசித்தி.
34. வழக்கில் தீமை; பிணி நீங்காது; காரியம் நிறைவேறாது.
35. உதவியால் வழக்கில் வெற்றி; நன்மை; தொழிலில் லாபம்.
36. தொலைவில் சென்றவர் வந்து சேரார்; பெண் பகை; நஷ்டம்.
37. தொழில் லாபம்; ஆண் மகவு பிறக்கும்; ஸகலமும் நன்மை.
38. காரிய தாமதம்; பிரிந்து போனது 1 வாரத்தில் வரும்.
39. பிணி தீரும்; காரியம் கைகூடும்; வீட்டில் சுபம்.
40. பெண்ணால் கலகம்; காரிய விக்னம்; வழக்கில் துன்பம்.
41. நினைத்தது பலிக்கும்; போனவர் திரும்புவர்; நண்பரால் லாபம்.
42. பிரிந்தது தெற்கில் உளது; போகும் காரியம் ஸித்தி.
43. போனது வர நாளாகும்; பெண் பிரிந்துவிடுவாள்; விக்னம்.
44. வியாபார லாபம்; அரசு உதவி; காரிய ஜயம்.
45. திருமணம் நடக்கும்; போகும் வேலை தாமதம்; படிப்படியாக நன்மை.



46. நினைத்தது தாமதம்; கைவிட்டபொருள் தானே வரும்; சுற்றத்தால் நன்மை.
47. வழக்கில் தோல்வி; காரிய விக்னம்; செய்த்தொழில் நீங்கும்.
48. சுபம் நடக்கும்; காரிய சித்தி; சிறை மீட்சி.
49. காரியம் தாமதமாக முடியும்; நோய் தீரும், தீமை விலகும்.
50. பெண்டிர் நட்பு; நினைத்தது உடனே முடியும்; கவலை தீரும்.
51. நஷ்டம்; மனைவிக்குப் பிணி; செய்தொழில் நீங்கும்.
52. முயற்சியால் காரிய சித்தி; கூட்டு வியாபார நன்மை.
53. நினைத்தது நடக்காது; பகைவரால் துன்பம்; ஒருவன் பகை.
54. பெரியோரால் சுகம்· காரிய சித்தி; சொப்பனம் பலிக்கும்.
55. நினைத்தது கெடுதியாகும்; மதிப்பு, பொருள் அழியும்; மனைவி பகை.
56. பெண்கள் நட்பு; காரிய சித்தி; அரசரால் நன்மை.
57. போனது திரும்பாது; நல்லோர் பகை; காரிய விக்னம்.
58. நண்பர் உதவி; பெண்ணால் பெருமை; தொழில் விருத்தி.
59. வழக்கில் துன்பம்; போன ஜீவன் வராது; புத்திக்கலக்கம்.
60. வழக்கில் வெற்றி; ஆடு, மாடு பலன்; புத்திரரால் மகிழ்ச்சி.
61. கடனால் வருத்தம்; காரியம் 15 நாட்களில் ஜயம்; தீங்கு நீங்கும்.
62. மனைவி கர்ப்பம்; நினைத்த தொழிலில் நன்மை; 1 மாதத்தில் பலன்.
63. வழக்கில் வெற்றி; விவசாயம் நன்மை தரும்; போனவர் வருவர்.
64. ஒருவனால் காரியத் தடை; பொருள் மூலம் மனஸ்தாபம்; செல்லாத வாக்கு.
65. பிணி அகலும்; எண்ணம் நிறைவேறும்; வீட்டில் சுபம்.
66. எதிலும் நஷ்டம்; போனவர் திரும்ப தாமதம்; பெண்ணால் விக்னம்.
67. வீட்டில் விவாகம்; பெண்மூலம் உதவி; எண்ணியது விரைவில் நடக்கும்.
68. உத்தியோகத்தில் கலகம்; போனவன் வர தாமதம்; காரியம் தாமதமாகும்.
69. நோய் நீங்கும்; குறிப்பிட்ட பெண்ணே கிடைப்பாள். முயற்சியால் பலன்தரும்.
70. குடும்பத்தில் கலகம்; வழக்கில் நஷ்டம்; காரியம் தாமதம்.
71. அந்தணன் உதவி; தொழிலில் லாபம்; எண்ணம் நிறைவேறும்.
72. அரசரால் காரியத் தடை; ஒருவனால் கலகம்; தாழ்மை, கஷ்டம்.



https://www.facebook.com/ebooksintamil/
Hariram Thejus
www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

73. பாகப்பிரிவினையாகும்;வழக்கில்வெற்றி;நினைத்தது நடக்கும்.
74. நிந்தைச் சொல்; காரிய தாமதம்; ஆறுமாதம் கழித்து சுகம்.
75. நினைத்தது ஜயம்; வியாபார விருத்தி; பிணி அகலும்.
76. விஷப்பீடை; பெண்ணால் காரிய விக்னம்; நஷ்டம்.
77. காரிய சித்தி; வழக்கில் வெற்றி; தனம்; கீர்த்தி; லாபம்.
78. பொருள் விரயம்; காரிய விக்னம்; பழிவரும்; பெண் கலகம்.
79. உத்தியோக உயர்வு; பெண் உறவு; நினைத்தது நடக்கும்; தன லாபம்.
80. போனது மேற்கில் தேடக் கிடைக்கும்; காரியம் தாமதம்.
81. தொழிலில் நஷ்டம்; நினைத்தது கூடாது;மக்களால்தொல்லை
82. நினைத்த காரியம் நன்மை; பொருள்; சிநேகம் லாபம்.
83. அரசால் துன்பம்; காரிய விக்னம்; வீட்டில் பகை.
84. உடனே நடக்கும்; நட்பும் பொருளும் கிடைக்கும்.
85. காரிய விக்னம்; போனவர் 15நாட்களில் வருவர்; தொல்லை.
86. மனைவி வருகை; நண்பர் உதவி; நினைத்தது முடியும்.
87. நினைத்தது நடக்காது; மனைவியால் தீமை; களவுபோனது கிடைக்காது.
88. கைத்தொழில் லாபம்; நினைத்ததுநடக்கும்;மனைவி மகிழ்ச்சி.
89. வழக்கில் துன்பம்; போனது கிடைக்காது; 1 மாதத்தில் காரிய சித்தி.
90. வீட்டில் சுபம்; பெண்ணால் நினைத்தது முடியும்; பல நன்மைகள்.
91. பொருள் சேதம்; அண்ணனால் துயரம்; பிரிந்தவர் வர தாமதம்.
92. ஆண் மகவு உண்டாகும்; விரைவில் காரியசித்தி; தொழில் பெருகும்.
93. நினைத்ததுநடக்க 3 மாதமாகும்; வழக்கில் நஷ்டம்; பிறரால் கலகம்.
94. செல்வம், கீர்த்தி; காரிய சித்தி; பெரியோர் உதவி.
95. குடும்ப பிரிவு; இட மாற்றம்; துயரம்.
96. வீடுவாங்க நன்மை; வழக்கு வெற்றி; காரிய ஜயம்.
97. வழக்கால் நஷ்டம்; போனவர் மீளார்; காரிய தாமதம்.
98. காரிய சித்தி; பாகப் பிரிவினை; தொழில் லாபம்.
99. நினைத்தது நடக்காது; பேசிய பெண் தவறிப் போகும்; உற்றார் பகை.
00. விரைவில் ஜயம்; செல்வம்; சுபப்ராப்தி.
01. எங்கும் பகை; எதற்கும் விக்னம்.
02. போனவர் 1 மாதத்தில் வருவார்; நிதானமாக காரியசித்தி.



103. களவுபோன நாற்கால் ஜீவன் கிடைக்காது;காரிய விக்னம்.
104. நினைத்தது நிறைவேறும்; தூரதேசத்துச் சேதி வரும்; சுகம்.
105. காரிய தாமதம்; தேடிய பொருள் கிட்டாது; பழி.
106. வழக்கில் வெற்றி பிள்ளைப்பேறு; தொழிலில் லாபம்.
107. பெண்ணால் வேலைத் தடை; நண்பர் பிரிவு; பொல்லாப்பு.
108. நினைத்த காரிய சித்தி; மாதரால் மகிழ்ச்சி வெற்றி;புகழ்.

## சொப்பன பலன்

| கனவில் கண்டது:— | பலன் |
|---|---|
| 1. அரசன், யானை, குதிரை, பசு,எருது, தங்கம் இவைகளைக் கண்டால் | பந்து தரிசனம், தன லாபம், புத்ர லாபம் |
| 2. எருது, யானை, மலை, மரம் இவைகளின் மீது ஏறினாலும், எச்சில், அசுத்தம், இவை உடல்மீது பட்டாலும், இரத்தம், பிணம், சேரத்தகாத பெண் சேர்க்கை இவைகளைக் கண்டாலும் | விசேஷ லாபம் தேக சௌக்கியம் புதிய வஸ்து கிடைத்தல் |
| 3. தாழ்ந்த வகுப்பினர், மிலேச்சர் போன்றவர்கள் ஆயுதம் தாங்கி சண்டைக்கு வந்தால் | உடல் நலம் குன்றும் |
| 4. வீட்டைச் சாணியால் மெழுகிக் கோலம் போட்டால் | திருடர் பயம் |
| 5. மடியாக இருக்கும் பிராம்மணனைக் கண்டால் | அக்னி பயம் |
| 5. பூ, பழம் நிறைந்த மரத்தில் ஏறினால் | நினைத்த காரியம் ஜயம் |
| நாக ஸர்ப்பம் வலது தோளில் ஏறினால் | பொன்கிடைக்கும் அல்லது புத்ர லாபம் |
| 8. சுவர்மேல் உட்கார்ந்து சாப்பிட்டாலும் சமுத்திரத்தைத் தாண்டினாலும் | விசேஷ உத்தி யோக லாபம் |
| 9. பாம்பை அல்லது தேளைக்கண்டால் | ஜயம்; பணம் |
| 10. தாமரை இலையில் பாயசம் சாப்பிட்டால் | பிரபு ஆவான் |



https://www.facebook.com/ebooksintamil/

Hariram Thejus

www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

| | | |
|---|---|---|
| 11. | பட்சிகளை வலை போட்டுப் பிடித்தால் | ஐசுவரியம், புதிய ஸ்திரீ போகம் |
| 12. | இரத்தம், மதுபானம் செய்தல் (காண்பவன் பிராம்மணனாகில்)... | வித்யா லாபம் |
| | மற்ற சாதியினராகில் | தன லாபம் |
| 13. | தீபம், அன்னம், கொடை, சாமரம் தேவதாசி இவைகளைக் கண்டால் | காரியம் அனுகூலம் |
| 14. | மனிதக் குடலைக் கழுத்தில் சுற்றிக் கொண்டு கிராமத்தின் நடுவில் நின்றால் | பல கிராமங்களுக்கு, அல்லது தேசத்திற்குத் தலைவனாவான். |
| 15. | கழுதை, ஒட்டகம், கடா இவைகள் பூட்டிய வண்டியில் ஏறினால் | மரணம் |
| 16. | தாம்பூலம், சந்தனம், தயிர், முத்துக்கள், புஷ்பங்கள் இவைகளைக்கண்டால் | தன லாபம் |

## பாலாரிஷ்ட நிவ்ருத்தி யோகங்கள்

(78-வது பக்கத் தொடர்ச்சி)

1. லக்னத்தில் குரு பலமாக நின்றாலும்
2. லக்னாதிபதி சுபபலம், சுபர்பார்வை, சுபரிடத்தில் இருப்பு இவை பெற்றிருந்தாலும்
3. சந்திரன் 8லிருந்து, குரு, புத, சுக்ர திரேக்காணத்திலிருந்தாலும்
4. பௌர்ணமிசந்திரன் சுபராசியில் சுபர்பார்வை பெற்று இருந்தாலும்
5. புதன், குரு, சுக்ரன் இவர் பலம் பெற்றிருந்தாலும்
6. சந்திரன் 6-ல், சுபர் திரேக்காணதிலிருந்தாலும்
7. சந்திரனுக்கு இருபுறமும் சுபர் நின்றாலும்
8. முழுமதி லக்கினத்தைப் பார்க்க, குரு கேந்திரத்திலிருந்தாலும் பாலாரிஷ்ட தோஷம் நிவ்ருத்தியாகும்.



Hariram Thejus

https://www.facebook.com/ebooksintamil/

## தினசரி ஹோரை

ஒவ்வொருவரும் ஹோரையைப் பார்த்து வேலையை ஆரம்பிப்பது மிகவும் நலம். முயற்சி செய்யும் வேலை திருப்திகரமாகக் கட்டாயம் முடியும். இது அனுபவத்திற்கு மிகவும் சிறந்தது.

**சூரிய ஹோரை:—** உத்தியோகம், வியாபாரம் செய்ய ஒருவருடைய தயவுபெற, பெரிய உத்தியோகஸ்தரைக் காண்பது, உயில் சாசனம் முதலியவைகள் செய்வதற்கு நலம்.

**சந்திர ஹோரை:—** வியாபாரம், ஸ்திரீகளைப் பற்றிப் பேசுவது, கேள்விகள் கேட்பது, பிரயாணம், கப்பல் யாத்திரை செய்வது, ஒருவரை (மாத்ரு வர்க்கத்தாரைக்) காண்பது உசிதம். தேய் பிறைச் சந்திரனால் கஷ்டம் நேரும்.

**செவ்வாய் ஹோரை:—** உள்ளக் கருத்துகளை மறைமுகமாக வைப்பது நலம். யோசிக்காமல் வெளியிடுவது துன்பம். ஆதலால் இக்காலத்தில் எதையும் செய்தல் கூடாது.

**புத ஹோரை:—** தந்திகள் அனுப்பவும், வக்கீல்களைப் பார்க்கவும், எல்லாவித எழுத்து வேலைகளுக்கும் பரீக்ஷை எழுதவும், ஜோதிஷ விஞ்ஞான ஆராய்ச்சிகள் செய்ய, அம்மான் வர்க்கத்தாரைப்பற்றி பேச நலம்.

**குரு ஹோரை:—** எல்லாவற்றிற்கும் நலம். பணக்காரர் தயவை நாடுவது, எல்லா சாமான்களையும் வாங்குவது, உத்தியோகங்கள், பணவிஷய விவரங்களைத் தொடங்க, ஆடை, ஆபரணங்கள் சேர்க்க, காரியங்கள் தடையின்றி நடக்க, கடன்களைப் பெறுவது, ஷராப் வியாபாரிகளுக்கும், கிருஷி லாபங்களுக்கும் இந்த ஹோரை மிகவும் சிறந்தது.

**சுக்கிர ஹோரை:—** எல்லா சுப வேலைகள் நடத்த, பெண்களைப் பற்றிப்பேச, கால நிகழ்ச்சிகளுக்கு, பிறர் தயவைப் பெறுவதற்கு விருந்துண்பதற்கு, கடன் வசூல்செய்ய, மருந்துண்பதற்கு, வாகனங்கள் வாங்குவதற்கு களத்திர வர்க்கத்தாரோடு பேச இவ்வோரை மிக்க நலம்.

**சனி ஹோரை:—** இவ்வோரை மிகக் கொடியது. இருந்த போதிலும் நிலங்கள், அவை சம்பந்தப்பட்ட சொத்துக்களைப் பற்றி நடவடிக்கை எடுக்க, தோப்பு துறவுகளைப்பற்றிப்பேசவும் நல்லது.



www.facebook.com/ebooksintamil

# ஹோரை ஆரம்பமும் முடிவும்

அவரவர்கள் இருக்கும் ஊரின் சூரிய உதயமணியைக் கொண்டு பார்க்கவும். உதாரணத்துக்காக சூரியன் உதயமணி 6-00 என்று கீழேயுள்ள அட்டவணையில் கொடுக்கப்பட்டிருக்கிறது.

| வாரம் | 6-00 7-00 | 7-00 8-00 | 8-00 9-00 | 9-00 10-00 | 10-00 11-00 | 11-00 12-00 | 12-00 1-00 | 1-00 2-00 | 2-00 3-00 | 3-00 4-00 | 4-00 5-00 | 5-00 6-00 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **பகல்** | | | | | | | | | | | | |
| ஞாயி | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி |
| திங்க | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய |
| செவ் | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி |
| புதன் | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் |
| வியா | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் |
| வெ | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு |
| சனி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி |
| **இரவு** | | | | | | | | | | | | |
| ஞாயி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் |
| திங் | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு |
| செவ் | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி |
| புதன் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி |
| வியா | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய |
| வெ | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி |
| சனி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் |

**குறிப்பு:-** ஒவ்வொரு வியாபாரியும், பிரதானமாக சகல தொழில்களிலும் இதன்படி நடந்து கொண்டால் எவ்வித நஷ்டங்களும் நேரிடாது. முக்கியமாக புதன் குரு, சுக்கிர ஹோரைகள் எல்லாவற்றிற்கும் நலம்; மற்றவை அனுகூலமில்லை.



Hariram Thejus

https://www.facebook.com/ebooksintamil/

# இராகு - குளிகாதி நால்வர் காலங்கள்

இராகு காலத்திலும், எமகண்டம் முதலிய காலங்களிலும் குறித்த மணி முதல் குறித்த மணி வரையிலும் சுபங்களை நீக்கவேண்டும். குளிகை காலத்தில் அசுபங்களை நீக்கவேண்டும்.

கீழே கண்ட மணியில் சூரிய உதயத்தாலும் அகஸாலும் உண்டாகும் பேதம் சேர்த்து அல்லது கழித்து மணி அறியவும்.

| | இராகு, குளிகை முதலிய காலங்கள் — பகல் | | | | | | | | | | இரவு | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| காலம் | இராகு காலம் | | குளிகை காலம் | | எம கண்டம் | | அர்த்தப் பிரகரணன் | | காலன் | | எம கண்டம் | |
| | மணி முதல் | மணி வரை | மணி முதல் | மணி வரை | மணி முதல் | மணி வரை | மணி முதல் | மணி வரை | மணி முதல் | மணி வரை | மணி முதல் | மணி வரை |
| ஞாயிறு | 4½ | 6 | 3 | 4½ | 12 | 1½ | 10½ | 12 | 6 | 7½ | 6 | 7½ |
| திங்கள் | 7½ | 9 | 1½ | 3 | 10½ | 12 | 9 | 10½ | 3 | 4½ | 3 | 4½ |
| செவ்வாய் | 3 | 4½ | 12 | 1½ | 9 | 10½ | 7½ | 9 | 1½ | 3 | 1½ | 3 |
| புதன் | 12 | 1½ | 10½ | 12 | 7½ | 9 | 6 | 7½ | 12 | 1½ | 12 | 1½ |
| வியாழன் | 1½ | 3 | 9 | 10½ | 6 | 7½ | 3 | 4½ | 10½ | 12 | 10½ | 12 |
| வெள்ளி | 10½ | 12 | 7½ | 9 | 3 | 4½ | 1½ | 3 | 9 | 10½ | 9 | 10½ |
| சனி | 9 | 10½ | 6 | 7½ | 1½ | 3 | 12 | 1½ | 7½ | 9 | 7½ | 9 |

**ஜாதக குளிகை உதய நாழிகை:**—பகலில்—ஞாயிறு 26, திங்கள் 22, செவ்வாய் 18, புதன் 14, வியாழன் 10, வெள்ளி 6, சனி 2. இரவில்—ஞாயிறு 10, திங்கள் 6, செவ்வாய் 2. புதன் 26, வியாழன் 22, வெள்ளி 18, சனி 14 நாழிகைக்கு குளிகன் உதயம்.



https://www.facebook.com/ebooksintamil/
www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

## யோகினி நிற்கும் திசை

| பூர்வபக்ஷம் | அபரபக்ஷம் | திக்கு | பூமி சுக்கிரன் திக்கு |
|---|---|---|---|
| பிரதமை—ஏகாதசி .. | சஷ்டி .. | கிழக்கு .. | கிழக்கு .. |
| துதியை—துவாதசி .. | சப்தமி .. | வடக்கு .. | தென்கிழக்கு .. |
| திருதியை-திரயோதசி .. | அஷ்டமி .. | தென்கிழக்கு .. | தெற்கு .. |
| சதுர்த்தி—சதுர்த்தசி .. | நவமி .. | தென்மேற்கு .. | தென்மேற்கு .. |
| பஞ்சமி—பூர்ணிமா .. | தசமி .. | தெற்கு .. | மேற்கு .. |
| சஷ்டி .. | பிரதமை—ஏகாதசி .. | மேற்கு .. | வடமேற்கு .. |
| சப்தமி .. | துதியை—துவாதசி .. | வடமேற்கு .. | வடக்கு .. |
| அஷ்டமி .. | திருதியை-திரயோதசி .. | வடகிழக்கு .. | வடகிழக்கு .. |
| நவமி .. | சதுர்த்தி—சதுர்த்தசி .. | ஆகாசம் .. | ஆகாசம் .. |
| தசமி .. | பஞ்சமி—அமாவாசை .. | பூமி .. | பூமி .. |

யோகினி இருக்கும் தெசையில் பிரயாணத்தைத் தவிர்க்கவும்.



https://www.facebook.com/ebooksintamil/

## காலற்ற, உடலற்ற, தலையற்ற நாட்கள்

''காலற்ற வுடலற்றன் தலையற்ற நாளிற்
கோலக்குய மடைவார்,தமைக் கூடின் மலடாவர்
மாலுக்கொரு மனை மாளிகை கோலினது பாழாம்
ஞாலத்தவர் வழி போகினு நலமெய்திடாரே.''

**காலற்ற நாட்கள்:** கார்த்திகை, உத்திரம்,உத்திராடம்
**உடலற்ற நாட்கள்:** மிருகசீருஷம், சித்திரை, அவிட்டம்.
**தலையற்ற நாட்கள்:** புனர்பூசம், விசாகம், பூரட்டாதி

இந்த நாட்களில் நிஷேகமும், மனை முகூர்த்தமும் யாத்திரையும் ஆகாது.

## கெற்போட்டம் ஓடுகிற தேதி

''பானு தனுவிற் பதின்மூன்றே முக்கால்மேல்
ஆனிக்குக் கெற்ப மறுகாலாம்—மானேகேள்
நண்டுமுதல் தேளளவும் நாலரையே நால் மாகாணி
கொண்ட தனுவிற் கொன்றே கூறு.''

பொருள்:— தனுர் மாதம் என்னும் மார்கழி மாதம் 13¾ நாளுக்குமேல், ஆனி மாதத்துக்கு 1¼ நாள், நண்டு என்று சொல்லப்படும் கடக மாதமான ஆடி மாதம் முதல் தேள் என்று சொல்லப்படும் விருச்சிக மாதமான கார்த்திகை வரையில் மாதம் 1க்கு 2¼ நாள்களும், மார்கழி மாதத்துக்கு 1 நாளும் கெற்போட்ட நாட்களாகும்.

## எண்ணெய் ஸ்நானம் செய்ய வேண்டிய நாள்

அருக்க னெண்ணெய் அழகழிக்கும்
அணியார்திங்க ளாகாது
திருக்கருஞ் செவ்வா யுயிர்போக்கும்
செய்ய புதனிற் பொருளுண்டாம்
கருத்தை யழிக்கும் கவின் வியாழம்
கைப்பொருள் போக்குங் கனவெள்ளி
பொருத்த முண்டாம் சனியெண்ணெய்
பேணல் முழுக வல்லவரே.

எண்ணெய் ஸ்நானம் செய்பவர்கள் ஞாயிற்றுக்கிழமைகளில் ஸ்நானம் செய்தால் அழகு போகும்.

திங்கட்கிழமைகளில் செய்தால் மனச்சஞ்சலமுண்டாகும்.

செவ்வாய்க்கிழமைக்ளில் செய்தால் சரீர அசௌக்கியமும், பயங்கரமும் தோன்றும்.



Hariram Thejus
www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

புதன்கிழமைகளில் செய்தால் திரவிய லாபம் உண்டாகும். விசேஷமான நாள்.

வியாழக்கிழமைகளில் செய்தால் மனவிசாரம் ஏற்படும்.

வெள்ளிக்கிழமை, பெண்களுக்கு நலம்.

சனிக்கிழமை நல்ல நாளாகும். சரீர ஆரோக்யமும் வல்லமையும் ஏற்படும்.

(1) வெள்ளிக்கிழமை மத்யானத்திற்குமேல் தைல ஸ்நானம் செய்தால் தனவிருத்தியுண்டாகும்.

(2) கடுகு எண்ணெய், அத்தர், மல்லிகைத் தைலம் வேறு ஏதாவது வஸ்து கலந்து, அல்லது காய்ச்சின எண்ணெய் இவைகளைத் தேய்த்துக்கொண்டால் வார தோஷமில்லை.

**வெந்நீர் ஸ்நானம்**

அமாவாசை, ஞாயிற்றுக்கிழமை, ஸங்கராந்தி, இந்நாட்களிலும் ஜனனம், மரணங்களால் ஏற்படும் சூதகம் என்ற தீட்டுக் காலங்களிலும் வெந்நீர் ஸ்நானம் செய்யக்கூடாது. செய்தால் ரௌரவம் என்ற நரகத்தை அடைவான் என்று சாஸ்திரம் கூறுகிறது.

# ஜோதிட அநுபந்தங்கள்:

## 1. ஏழரை நாட்டுச் சனியில் கால பலம்

ஓர் ஜாதகரின் ராசியில் சனி உள்ள நட்சத்திரம் முதல் ஜென்ம நட்சத்திரம் வரை எண்ணவும். எண்ணிக்கைத் தொகை 1, 2, 3 ஆக இருப்பின் இது ஆடு:— இக்காலத்தில் அபாயம், பணச் சேதம் கஷ்டங்கள் வரும்.

4, 5, 6, 7 ஆக இருந்தால் இது அசுவம் (குதிரை):— ஏழரை நாட்டுச் சனி காலங்களில் சந்தோஷம், காரியங்களில் ஜெயம், தேர்வுகள் நடக்கும்.

8, 9, 10, 11, 12, 13 ஆனால் ஆடு:— இக்காலத்தில் தூரதேசப் பயணங்கள், எதிர்பாராத நஷ்டங்கள், கஷ்டங்கள் ஏற்படும்.

14, 15, 16, 17, 18 ஆயின் யானை:— இக்காலம் எதிர்பார்த்த காரியங்களில் ஜெயமும், பண வருவாயும் உதவியும் தரும்.

19, 20 ஆனால் நீர் எருமை:— இக்காலத்தில் நல்லதும் கெட்டதும் மாறி மாறி வரும்.

21, 22, 23 எண் வந்தால் அன்னப்பட்சி:— இது ராஜயோக காலம், அபார நன்மை தரும் காலம்.



Hariram Thejus

https://www.facebook.com/ebooksintamil/

24, 25. இது எருது:— இக்காலத்தில் சௌக்கியம் ஏற்படும்.

26, 27. இது காகம்:— இது சமயம் மனக்கிலேசம் கலகம், பண நஷ்டம் தரும்.

## 2. சோதிடச் சொல் விளக்கம்

1. **வர்க்கோத்தமம்:**— ராசியிலும் நவாம்சத்திலும் ஒரு கிரஹம் ஒரே ராசியில் காணப்படுவது. அப்படிப்பட்ட கிரஹம் பலமுள்ள கிரஹமாகும்.

2. **அஸ்தங்கதம்:**— சூரியனுடன் பத்துப் பாகைகளுக்குள் சேர்க்கையாக உள்ள கிரஹங்கள் சூரியனுல் எரிக்கப்படும். அத்தகைய கிரஹங்கள் அஸ்தங்கதம் எனப்படும். அவைகள் நல்ல பலன்களை அளிப்பவை அல்ல.

3. **வக்ரம்:**— சில சமயங்களில் கிரஹங்கள் பின்னோக்கிச் சென்ற வாறு காணப்படும். அப்பொழுது அக்கிரகங்களுக்கு பலம் அதிகம். அவைகளின் தன்மையே மாறி விடும்.

4. **பரிவர்த்தனம்:**— ஒரு கிரஹத்தின் வீட்டில் மற்றொரு கிரகம் வீடு மாறி நிற்பது. இதுவும் கிரஹத்திற்கு வலிமை தரும்.

5. **பாதகாதிபதி:**— சரராசிகளுக்கு 11-ஆம் வீட்டின் அதிபதியும் ஸ்திர ராசிக்கு 9-ம் அதிபதியும் உபய ராசிக்கு 7-ஆம் வீட்டின் அதிபதியும் பாதகாதிபதிகள் ஆவார்கள்.

6. **கிரகயுத்தம்:**— ஒரு ராசியில் செவ்வாய்க்குப் பின் கூடியிருக்கும் கிரகங்கள் யுத்தத்தில் தோற்றவையாகும். இவைகள் நல்ல பலன்களை அளிக்கமாட்டா.

7. **ஷஷ்டாஷ்டகம்:**— என்றால் ஒரு கிரஹம் மற்றொரு கிரஹத்திற்கு 6 அல்லது 8-வது இடத்தில் இருப்பது. இக்கிரஹங்களின் தசா புக்திகள் நன்மை தராது.

8. **த்விர்த்வாதசம்:**— என்றால் ஒரு கிரகம் மற்றொரு கிரஹத்திற்கு 2லோ அல்லது 12லோ நிற்பது. இவர்களின் தசாபுக்திகளில் நல்லவை நடக்காது.

9. **ஆத்மகாரகன்:**— என்றால் ஒரு ராசி சக்கரத்தில் ஒரு ராசியில் எந்த கிரகம் அதிகமாகச் சென்றுள்ளதோ அந்த கிரகம் ஆத்மகாரகன் எனப்படும். அக்கிரகம் மிருந்த பலமுடைய கிரகமாகும்.

இது ஜைமினியின் கணக்குப்படி.



www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

## 3. நவாம்ச, திரிம்சாம்ச சக்கரங்கள்

ராசி மண்டல சக்கரம் எப்படி கணிக்க வேண்டும் என்பது ஏற்கெனவே சொல்லப்பட்டது. நவாம்ச லக்னம் என்பது என்ன என்பதும் ஏற்கெனவே சொல்லப்பட்டது. ராசி மண்டலத்தில் லக்னம் தொடங்கி நவக்ரஹங்களும் ஏதோ சில குறிப்பிட்ட ராசி களில் ஜாதகன் பிறந்த நாழிகைக்குத் தகுந்த மாதிரி இருக்கும். ஒவ்வொரு ராசி மண்டலத்திலும் 9 நக்ஷத்ர பாதங்கள் உள்ளன. கிரஹ பாத சக்ரங்கள் எந்த நக்ஷத்ர கால்களில் இருக்கின்றனவோ அதைக் குறிக்கும் சக்கரமே நவாம்ச சக்கரம். உதாரணமாக அசுவினி, பரணி, கிருத்திகை 3 நக்ஷத்திரங்களைக் கொண்டு, ஒவ்வொரு நக்ஷத்திரத்திற்கும் 4 கால்களைக் கொண்டு ஒருமுறை நவாம்ச சக்கரத்தைச் சுற்ற வேண்டும். உதாரணமாக சூரியன், பரணி 2-ம் பாதத்தில் இருந்தால், நவாம்ச சக்கரத்தில் சூரியனை கன்யாராசி என்று குறிக்க வேண்டும். இதே போல் ராசி மண்டலத்தை 9 தரம் சுற்ற 108 நக்ஷத்ரக் கால்களும் நவாம்ச சக்கரத்தில் ஒவ்வோர் இடம் பெறுகின்றன.

மற்ெருரு உதாரணம்: கேட்டை 3-ம் பாதத்தை எடுத்துக் கொள்வோம். இது விசாகம் அநுஷம் கேட்டை என்ற சுற்றில் வருகிறது. கேட்டை 3-ம் கால் நவாம்ச சக்கரத்தில் கும்ப ராசியில் இடம் பெறும்.

இந்த நவாம்ச சக்கரத்தின் உபயோகம் சூக்ஷ்மமாக ராசிச் சக்கரத்தின் பலனைச் சொல்வதற்குத்தான். ஒரு ஜாதகனுக்கு ஸிம்ஹ லக்னம் என்று வைத்துக் கொள்வோம். இந்த ஜாதகனுக்கு குரு விருச்சிக ராசியிலும் சனி மிதுன ராசியிலும் இருப்பதாக வைத்துக் கொள்வோம். ராசிமண்டலத்தை மாத்திரம் பார்த்துப் பலன் கூறினல், குருதசையோ குரு புக்தியோ பிரபல யோக தசையாக இருக்கும் என்று சொல்வோம். ஏனென்றல் குரு ஸிம்ஹ லக்னத்திற்கு 5-ம் வீட்டிற்குடையவன். ஆனல் விருச்சிக ராசியில் இருக்கும் இந்த குரு அநுஷ நக்ஷத்திரத்தின் ஏதாவது ஒரு காலில் ஏறினல் நிச்சயமாக யோகம் கிட்டாது. காரணம் நக்ஷத்திரக் கால்களுக்கு உடையவனை சனி லக்னத்திற்கு 6-ம் வீட்டிற்குடையவன். இதே ஜாதகனுக்கு சனி தசை நடந்து சனி மிதுன ராசியில் புனர்பூசம் 1,2,3 கால்களில் ஏறி இருந்தால் சனி தசை பிரபல யோக தசையாக இருக்கும். இதேபோல் சனி புக்தியும் நல்ல யோககாரகமாக இருக்கும்.

நவாம்ச சக்கரம் இவ்வாறு அந்தந்த கிரஹங்களின் நக்ஷத்ரக் கால்களை அறியவே பெரும்பாலும் உபயோகப்படுகிறது. ஒரு கிரஹம் ராசியில் உச்ச, ஆட்சி இடங்களில் இருந்தும் அம்சத்தில் நீசம் பெற்றலோ அல்லது க்ரூர பார்வை பெற்றலோ ராசியி



Hariram Thejus

https://www.facebook.com/ebooksintamil/

னுடைய யோகம் கெட்டு விடுகிறது. அதேபோல் ஒரு கிரஹம் ராசியில் நீசமாக இருந்தாலும் அம்சத்தில் அதே கிரஹம் ஆட்சி அல்லது உச்சம் பெற்றல் அந்த கிரஹத்திற்கு பலம் அதிகமாகிறது. அம்சத்தில் அந்த கிரஹத்திற்கு சுப பார்வை இருந்தாலும் பலம் பெறுகிறது. நவாம்சத்தில் சில கிரஹங்களுக்கு திக்பலம் கிடைத் தாலும் அந்த கிரஹம் மொத்தத்தில் ஜாதகனுக்கு யோககாரக மாக இருக்கும். ராசியில் ஒரு கிரஹம் ஓரிடத்தில் நிற்க, நவாம்சத் திலும் அதே கிரஹம் அதே ராசியில் நின்றல் இந்த நிலையை வர்கோத்தமம் என்று சொல்வார்கள். வர்கோத்தமமாக இருக் கும் கிரஹங்கள் குறைந்த பக்ஷம் ஆட்சியில் இருப்பது போல் பலம் பெறும். ஒரு கிரஹம் அதிசாரமாகவோ வக்ரமாகவோ இருந்தால் அந்த கிரஹத்திற்கு பலம் அதிகமாகிறது. ராசி மண்டலத்தில் ஒரு கிரஹம் நீசம் பெற்றலும் வக்ரகதியில் இருந்தாலோ அதிசாரமாக இருந்தாலோ அதற்கு உச்ச பலன் உண்டு. உதாரணமாக, கடக ராசியில் செவ்வாய் நீசம். இதே ராசியில் செவ்வாய் வக்ரமாக இருந்தால் உச்ச பலன் உண்டு. நவாம்சத்திலும் அப்படியே கொள்க. ஒரு கிரஹம் உச்ச வீட்டில் வக்ரமாக இருந்தால் அந்த கிரஹம் நீச பலனைத்தான் கொடுக்கும். ஒரு கிரஹம் ஒரு வீட்டில் நீசமடைய, அந்த வீட்டுக்குடைய கிரஹம் ஆட்சியாகவோ உச்ச மாகவோ நின்றலும், அந்த வீட்டுக்குக் கேந்திரங்களில் நின்றலும் நீசம் பங்கப் பட்டுவிடும். நீசம் பங்கப்பட்டு பிரபல ராஜயோகத் தைக் கொடுக்கும். இப்படியே நவாம்சத்திலும் கொள்க.

புதன், குரு இவ்விரண்டு கிரஹங்களுக்கும் லக்ன கேந்திரத் தில் முழு பலம். இதை திக்பலம் என்று சொல்வார்கள். சந்திரன், சுக்ரன் இவ்விரு கிரஹங்களுக்கும் 4-ம் கேந்திரத்தில் திக்பலம். சனிக்கு 7-ம் கேந்திரத்தில் திக்பலம். சூரியன் செவ்வாய் இவ்விரு கிரஹங்களுக்கும் 10-ம் கேந்திரத்தில் திக்பலம். எந்தெந்த கேந் திரங்களில் எந்தெந்த கிரஹங்களுக்கு திக்பலம் உண்டோ அந்த ராசியிலிருந்து 7-ம் ராசியில் அந்தந்த கிரஹங்கள் இருக்குமாஞல் அந்த கிரஹங்கள் பலஹீனம் என்று கொள்ள வேண்டும். தசா நாதன் பிரபல யோக காரகனுக இருந்தும் புக்திநாதன் ராசியிலோ அல்லது அம்சத்திலோ?தசாநாதனுக்கு ஷஷ்டாஷ்டகமாக அமைந் தால் நிச்சயமாக நல்ல பலன்களை எதிர்பார்க்க முடியாது.

### திரிம்சாம்ச நிர்ணயம்

12 ராசிகளையும் ஓஜ ராசிகள் என்றும், யுக்ம ராசிகளென்றும் இரு பிரிவுகளாகப் பிரித்துள்ளனர். மேஷம், மிதுனம், ஸிம்ஹம், துலா, தனுஸ், கும்ப ராசிகள் ஓஜ ராசிகள். ரிஷபம், கடகம், கன்னி, விருச்சிகம், மகரம், மீனம் ஆகியவை யுக்ம ராசிகள். ஓஜ ராசிகளில் முதல் 5 பாகைகள் (degrees) செவ்வாய் திரிம்சாம்சம், 6 முதல் 10 பாகைகள் வரை சனியின் திரிம்சாம்சம், 11 முதல் 18 வரை குருவின் திரிம்சாம்சம் 19 முதல் 25 முடிய புதனின்



www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

திரிம்சாம்சம், 26 முதல் 30 வரை சுக்ரனின் திரிம்சாம்சம். யுக்ம ராசிகளில் 1—5 வரை சுக்ரன், 6—12 புதன், 13—20 குரு, 21—25 சனி 26—30 செவ்வாயின் திரிம்சாம்சங்கள் வரும். இந்த திரிம்சாம்சம் முக்கியமாக ஜாதகனின் நெறியை அறிய உதவுகிறது. முக்கியமாக ஸ்த்ரீகளின் நெறியை அறிய உதவுகிறது.

லக்னம் அல்லது சந்திரன் இருக்குமிடம் பெண்களுக்கு குருவின் திரிம்சாம்சமாக இருந்தால் மிக மிக சிரேஷ்டம். லக்னம் அல்லது சந்திர லக்னம் மகர கும்ப ராசிகளாக இருக்க, சுக்ரனின் திரிம்சாம்சமாக இருந்தால் மலடியாக இருப்பாள். விருஷப, துலா ராசிகளைத் தவிர வேறெந்த ராசியிலும் சுக்ரனின் திரிம்சாம்சம் நல்ல பலன்களைக் கொடுக்காது. தனுர் மீன ராசிகளைத் தவிர இதர ராசிகளில் குருத்திரிம்சாம்சம் நல்ல பலன்களைக் கொடுக்காது. மகர கும்ப ராசிகளைத் தவிர மற்ற ராசிகளில் புதத் திரிம்சாம்சம் நற்பலன்களைக் கொடுக்கும். சனியின் திரிம்சாம்சம் எந்த ராசியிலுமே நல்ல பலன்களைத் தருவதில்லை.

**திரேக்காண லக்னம்:** ஜன்ம லக்ன பாகைகளை 3 பிரிவுகளாக்கி ஜனன லக்னப் பாகை முதல் பாகமாய் இருந்தால் அதே லக்ன ராசியாகவும் 2-ம் பாகத்தில் விழுந்தால் இந்த ராசிக்கு 5-ம் ராசியை திரேக்காண லக்னமாகவும் 3-ம் பாகத்தில் விழுந்தால் அந்த ராசிக்கு 9-ம் ராசியை திரேக்காண லக்னமாகவும் கொள்ள வேண்டும்.

**சந்திரன் நவாம்சத்தில்** புதனின் வீடுகளில் இருந்தால் ஜாதகன் வித்வானாக இருப்பார். குருவின் வீடுகளில் இருந்தால் ஸத்புருஷனாக இருப்பார். சுக்ரனுடைய வீட்டில் இருந்தால் விரைவில் விவாஹம் நடக்கும். செவ்வாய், சந்திரன், சூரியன், சனி முதலிய வீடுகளில் இருந்தால் அவ்வளவாக நற்பலன்கள் தருவதில்லை.

## 4. ராசிமண்டலத்தில் ராகு, கேதுக்களின் இருக்கையும் பலாபலன்களும்

ராகு, கேது இரண்டும் ஜோதிஷ சாஸ்திரத்தில் கிரஹங்களாக பாவித்தாலும் கிரஹங்கள் அல்ல. இவைகளுக்கு ஸ்வக்ஷேத்திரங்கள் கிடையா. உச்ச, நீச க்ஷேத்திரங்களிலும் அபிப்ராய பேதங்கள் உள்ளன. ராகு விருச்சிக ராசியில் உச்சம் என்று கூறுவவர். ரிஷப ராசியில் நீசம் என்று சொல்வர். கன்யா ராசியில் ராகு மிக நல்ல பலன்களைக் கொடுப்பார் என்று சொல்வர். ஒரு ஜாதகனுக்கு ஜன்மத்தில் ராகு கன்யா ராசியில் இருந்து அது நல்ல வீடாகவும் இருந்தால் பிரபல யோகத்தை அடைவான். ஜோதிஷ



Hariram Thejus

https://www.facebook.com/ebooksintamil/

சாஸ்திர ரீதியாக எந்தெந்த பாவங்களில் ராகு கேதுக்கள் இருந்தால் நல்ல பலன்கள் உண்டு என்றும் எந்தெந்த பாவங்களில் இருந்தால் கெட்ட அல்லது மிச்ரமான பலன்கள் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த விஷயத்தில் நிறைய அபிப்ராய பேதங்கள் உள்ளன. பொதுவாக ராகு அல்லது கேது தசை அல்லது புக்திகளில் எப்படிப்பட்ட பலன்கள் கிடைக்கும் என்பதையறிய நவாம்ச ராசி மண்டலியைப் பார்த்து ராகு அல்லது கேது எந்த நக்ஷத்திரக் காலில் இருக்கிறது என்பதைக் கண்டுபிடிக்க வேண்டும். அந்த நக்ஷத்திரத்திற்குரிய கிரஹம் ராகு கேதுக்களைத் தவிர வேறு கிரஹமாக இருந்தால் அந்த கிரஹம் அந்த கிரஹத்தின் இருப்பு, ஆதிபத்யத்தைக் கொண்டு பலன்கள் சொல்ல வேண்டும். உதாரணமாக தனுர் லக்ன ஜாதகனுக்கு ராகு தனுர் ராசியில் உத்திராடம் 1-ம் காலில் இருந்தால் நல்ல யோக தசையாக இருக்கும். ஏனென்றால் உத்திராட நக்ஷத்திரம் சூரியனுடைய நக்ஷத்திரம். சூரியன் தனுர் லக்னத்திற்கு 9-ம் வீட்டுக்குடையவன். ராகுவோ கேதுவோ மற்ற கிரஹங்களின் நக்ஷத்திரக் காலில் செல்லாமல் ராகு கேதுக்களுக்குள்ள நக்ஷத்திர காலில் இருந்தால் நிதானித்துப் பார்த்துதான் பதில் சொல்ல முடியும். மீன லக்ன ஜாதகனுக்கு ராகு 12-ம் வீட்டிலிருக்க, அவிட்டம் 3, 4 பாதங்களில் ராகு இருந்தால் பிரபல யோகமாக இருக்கும். அதுவே சதயம் 1, 2, 3, 4 கால்களில் இருந்தால் பலன் நிச்சயமாகச் சொல்ல முடியாது. ஏனென்றால் சதயம் ராகுவின் நக்ஷத்திரம். இதே ராகுவை செவ்வாய் சிம்ம ராசியில் இருந்து நோக்கினால் தன பாக்யாதிபதியின் பார்வையைப் பெற்ற ராகு நல்ல சுப பலன்களைக் கொடுக்கும். மித்ர க்ஷேத்திரங்களில் இருக்கும் ராகு கேதுக்கள் இருக்கும் வீட்டிற்கு அதிபதிகளுடைய பலன்களையும் கொடுக்கலாம். ராகு கேதுகளுக்குப் பார்வை கிடையாது. சிலர் உண்டு என்று சொல்கிறார்கள். 4, 9 ஸ்தானங்களில் ராகு கேதுக்கள் இருந்தால் மாதா பிதாக்களுக்கு அரிஷ்டம் என்று சொல்கிறார்கள். 5-ம் வீட்டில் ராகு இருந்தால் பலத்த புத்ர தோஷம் என்று சொல்கிறார்கள். ஆனால் ஜாதகனுக்கு குரு பலமாக இருந்தாலும் 5-ம் வீட்டுக்குள்ள ராகுக்கு சுப பார்வைகள் கிடைத்தாலும் கெட்ட பலன்கள் நடக்காது. ராகு தசையில் சில நல்ல பலன்கள் கிடைத்து விட்டால் இதர தசா புக்திகளில் அந்த சுப பலன்களை யாராலும் குறைக்க முடியாது என்று சொல்வார்கள்.

ஒரு ஜாதகனுக்கு சனி கேந்திரங்களில் இருந்து சனியிருக்கும் ராசியிலிருந்து 5-ம் வீட்டில் ராகு இருந்தால் பிரபல ராஜயோகம் என்று சொல்வார்கள். ஜாதகனுக்கு லக்னத்திற்கு 12-ம் வீட்டில் ராகு அல்லது கேது இருந்தால் அனேகமாக மறு பிறவி கிடையாது என்று சொல்வார்கள்.

பொதுவாக ராகு சனியைப்போல பலன்களையும் கேது செவ்வாயைப் போல் பலன்களையும் கொடுக்கும் என்று கூறுவார்கள்.



www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

https://www.facebook.com/ebooksintamil/

## 5. குரு, சனிப் பெயர்ச்சி பலன்கள்

கோசாரத்தில் எல்லா கிரஹங்களும் ஒரு ராசியிலிருந்து மற்றொரு ராசிக்குப் போவதும் ராசி மண்டலத்தை மறுபடி மறுபடி சுற்றி வருவதும் யாவரும் அறிந்ததே. சூரியன் ஒரு ராசியிலிருந்து மற்றொரு ராசிக்கு ஒரு மாதத்தில் செல்கிறார். சந்திரன் சுமார் 28 தினங்களில் ராசி மண்டலத்தை ஒரு சுற்று சுற்றுகிறார். சனி ஒரு ராசியிலிருந்து பெயர்ந்து மற்றொரு ராசிக்குப் போக சுமார் 2½ வருஷங்களாகின்றன. குரு ஒரு ராசியிலிருந்து ஒரு வருஷத்தில் மற்றொரு ராசிக்குச் செல்கிறார். ஜென்ம காலத்தில் சந்திரன் நின்ற ராசியை சந்திர லக்னம் என்று சொல்வார்கள். சாதாரணமாக சந்திரன் நின்ற ராசிக்கு அதாவது சந்திர லக்னத்திற்கு 3,6,11 ராசிகளில் சனி ஸஞ்சரித்தால் சுப பலன்களும் 12, 1, 2 ராசிகளில் ஸஞ்சரித்தால் 7½ சனி என்றும் கூறுவார்கள். 4, 8 ஸ்தானங்களும் கெடுதல் செய்யும். 5, 7, 9, 10 ஸ்தானங்களும் நல்ல பலன்கள் கொடுக்கமாட்டா. குரு சந்திர லக்னத்திற்கு, 1, 3, 4, 6, 8, 10, 12 ஸ்தானங்களில் ஸஞ்சரிக்கும்போது நல்ல பலன்களைக் கொடுக்காது என்றும் 2, 5, 7, 9, 11 ஸ்தானங்களில் ஸஞ்சரிக்கும்போது மிக்க சுப பலன்களைக் கொடுப்பார் என்றும் சொல்கிறார்கள். ஆனால் இப்படி ஸாதாரணமாக சொல்லும்போழுது ஜாதகனுக்கு இந்த சனி அல்லது குரு ஸஞ்சாரம் எத்தனையாவது பர்யாயம் அல்லது சுற்று என்பதைப் பொறுத்து வேறுவிதமான பலன்கள் சாஸ்திரத்தில் சொல்லப்பட்டுள்ளன. ஸாதாரண கோசார பலன்கள் சொல்லும்பொழுது இதைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் சொல்வது தவறு. அதனால் குரு சனி இவர்களின் பர்யாய பலன்கள் தெரிந்து கொள்ள வேண்டியது மிக முக்கியம். ஒரு ஜாதகனுக்கு ஜன்மம் முதல் சனி அநேகமாக 3 பர்யாயங்களே வரும். குரு 5 முதல் 7 பர்யாயங்கள் வரை வரலாம்.

**குரு பர்யாய பலன்:—** முதல் பர்யாயத்தில் (முதல் சுற்று): மேஷம் முதல் மீனம் வரை ஒரு சுற்றாகக் கணக்கிடப்படுகிறது).

**1. குரு முதல் பர்யாயம்:—** குரு சந்திர லக்னத்திற்கு 8-ம் ராசியில் ஸஞ்சரித்தால் பிராண பயம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் முதல் பர்யாயத்தில் அதாவது ஜாதகன் சிறு குழந்தையாக இருக்கும்போது குரு 8-வது ராசியில் ஸஞ்சரித்தால் அவனுடைய தகப்பனாருக்கு தனப்ராப்தி உண்டாகும். 9-வது ராசியில் தன்னுடைய மூத்த ஸஹோதர ஸஹோதரிகளுக்கு நற்பலன்களும், மேஷ ராசியில் ஸஞ்சரிக்க, மேஷ ராசியிலிருந்து ரிஷப ராசிக்கு குரு பெயர்ச்சி ஆகும்போது நல்ல சுபமான பலன்கள் உண்டாகும். 12-ம் ராசியில் ஸஞ்சரிக்கும்போது பிதாவுக்கு நற்பலன்கள் உண்டாகும்.



https://www.facebook.com/ebooksintamil/

**2-வது பர்யாயம்:—** முக்கியமாக மேஷ, ரிஷப ராசிகளில் ஸஞ்சரிக்கும்போது மங்களமுண்டாகும்.

**3-வது பர்யாயம்:—** குரு சந்திர லக்னத்திலிருந்து 1, 4, 5, 7, 9, 10, 11, 12 ராசிகளில் நற்பலன்கள் உண்டாகும்.

**4-வது பர்யாயம்:—** குரு 4-ம் பர்யாயத்தில் ஜன்ம ராசியில் ஸஞ்சரிக்கும்போது ராஜ விரோதமும் 2-ம் ராசியில் தன ப்ராப்தியும் 4-ம் ராசியில் ஸௌக்கியமும் 9-ம் ராசியில் ஸம்பத்தும் 11-ம் 12—ம் ராசியில் ஸௌபாக்கியமும் உண்டாகும். மற்ற ராசிகளில் நற்பலன்கள் வராது.

**5-வது பர்யாயம்:—** ஜன்ம ராசியில் குரு ஸஞ்சரிக்கும் போது மனக்லேசமும் 2—வதில் தனப்ராப்தியும் 3, 4 ராசிகளில் சுப பலன்களும் உண்டாகும்.

## 6. சனி பர்யாய பலன்

பாலாரிஷ்ட ஜாதகங்களில் சனியின் முதல் பர்யாயத்திலும், மத்யாயுஸ் ஜாதகங்களில் 2-வது பர்யாயத்திலும், அதிக ஆயுள் ஜாதகத்துக்கு 3-வது பர்யாயத்திலும் மரணம் நேரலாம்.

| ராசி | 1-வது பர்யாயம் | 2-வது பர்யாயம் |
|---|---|---|
| மேஷம் | சுப பலன்கள் | செலவினங்கள், தேக பீடை |
| ரிஷபம் | தேக பீடை | மிச்ர பலன்கள் |
| மிதுனம் | வியாதி | தேக சுகம், தனப்ராப்தி |
| கடகம் | வியாதி | சுகம் |
| ஸிம்மம் | கஷ்டம் | தனதான்ய ஸமிருத்தி |
| கன்னி | மிச்ர பலன்கள் | புத்ரி ஜனனம், திரவியலாபம். |
| துலாம் | மாதாவுக்கு அரிஷ்டம் | திரவிய லாபம், தேகபீடை |
| விருச்சிகம் | அரிஷ்டம் | பிதாவுக்கு அரிஷ்டம் |
| தனுஸ் | துன்பம் | திரவிய லாபம் |
| மகரம் | மிச்ர பலன்கள் | பாக்யம் |
| கும்பம் | சுகம் | சுகம் |
| மீனம் | சுகம் | புத்ரலாபம். |



https://www.facebook.com/ebooksintamil/

Hariram Thejus

www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

**சனி 3-வது பர்யாய பலன்கள்:—**

| | | |
|---|---|---|
| ஜன்ம ராசி (சந்திர லக்னம்) | — | அற்ப சுகம் |
| 2-வது | — | உத்தம சுகம் |
| 3-வது | — | ஸஹோதர கிலேசம் |
| 4-வது | — | காரியத் தடை, தன நாசம் |
| 5-வது | — | தேக ஜாட்யம் |
| 6-வது | — | நல்ல சுகம் |
| 7-வது | — | களத்ர நாசம் |
| 8-வது | — | தேக ஜாட்யம் |
| 9-வது | — | மரணம் நேரலாம் |
| 10-வது | — | ,, |
| 11-வது | — | ஸஹோதர கிலேசம் |
| 12-வது | — | மரணம் நேரலாம் |

---

## 7. விதியை மாற்றும் வழி

பிரகிருதி மண்டலத்தில் பிறவியெடுத்துள்ள யாருக்கும் ப்ராரப்த கர்மங்களுக்கு ஏற்ப கஷ்ட ஸுகங்களும் வாழ்க்கை அமைப்பும் ஏற்படுகின்றன. அப்படியென்றால் விதியை மாற்ற வழி எதுவும் இல்லையா என்று நாம் வருந்த வேண்டியதில்லை. நம் பாரத பூமியாகிய இந்த புண்ணிய பூமியில் எத்தனையோ ரிஷி முனிவர்களும் ஆழ்வார் ஆசாரியர்களும் எம்பெருமானுடைய விபவாவதாரங்களைப்போல் நமக்கு உய்ய வழிகாட்டவே இந்த உலகில் எழுந்தருளி நம்மீது கருணை மழை பொழிந்துள்ளனர். மலைபோன்ற கஷ்டமோ, பிரச்னையோ, துக்கமோ நம்மை எதிர் நோக்கி இருக்கும் ஸமயம் எந்தவிதமாக அதிலிருந்து மீட்சி பெற்று நிம்மதி பெறுவது என்பதை அறிய இயலாது நம் மனம் அல்லல்படுகிறது. அப்போது பகவத் பக்தி ஒன்றுதான் நமக்கு நிம்மதி அளிக்க முடியும். அவஸரமாக உடனே எம்பெருமானின் கிருபையைப் பெற எவ்வளவோ வழிகள் உள்ளன. புரட்டாசி சனிக்கிழமைகளில் நம் லகு திருவாராதனத்திற்கும் நிறைவொன்று மிலாத பக்திக்கும் கட்டுப்பட்டுத் திருவேங்கடமுடையான் வீடு தோறும் மாவிளக்குகளில் எழுந்தருளுவதில்லையா? அப்படி என்று வேண்டுமானாலும் விளக்கேற்றி எம்பெருமானை எழுந்தருளப் பண்ண முடியுமா? ஸம்ப்ராயத்தை மீறி அப்படித்தான் செய்ய



https://www.facebook.com/ebooksintamil/

வேண்டும் என்பதில்லை. ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகன் அருளிச் செய்துள்ள அக்ஷய நிதியான ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ரத்தில் நாம் எப்போதும் எம்பெருமானை நம்மிடம் அழைத்து முறையிட்டுக் கொள்ள ஒரு சுலபமான வழி காட்டப்பட்டுள்ளது.

ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ரம் 949-வது ச்லோகம் இங்கு குறிப்பிடத் தக்கது. சித்ரபத்ததியில் உள்ள இந்த ச்லோகத்திற்கு ஸ்வாமி தேசிகர் ஒரு யந்த்ரமும் அமைத்து இருக்கிறார்.

இந்த ச்லோகத்தின் கருத்துரை விசேஷமானது:

''பாதுகையானது மஹாதீரனும், ஸர்வேச்வரனும், அயோத்யாவாஸிகளான ஆச்ரிதர்களிடத்தில் மிகுந்த பிரீதியுள்ள வனுமான ஸ்ரீ ராமனை தன்னால் ஏவத் தகுந்தபடி வைத்திருக் கிறது. தன்னுடைய ஸஞ்சார காலத்தில் கம்பீரமானதும் விசேஷ மாக அடிக்கடி உண்டாவதுமான தன் நாதத்தில் தன் வரவை ஆவலுடன் எதிர்நோக்கி இருக்கும் ஆச்ரிதர்களுக்கு முன்கூட்டியே தெரிவித்து, அவர்களுக்கு நம்பிக்கையை உண்டு பண்ணி, தான் செல்லுமிடமெல்லாம் ஸ்ரீ பகவானையும் எழுந்தருளப் பண்ணிக் கொண்டு போகும் ஸ்வபாவமுடையது'' என்று கூறி எம்பெருமா னுடையவும் பாதுகையினுடையவும் ஸௌலப்ய ஸௌசீல்ய குணத் தைப் பற்றி நமக்கு ஸ்வாமி தேசிகன் நம்பிக்கையூட்டுகிறார்.

ஆகையால் நமக்கு முக்கியமானதொரு காரியம் நிறைவேற வேண்டும் என்கிறபோது, குறை கஷ்டம் தீர வேண்டும் என்கிற போது முழு நம்பிக்கையுடன் அரிசி மாவினால் இதில் கண்டுள்ள யந்திரத்தைக் கோலம் போட்டு நெய் விளக்கேற்றி வைத்து அந்த ச்லோகத்தை 1008 முறை ஜபம் செய்து மானஸீகமாக எம்பெரு மான் பாதுகையுடன் நம் முன் எழுந்தருளிவிட்டதாக பாவித்து யதா ஸௌகரியம் தூப தீப நைவேத்ய திருவாராதனம் செய்து நம் குறையைச் சொல்லிப் பிரார்த்தித்தால் எம்பெருமான் நம் இஷ்டத்தை நிச்சயம் தலைக்கட்டி வைப்பார் என்பதில் ஐயமில்லை. முழு நம்பிக்கையும், சிரத்தையுமே பிரதானமாக வேண்டியவை. உயர்வற உயர்நலமுடையவனாகிய எம்பெருமான் கோபிகைகளின் அன்புக்கு கட்டுப்பட்டு நவநீத நாட்டியம் செய்திருக்கிறார். ஆகை யால் கல்மஷம் நிறைந்துள்ள இந்தக் கலியுகத்திலும் எம்பெருமா னின் கிருபையில் பரிபூரண நம்பிக்கை கொண்டு கூப்பிட்டால் நம் முன் வருவான். இடர்களைக் களைந்தெறிவான்.

**ச்லோக பாராயணக் கிரமம்:** முதலில் ஸ்ரீ ஸ்வாமி தேசிகனின் தனியனும் கடைசியில் அனுஸந்திக்கும் தனியனும் ஒவ்வொரு முறை ஸேவிக்க வேண்டும். பிறகு கீழ்க்கண்ட படத்தில் உள்ளபடி அஷ்டதளபத்மத்தின் இடையே, இந்த சுலோகத்திலுள்ள அக்ஷரங் கள் அமைந்துள்ள பாதுகைகளைத்தியானம் செய்தவாறு, பெரிய எழுத்தில் உள்ள ச்லோகத்தை 1008 முறை ஜபம் பண்ண வேண்டும்.



Hariram Thejus

www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

**முதலில் தனியன்:**

ஸ்ரீமாந் வேங்கட நாதார்ய: கவிதார்க்கிக கேஸரீ |
வேதாந்தாசார்ய வர்யோ மே ஸந்நிதத்தாம் ஸதா ஹ்ருதி ||




**ஜபம் செய்யவேண்டிய ச்லோகம்:**

தாரஸ்பாரதர ஸ்வரரஸ பரரா ஸா பதாவலீ ஸாரா |
தீரஸ்வைர சரஸ்திர ரகுபுர வாஸரதி ராமஸவா ||

**ஜப முடிவில் தனியன்:**

கவிதார்க்கிக ஸிம்ஹாய கல்யாண குணஸாலினே |
ஸ்ரீமதே வேங்கடேஸாய வேதாந்த குரவே நம: ||



எம்பெருமானே நம் இடத்துக்கு எழுந்தருளுவதால் ஜபம் முடிந்ததும் தூப தீப திருவாராதனம் செய்ய வேண்டும். வீட்டில் மாவிலைத் தோரணங்கள், மாக்கோலங்கள், மங்கள வாத்தியம் முதலியவை விசேஷமானவை. முடிந்தால் வேத பாராயண திவ்ய பிரபந்த ஸேவையும் விசேஷம். திருவாராதனம் பண்ணி விட்டு நம் குறையை எம்பெருமானிடம் விக்ஞாபித்து கற்பூர ஹாரத்தி பண்ணி ஸேவித்துவிட்டு மஞ்சள் நீரும் ஆரத்தி செய்ய வேண்டும். நம் குறை நீங்கப்பெறுவது திண்ணம்.

மேற்கண்ட பாராயணம் எம்பெருமானின் கிருபையை நமக்குப் பெற்றுத் தரவல்லதாகையால் எதற்கும் இதை உபயோகிப்பதுபோல ஜாதக ரீதியாக ஏதாவது பெருங்குறை, தோஷம் ஏற்பட்டிருந்தாலும் அக்குறை நீங்கி வேண்டுவன பெறவும் இம்முறையை அனுஷ்டிக்கலாம். ஏனென்றால், ஜன்ம காலத்தில் நிர்ணயிக்கப்பட்டுள்ள விதிமுறைகள் பகவானுடைய விசேஷ கிருபையால் மாற்றியமைக்கப்படும் என்பது ஸர்வ சாஸ்த்ர சம்மதம். அதனால் ஜாதகத்திலுள்ள கோளாறுகள் நிவர்த்தியாவதற்கும் மேற்கண்ட பூஜாக்ரமத்தை அனுஷ்டித்து யாவரும் ஸர்வமங்களங்களும் பெறுவார்களாக.

ஜாதக ரீதியாக ஒருவருக்குப் படிப்போ, கல்யாணமோ அல்லது எந்த மங்களகரமான காரியமோ நிறைவேற ஹேது இல்லையா? ஜாதக ரீதியாக தீராத வியாதியோ துக்கமோ நேருகிறதா? அப்படிப்பட்ட ஜாதகங்களை எம்பெருமானை நேரில் எழுந்தருளப் பண்ணியதும் அவர் திருவடிகளில் அப்படிப்பட்ட ஜாதகங்களை வைத்து அவைகளை மாற்றி அமைக்கும்படி பிரார்த்தித்தால் கட்டாயம் மாற்றப்படும். இது நடக்கக்கூடிய ஒன்றா என்று ஐயுறலாம். ஆனால் ஸ்ரீமந்நிகமாந்ததேசிகனே ஸ்ரீ ஹயக்ரீவ ஸ்தோத்திரம், கருட தண்டகம், பாதுகாஸஹஸ்ரம் முதலிய ஸ்தோத்ர கிரந்தங்களில் பகவானுடைய அடியார்க்கு ஜாதக ரீதியான தோஷங்கள் மாற்றப்படுவதாக ஸாதித்திருக்கிறார்.

ஸ்ரீ ஹயக்ரீவ ஸ்தோத்ரத்தில்—

•விலுப்த மூர்த்தன்ய லிபிக்ரமாணாம்
ஸுரேந்த்ர சூடா பத லாலிதானாம் |
த்வதங்க்ரி ராஜீவ ரஜ:கணானாம்
பூயாந் ப்ரஸாதோ மயி நாத பூயாத் ||

என்று எம்பெருமானுடைய திருவடித் துகள்கள் அடியவரின் தலையில் எழுதப்பட்டுள்ள, மறைந்துள்ள ஜன்ம லிபியைச் சுழித்து விடுவதாகக் கூறுகிறார்.



https://www.facebook.com/ebooksintamil/

Hariram Thejus

www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

கருட பஞ்சாசத்தில்—

" அஸ்த்தானேஷு க்ரஹாணும் அநியத விஹிதாநந்த வக்ராதிசாரா:" என்று கூறி கருட பகவானுடைய சிறகுகளின் உதறலினால் கிரஹங்கள் இடம் மாறி வக்ரசாரத்தில் தன் நிலை நீங்கி பழைய நிலைக்கு வருவதாகக் கூறியிருக்கிறார்.

பாதுகா ஸஹஸ்ரத்திலேயே 'கநகருசிரா' என்கிற ச்லோகத்தின் மூலம் பாதுகையின் தாஸர்களுக்கு நவக்ரஹங்களும் எப்போதும் நன்மையே செய்கின்றன என்று கூறியிருக்கிறார். மேலும் அதிலேயே ப்ரபாவ பத்ததி 20வது ச்லோகத்தில்—

பரிஸர விநதாநாம் மூர்த்நி துர்வர்ண பங்க்திம்
பரிணமயஸி மௌளேரே: பாதுகே த்வம் ஸுவர்ணம் |
குஹகஜன விதூரே ஸத்பதே லப்தவ்ருத்தே:
க்வ நு கலு விதிதஸ்தே கோப்யஸௌ தாதுவாத: ||

என்கிறார். அதாவது பாதுகை ஸ்ரீரங்கநாதனை வணங்கும் பக்தர்களுடைய தலையிலுள்ள கெட்ட எழுத்துகளை நல்ல எழுத்துக்களாக மாற்றி வருகின்றனாம். வஞ்சகர்களைவிட்டு வெகுதூரத்தில் உள்ள நீ இந்த ரஸவாதமென்ற மாற்று வித்தையை எங்கு கற்றாய்? என்று சாதுரியமாகக் கேட்கிறார். இவ்விதமான பிரமாணங்களினாலே ஆசார்ய ஸார்வ பௌமனாகிய தேசிகனின் திருவுள்ளம் இவ்வாறு இருந்ததென்பது தெள்ளெனத் தெளிகிறது.

ஆகையால் ஜாதக ரீதியான குறைகளைப் போக்கி அவைகளை மாற்றியமைக்க இது தகுந்த முறைதான் என்பது தெளிவாகிறது. பரமகாருணிகனான நம் ஆசாரிய வள்ளலின் திருவுள்ளத்திற்குகப்பான மேற்படி பாராயணத்தைச் செய்து நாம் நற்பயன்களைப் பெறுவோமாக.



|| சுபமஸ்து ||



https://www.facebook.com/ebooksintamil/

ஸ்ரீ:

## பல்லி சொல்லுக்குப் பலன்

வீட்டில் பல்லிகள் அவ்வப்பொழுது ஓசையிடும். அந்த ஓசையைப் 'பல்லிக் காதல்' என்பர். அவ்வாறு பல்லி ஒன்று முதல் பதினொரு முறை சத்தக்கூடும். அவற்றின் பலன்களைக் கீழ்க்கண்ட பாட்டு அறிவிக்கும் :

அருக்கன்மேல் பயநாசம், ரெண்டிற்சாவு
அகன்றவர்பின் மீண்டிடுவார் மூன்றேயாகில்
உருக்கமுள்ள சாவதனைக் கேட்கானாலு
ஒருசண்டை புண்டைந்தா முறவாமாறு
விரிதலையு மழுகுரலு மழையுநோயு
மென்மேலுந் துக்கமுண் டாகுமேழு
தரித்திடுபூச் சந்தனமு மணமுங்கொண்டு
தகுதியுள்ளார் கூடிவர லாகுமெட்டே.
சித்தக மகிழ்ச்சியுண்டா னவோடைந்து
நிதாக வேயுரைக்குந் தெரியும்பத்து
அந்தமிசை யாத்திரைகா ணுறேடைந்து
அகமகிழ்ச்சிக் கலியாண மாறேடாறு
பத்திவருங் காணிக்கை பதின்மூன்றிற்குப்
பறந்துவரு மிழவோலை பதினாலுக்கு
மெத்தயரு முறலின்முறை யேழுமெட்டு
மென்மேலும் யோகமுண்டாம் பதினாறுக்கே.



Hariram Thejus
www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

ஸ்ரீ:

## கருட தர்சனம்

இந்தத் தெய்விக பக்ஷியை இக்காலத்தில் தர்சிப்பதே துர்லபமாக உள்ளது. இதைத் தர்சிப்பதால் கீழ்க்கண்ட பலன்கள் ஏற்படும்:

**ஞாயிற்றுக்கிழமை**-பிணி அகலும்; **திங்கள்-செவ்வாய்**-துயரம் நீங்கி அழகு உண்டாகும்; **புதன்-வியாழன்**-பில்லி, சூன்யம், வைப்பு அகலும்; **வெள்ளி-சனி**-தீர்க்காயுஸும், ஸம்பத்தும் ஏற்படும்.

கருடனைத் தரிசிக்கும்பொழுது கைகூப்பலாகாது. வலது கை மோதிர விரலினால் இரு கன்னங்களையும் மூன்று அல்லது நான்கு முறைகள் தொட்டு, கீழ்க்கண்ட ஸ்லோகத்தைச் சொல்வது சாலச் சிறந்தது:



**குங்குமாங்கித வர்ணாய**
**குந்தேந்து தவளாய ச |**
**விஷ்ணுவாஹ! நமஸ்துப்யம்**
**பக்ஷிராஜாய தே நம: ||**

ஸ்ரீ:

## நாள் செய்வது நல்லோர் செய்யார்

எந்தச் சுப காரியத்தைச் செய்வதாக இருந்தாலும், பிரயாணத்தைத் தொடங்குவதாக இருந்தாலும் நாள் நக்ஷத்ரம் பார்க்க வேண்டும் என்று பெரியோர் சொல்வர். குறிப்பிட்ட நல்ல நாளிலும்கூட ராகுகாலம், எமகண்டம் இல்லாத நல்ல வேளையில் காரியங்களைத் தொடங்கவேண்டும் என்பதும் வழக்கத்திலிருந்து வருகிறது. ராகுகாலம் அனைவருக்கும் தெரியும். ஆனால், அன்றுடம் உள்ள எமகண்ட காலத்தையும் கவனித்து, அது இல்லாத வேளையில் காரியத்தைத் தொடங்கவேண்டும். இந்த எமகண்ட வேளையைக் கண்டுபிடிக்க எளிதான வழி என்ன?

ஸ்ரீ மஹாலக்ஷ்மிக்கு உரிய நாள் வெள்ளிக்கிழமையல்லவா? அன்றைய தினம் பகல் 3 மணிக்கு ஆரம்பித்து 4-30 மணி வரை எமகண்ட வேளை. இதை ஆரம்பமாகக் கொண்டு முறையே, அடுத்துவரும் கிழமைகளில் வரிசையாக 1-30 மணி நேரம் வீதம்



குறைத்துக்கொண்டே வந்தால், அன்றைய தினத்து எமகண்டம் தெரியவரும்; அதாவது:—

| | | | |
|---|---|---|---|
| வெள்ளி | — | 3 | முதல் 4-30 |
| சனி | — | 1-30 | ,, 3 |
| ஞாயிறு | — | 12-00 | முதல் 1-30 |
| திங்கள் | — | 10-30 | ,, 12 |
| செவ்வாய் | — | 9 | ,, 10-30 |
| புதன் | — | 7-30 | ,, 9 |
| வியாழன் | — | 6 | ,, 7-30 |

இதை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு, இந்த எமகண்ட வேளையையும் தவிர்த்து, சுப வேளைகளில் காரியங்களைத் தொடங்கி வெற்றி பெறுவீர்களாக!

ஸ்ரீ:

## நக்ஷத்ரங்களின் உருவமும் இரவு நாழிகை பார்க்க வகையும்

இரவு நேரங்களில் ஆகாயவீதியில் கோடிக்கணக்கான நக்ஷத்திரங்கள் ஜ்வலிக்கின்றன. இவற்றில் அசுவனி முதல் ரேவதி வரையிலான 27 நக்ஷத்ரங்களே ஜோதிஷ சாஸ்திரத்திற்கு இன்றியமையாதவை. இந்த நக்ஷத்ரங்கள் எந்த உருவில் இருக்கின்றன; எத்தனைச் சிறிய நக்ஷத்ரங்கள் சேர்ந்து ஒரு நக்ஷத்ரமாகக் கணக்கிடப்படுகிறது என்பதனைக் கீழே தந்துள்ள பாட்டு விவரிக்கும்; மேலும் இரவில் நாழிகைப் பார்க்க வகையும் புலப்படும்:

**அச்சுவினி** அறுமீன் குதிரைத்தலைபோல்
மேச்சிடுகடகத் திருகடிகையதாம்
**பரணி**மும்மீ னடுப்புப்போல
திரண்மிகுகடகத் தொருநாற்காலாம்
**கார்த்திகை**யறுமீ னேற்றரியேகம்
**உரோகிணி**யூற்றுல் பன்னிருமீனும்
முரண்மிகுகிங்கம் மூன்றேகாலாம்
**மான்றலை**மூன்றுந் தேங்காய்க்கண்போல்
ஆன்றசிங்கத் தைந்தேகாலே
**ஆதிரை**யொருமணி யர்யிழையொன்றரை
**ஒதியுணர்த** மோடங்கோவரை
**பூசம்**புடலம் பூவதுபோல
விசுங்கோலி விரண்டைரையாகும்



https://www.facebook.com/ebooksintamil/

Hariram Thejus

www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

**ஆயிலியநான்கு மம்மிபோல**
மாயிருகோ்லி ஞலேகாலே
**மக**மொருநான்கு முடநுகம்போல
நகருந்தேனி லொன்றரையாகும்
**பூரமுத்திரம்** பொற்காற் கட்டில்
**வார்**தேண்மூன்றே யொண்சிலே யரையே
**அத்த**மைம்மீன் கைத்தலம்போல
முத்நீன்றனுவின் மூன்றெனப்படுமே
**சித்திரை**யிருமீன் சிறுபுலிக்கண்போல்
அத்தனுவதனி லேந்தெனப்படுமே
**சோதி**துலக்கத் தொருமணியென்ப
சாதிமகரத் தொன்றரைசாற்றும்
**விசாக**மாறு மிடிபாழ்ந்துறவாம்
வசையறுமகரத் தாகுநாற்கடிகை
**அனுஷ**மாறு முடப்பனேபோல
குனியுங்கும்பத் தரையாகும்மே
**கேட்டை** நான்கு மீட்டிபோல
ஓட்டைக்குடத்தி லொன்றரையாகும்
**மூல**மாறு மெக்காளம்போல
சாலுங்குடத்திற் சதுரமாமே
**பூராடமுத்திராடம்** பூங்காலுலாம்
சீராமீனத் தோரரைநான்கே
**ஓண**மூன்று முழக்கோல்போல
காணுமாட்டில் மூன்றெனப்படுமே
அவிட்டச்சக்கரத் தாறுமேறரை
தவிட்டுச்சதயந தனியேறிரண்டரை
**பூரட்டாதியு முத்திரட்டாதியும்**
ஓராமிதுனத் தொன்றரைநான்கே
**ரேவதி**மொய்ம்மீன் தோணிபோல
ஒவறுகடகத் தொருமுக்காலே

---



Hariram Thejus

https://www.facebook.com/ebooksintamil/

# கோசார வேதை

சூரியன் தொடங்கி கேதுவரை மேஷாதி மீன ராசிகள்வரை தொடர்ந்து ஸஞ்சாரம் செய்து வருகின்றன. ஒரு ஜாதகனுக்கு ஜனன காலத்தில் சந்திரன் நின்ற ராசியை சந்திர லக்னம் என்று கூறுவர். இந்த சந்திர லக்னத்திலிருந்து இன்னின்ன ராசிகளில் ஸஞ்சரிக்கும்பொழுது இன்னின்ன கிரஹங்கள் எவ்விதமான சுப அசுப பலன்களைக் கொடுக்கும் என்பது ஏற்கனவே சொல்லப் பட்டது. ஆனாலும், ஒவ்வொரு கிரஹத்திற்கும் ஒவ்வொரு இடத் தில் ஸஞ்சரிக்கும்போது சில வேதை ஸ்தானங்கள் உண்டு. இந்த வேதை ஸ்தானங்களில் வேறு கிரஹம் இருந்தால் இந்த கோசார பலன் தடைபடும். இங்கே ஓர் அட்டவணை இணைக்கப்பட்டிரு கிறது. 1 முதல் 12 பாவங்களில் சூர்யாதி கிரஹங்கள் ஸஞ் சரிக்கும்போது வேதை ஸ்தானங்களில் அந்தந்த பாவங்களில் அந்தந்த கிரஹங்களுக்கு நேரே கொடுக்கப்பட்டிருக்கின்றன. உதா ரணமாக ஒரு ஜாதகனுக்கு குரு சந்திர லக்னத்திலிருந்து 9-ல் சஞ்சரிக்கும்போது நல்ல கோசார பலன் சொல்லப்பட்டிக்கிறது.

இந்த ஜாதகனுடைய லக்னம் சிம்ம ராசி என்று கொள் வோம். மேஷ ராசியில் குரு ஸஞ்சரிக்கும்போது மிக நல்ல பலன் கள் கிடைக்க வேண்டும். ஆனால், இந்த அட்டவணையில் குருவுக்கு 9-ம் பாவத்திற்கு வேதை ஸ்தானம் 10 என்று குறிக்கப்பட்டுள் ளது. இந்த 10-வது வீட்டில் அதாவது ரிஷப ராசியில் வேறு கிரஹம் இருந்தால் 9-ம் பாவத்திற்குள்ள நல்ல பலன்களைக் குரு கொடுக்கமாட்டார். இதே ஜாதகனுக்கு சனி 8-ம் வீடாகிய மீன ராசியில் ஸஞ்சரிக்கும்போது அசுப பலன்கள் கிடைக்கவேண்டும். ஆனால், இந்த அட்டவணையின் பிரகாரம் சனி கிரஹத்திற்கு 8-ம் பாவத்திற்கு நேரே வேதை ஸ்தானம் 7 என்று குறிப்பிட்டிருக் கிறது. 7-வது வீடாகிய கும்ப ராசியில் வேறொரு கிரஹம் இருந்தால் அஷ்டமச்சனி அசுப பலன்களைக் கொடுக்க வாய்ப் பில்லை. கிரஹங்கள் வெவ்வேறு ராசிகளில் ஸஞ்சரிக்கும்போது அதற்குள்ள வேதை ஸ்தானங்களில் வேறு கிரஹங்கள் இல்லையா என்பதைக் கண்டு பிறகுதான் கோசார சுப அசுப பலன்களை நிர்ணயிக்கவேண்டும்.

### கோசார வேதைக்கான அட்டவணை

| பாவங்கள் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சூரியன் | 1 | 2 | 9 | 3 | 6 | 12 | 7 | 8 | 10 | 4 | 5 | 11 |
| சந்திரன் | 5 | 1 | 9 | 3 | 6 | 12 | 2 | 7 | 10 | 4 | 8 | 11 |
| செவ்வாய், சனி, ராகு, கேது | 1 | 2 | 12 | 3 | 4 | 9 | 6 | 7 | 8 | 10 | 5 | 11 |




www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| புதன் | 2 | 5 | 4 | 3 | 7 | 9 | 6 | 1 | 8 | 10 | 12 | 11 |
| குரு | 1 | 12 | 2 | 5 | 4 | 6 | 3 | 7 | 10 | 9 | 8 | 11 |
| சுக்ரன் | 8 | 7 | 1 | 10 | 9 | 12 | 2 | 5 | 11 | 4 | 3 | 6 |

## ஹோரை கணக்கிட ஒரு சுலப வழி

வாரத்தில் 7 நாட்கள் உள்ளன. அந்தந்த நாட்களுக்குள்ள கிரஹங்களின் ஹோரை அன்றைய ஆரம்ப ஹோரை. உதாரணமாக ஞாயிற்றுக்கிழமை 6 முதல் 7 மணி வரை சூரிய ஹோரை. வெள்ளிக்கிழமை காலை 6 முதல் 7 வரை சுக்கிர ஹோரை சூரியோதயம் 6 மணிக்கு என்று கொண்டு சென்றாலும் சூரியோதயம் முன்னாலோ பின்னாலோ இருந்தால் அதன்படி உதய ஹோரையும் பின்வரும் ஹோரைகளையும் கணக்கிடவேண்டும். கீழே ஓர் அட்டவணை கொடுக்கப்பட்டுள்ளது. இந்த அட்டவணையில் சூரியன் தொடங்கி, சனி வரை கிரஹங்களின் அமைப்பைச் சுலபமாக ஞாபகம் வைத்துக்கொள்ளலாம். நைஸர்கிக பாவர்களான சூரியன், சனி, செவ்வாய், அவர்களுடைய உச்ச வீட்டிலும், நைஸர்கிக சுபர்களான சுக்ரன், புதன், சந்திரன், குரு அவர்களுடைய ஆட்சியிலும் உள்ளன. உதாரணமாக, திங்கள்கிழமை உதய ஹோரை சந்திர ஹோரை. இந்த அட்டவணையைப் பிரதக்ஷிணமாகப் பார்த்தால் அடுத்தது சனி ஹோரை. அடுத்தது குரு ஹோரை. அடுத்தது செவ்வாய் ஹோரை. பின் சூரிய, சுக்ர, புத ஹோரைகள் வரும். இப்படியே சந்திர ஹோரை தொடங்கி மறுபடி எல்லா ஹோரைகளும் வரும். இதைக் கொண்டு ஹோரைகளைச் சுலபமாக நிர்ணயிக்கலாம்.






Hariram Thejus

## ஜாதக பலனைக் கண்டுகொள்ள விதிகள்

1. ஜாதகத்தின் ராசி, அம்ச சக்ரங்களை துல்லியமாக கணிக்க வேண்டும். கிரஹங்கள் ஓடும் நக்ஷத்திரக் கால்களைத் தனியாக எழுதிவைப்பது நல்லது.

2. ராசிகளில் கிரஹங்கள் நிற்கும் பாகைகளை (degrees) ஸரியாகக் குறிப்பது நல்லது. ஏனென்றால் இதைக் கொண்டு தான் கிரஹங்களின் திரிம்சாம்சமும், திருக் (பார்வை) பலமும் நிர்ணயிக்க வேண்டும்.

3. ஜாதகனின் ஜனன காலத்தில் நடக்கும் தசையை கர்ப்பச் செல்லு போக மிகுதியுள்ள வருஷ, மாத, நாட்களை ஸரியாகக் குறிக்க வேண்டும். ஏனென்றால் இதைக் கொண்டு தான் வரப்போகும் தசா புக்தி, அந்தர, அந்தராந்தர சூக்ஷ்மாந்தரங்கள் நிர்ணயிக்க வேண்டும்.

4. முதன்முதல் ஜாதகனின் லக்ன ஸ்தானத்தைப் பார்த்து லக்னாதிபதி நல்ல பலமடைந்துள்ளாரா என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். லக்னாதிபதி நீசமாகவோ, அஸ்தமனமாகவோ இருந்தால் நல்ல பலன்கள் ஏற்படாது. லக்னாதிபதி ஒரு ராசியில் நிற்கும் பாகைகளை குறித்துக் கொண்டு அதே ராசியிலோ, பக்கத்து ராசிகளிலோ சூரியன் நிற்க இந்த 2 கிரஹங்களுக்கும் எவ்வளவு பாகைகள் இருக்கின்றன என்பதைக் கவனித்து இந்த லக்னாதிபதிக்கு அஸ்தங்கத தோஷம் இல்லையா என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

5. லக்னாதிபதி உச்ச, மித்ர, ஸ்வக்ஷேத்ரங்களில் இருந்தால் நல்ல பலமுண்டு. சுபர்களின் பார்வை இருந்தாலும் நல்ல பலம் உண்டு.

6. லக்னாதிபதி நவாம்ச சக்ரத்தில் இருக்கும் நிலையையும் பார்க்க வேண்டும். லக்னாதிபதி நவாம்சத்தில் வர்கோத்தமாம்சம் பெற்றாலும் உச்ச மித்ர ஸ்வக்ஷேத்ர நவாம்சம் பெற்றாலும் அதற்கு நல்ல பலம் உண்டு.

7. ஜாதகனுக்கு இதுவரையிலும் நடந்த தசா புக்திகளைப் பார்த்து, நடந்த சுப அசுப பலன்களைக் கொண்டு எந்தெந்த தசா புக்தி அந்தரங்களில் சுப, அசுப பலன்கள் நடந்தன என்று தீர்மானிக்கலாம். இதைக் கொண்டு ஜாதகனுக்கு எந்தெந்த கிரஹங்கள் மைத்ரமாக இருக்கின்றன என்றும், எந்தெந்த கிரஹங்கள் கெட்ட பலன்களைத் தருகின்றன என்றும் கண்டுபிடித்து வரப்போகும் தசா புக்தி அந்தரங்களின் பலன்களை யூகித்தறியலாம்.



https://www.facebook.com/ebooksintamil/

www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

8. வரப்போகும் அல்லது நடப்பிலிருக்கும் தசா புக்திகளில், தசா நாதன், புக்தி நாதன் இவர்கள் இருக்கும் ராசிகளைப் பார்த்து பலத்தைக் கணக்கிட்டு பலன்கள் சொல்ல வேண்டும்.

9. தசா நாதனுக்கோ புக்தி நாதனுக்கோ சுபர்களுடைய பார்வை இருந்தால் (குரு, சுக்ரன், புதன், க்ஷீணமில்லாத சந்திரன்) நல்ல பலன்கள் உண்டாகும். லக்னாதிபதி பாப கிரகமானாலும், சுப கிரகமானாலும், லக்னாதிபதி பார்வை பட்ட எந்த வீட்டிலிருக்கும் கிரஹங்களும் நல்ல பலனைக் கொடுக்கும். அதேபோல ஒரு ஜாதகனுக்கு பூர்ண யோக காரகராக இருக்கக்கூடிய கிரஹங்கள் கொடிய கிரஹங்களாக இருந்தாலும் அவர்கள் பார்வையினால் நல்ல பயனே கிடைக்கும். உதாரணமாக ரிஷப, துலா லக்ன ஜாதகங்களுக்கு சனி பூர்ண யோக காரகன். இவர்களுடைய ஜாதகத்தில் சனிவீக்ஷணம் பெற்ற எந்த பாவமும், கிரகமும் நல்ல பலன்களே கொடுக்கும்.

10. லக்னாதிபதிக்கு சுபாவ சத்ருவாக இருக்கக்கூடிய நிலையிருந்தாலும் நைஸர்கிக சுபர்களின் வீக்ஷணம் நல்ல பலன்களே தரும்.

11. எந்த தசா நாதனும் ஸ்வதசை ஸ்வபுக்தியில் யோக பலன்களைக் கொடுக்க மாட்டான். மாரக தசையில் மாத்திரம் ஸ்வதசை ஸ்வபுக்தியில் யோக பலன்கள் கிடைக்கும்.

12. மாரக கிரகத்தின் வீக்ஷணம் சனிக்குக் கிடைத்தால் மற்ற கிரஹங்களை ஆக்ரமித்து சனியே ஜாதகனைக் கொல்லலாம்.

13.. சுஸ்தானம், துஸ்தானம் இரண்டுக்கும் ஆதிபத்தியம் உள்ள கிரகம் சுப ஸ்தானத்தில் இருந்தால் நல்ல பலன்கள் கிடைக்கும்.

14. இரண்டு ஸ்தானங்களுக்கு ஆதிபத்தியமுள்ள கிரகம் அவைகளில் ஒரு இடத்தில் இருந்தால் அந்த ஸ்தானத்துக்குள்ள பலன் மட்டும்தான் தரும்.

15. லக்னாதிபதி மிக பலம் பெற்று அஷ்டம ஸ்தானாதிபதி அதற்கு கொஞ்சம் குறைந்த பலம் பெற்றவனாயிருந்தால் நல்லது. இது தீர்க்காயுளைக் கொடுக்கும். இவ்வாறே அஷ்டமேசன் லக்ன கேந்திரத்தில் இருந்தாலும் தீர்க்காயுள் உண்டு. சனி உச்ச ஸ்வக்ஷேத்ரங்களில் இருந்தாலும் தீர்க்காயுள் உண்டு. அஷ்டமேசன் 7-ம் வீட்டிலிருந்தாலும் தீர்க்காயுள் பாவம் உண்டு. லக்னாதிபதி வர்கோத்தமாம்சம் பெற்று அல்லது உச்ச ஸ்தானம் பெற்று சுப பார்வை பெற்றால் தீர்க்காயுள் பாவம் உண்டு. 6-ம் வீட்டில் ராகு இருந்து சுப பார்வை பெற்றால் நீண்ட ஆயுள் உண்டு.



https://www.facebook.com/ebooksintamil/

# லக்னவீடு முதல் 12 பாவங்களிலும் கிரஹங்கள் நிற்கும் பலன்

## 1. லக்னவீடு:

**சூரியன்:** இருந்தால் சுகம், முன்கோபம், மெல்லிய சரீரம், நல்ல உயரம், வீரம், ஆசாரம் முதலியவை உண்டாம். கண் பார்வை கெடும்.

**சந்திரன்:** நல்ல சுகம், பக்தி, ஞானம், ஆசாரம் முதலிய நற்பலன்கள் வளர்பிறை சந்திரனால் உண்டு. தேய்பிறைச் சந்திரனால் அவ்வளவாக நற்பலன்கள் உண்டாகாது.

**செவ்வாய்:** செவ்வாய் லக்னத்தில் இருந்தால் ஜாதகன் கோபியாக இருப்பான். உஷ்ணமான தேகமுடையவன். க்ரூர, ஸாஹஸச் செயல்கள் புரிவான். பெரிய மனிதர்களின் ஸ்நேகமுண்டாகும்.

**புதன்:** லக்னத்தில் புதன் இருந்தால் ஆயுள் விருத்தி. மதுரமான வாக்கு உண்டாகும். சாஸ்திரங்கள் அறிவான். தர்ம நிஷ்டை உண்டாகும்.

**குரு:** லக்னத்தில் குரு இருந்தால் ஆயுள் விருத்தி உண்டு. ஜாதகன் பிரபல தேஜஸ்வியாகவும் தனவானாகவும் சாஸ்திர ஞானமுள்ள வித்வானாகவும் இருப்பான்.

**சுக்ரன்:** லக்னத்தில் சுக்ரனிருந்தாலும் ஆயுள் விருத்தி உண்டு. அழகான கண்கள் இருக்கும். மனைவி, மக்களிடத்தில் பிரீதி உண்டாகும். பெரிய பதவியடைவான்.

**சனி:** லக்னத்தில் சனியிருந்தாலும் ஆயுள் விருத்தி உண்டு. மற்றபடி ஞாபகமறதி, சோம்பல், துக்கம், போகக் குறைவு, அபகீர்த்தி, பிடிவாதம் இவை உண்டாகும்.

**ராகு:** லக்னத்தில் ராகு இருந்தால் சாஸ்திரங்களில் நம்பிக்கை இராது. அனாசாரனாகவும், குழந்தைச் செல்வம் அதிகம் இராதவனாகவும் இருப்பான். தேக பலம் உண்டு.

**கேது:** லக்னத்தில் கேது இருந்தாலும் குழந்தைச் செல்வம் அதிகம் இராது. ஜாதகன் குணவானாகவும், பராக்ரமியாகவும் இருப்பான்.

## 2. 2-ம் வீடு: *(குடும்ப ஸ்தானம்)*

இந்த வீட்டை தனஸ்தானம், வாக்குஸ்தானம் என்றும் கூறுவர்.



Hariram Thejus
www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

**சூரியன்:** சூரியன் இருந்தால் ஜாதகன் பொய் பேசலாம் அல்லது வாக்கு திக்கலாம். கடுமையான வாக்கும் உண்டாகும். சுபதிருக்பலம் அல்லது சுபருடைய சேர்க்கை இருந்தால் நல்ல பலன்கள் உண்டாகும்.

**சந்திரன்:** நல்ல படிப்பு உண்டாகும். சுகம், விநயம், அடக்கம் முதலிய நற்பலன்கள் உண்டாகும்.

**செவ்வாய்:** ஸாஹஸம், முன்கோபம், கடுமையான வாக்கு உண்டாகும்.

**புதன்:** நல்ல குடும்பம் சுத்தமான வாக்கு, தனம் உண்டாகும்.

**குரு:** ஸத்குடும்பம், தனம், வித்வத், வாக்கு உண்டு.

**சுக்ரன்:** ஆயுள் விருத்தி, தன தான்ய விருத்தி, நல்ல மனைவி உண்டாகும்.

**சனி:** பின்யோசனை, சபலம், பொய்யான வாக்கு, வஞ்சனை, குடும்ப கஷ்டம் இவை உண்டு.

**ராகு:** ராகு இங்கிருந்தால் கடுமையான வாக்கு, ரோஷம், கண்ணில் மச்சமும் இருக்கும். திக்குவாயும் ஏற்படலாம்.

**கேது:** கடுமையான வாக்கு, வீண் சண்டையும் நேரலாம். திக்குவாயும் ஏற்படலாம். கண்ணிற்கு பீடை வரலாம். ஏராளமாக தனம் ஸம்பாதித்து செலவழிப்பான்.

### 3. 3-ம் வீடு:

**சூரியன்:** சூரியன் 3-ல் இருந்தால் பலபராக்ரமம் உள்ளவனாவான்.

**சந்திரன்:** ஸஹோதர ஸஹோதரிகளுக்கு நல்ல பலன்களும் நல்ல ஸந்தோஷமும் ஏற்படும்.

**செவ்வாய்:** நல்ல குணம், தனம் உண்டாகும். ஸஹோதரர்களுக்குக் கெடுதல் உண்டாகலாம். காதில் நோய் உண்டாகலாம்.

**புதன்:** புதன் 3-ல் இருந்தால் ஜாதகன் கபடியாக இருக்கலாம். ஸஹோதர ஸஹோதரியிடத்தில் பிரியமுள்ளவனாக இருப்பான்.

**குரு:** எதிலும் ஐயமும், மனோதிடமும் உள்ளவனாக இருப்பான்.

**சுக்ரன்:** 3-ல் சுக்கிரன் இருந்தால் அற்ப சுகமும் ரோஷவானாகவும் இருப்பான்.

**சனி:** 3-ல் சனி இருந்தால் ஆயுள் விருத்தி. நல்ல கம்பீரனாகவும், புகழுடையவனாகவும் இருப்பான்.

**ராகு:** ஆயுள் விருத்தி, திட புத்தி உண்டு.



https://www.facebook.com/ebooksintamil/

**கேது:** தைரியம், சுகம், தெய்வ பக்தி. தனம், ஆசாரம் உண்டாகும்.

### 4. 4-ம் வீடு:

**சூரியன்:** மனக்கஷ்டமும், பந்து விரோதமும், தாயாருக்குக் கெடுதலும் உண்டாகும்.

**சந்திரன்:** தாயாருக்குக் கெடுதலும், சுகம், பூமி வாகன விருத்தி உண்டாகும். க்ஷீண சந்திரனானால் நற்பலன்கள் கிடையா.

**செவ்வாய்:** தாய்க்குக் கெடுதல், வீடு வாகனம் பூமி உண்டாகும்.

**புதன்:** நல்ல வாக்சாதுரியமும், பூமி வாகனச் சேர்க்கையும் போகமும் வித்யையும் உண்டாகும்.

**குரு:** தாயாருக்கு நல்ல சுகமும், வாகன ஸௌக்கியமும் உண்டாகும். வித்யையும் மேன்படும்.

**சுக்ரன்:** வீடு, பூமி, வாகனம் உண்டாகும். கீர்த்தி, தனம், தாய்க்கு நன்மை. லக்ஷ்மி கடாக்ஷம் உண்டு. கேந்திர ஸ்தானமாகையால் இப்படி இருப்பதற்கு மாளவ யோகம் என்று பெயர்.

**சனி:** சனி 4-ல் இருந்தால் தாய்க்குக் கெடுதலும், படிப்பில் மந்த கதியும் கெடுதலான பலனும் உண்டாகும். படிப்பு நின்று விடலாம். வீடு பூமி லாபங்கள் இல்லாது போகலாம். ஆனால் சனி ஸொந்த வீடுகளிலோ, உச்ச மித்ரத்திலோ இருந்தால் வெகு நல்ல பலன்கள் உண்டாகும். 4-ம் வீடு கேந்திர ஸ்தானமாகையால் இது சச யோகம் என்ற நல்ல யோகத்தைக் கொடுக்கும். நல்ல ஞானமும் கிருஹ பூமி வாகன ஸௌக்யமும் வரும்.

**ராகு:** மந்த புத்தியும் கெடுதலான பலன்களும் தரும். ஆனால் யோக கிரஹங்களின் பார்வையோ, நைஸர்கிக சுபர்களின் பார்வையோ இருந்தால் நல்ல பலன் உண்டு.

**கேது:** பலவித வித்தை உண்டாகும். தாயாருக்குக் கெடுதல்.

### 5. 5-ம் வீடு:

இந்த வீட்டை பூர்வபுண்ய ஸ்தானம் என்றும், புத்ர ஸ்தானம் என்றும், மந்த்ர ஸ்தானம் என்றும் சொல்வார்கள்.

சூரியன்: புத்ர தோஷம், ஸௌக்யக் குறைவு

சந்திரன்: நல்ல புத்தி, ஞான விருத்தி

செவ்வாய்: புத்ர தோஷம்

புதன்: நல்ல புத்தி, தெய்வ பக்தி, புத்ர விருத்தி

குரு: புத்ர க்லேசமுண்டாகும். நல்ல புத்தி. சாஸ்த்ர ஞானம்.



Hariram Thejus

www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

சுக்ரன்: செல்வம், பிரபுத்வம், புத்ர லாபம்

சனி: புத்ர க்லேசம், சஞ்சல மனம்

ராகு: புத்ராரிஷ்டம்

கேது: புண்ய பலன், தான தர்மம், சாஸ்த்ர ஞானம்

**6. 6-ம் வீடு:**

**சூரியன்:** ஸத்கீர்த்தி, யோகம், சத்ருஜயம்

**சந்திரன்:** கீர்த்தியடைதல், வெகு ஜனங்களை ரக்ஷித்தல், பூர்ண சந்திரனானால் பூர்ணாயுஸும், க்ஷீண சந்திரனானால் அல்பாயுஸும் கூறுவர்.

**செவ்வாய்:** கீர்த்தி, ஐச்வர்யம், சத்ருஜயம்

**புதன்:** சோம்பல், நிஷ்டூர வாக்கு

குரு: மந்த்ர பிரயோகம், தீர்த்த ஸ்நானம் புண்ணியமடைதல், ஜோதிஷம் புராணம் அறிந்து கூறல்

**சுக்ரன்:** சத்ரு உண்டாகும். ஜலகண்டம் விளையாட்டு புத்தி.

**சனி:** தனம், போகம், சத்ருஜயம், மானி, தைரியவான்

**ராகு:** ஆயுள் விருத்தி, தனப் பிராப்தி

**கேது:** யோகம், சத்ரு ஜயம்

**7. 7-ம் வீடு:**

**சூரியன்:** சரீர பீடை, த்வி களத்ரம், துஷ்ட களத்ரம்

**சந்திரன்:** சாந்தம், அழகிய களத்ரம்

**செவ்வாய்:** களத்ர தோஷம், ரோகம்

**புதன்:** அழகு, நல்ல மனைவி, சுகம்

**குரு:** ஸத் களத்ரம், வாகன சுகம், புத்ர பாக்யம்

**சுக்ரன்:** தனவான், களத்ர தோஷம், ஸ்த்ரீ சபலம்

**சனி:** குரூர அல்லது அரூப களத்ரம்

**ராகு:** களத்ர தோஷம், ஸ்த்ரீயால் அவமானம், புத்ர தோஷம்

**கேது:** களத்ர அரிஷ்டம், அனுசித ஸ்த்ரீ போகன்

**8. 8-ம் வீடு:**

**சூரியன்:** மத்திம ஆயுள், நேத்ர ரோகம், மனஸ்தாபம்



**சந்திரன்:** கபரோகம், கண்ணில் ரோகம், ஜலபீதி தன நாசம்

**செவ்வாய்:** அற்ப ஆயுஸ், களத்ர தோஷம், சத்ருபீடை கெடுதல்

**புதன்:** மந்த்ரம், வேதம், தனம், தீர்க்காயுள், ஸம்பத்து

**குரு:** தீர்க்காயுள், புத்ராரிஷ்டம்

**சுக்ரன்:** தீர்க்காயுள், தனம், சாஸ்த்ர ஞானம்

**சனி:** தீர்க்காயுள், தரித்ரம், தொழிலில் நிலையில்லாத நிலை, தன வ்ரயம்.

**ராகு:** விஷ பீதி அல்லது ஸர்ப்ப கண்டம்

**கேது:** மனைவிக்கு அரிஷ்டம்

**9. 9-ம் வீடு:** பூர்வ புண்யஸ்தானம், பிதாஸ்தானம், பாக்ய ஸ்தானம்

**சூரியன்:** தார்மிக குணம், கோபி, பித்ருபீடை, தனவான்

**சந்திரன்:** சுபமான தர்ம புத்ர லாபம், மூன்று பாஷைகள் அறிதல், தர்மவான், சுகவான், லக்ஷ்மி கடாக்ஷம்

**செவ்வாய்:** பிதாவுக்குக் கஷ்டம், பித்ரு ஸொத்துநாசம், குரூர சுபாவம்

**புதன்:** வித்வான், தனவான், ஆசாரம், வெகுபுகழ்

**குரு:** ஸத்புத்ர பாக்யம், நல்ல புத்தி, ஆசார சீலன், குணவான், புலனடக்கம், யசஸ்வி.

**சுக்ரன்:** நல்ல பாக்யம், லக்ஷ்மி கடாக்ஷம்

**சனி:** இஷ்டஜன விரோதி, அற்பதனம், பிதாரிஷ்டம், அற்ப போகி

**ராகு:** பூமி பொருள் லாபம், புத்ர நஷ்டம், அழியாச் செல்வம்.

**கேது:** பித்ரு பாக்யஹீனம், தரித்ரம், புண்யத் தடை

**10. 10-ம் வீடு:** ஜீவன ஸ்தானம் (தொழில்)

**சூரியன்:** யசஸ்வி, பலவான், நல்ல தொழில் தனம்

**சந்திரன்:** நல்லெண்ணமுள்ள ஆசாரவான்

**செவ்வாய்:** மகத் காரியஸாதகன், பிரபு, லக்ஷ்மி கடாக்ஷம், நல்ல கல்வி, ஞான சித்தி

**புதன்:** ஸத்யவான், ஞானி, பலவான், புத்ரவான்

[தொடர்ச்சி: 218-ஆம் பக்கம்



https://www.facebook.com/ebooksintamil/

Hariram Thejus

www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

**மீனம்**

| | | |
|---|---|---|
| சூரியன் | : | நட்பு |
| சந்திரன் | : | சமம் |
| செவ்வாய் | : | நட்பு |
| புதன் | : | நீசம் |
| குரு | : | ஆட்சி |
| சுக்ரன் | : | உச்சம் |
| சனி | : | சமம் |
| ராகு | : | நட்பு |
| கேது | : | நட்பு |

**கும்பம்**

| | | |
|---|---|---|
| சூரியன் | : | பகை |
| சந்திரன் | : | சமம் |
| செவ்வாய் | : | சமம் |
| புதன் | : | சமம் |
| குரு | : | சமம் |
| சுக்ரன் | : | நட்பு |
| சனி | : | ஆட்சி |
| ராகு | : | சமம் |
| கேது | : | உச்சம் |

**மகரம்**

| | | |
|---|---|---|
| சூரியன் | : | பகை |
| சந்திரன் | : | சமம் |
| செவ்வாய் | : | உச்சம் |
| புதன் | : | சமம் |
| குரு | : | நீசம் |
| சுக்ரன் | : | நட்பு |
| சனி | : | ஆட்சி |
| ராகு | : | நட்பு |
| கேது | : | நட்பு |

**தனுசு**

| | | |
|---|---|---|
| சூரியன் | : | நட்பு |
| சந்திரன் | : | சமம் |
| செவ்வாய் | : | நட்பு |
| புதன் | : | சமம் |
| குரு | : | ஆட்சி |
| சுக்ரன் | : | நட்பு |
| சனி | : | சமம் |
| ராகு | : | நட்பு |
| கேது | : | நட்பு |

**மேஷம்**

| | | |
|---|---|---|
| சூரியன் | : | உச்சம் |
| சந்திரன் | : | சமம் |
| செவ்வாய் | : | ஆட்சி |
| புதன் | : | சமம் |
| குரு | : | நட்பு |
| சுக்ரன் | : | சமம் |
| சனி | : | நீசம் |
| ராகு | : | பகை |
| கேது | : | பகை |

பராசர ஹோரையில் கூறியபடி விருச்சிகத்தில் உச்சம். வேறுபாடுகள்

**இந்த அட்டவணையில், மித்ர, ஸ்வக்ஷேத்ர, காட்டப்பட்டுள்ளன.**

வெவ்வேறு கிரகங்களின் போது இந்த அட்டவணையை வேண்டும்.

**விருச்சிகம்**

| | | |
|---|---|---|
| சூரியன் | : | நட்பு |
| சந்திரன் | : | நீசம் |
| செவ்வாய் | : | ஆட்சி |
| புதன் | : | சமம் |
| குரு | : | நட்பு |
| சுக்ரன் | : | சமம் |
| சனி | : | பகை |
| ராகு | : | நீசம் |
| கேது | : | உச்சம் |



https://www.facebook.com/ebooksintamil/

**ரிஷபம்**

| | | |
|---|---|---|
| சூரியன் | : | பகை |
| சந்திரன் | : | உச்சம் |
| செவ்வாய் | : | சமம் |
| புதன் | : | நட்பு |
| குரு | : | பகை |
| சுக்ரன் | : | ஆட்சி |
| சனி | : | நட்பு |
| ராகு | : | உச்சம் |
| கேது | : | நீசம் |

ராகு-ரிஷபத்தில் உச்சம். கேது- இவர்கள் விஷயத்தில் கருத்து உள்ளன.

**கிரஹங்களின் உச்ச, நீச, விரோத ஸ்தானங்கள்**

பலத்தை நிர்ணயிக்கும் அநுசரித்துச் செய்ய

**துலாம்**

| | | |
|---|---|---|
| சூரியன் | : | நீசம் |
| சந்திரன் | : | சமம் |
| செவ்வாய் | : | சமம் |
| புதன் | : | நட்பு |
| குரு | : | பகை |
| சுக்ரன் | : | ஆட்சி |
| சனி | : | உச்சம் |
| ராகு | : | நட்பு |
| கேது | : | நட்பு |

**மிதுனம்**

| | | |
|---|---|---|
| சூரியன் | : | சமம் |
| சந்திரன் | : | நட்பு |
| செவ்வாய் | : | பகை |
| புதன் | : | ஆட்சி |
| குரு | : | பகை |
| சுக்ரன் | : | நட்பு |
| சனி | : | நட்பு |
| ராகு | : | நட்பு |
| கேது | : | நட்பு |

**கடகம்**

| | | |
|---|---|---|
| சூரியன் | : | நட்பு |
| சந்திரன் | : | ஆட்சி |
| செவ்வாய் | : | நீசம் |
| புதன் | : | பகை |
| குரு | : | உச்சம் |
| சுக்ரன் | : | பகை |
| சனி | : | பகை |
| ராகு | : | பகை |
| கேது | : | பகை |

**ஸிம்மம்**

| | | |
|---|---|---|
| சூரியன் | : | ஆட்சி |
| சந்திரன் | : | நட்பு |
| செவ்வாய் | : | நட்பு |
| புதன் | : | நட்பு |
| குரு | : | நட்பு |
| சுக்ரன் | : | பகை |
| சனி | : | பகை |
| ராகு | : | பகை |
| கேது | : | நீசம் |

**கன்னி**

| | | |
|---|---|---|
| சூரியன் | : | சமம் |
| சந்திரன் | : | நட்பு |
| செவ்வாய் | : | பகை |
| புதன் | : | உச்சம், |
| குரு | : | நட்பு |
| சுக்ரன் | : | நீசம் |
| சனி | : | நட்பு |
| ராகு | : | நட்பு |
| கேது | : | நட்பு |



Hariram Thejus

www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

216-ஆம் பக்கத்திலிருந்து தொடர்ச்சி]

**குரு:** தனவான், பெரும் புகழ், சுகவான், உயர்ந்த உத்யோகம்.

**சுக்ரன்:** நல்ல கீர்த்தி, சுபகரமான செய்கைகள், உத்யோகம், பகுபுத்ரயோகம்

**சனி:** மந்திரிக்கு ஸமானமான பதவி, பிரஸித்தி, தனம், ஜெயம், தன்டனை இடல்

**ராகு:** அற்ப புத்ரன், புண்யதீர்த்த ஸ்தானம், பெரியோரிடம் பணிவு.

**கேது:** விவேகி, ராஜாங்க ஸேவை, தானதர்மம், யசஸ்வி

11. **11-ம் வீடு:** லாப ஸ்தானம்

**சூரியன்:** தீர்க்காயுள், பிதாவுக்கு அரிஷ்டம், சோகம் கிடையாது.

**சந்திரன்:** நல்ல மனது, தனம், புத்ர பிராப்தி

**செவ்வாய்:** பிதாவுக்கு அரிஷ்டம், தனம், சுகம், ஸந்தோஷம்

**புதன்:** தீர்க்காயுள், தனம்

**குரு:** தனவான், பிரசித்தன்

**சுக்ரன்:** தனவான், சுகம்

**சனி:** ஆயுள் விருத்தி, தனலாபவான் அரோகவான், சூரன்

**ராகு:** பிதாவுக்கு அரிஷ்டம், தன புத்ர பிராப்தி

**கேது:** புண்யவான், தார்மிகன்

12. **12-ம் வீடு:** வ்ரய ஸ்தானம், மோக்ஷ ஸ்தானம்

**சூரியன்:** பிதாவுக்கு அரிஷ்டம், தைரியம், நேத்ர ரோகம்

**சந்திரன்:** அந்நிய தேசவாசம், சூரன்

**செவ்வாய்:** குரூர சுபாவம், அதம காரியங்களைச் செய்வான், சாகஸம் உண்டு

**புதன்:** யோகவான், குரூரன்

**குரு:** புத்திமான், யோகவான், அனுசாரம்

**சுக்ரன்:** யோகவான், ரதி சுகம்

**சனி:** சத்ரு பாதை, அற்பதனம், ரோகம்

**ராகு:** செலவாளி, ஜல ஸர்ப்ப கண்டம்

**கேது:** ஞானம், தனம், மோக்ஷ பிராப்தி



# சனி ஸ்தோத்திரம்

[ஸ்ரீ உப. வித்வான் ஈ. வி. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி, திருவத்திபுரம்]

உலகில் மக்களை ஆஸ்திகர், நாஸ்திகர், ஆஸ்திக நாஸ்திகர் என மூன்று வகைப்படுத்தலாம். 'கடவுள் உண்டு, புண்ணிய பாவங்களை அநுபவிக்கும் உலகங்கள் உண்டு' என்று நினைத்துச் செயற்படுகிறவன் ஆஸ்திகன். 'இவ்வாறு இல்லை' என்று கூறி நடப்பவன் நாஸ்திகன். மேலே 'உண்டு' என்று சொல்லி, மனத்தில் நினையாதவன் ஆஸ்திக நாஸ்திகன். கடவுளையும் பரலோகத்தையும் கண்ணால் காண முடியாது; சாஸ்திரங்களைக் கொண்டுதான் அறிய முடியும். அந்தச் சாஸ்திரம்தான் வேதம். யோகிகள் அகக்கண்ணால் கடவுளைக் காண்கின்றனர். ஞானிகள் வேதஞானத்தினால் கடவுளை அறிகின்றனர். நம்மால் பார்க்க முடியாமையினால் கடவுள் இல்லை என்று சொல்லிவிட முடியாது.

ஓர் அரசன் ஆட்சி புரிகிறான். அவன் எல்லாரையும் பார்ப்பதில்லை. எல்லாரும் அவனைக் காண முடிவதில்லை. அதனால் அரசன் எல்லாரையும் கவனிக்கவும், எல்லாருடைய குறைகளை நீக்கவும், எல்லாருக்கும் நன்மை புரியவும் பல பிரதிநிதிகளை ஏற்படுத்துகிறான். அந்தப் பிரதிநிதிகள் மக்களுக்கு நன்மை புரிகின்றனர்; குற்றம் புரிகிறவர்களைத் தண்டிக்கின்றனர். மக்கள், ''எங்களைத் தண்டிக்க நீ யார்?'' என்று அவர்களைக் கேட்டால், ''நம் அரசனுடைய ஆணைப்படி செய்கிறோம்'' என்று கூறுகின்றனர். இதனால் அரசனை அறிகின்றனர்.

இவ்வாறு பரமபுருஷனும் சூரியன், சந்திரன், அங்காரகன், புதன், குரு, சுக்கிரன், சனி, ராகு கேது என்ற ஒன்பது கிரகங்களைத் தனக்குப் பிரதிநிதிகளாக ஏற்படுத்தியிருக்கிறான். கடவுளை ஒப்புக்கொள்ளாதவர்களும் பார்க்காதவர்களும் இந்த ஒன்பது கிரகங்களை ஒப்புக்கொள்கின்றனர். விஞ்ஞானிகள் விஞ்ஞானக் கருவிகளைக் கொண்டு காண்கின்றனர். பண்டிதர்கள் ஜ்யௌதிஷ சாஸ்திரத்தைக் கொண்டு அறிகின்றனர்.

வேதத்திற்கு ஜ்யௌதிஷம் ஓர் அங்கம். வேத புருஷனுக்கு ஜ்யௌதிஷ சாஸ்திரத்தைக் கண்ணாகக் கூறுகின்றனர். அந்தச் சாஸ்திரத்தில் கிரகங்களின் சக்தி, அளவு, பெயர்கள், ஸஞ்சாரம், பார்வை, கொடுக்கும் பலன் முதலியவை கூறப்படுகின்றன. உலகைக் கிரகங்கள் சுற்றி வருகின்றன. உலகைப் பன்னிரண்டு கூறுகளாக ஏற்படுத்திக்கொண்டு, ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு



https://www.facebook.com/ebooksintamil/

Hariram Thejus

www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

கிரகம் சில காலம் தங்கியிருக்கிறது. அதாவது ஒரு ஸ்தானத்திலிருந்து மற்றொரு ஸ்தானத்திற்குப் போகும்பொழுது சில காலம் ஆகிறது. ஒவ்வொரு கிரகத்திற்கும் இந்தப் பன்னிரண்டு ஸ்தானங்களில் சில சொந்த வீடாகவும், உச்ச வீடாகவும், சத்துரு ஸ்தானமாகவும், மித்திர ஸ்தானமாகவும் ஆகின்றன. இடத்திற்குத் தக்கவாறு நற்பலனையும் தீய பலனையும் இவை கொடுக்கின்றன. சிலருடன் சேர்க்கையினாலும் சிலருடைய பார்வையினாலும் பலன்கள் மாறுபடுகின்றன. ஒவ்வொரு கிரகத்திற்கும் சிலர் மித்திரர்களாகவும், சிலர் பகைவர்களாகவும், சிலர் பொதுவானவர்களாகவும் ஆகின்றனர்.

'க்ருஹ்ணந்தீதி க்ரஹா:—பிடிக்கிறபடியினால் கிரகங்கள்' என்று சொல்லப்படுகின்றனர். அதாவது பலன் கொடுப்பதற்காக பிடிக்கின்றனர் என்பது பொருள். சுப ஸ்தானத்தில் இருந்தால் சுப பலனையும், அசுப ஸ்தானத்தில் இருந்தால் தீய பலனையும் அளிக்கின்றனர்.

गृह्णन्तीति ग्रहाः सर्वे ग्रहाः पीडाकराः स्मृताः ।
गृह्णन्तीति ग्रहाः सर्वे ग्रहाः क्षेमप्रदाः स्मृताः ॥

க்ருஹ்ணந்தீதி க்ரஹா: ஸர்வே, க்ரஹா: பீடாகரா:
ஸ்ம்ருதா: |
க்ருஹ்ணந்தீதி க்ரஹா: ஸர்வே, க்ரஹா: க்ஷேமப்ரதா:
ஸ்ம்ருதா: ||

கிரகங்களின் ஸ்தானத்தைப் பொறுத்து நல்லனவாகவும் தீயனவாகவும் ஆகின்றன. மனிதர்களின் அகங்காரத்தை அடக்குவதற்காகச் சில சமயங்களில் கிரகங்கள் துன்பத்தை விளைவிக்கின்றன. இப்படித் துன்பத்தைக் கொடுப்பதில் சனிகிரகம் மிக்க கொடூரமானவர். இவர் மந்த கதியையுடையவர். இவருக்கு மகரமும் கும்பமும் சொந்த வீடு; துலாம் உச்சவீடு; மேஷம் நீசவீடு. புதனும் சுக்கிரனும் மித்திரர்கள்; சூரியன், சந்திரன், அங்காரகன் விரோதிகள்; குரு ஸமர்; மூன்றாம் ஏழாம் பத்தாம் இடங்கள் பார்வை. ஒரு வீட்டில் இரண்டரை ஆண்டுகள் தங்கியிருப்பார். ஒவ்வொருவரையும் இவர் ஆயுளுக்குள் மூன்று தரம் பிடித்துக் கொள்வார். ஒவ்வொரு தரமும் ஏழரை ஆண்டுகள் பிடிப்பார். இதைத்தான் ஏழரை நாட்டுச் சனியன் பிடித்துக்கொண்டுள்ளான் என்று கூறுவர். தகப்பனாரிடமே இவர் விரோதம் கொண்டாடுகிறவர் என்றால் எவ்வளவு குணம் உடையவர் என்பதைக் கவனிக்க வேண்டும்.

ஒரு ஸ்தானத்திலிருந்து மற்றொரு ஸ்தானத்திற்குச் செல்லும்போது ஸனைச்சரனுக்கு விசேஷ பூஜை செய்வது வழக்கம். ஏனெனில், உலகில் ஒருவர் ஒரு பதவியில் அதிக நாள் இருந்து மாற்றலாகி மற்றோர் இடத்திற்குப் போகும்போது அவருக்கு அதிக மரியாதை செய்வார்கள். அதேபோல் சனி ஒரு ஸ்தானத்தில் அதிக நாள் தங்கியிருந்து செல்லுகிறார். மேலும், சனி ஆரம்பத்திலோ நடுவிலோ கடைசியிலோ கெடுதல் செய்வார். அல்லது கெடுதலையே கொடுத்துக் கொண்டும் இருப்பார். அப்படி இருந்தாலும் கடைசியிலாவது கெடுதலைச் செய்யாமல் நன்மையைச் செய்ய வேண்டுமே என்பதற்காகவும், அடுத்த ஸ்தானத்தில் செல்லும்போது தீமையைச் செய்யாமலிருப்பதற்காகவும் ஜபஹோம அர்ச்சனை பூஜைகள் நடத்துவது உண்டு.

சனிக்கிரகம் மகான்கள், பாவிகள் எல்லாரையும் பிடிப்பார். மகான்களைப் பிடிக்கும்போது, ''நான் தங்களைப் பிடிக்கப்போகிறேன்; அநுமதி கொடுக்க வேண்டும்'' என்று கேட்பார். அவர்கள் அதற்கு இசைவர். பிறகு பிடித்துக் கொள்வார். இப்படிப் பல யோகிகளையும் மகாராஜாக்களையும் பிடித்துப் பிடித்திருக்கிறார். உதாரணமாக, ஓரிரண்டைக் கவனிப்போம்.

பகவத்பாஷ்யகாரருடைய பஞ்சாசார்யர்களில் ஒருவர் திருக்கச்சி நம்பிகள். இவர் பெரிய யோகி. தேவாதிராஜனுடன் ஏகாந்தத்தில் பேசும் மகாபாக்கியத்தைப் பெற்றவர். இவரைச் சனீசுவரன் பிடிக்கக் கருதி இவரிடம் நெருங்கி வணங்கி, ''ஸ்வாமி! தங்களை அடியேன் பிடிக்க வேண்டிய காலம் வந்துள்ளது. உத்தரவு கொடுக்க வேண்டும்.'' என்று பிரார்த்தித்தான். நம்பிகள் இசைந்து ஒன்று கேட்டார்—''ஸனைச்சரா! என்னை நீ பிடிப்பதனால் ஏற்படும் துன்பத்தைப் பொறுத்துக்கொள்ள நான் தயங்கமாட்டேன். ஆனால் பகவத் கைங்கர்யத்திற்கு லோபம் ஏற்படுமே என்று அஞ்சுகிறேன். ஆதலால் ஏழரை ஆண்டு என்பதைக் குறைத்துக்கொள்'' என்று கேட்டார்.

'அதற்குச் சனி, ''ஏழரை மாதங்கள் பிடிக்கிறேன்'' என்று கூறினான். 'யந் முஹூர்த்தம் க்ஷணம் வாபி வாஸுதேவோ ந சிந்த்யதே' என்கிற கணக்கிலே அவ்வளவு காலம் பகவத்ஸேவா வைமுக்யத்தில் பயந்தவராய், ''அவ்வளவு காலங்கூடத் தாங்க மாட்டேன்'' என்று நம்பிகள் கூறினார். அதற்குச் சனி, ''ஏழரை நாள்'' என்றான். ''அதைக்கூட ஸஹியேன்'' என்று நம்பிகள் கூறினார். சனி, ''ஏழரை நாழிகை பிடித்துக்கொள்கிறேன்'' என்றான். அதற்கு நம்பிகள் ஒப்புக்கொண்டார். அதன்படி சனி பிடித்துக்கொண்டான்.

பிறகு நம்பிகள் வழக்கம்போல் தேவாதிராஜனுக்குத் திருவாலவட்டக் கைங்கர்யம் செய்துவிட்டுத் திருமாளிகைக்குத் திரும்பினார். அப்பொழுது அர்ச்சகர் சென்று திருவாராதனம் செய்ய ஆரம்பிக்கத் தங்க வட்டிலைப் பார்த்தார். வட்டிலைக் காணவில்லை. உடனே அர்ச்சகர், ''வட்டிலைக் காணவில்லை. அந்தரங்க கைங்கர்யம்

https://www.facebook.com/ebooksintamil/



Hariram Thejus
www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

செய்பவர் நம்பிகள்தாம். அவரை விசாரிக்க வேண்டும்'' என்று அதிகாரியிடம் தெரிவித்தார். அதிகாரி தர்மஸங்கடத்தில் ஆழ்ந்தார். கேட்கப் பயந்தார். எல்லா இடங்களிலும் தேடச் செய்தார். தேடினார்கள். அகப்படவில்லை. கடைசியில் நம்பிகளை அழைத்துக் கேட்டார். நம்பிகள் அதைக் கேட்டு, வெயிலிலிட்ட புழுப் போல் துடித்தார். புண்ணில் வேல் பாய்ச்சுவது போல் மேன்மேலும் அதிகாரி கேட்டார். அப்பொழுது ஸந்நிதியிலிருந்து அர்ச்சகர் முதலியவர்கள் ஓடி வந்து, வட்டில் உருண்டு பகவானுடைய பீடத்தின் அடியில் கிடந்திருந்ததைத் தெரிவித்தனர். பிறகு எல்லாரும் ஸ்ரீநம்பிகளிடம் அபராத க்ஷமாபணம் பண்ணிக் கொண்டனர். ஏழரை நாழிகை வரையில் சனி பிடித்ததனால் நம்பிகள் அவச்சொல்லாகிற மரணவேதனையை அடைந்தார். ஏழரை நாழிகையும் நீங்கிவிட்டபடியால் வட்டிலும் கிடைத்து விட்டது; பழியும் அகன்றுவிட்டது.

இப்படியே பரம பாவனரும் பேரரசருமான நளமகாராஜனை சனி பிடித்துக்கொண்டான். நளனை உச்சரித்தால் சனி விலகும்; பாவம் அகலும் என்பர்.

கார்க்கோடகஸ்ய நாகஸ்ய தமயந்த்யா: நளஸ்ய ச

ருதுபர்ணஸ்ய ராஜர்ஷே: கீர்த்தநம் கலிநாஶநம் ||

என்று, இவர்களின் பெயரை உச்சரித்தால், கலி—சனி விலகும். இப்படிப் பெருமை வாய்ந்த நளனையும் சனி பிடித்துக் கொண்டான்.

ஒரு சமயம் நாரத மகரிஷி பரமசிவனை வணங்கி, ''சம்போ! சனி பிடிப்பதனால் ஏற்படும் துன்பத்திலிருந்து விடுதலை எவ்வாறு ஏற்படும்? எல்லாருடைய க்ஷேமத்திற்காகக் கூறியருளவேண்டும்'' என்று வேண்டினார்.

சிவபெருமான் கூறலானார்—நாரதா, கூறுகிறேன் கேள். கிரகங்களுள் சனி கொடூரமானவன்; அசுரர்களும் நடுங்கும்படியான பயங்கரன். அவனுடைய உக்கிரத்தை உலகும் அறியும். தசரத சக்கரவர்த்தி ஸப்த த்வீபங்களையும் ஆண்டு வந்தான். ஒரு சமயம் சனி கிருத்திகா நக்ஷத்திரத்திலிருந்து ரோகிணியைப் பிளந்துகொண்டு செல்ல இருந்தான். அதைச் சோதிடர்மூலம் தசரதன் அறிந்தான். உடனே வசிஷ்டரை அணுகி, ''இதனால் என்ன நேரிடும்? இதற்கு என்ன செய்யலாம்?'' என்று கேட்டான்.

வஸிஷ்டர், ''ரோகிணியைப் பிளந்து கொண்டு சனி சென்றால் பன்னிரண்டு ஆண்டுகள் பெரும் வறகடம் ஏற்படும். மக்கள், விலங்கு முதலியவை மிகவும் அவதியுறும். அதனால் நேரில் சென்று தடுக்க முயற்சி செய்யவேண்டும்'' என்று கூறினார். உடனே தசரதன் உயர்ந்த தேரில் அமர்ந்து, திவ்யாயுதங்களை எடுத்துக்



கொண்டு, மிகவும் வேகத்துடன் சென்று, சூரியமண்டலத்திற்கு மேலேயுள்ள நக்ஷத்திர மண்டலத்தை அடைந்து, ரோகிணி நக்ஷத்திரத்தை அடைந்தான். அப்பொழுது, உயர்ந்த நவரத்தினங்கள் இழைத்த தங்கமயமான தேரில் அன்னப்பறவை போல் வெண்மையான குதிரைகள் பூட்டிய தேரில். இரண்டாவது சூரியபகவான் போல் வந்த சனியைப் பார்த்து, தசரதன் நாண் பூட்டி ஸம்ஹாராஸ்திரத்தை எடுத்துப் பிரயோகம் செய்ய ஆயத்தமானான்.

இதைக் கண்ட ஶனைஶ்சரன் சிரித்து, ''அரசே! என்னால் பார்க்கப்பட்ட தேவாசுரர்களும் எரிந்துவிடுவர். அப்படியிருக்க நீர் என்னிடம் போரிட வந்துள்ளதைக் கண்டு மகிழ்கிறேன். உம்முடைய தவமகிமையும் வீரத்தையும் கண்டு மகிழ்கிறேன். ஆதலால் வரமளிக்கிறேன். வேண்டும் வரத்தைக் கேளும்'' என்று கூறினான். தசரதன், ''ஸௌர்யபுத்திரா! ரோகிணியைப் பிளந்து செல்ல வேண்டாம்'' என்று வேண்டினான். ''அப்படியே ஆகட்டும். ரோகிணியைப் பிளந்து செல்ல மாட்டேன். மேலும் ஒரு வரம் கேளும்'' என்றான் சனி. ''ரோகிணியைக் கடந்து செல்லுவதனால் ஏற்படும் பன்னிரண்டு ஆண்டுகள் வறகடம் ஏற்படாமல் இருக்க அருளவேண்டும்'' என்று தசரதன் கேட்டான். சனி அவ்வாறே ஆகட்டுமென்று வரமளித்தான். இதனால் சந்தோஷமடைந்த தசரதன் சனியை ஸ்தோத்திரம் செய்தான்:

நம: க்ருஷ்ணாய நீலாய ஶிதிகண்டநிபாய ச |
நம: காலாக்நிரூபாய க்ருதாந்தாய ச வை நம: ||

நமோ நிர்மாம்ஸதேஹாய தீர்கஶ்மஶ்ருஜடாய ச |
நமோ விஶாலநேத்ராய ஶுஷ்கோதர பயாக்ருதே ||

நம: புஷ்கலகாத்ராய ஸ்தூலரோம்ணே து வை நம: |
நமோ தீர்காய ஶுஷ்காய காலதம்ஷ்ட்ர நமோஸ்து தே ||

நமஸ் தே கோடராக்ஷாய துர்நிரீக்ஷ்யாய வை நம: |
நமோ கோராய ரௌத்ராய பீஷணாய கபாலிநே ||

நமஸ் தே ஸர்வபக்ஷாய வலீமுக நமோஸ்து தே |
ஸூர்யபுத்ர நமஸ் தேஸ்து பாஸ்கரே பயதாய ச ||

அதோத்ருஷ்டே நமஸ்தேஸ்து ஸம்வர்த்தக நமோஸ்து தே |
நமோ மந்தகதே துப்யம் நிஸ்த்ரிம்ஶாய நமோஸ்து தே ||

தபஸா தக்ததேஹாய நித்யம் யோகரதாய ச |
நமோ நித்யம் க்ஷுதார்த்தாய, அத்ருப்தாய ச வை நம: ||

ஜ்ஞாநசக்ஷுர் நமஸ் தேஸ்து கஶ்யபாத்மஜஸூநவே |
துஷ்டோ ததாஸி வை ராஜ்யம் ருஷ்டோ ஹரஸி
தத்க்ஷணாத் ||

.தேவாஸுரமநுஷ்யாஶ்ச ஸித்தவித்யாதரோரகா: |
த்வயா விலோகிதா: ஸர்வே நாஶம் யாந்தி ஸமூலத: ||



https://www.facebook.com/ebooksintamil/
Hariram Thejus
www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

ப்ரஸாதம் குரு மே தேவ வரார்ஹோஹ முபாகத: |
ஏவம் ஸ்துதஸ் ததா ஸௌரிர் க்ரஹராஜோ மஹாபல: ||

அப்ரவீச் ச புநர் வாக்யம் ஹ்ருஷ்டரோமா து பாஸ்கரி: |
துஷ்டோ ऽஹம் தவ ராஜேந்த்ர ஸ்தவேநாநேந ஸுவ்ரத ||

வரம் ப்ரூஹி ப்ரதாஸ்யாமி ஸ்வேச்சயா ரகுநந்தந |

என்று ஸநைஸ்சரனைத் துதித்தான். இந்த ஸ்தோத்திரத்தினால் ஸநைஸ்சரன் சந்தோஷித்து, ''தசரதரே! நீர் துதித்த இந்த ஸ்தோத்திரத்தைக் காலையிலும் மாலையிலும் கூறுகிறவருக்குத் தோஷங்களை நீக்கிச் சுப பலனை அளிப்பேன். என்னுடைய தினத்தில் (சனிக்கிழமையில்) வன்னி இலைகளினால் என்னை அர்ச்சித்து என் பிரதிமையைத் தங்கத்திலோ வெள்ளியிலோ தாமிரத்திலோ செய்து, உளுந்து சிறிது கலந்த எள்ளைத் தானம் செய்து, இந்த ஸ்தோத்திரத்தைச் சொன்னால் அவர்களை நான் பீடிப்பதில்லை. கோசாரத்திலும் தசையிலும் புக்தி அந்தரத்திலும் நான் நன்மையைச் செய்வேன்'' என்று கூறினான்.

அதைக் கேட்ட தசரதன் மிகவும் சந்தோஷமடைந்து சனி பகவானை வலம் வந்து வணங்கி விடைபெற்றுக்கொண்டு தன் நகரமடைந்தான். ஆகையால், நாரதா! சனிவாரத்தில் காலையில் எழுந்து ஸ்நானாதிகளைச் செய்து, இந்த ஸ்தோத்திரத்தைச் சொல்லுகிறவர்களிடத்தில் சனி பிரீதியடைந்து நன்மையைச் செய்வான் என்று சிவபெருமான் கூறினார்.

—நன்றி: ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா—பிங்கள ஹு ஐப்பசி மீ
பிரதியிலிருந்து.

---

## அஷ்டதிக் பாலகர்கள்

பொதுவாக மக்கள் செய்கின்ற நற்காரியங்களையும், தீய காரியங்களையும் ஆதித்யன், சந்திரன், அஷ்டதிக் பாலகர்கள் கண்காணித்துக் கொண்டு அச்செயல்களுக்கு ஸாக்ஷியாக இருக்கின்றனர் என மஹாபாரதம் சொல்லும். எனவே மனிதன், தர்ம வடிவாயமைந்த அவர்களுடைய அருளைப் பெறுவதற்குத் தீயவற்றை யகற்றி, நற்காரியங்களைச் செய்து வந்தால் எல்லா மங்களங்களையும் பெறுகின்றான் என்பது அச் செய்யுளின் கருத்தாகும். இவ்விடத்தில், அஷ்டதிக் பாலகர்களைத் துதிப்பதால் எல்லா நிறைவுகளையும் பெறுவதற்கு முடியுமாதலால் அவர்களின் நிலை சுருக்கமாகக் கொடுக்கப்படுகிறது.

**இந்திரன்** — இவனை யுபாசிப்பதால் மக்கள் ஐச்வர்யத்தையும் ஸௌகத்தையும் பெறுகின்றனர்.



**அக்னி** —இவனையுபாசித்து ஒளி மிக்க திருமேனியைப் பெறுவதோடு, நற்பயன்களையும் அடையலாம்.

**யமன்** —இவனையுபாசித்தால் தீவினைப் பயனை அகற்றி, நல்வினைப் பயனைப் பெற்று விளங்கலாம். இவன் தர்மத்தின் வடிவினன்.

**நிர்ருதி** —இவனையுபாசிப்பதால் பகைவர்கள் பயம் விலகும்.

**வருணன்** —இவன் மழையைப் பொழிந்து, பயிர்களை வளரச் செய்து மக்களுக்குக் களிப்பை உண்டுபண்ணி ஸௌகத்தைக் கொடுப்பவன்.

**வாயு** —இவன் வடிவமற்றவன். மக்களுடைய ப்ராணனுக்கு ஆதாரமாயுள்ளவன். இவனையுபாசித்தால் நீண்ட ஆயுளையும், பலத்தையும் பெறலாம்.

**குபேரன்** —மக்களுக்கு ஸௌகத்தைக் கொடுத்து, ஸம்பத்தை வளரச் செய்பவன்.

**ஈசானன்** —இவன் மங்கள வடிவினன். இவன் மக்களுக்கு அறிவை வளரச் செய்து ஞானத்தைப் பெருக்கி விடுதலையைக் கொடுப்பவன்.

**இந்திரன்**

ஐராவத கஜாரூடம்
ஸ்வர்ணவர்ணம் கிரீடிநம் |
ஸஹஸ்ர நயநம் ஸக்ரம்
வஜ்ரபாணிம் விபாவயேத் ||





https://www.facebook.com/ebooksintamil/

Hariram Thejus

www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/



## அக்னி

ஸப்தார்சிஷம் ச பிப்ராணம்
அக்ஷமாலாம் கமண்டலும் |
ஜ்வாலாமாலாகுலம் ரக்தம்
ஶக்திஹஸ்தம் சகாஸநம் ||

## யமன்

க்ருதாந்தம் மஹிஷாரூடம்
தண்டஹஸ்தம் பயாநகம் |
காலபாஶதரம் க்ருஷ்ணம்
த்யாயேத் தக்ஷிணதிக்பதிம் ||





https://www.facebook.com/ebooksintamil/

## நிர்ருதி

ரக்தநேத்ரம் ஶவாரூடம்
நீலோத்பல தளப்ரபம் |
க்ருபாணபாணி மாஸ்ரௌகம்
பிபந்தம் ராக்ஷஸேஶ்வரம் ||





## வருணன்

நாகபாஶதரம் ஹ்ருஷ்டம்
ரக்தௌகத்யுதி விக்ரஹம் |
ஶஶாங்க தவளம் த்யாயேத்
வருணம் மகராஸநம் ||

## வாயு

ஆபீதம் ஹரிதச்சாயம்
விலோலத்வஜ தாரிணம் |
ப்ராணபூதம்ச பூதாநாம்
ஹரிணஸ்தம் ஸமீரணம் ||





Hariram Thejus

www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/



**குபேரன்**

குபேரம் மநுஜாஸீநம்
ஸகர்வம் கர்வவிக்ரஹம் |
ஸ்வர்ணச்சாயம் கதாஹஸ்தம்
உத்தராதிபதிம் ஸ்மரேத் ||

**ஈசானன்**

ஈஸாநம் வ்ருஷபாரூடம்
த்ரிஸூலம் வ்யாலதாரிணம்
சரச்சந்த்ர ஸமாகாரம்
த்ரிநேத்ரம் நீலகண்டகம் ||



https://www.facebook.com/ebooksintamil/

ஸ்ரீ:

# ஆதித்ய ஹ்ருதயம்



[ஸ்ரீ சூரிய பகவான் பிரத்யக்ஷ தெய்வமாகத் தரிசனம் தருகிறார். அவர்தம் திருவடிகளைப் போற்றியே ஸ்ரீ ராமசந்திரமூர்த்தி ராம-ராவண யுத்தத்தில் வெற்றி கண்டார். நித்ய வாழ்க்கையில் ஸகல பாக்யங்களும் பெற, பக்தர்கள் இதைத் தினமும் பாராயணம் செய்வது அவசியம். தவிர, பெரிய ஆபத்தோ, வருத்தமோ, சோதனையோ, வரும் காலங்களில், இந்த ஸ்தோத்திரத்தைப் பூரண நம்பிக்கையுடன் **ஒரே சமயத்தில் தொடர்ந்து 9 தடவை பாராயணம் செய்வோர் நிம்மதி பெறுவர்** என்பது நிச்சயம்.]

**ஸங்கல்பம்**

மம சிந்தித மனோரத-அவாப்த்யர்த்தம் ஆதித்ய
ஹ்ருதய ஸ்தோத்ர மஹாமந்த்ர ஜபம் கரிஷ்யே.

அஸ்ய ஸ்ரீ ஆதித்யஹ்ருதய ஸ்தோத்ர மஹா மந்த்ரஸ்ய அகஸ்த்யோ பகவான் ரிஷி: | அனுஷ்டுப்சந்த: | ஆதித்யஹ்ருதய பூத: பகவான் ப்ரம்மா தேவதா | நிரஸ்தாசேஷ விக்நதயா ப்ரம்மவித்யா ஸித்தௌ ஸர்வத்ர ஜயஸித்தௌ ச விநியோக: ||

ரச்மிமதே பீஜம் | ஸூர்யாய சக்தி: | நம: கீலகம் | ஸர்வத்ர ஜயஸித்யர்த்தே ஜபே விநியோக: ||

ரச்மிமதே அங்குஷ்டாப்யாம் நம: | ஸமுத்யதே தர்ஜநீப்யாம் நம: | தேவாஸுர நமஸ்க்ருதாய மத்யமாப்யாம் நம: | விவஸ்வதே அநாமிகாப்யாம் நம: | பாஸ்கராய கநிஷ்டிகாப்யாம் நம: | புவநேச்வராய கரதல கர ப்ருஷ்டாப்யாம் நம: | ரச்மிமதே ஹ்ருதயாய நம: | ஸமுத்யதே சிரஸே ஸ்வாஹா | தேவாஸுர நமஸ்க்ருதாய சிகாயை வௌஷட் | விவஸ்வதே கவசாய ஹும் | பாஸ்கராய நேத்ரத்ராய வௌஷட் | புவநேச்வராய அஸ்த்ராய பட் ||

பூர்ப்புவஸ் ஸ்வரோம் இதி திக்பந்த: | ஓம் த்யாநம் |

ஜயதி ஜயதி ஸூர்ய: ஸப்தலோகைகதீப:
கிரண ம்ருதிததாப: ஸர்வதுக்கஸ்ய ஹர்தா |
அருணகிரண கம்யச்சாதிராதித்யமூர்த்தி:
பரம பரம திவ்ய: பாஸ்கரஸ்தம் நமாமி ||



Hariram Thejus
www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

ததோ யுத்தபரிஶ்ராந்தம் ஸமரே சிந்தயா ஸ்த்திதம்
ராவணம் சாக்ரதோ த்ருஷ்ட்வா யுத்தாய ஸமுபஸ்த்திதம் (1)

தைவதைஶ்ச ஸமாகம்ய த்ரஷ்டு மப்யாகதோ ரணம்
உபாகம்யா ப்ரவீத் ராமம் அக்ஸ்த்யோ பகவாந் ரிஷி: (2)

ராம ராம மஹாபாஹோ ஶ்ருணு குஹ்யம் ஸநாதனம்
யேந ஸர்வாநரீந் வத்ஸ ஸமரே விஜயிஷ்யஸி (3)

ஆதித்யஹ்ருதயம் புண்யம் ஸர்வ ஶத்ரு விநாஶநம்
ஜயாவஹம் ஜபேந்நித்யம் அக்ஷய்யம் பரமம் ஶிவம் (4)

ஸர்வமங்கள மாங்கள்யம் ஸர்வபாப ப்ரணாஶநம்
சிந்தாஶோக ப்ரஶமனம் ஆயுர்வர்த்தந முத்தமம் (5)

ரஶ்மிமந்தம் ஸமுத்யந்தம் தேவாஸுரநமஸ்க்ருதம்
பூஜயஸ்வ விவஸ்வந்தம் பாஸ்கரம் புவநேஶ்வரம் (6)

ஸர்வதேவாத்மகோ ஹ்யேஷ: தேஜஸ்வீ ரஶ்மிபாவந:
ஏஷ தேவாஸுரகணாந் லோகாந் பாதி கபஸ்திபி: (7)

ஏஷ ப்ரஹ்மா ச விஷ்ணுஶ்ச ஶிவ: ஸ்கந்த:ப்ரஜாபதி:
மஹேந்த்ரோ தநத: காலோ யமஸ் ஸோமோ ஹ்யபாம்பதி: (8)

பிதரோ வஸவஸ்ஸாத்யா ஹ்யஶ்விநௌ மருதோ மநு:
வாயுர்வஹ்நி: ப்ரஜா ப்ராண: ருதுகர்த்தா ப்ரபாகர: (9)

ஆதித்ய: ஸவிதா ஸூர்ய: கக: பூஷா கபஸ்திமாந்
ஸுவர்ணஸத்ருஶோ பாநு: ஹிரண்யரேதா திவாகர: (10)

ஹரிதஶ்வ: ஸஹஸ்ரார்ச்சி: ஸப்தஸப்திர் மரீசிமாந்
திமிரோந்மதந: ஶம்பு: த்வஷ்டா மார்த்தாண்ட அம்ஶுமாந் (11)

ஹிரண்யகர்ப்ப: ஶிஶிர: தபநோ பாஸ்கரோ ரவி:
அக்நிகர்ப்போ (அ)திதே: புத்ர: ஶங்க: ஶிஶிரநாஶந: (12)

வ்யோமநாதஸ்தமோபேதீ ருக்யஜுஸ்ஸாமபாரக:
கநவ்ருஷ்டிரபாம் மித்ர: விந்த்யவீதீ ப்லவங்கம: (13)

ஆதபீ மண்டலீ ம்ருத்யு: பிங்கல: ஸர்வதாபந:
கவிர்விஶ்வோ மஹாதேஜா: ரக்த: ஸர்வபவோத்பவ: (14)

நக்ஷத்ர க்ரஹதாராணாம் அதிபோ விஶ்வபாவந:
தேஜஸாமபி தேஜஸ்வீ த்வாதஶாத்மந் நமோஸ்து தே (15)

நம: பூர்வாய கிரயே பஶ்சிமாயாத்ரயே நம:
ஜ்யோதிர்கணாநாம் பதயே திநாதிபதயே நம: (16)

ஜயாய ஜயபத்ராய ஹர்யச்வாய நமோ நம:
நமோநம: ஸஹஸ்ராம்சோ ஆதித்யாய நமோ நம: (17)

நம உக்ராய வீராய ஸாரங்காய நமோ நம:
நம: பத்மப்ரபோதாய மார்த்தாண்டாய நமோ நம: (18)



ப்ரஹ்மேஶாநாச்யுதேஶாய ஸூர்யாயாதித்யவர்ச்சஸே
பாஸ்வதே ஸர்வபக்ஷாய ரௌத்ராய வபுஷே நம: (19)

தமோக்நாய ஹிமக்நாய சத்ருக்நாயாமிதாத்மநே
க்ருதக்ந க்நாய தேவாய ஜ்யோதிஷாம் பதயே நம: (20)

தப்தசாமீகராபாய வஹ்நயே விஶ்வகர்மணே
நமஸ்தமோபிநிக்நாய ருசயே லோகஸாக்ஷிணே (21)

நாஶயத்யேஷ வை பூதம் ததேவ ஸ்ருஜதி ப்ரபு:
பாயத்யேஷ தபத்யேஷ வர்ஷத்யேஷ கபஸ்திபி: (22)

ஏஷ ஸுப்தேஷு ஜாகர்தி பூதேஷு பரிநிஷ்டித:
ஏஷ சைவாக்நிஹோத்ரம் ச பலம் சைவாக்நிஹோத்ரிணாம் (23)

வேதாஶ்ச க்ரதவஶ்சைவ க்ரதூநாம் பலமேவ ச
யாநி க்ருத்யாநி லோகேஷு ஸர்வ ஏஷ ரவி: ப்ரபு: (24)

ஏநமாபத்ஸு க்ருச்ச்ரேஷு காந்தாரேஷு பயேஷு ச
கீர்தயந் புருஷ: கஶ்சித் நாவஸீததி ராகவ (25)

பூஜயஸ்வைந மேகாக்ர: தேவதேவம் ஜகத்பதிம்
ஏதத் த்ரிகுணிதம் ஜப்த்வா யுத்தேஷு விஜயிஷ்யஸி (26)

அஸ்மிந் க்ஷணே மஹாபாஹோ ராவணம் த்வம் வதிஷ்யஸி
ஏவமுக்த்வா ததாகஸ்த்யோ ஜகாம ச யதாகதம் (27)

ஏதச் ச்ருத்வா மஹாதேஜா: நஷ்டஶோகோபவத் ததா
தாரயாமாஸ ஸுப்ரீத: ராகவ: ப்ரயதாத்மவாந் (28)

ஆதித்யம் ப்ரேக்ஷ்ய ஜப்த்வா து பரம் ஹர்ஷமவாப்தவாந்
த்ரிராசம்ய ஶுசிர் பூத்வா தநுராதாய வீர்யவான் (29)

ராவணம் ப்ரேக்ஷ்ய ஹ்ருஷ்டாத்மா யுத்தாய ஸமுபாகமத்
ஸர்வயத்நேந மஹதா வதே தஸ்ய த்ருதோபவத் (30)

அத ரவி ரவதந் நிரீக்ஷ்ய ராமம்
முதிதமநா: பரமம் ப்ரஹ்ருஷ்யமாண: |
நிஶிசரபதி ஸம்க்ஷயம் விதித்வா
ஸுரகணமத்யகதோ வசஸ்த்வரேதி || (31)

இத்யார்ஷே ஶ்ரீமத்ராமாயணே வால்மீகீயே
ஆதிகாவ்யே யுத்தகாண்டே
ஸப்தோத்தர ஶததம:
ஸர்க்க:


---



https://www.facebook.com/ebooksintamil/
Hariram Thejus
www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

## ஸ்ரீ பாதுகையும் நவக்ரஹங்களும்



ஸ்ரீ ரங்கநாத திவ்யமணி
பாதுகாப்யாம் நம:

**கநகருசிரா காவ்யாக்யாதா சனைஸ்சரனேசிதா**
**ச்ரிதகுருபுதா பாஸ்வத்ரூபா த்விஜாதிபஸேவிதா |**
**விஹிதவிபவா நித்யம் விஷ்ணோ: பதே மணிபாதுகே**
**த்வமஸி மஹதீ விச்வேஷாம் ந: சுபாய க்ரஹமண்டலீ ||**

இந்த ஸ்லோகம் ஸ்ரீ வேதாந்த மஹாதேசிகனால் அருளிச் செய்யப்பட்ட **பாதுகாஸஹஸ்ரம்** என்கிற கிரந்தத்தில் காஞ்சந பத்ததி என்கிற பகுதியிலுள்ளது. இதில் சூரியன் முதலிய ஏழு பிரதான க்ரஹங்களின் பெயர்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. சாயா க்ரஹங்களான ராஹு கேதுக்களுடைய மந்திரங்களின் பீஜாக்ஷரங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. இதை, அவரவர்களு டைய ஆசார்யர்களிடம், அல்லது பெரியோர்களிடம், உபதேச மாகப் பெற்றுக்கொண்டு தினந்தோறும் 10 அல்லது 28 தடவை ஜபம் செய்தால் நவக்ரஹங்களால் ஏற்படக்கூடிய துன்பங்கள் அருகேயும் அணுகாது. இன்பமே பெருகும்.



https://www.facebook.com/ebooksintamil/

ஸ்ரீ:

## நவக்ரஹக் கோலம்

### பெண்மணிகளுக்கொரு வரப்பிரசாதம் !

பெண்கள் தம் வீட்டையும் சுற்றுப்புறங்களையும் பசுஞ் சாணம் தெளித்துத் துடைத்துக் கோலம் போடுவதென்பது தொன்றுதொட்டு நம் நாட்டில் நடைபெற்றுவரும் நல்ல பழக்க மாகும்.

நல்ல முறையில் போடப்படும் கோலங்கள் மனிதரையே யல்லாது தேவதைகளையும் ஆகர்ஷிக்கக் கூடியனவாகும். ஏதோ மனத்துக்குத் தோன்றியபடி போடாமல் முறையாகக் கோலங் களைப் போடுவது லக்ஷ்மீகரமாக இருக்கும். அவ்விதக் கோலங்கள் தேவதைகளுக்கு ப்ரீதியை உண்டாக்கக்கூடிய வகையில் யந்திர வடிவில் அமையவேண்டும்.

ஆகவே, ஸ்ரீ ஆதி சங்கர பகவத்பாதாள் இயற்றியுள்ள ''ஸௌந்தர்ய லஹரி'' என்ற ஸ்தோத்ரக் கிரந்தத்தில் சொல்லிய படி, நவக்ரஹங்களின் காரகாம்சங்களை அனுசரித்து, யந்திர உருவங்களை உள்ளடக்கிய கோலங்கள் இங்கு அச்சிடப் பெற்றிருக் கின்றன.

பெண்மணிகள் அரிசிமாவினால் பகவானுடைய ஸந்நிதியிலோ மற்றும் காலால் மிதிக்காத இடங்களிலோ அந்த அந்தக் கிழமை களில் அந்த அந்தக் கோலங்களைப் போட்டு, அவற்றிற்கெதிரில் குத்து விளக்கேற்றி வந்தனை வழிபாடுகள் செய்து அந்த அந்தக் கிழமைக்குரிய க்ரஹத்தின் ஸ்லோகத்தையும், ஸௌந்தர்ய லஹரி ஸ்லோகத்தையும் பக்தியுடன் படித்தால் ஸ்ரீ தேவியினுடையவும், நவக்ரஹங்களுடையவும் அருளால் ஆயுராரோக்ய ஸௌபாக்யங் களுண்டாகுமென்பது திண்ணம்.

நவராத்திரி காலத்தில் ஒன்பது நாட்களிலும் வரிசையாக இந்தக் கோலங்களை கொலுவிற்குமுன் போடலாம். சுற்றுக்கோடு களை மாத்திரம் வெள்ளை மாவினால் அமைத்து நடுப்பாகங்களைப் பற்பல வர்ணமுள்ள மாவினாலோ குங்குமத்தாலோ அலங்காரம் செய்தால் மிக அழகாக அமையும்.

இப்படிப்பட்ட வீடுகளில் ஸ்ரீ லோகமாதாவின் பரிபூரண கடாக்ஷம் நிலவி, இவ்வீடுகளில் வசிப்போர்க்கு நவக்ரஹங்களும் நல்லதே செய்துவருவர்.

**ஸ்ரீரஸ்து, சுபமஸ்து, சிராயுராரோக்யமஸ்து**

---



Hariram Thejus
www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

# நவக்ரஹக் கோலம்

## 1. ஞாயிற்றுக்கிழமை (சூரிய பகவான்)



சூரியபகவான்

ஸுர்ய ஸ்துதி

ஜபாகுஸும ஸங்காஶம்
  காஶ்யபேயம் மஹாத்யுதிம் |
தமோரிம் ஸர்வ பாபக்நம்
  ப்ரணதோஸ்மி திவாகரம் ||


ஸௌந்தர்ய லஹரி

தநீயாம்ஸம் பாம்ஸும் தவ சரண பங்கேருஹ பவம்
  விரிஞ்சி: ஸஞ்சிந்வந் விரசயதி லோகா நவிகலம் |
வஹத்யேநம் ஶௌரி: கதமபி ஸஹஸ்ரேண ஶிரஸாம்
  ஹரஸ் ஸம்க்ஷுத்யைநம் பஜதி பஸிதோத்தூளந விதிம் ||
(பலன்: ஸகலகாரிய ஸித்தி, லோக ஆகர்ஷணம்)

---

## 2. திங்கட்கிழமை (சந்திர பகவான்)

சந்த்ர ஸ்துதி



சந்திரபகவான்

ததிஶங்க துஷாராபம்
  க்ஷீரோதார்ணவ ஸம்பவம் |
நமாமி ஶஶிநம் ஸோமம்
  ஶம்போர் மகுட பூஷணம் ||


ஸௌந்தர்ய லஹரி

ஶிவ: ஶக்த்யா யுக்தோ யதி பவதி ஶக்த: ப்ரபவிதும்
  ந சேதேவம் தேவோ ந கலு குஶல: ஸ்பந்திதுமபி |
அதஸ்த்வா மாராத்யாம் ஹரிஹர விரிஞ்சாதிபிரபி
  ப்ரணந்தும் ஸ்தோதும் வா கத மக்ருத புண்ய: ப்ரபவதி ||
(பலன்: முன்னேற்றமும், தடங்கல் நீக்கமும்)

---



## 3. செவ்வாய்க்கிழமை



அங்காரகபகவான்

(குஜ பகவான்)

அங்காரக ஸ்துதி


தரணீ கர்ப்ப ஸம்பூதம்
  வித்யுத்காந்தி ஸமப்ரபம் |
குமாரம் ஶக்தி ஹஸ்தம் ச
  மங்களம் ப்ரணமாம்யஹம் ||

ஸௌந்தர்ய லஹரி

தடில்லேகாதந்வீம் தபநஶஶி வைஶ்வாநர மயீம்
  நிஷண்ணாம் ஷண்ணாமப்யுபரி கமலாநாம் தவ கலாம் ||
மஹாபத்மாடவ்யாம் ம்ருதித மம மாயேந மநஸா
  மஹாந்த: பஶ்யந்தோ தததி பரமாஹ்லாத லஹரீம் ||
(பலன்: சத்ருக்களை ஜயித்தல்)

---

## 4. புதன் கிழமை (புத பகவான்)



புதபகவான்


புத ஸ்துதி

ப்ரியங்கு கலிகா ஶ்யாமம்
  ரூபேணாப்ரதிமம் புதம் |
ஸௌம்யம் ஸௌம்ய குணோபேதம்
  தம் புதம் ப்ரணமாம்யஹம் ||

ஸௌந்தர்ய லஹரி

ஸவித்ரீபிர் வாசாம ஶஶிமணி ஶிலாபங்க ருசிபி:
  வஶிந்யாத்யாபிஸ் த்வாம் ஸஹ ஜநநி ஸஞ்சிந்தயதி ய: |
ஸ கர்த்தா காவ்யாநாம் பவதி மஹதாம் பங்கி ஸுபகை:
  வசோபிர் வாக்தேவீ வதந கமலாமோத மதுரை: ||
(பலன்: ஸகல சாஸ்திர ஞானம்)

---



குருபகவான்

## 5. வியாழக்கிழமை (குரு)

குரு ஸ்துதி

தேவாநாஞ்ச ரிஷீணாஞ்ச
  குரும் காஞ்சந ஸந்நிபம் |
பக்தி பூதம் த்ரிலோகேஶம்
  தம் நமாமி ப்ருஹஸ்பதிம் ||



https://www.facebook.com/ebooksintamil/

Hariram Thejus


www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

ஸௌந்தர்ய லஹரி

அவித்யாநா மந்தஸ்திமிர மிஹிர த்வீப நகரீ
ஜடாநாம் சைதந்ய ஸ்தபக மகரந்த ஸ்ருதிஜரீ |
தரித்ராணாம் சிந்தாமணி குணநிகா ஜந்மஜலதௌ
நிமக்நாநாம் தம்ஷ்ட்ரா முராரிபு வராஹஸ்ய பவதி ||
(பலன்: ஸகலஸம்பத்தும் வித்யையும்)

## 6. வெள்ளிக்கிழமை (சுக்ர பகவான்)


சுக்ரபகவான்


சுக்ர ஸ்துதி

ஹிமகுந்த ம்ருணாலாபம்
தைத்யாநாம் பரமம் குரும் |
ஸர்வஶாஸ்த்ர ப்ரவக்தாரம்
பார்கவம். ப்ரணமாம்யஹம் ||

ஸௌந்தர்ய லஹரி

சதுர்ப்பி: ஶ்ரீகண்டை: ஶிவயுவதிபி: பஞ்சபிரபி
ப்ரபிந்நாபி: ஶம்போர் நவபிரபி மூலப்ரக்ருதிபி: |
த்ரயஶ் சத்வாரிம்ஶத் வஸுதல கலாஶ்ர த்ரிவலய
த்ரிரேகாபி:ஸார்தம் தவ ஶரணகோணா: பரிணதா: ||
(பலன்: விவாஹப்ராப்தி, ஸௌபாக்யம், மலட்டு நீக்கம்)

---


சனிபகவான்

## 7. சனிக்கிழமை (சனி பகவான்)

ஶநி ஸ்துதி

நீலாஞ்ஜந ஸமாபாஸம்
ரவிபுத்ரம் யமாக்ரஜம் |
ச்சாயா மார்த்தாண்ட ஸம்பூதம்
தம் நமாமி ஶநைஶ்சரம் ||

ஸௌந்தர்ய லஹரி


த்வயா ஹ்ருத்வா வாமம் வபு ரபரித்ருப்தேந மநஸா
ஶரீரார்தம் ஶம்போ ரபரமபி ஶங்கே ஹ்ருதமபூத் |
யதேதத் த்வத்ரூபம் ஸகல மருணாபம் த்ரிநயநம்
குசாப்யா மாநம்ரம் குடில ஶஶி சூடால மகுடம் ||
(பலன்: வியாதி, கடன், பேய், பிசாசு ஆபத்து நீங்கல்)



https://www.facebook.com/ebooksintamil/

## 8. ராகு பகவான்

(செவ்வாய்க்கிழமை இந்தக் கோலமும் போடலாம்)



ராகு பகவான்

ராஹோ ஸ்துதி

அர்தகாயம் மஹாவீர்யம்
சந்த்ராதித்ய விமர்தநம் |
ஸிம்ஹிகா கர்ப்ப ஸம்பூதம்
தம் ராஹும் ப்ரணமாம்யஹம் ||


ஸௌந்தர்ய லஹரி

விரிஞ்சி: பஞ்சத்வம் வ்ரஜதி ஹரிராப்நோதி விரதிம்
விநாஶம் கீநாஶோ பஜதி தநதோ யாதி நிதநம் |
விதந்த்ரா மாஹேந்த்ரீ விததிரபி ஸம்மீலதி த்ருஶாம்
மஹா ஸம்ஹாரே ஸ்மிந் விஹரதி ஸதி த்வத்பதி ரஸௌ ||
(பலன்: எக்காரியத்திலும் ஜயமடைதல்)

---

## 9. கேது பகவான்

(சனிக்கிழமை இந்தக் கோலமும் போடலாம்)


கேதுபகவான்

கேது ஸ்துதி

பலாஶ புஷ்ப ஸங்காஶம்
தாரகா க்ரஹ மஸ்தகம் |
ரௌத்ரம் ரௌத்ராத்மகம் கோரம்
தம் கேதும் ப்ரணமாம்யஹம் ||

ஸௌந்தர்ய லஹரி

த்வதந்ய:பாணிப்யா மபயவரதோ தைவதகண:
த்வமேகா நைவாஸி ப்ரகடித வராபீத்யபிநயா |
பயாத் த்ராதும் தாதும் பலமபி ச வாஞ்ச்சா ஸமதிகம்
ஶரண்யே லோகாநாம் தவ ஹி சரணாவேவ நிபுணௌ ||
(பலன்: தரித்ரம், வியாதி, பீடைகள் நிவர்த்தி)

---

ஶ்ரிய: பதியான பகவான் க்ருபையால், பக்தர்கள் அனைவரும் ஆற்றலும், ஆயுளும், நோயற்ற வாழ்வும், குறைவற்ற செல்வமும் பெற்றுப் பல்லாண்டு பல்லாண்டு வாழவேண்டும்.

பக்தி பெருகட்டும்!

வாழ்க பக்தர்கள்! வாழ்க வாழ்கவே!



Hariram Thejus
www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

ஸ்ரீ:

# நவக்ரஹ சாந்திமாலா மந்த்ரங்கள்

(கும்பத்தில் ஸ்ரீபுவநேச்வரியை ஆவாஹநம் செய்து ஷோட ஶோபசார பூஜை செய்தபின் ஜபிக்கவும்.)

1. ஸ்ரீம் ஓம் நமோபகவதி ஸ்ரீஶூலிநி ஸர்வபூதேஶ்வரி ஜ்வல ஜ்வல, மயி ஸுப்ரீதா ஸர்வபூதாதி தோஷய தோஷய, ஸூர்யக்ரஹ நிபீடநாத் . . . . . . நக்ஷத்ரே . . . . ராஶௌஜாதம் ஶர்மாணம் மாம் (அமும் யஜமாநம்) மோக்ஷய மோக்ஷய ஸ்வாஹா.

2. ஸ்ரீம் ஓம் நமோ பகவதி ஸ்ரீஶூலிநி ஸர்வபூதேஶ்வரி ஜ்வல ஜ்வல மயி ஸுப்ரீதா ஸர்வபூதாதி தோஷய தோஷய சந்த்ரக்ரஹ பீடநாத் . . . . நக்ஷத்ரே . . . . ராஶௌஜாதம் . . ஶர் மாணம் மாம் (அமும் யஜமாநம்) மோக்ஷய மோக்ஷய ஸ்வாஹா.

3. ஸ்ரீம் ஓம் நமோ பகவதி ஸ்ரீஶூலிநி ஸர்வபூதேஶ்வரி ஜ்வல ஜ்வல மயி ஸுப்ரீதா ஸர்வபூதாதி தோஷய தோஷய அங்காரகக்ரஹ நிபீடநாத் . . . நக்ஷத்ரே . . . . ராஶௌஜாதம் ஶர்மாணம் மாம் (அமும் யஜமாநம்) மோக்ஷய மோக்ஷய ஸ்வாஹா.

4. ஸ்ரீம் ஓம் நமோபகவதி ஸ்ரீஶூலிநி ஸர்வபூதேஶ்வரி ஜ்வல ஜ்வல மயி ஸுப்ரீதா ஸர்வபூதாதி தோஷய தோஷய ஸௌம்யக்ரஹ நிபீடநாத் . . . நக்ஷத்ரே . . . ராஶௌஜாதம் . . . . . ஶர்மாணம் மாம் (அமும் யஜமாநம்) மோக்ஷய மோக்ஷய ஸ்வாஹா.

5. ஸ்ரீம் ஓம் நமோ பகவதி ஸ்ரீஶூலிநி ஸர்வபூதேஶ்வரி ஜ்வல ஜ்வல மயி ஸுப்ரீதா ஸர்வபூதாதி தோஷய தோஷய ப்ருஹஸ்பதிக்ரஹ நிபீடநாத் . . . . நக்ஷத்ரே . . . . ராஶௌஜாதம் . . . . ஶர்மாணம் மாம் (அமும் யஜமாநம்) மோக்ஷய மோக்ஷய ஸ்வாஹா.

6. ஸ்ரீம் ஓம் நமோ பகவதி ஸ்ரீஶூலிநி ஸர்வபூதேஶ்வரி ஜ்வல ஜ்வல மயி ஸுப்ரீதா ஸர்வபூதாதி தோஷய தோஷய ஶுக்ரக்ரஹ பீடநாத் . . . . நக்ஷத்ரே . . . . ராஶௌஜாதம் . . ஶர் மாணம் மாம் (அமும் யஜமாநம்) மோக்ஷய மோக்ஷய ஸ்வாஹா.

7. ஸ்ரீம் ஓம் நமோ பகவதி ஸ்ரீஶூலிநி ஸர்வபூதேஶ்வரி ஜ்வல ஜ்வல மயி ஸுப்ரீதா ஸர்வபூதாதி தோஷய தோஷய ஶநைஶ்சரக்ரஹ நிபீடநாத் . . . . நக்ஷத்ரே . . . . ராஶௌஜாதம் . . . .



Hariram Thejus

ஶர்மாணம் மாம் (அமும் யஜமாநம்) மோக்ஷய மோக்ஷய ஸ்வாஹா.

8. ஸ்ரீம் ஓம் நமோபகவதி ஸ்ரீஶூலிநி ஸர்வபூதேஶ்வரி ஜ்வல ஜ்வல மயி ஸுப்ரீதா ஸர்வபூதாதி தோஷய தோஷய ராஹுக்ரஹ நிபீடநாத் . . . . நக்ஷத்ரே . . . . ராஶௌஜாதம் . . . . ஶர்மாணம் மாம் (அமும் யஜமாநம்) மோக்ஷய மோக்ஷய ஸ்வாஹா.

9. ஸ்ரீம் ஓம் நமோபகவதி ஸ்ரீஶூலிநி ஸர்வபூதேஶ்வரி ஜ்வல ஜ்வல மயி ஸுப்ரீதா ஸர்வபூதாதி தோஷய தோஷய கேதுக்ரஹ நிபீடநாத் . . . . நக்ஷத்ரே . . . . ராஶௌஜாதம் . . . . . . ஶர்மாணம் மாம் (அமும் யஜமாநம்) மோக்ஷய மோக்ஷய ஸ்வாஹா.

---

# நவக்ரஹாஷ்டோத்தர சத நாமாவளி

[ஒன்பது க்ரஹங்களுக்கும் பொதுவாக ஏககாலத்தில் அர்ச்சனை செய்ய இந்த நாமாக்களை உபயோகிக்கவும். இந்த நாமாக்களுக்கு முன்னால் 'ஓம்' என்றும் பின்னால் 'நம:' என்றும் சேர்த்துக் கொள்ளவும்.]

1. **ஓம் பாநவே நம:** 2. ஹம்ஸாய 3. பாஸ்கராய 4. ஸூர்யாய 5. ஸூராய 6. தமோஹராய 7. ரதிநே 8. விஶ்வத்ருதே 9. அவ்யாப்த்ரே 10. ஹரயே 11. வேதமயாய 12. விபவே 13. ஶாந்தாம்ஶவே 14. ஶுப்ராம்ஶவே 15. **சந்த்ராய** 16. அத்ரிநேத்ர ஸமுத்பவாய 17. தாராதிபாய 18. ரோஹிணீஶாய 19. ஶம்புமூர்த்திக்ருதாலயாய 20. ஓஷதீட்யாய 21. ஓஷதிபதயே 22. ஈஶ்வரதராய 23. ஸுதாநிதயே 24. ஸகலாஹ்லாதநகராய 25. **பௌமாய** 26. பூமிஸுதாய 27. பூதமாந்யாய 28. ஸமுத்பவாய 29. ஆர்யாய 30. அக்நிக்ருதே 31. ரோஹிதாங்காய 32. ரக்தவஸ்த்ரத(?)ாய 33. ஶுசயே 34. மங்களாய 35. அங்காரகாய 36. ரக்தமாலிநே 37. மாயாவிஶாரதாய 38. **புதாய** 39. தாராஸுதாய 40. ஸௌம்யாய 41. ரோஹிணீகர்ப்பஸம்பூதாய 42. சந்த்ராத்மஜாய 43. ஸோமவம்ஶகராய 44. ஶ்ருதிவிஶாரதாய 45. ஸத்யஸந்தாய 46. ஸத்யஸிந்தவே 47. விதுஸுதாய 48. விபுதாய 49. விபவே 50. **வாக்ப்ருதே** 51. ப்ராஹ்மணாய 52. ப்ரஹ்மணே 53. தீக்ஷ்ணாய 54. ஶுபவேஷதராய 55. கேஷ்பதயே 56. குரவே 57. இந்த்ரபுரோஹிதாய 58. ஜீவாய 59. நிர்ஜரபூஜிதாய 60. பீதாம்பராலங்க்ருதாய 61. **ப்ருகவே** 62. பார்கவஸம்பூதாய 63. நிஶாசரகுரவே 64. கவயே 65. த்ருப்யகேதஹராய 66. ப்ருகுஸுதாய 67. வர்ஷக்ருதே 68. நிரராஜ்யதாய 69. ஶுக்ராய 70. ஶுக்ரஸ்வரூபாய 71. ராஜ்யதாய 72. லயக்ருதாய 73. **கோணாய** 74. **ஶநைஶ்சராய** 75. மாந்யாய



https://www.facebook.com/ebooksintamil/

www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

76. சாயாஹ்ருதயநந்தநாய 77. மார்தாண்டஜாய 78. பங்கவே
79. பாநுதநூபவாய 80. யமாநுஜாய 81. அதிபயக்ருதே
82. நீலாய 83. ஸூர்யவம்ஶஜாய 84. நிர்மாம்ஸதேஹாய
85. ராஹவே 86. ஸ்வர்பாநவே 87. ஆதித்யசந்த்ரத்வேஷிணே
88. புஜங்கமாய 89. ஸிம்ஹிகேயாய 90. குணவதே 91. ராத்ரி
பதிபீடிதாய 92. அஹிராஜே 93. ஶிரோஹீநாய 94. விஷதராய
95. மஹாகாயாய 96. மஹாபூதாய 97. ப்ராஹ்மண்யாய 98. ப்ரஹ்
மஸம்பூதாய 99. ரவிக்ருதே 100. ராஹுரூபக்ருதே 101. கேதவே
102. கேதுஸ்வரூபாய 103. கேசராய 104. கத்ருதாலயாய
105. ப்ரஹ்மவிதே 106. ப்ரஹ்ம புத்ராய 107. குமாரகாய
108. ப்ராஹ்மணப்ரீதாய.



# ஶ்ரீ நவக்ரஹ மங்களம்

பாஸ்வாநர்க ஸமிச்ச ரக்தகிரண: ஸிம்ஹாதிப: காஶ்யபோ
குர்விந்த்வோஶ்ச குஜஸ்ய மித்ரமரிகத்ரிஸ்த்த: ஶுப: ப்ராங்முக: |
ஶத்ருர் பார்க்கவ ஸௌரயோ: ப்ரியகுட: காலிங்க தேஶாதிபோ
மத்யே வர்த்துலமண்டலே ஸ்திதிமித: குர்யாத் ஸதா மங்களம் ||

சந்த்ர: கர்கடகப்ரபு: ஸிதருசிஶ் சாத்ரேய கோத்ரோத்பவஶ்
சாக்நேயே சதுரஶ்ரகோ(அ)பரமுகோ கௌர்யர்ச்சயா தர்பித: |
ஷட்ஸப்தாக்நிதஶா த்யஶோபநபலோ ஶத்ருர் புதார்க்க ப்ரிய:
ஸௌம்யோ யாமுநதேஶபர்ணஜஸமித் குர்யாத் ஸதா மங்களம் ||

பௌமோ தக்ஷிணதிக் த்ரிகோணநிலயோ(அ) வந்தீபதி: காதிர
ப்ரீதோ வ்ருஶ்சிகமேஷயோ ரதிபதிர் குர்வர்க்க சந்த்ரப்ரிய: |
ஜ்ஞாரி: ஷட்த்ரிஶுப ப்ரதஶ்ச வஸுதாதாதா குஹாதிஶ்வரோ
பாரத்வாஜகுலோத்பவோ(அ)ருணருசி: குர்யாத் ஸதா மங்களம் ||

ஸௌம்ய: பீத் உதங்முகஸ் ஸமிதபாமார்கோ (அ)த்ரிகோத்
ரோத்பவோ
பாணேஶாநகத: ஸுஹ்ருத் ரவிஸுதோ வைரீக்ருதாநுஷ்ணருக் |
கந்யாயுக்மபதிர் தஶாஷ்டம சதுஷ் ஷண்ணேத்ரக: ஶோபநோ
விஷ்ணுவாராதந தர்ப்பிதோ மகதப: குர்யாத் ஸதா மங்களம் ||

ஜீவஶ்சோத்தர திங்முகோத்தரகுப் ஜாதோங்கிரோ கோத்ரத:
பீதோஶ்வத்த ஸமிச்ச ஸிந்த்வதிபதிஶ் சாபர்க்ஷ மீநாதிப: |



ஸூர்யேந்து க்ஷிதிஜப்ரிய: ஸிதபுதாராதிஸ் ஸமோ பாநுஜே
ஸப்தாபத்ய தபோத்தக: ஶுபகர: குர்யாத் ஸதா மங்களம் ||

ஶுக்ரோ பார்கவ கோத்ரஜஸ் ஸிதருசி: பூர்வாநந: பூர்வதிக்
காம்போஜாதிபதிஸ் துலாவ்ருஷபகஶ் சௌதும்பரைஸ்
தர்பித: |
ஸௌம்யார்க்யோஸ் ஸுஹ்ரு தம்பிகாஸ்துதிவஶாத் ப்ரீதோர்க்க
[சந்த்ராஹிதோ
நாரீபோககர: ஶுபோ ப்ருகுஸுத: குர்யாத் ஸதா மங்களம் ||

ஸௌரி: க்ருஷ்ணருசிஶ்ச பஶ்சிமமுக: ஸௌராஷ்ட்ரப:
காஶ்யபோ
நாத: கும்பம்ருகர்க்ஷயோ: ப்ரியஸுஹ்ருத் ஶுக்ரஜ்ஞயோர்
[க்ருத்ரக: |
ஷட்த்ரிஸ்த: ஶுபதோ(அ)ஶுபோ தநுகதிஶ் சாபாக்ருதௌ
[மண்டலே
ஸந்திஷ்டந் சிரஜீவிதாதிபலத: குர்யாத் ஸதா மங்களம் ||

ராஹுர்பர்பரதேஶபோ நிருருதௌ க்ருஷ்ணாங்க ஶூர்பாஸநோ
யாம்யாஶாபிமுகஶ்ச சந்த்ரரவிருத் பைடீநஸி: க்ரௌர்யவாந் |
ஷட்த்ரிஸ்த்த: ஶுபக்ருத் கராலவதந: ப்ரீதஶ்ச தூர்வாஹுதௌ
துர்கா பூஜநத: ப்ரஸந்ந ஹ்ருதய: குர்யாத் ஸதா மங்களம் ||

கேதுர் ஜைமிநிகோத்ரஜ: குஶஸமித் வாயவ்யகோணே ஸ்த்தித:
சித்ராங்கத்வஜ லாஞ்ச்சநோ ஹி பகவாந் யாம்யாநந: ஶோபந: |
ஸந்துஷ்டோ கணநாத பூஜநவஶாத் கங்காதி தீர்த்தப்ரத:
ஷட்த்ரிஸ்த்த: ஶுபக்ருச்ச சித்ரிததநு: குர்யாத் ஸதா மங்களம் ||

---

அஸ்மத் குருப்யோ நம:

## தசாவதார ஸ்தோத்ரமும் நவக்ரஹ ப்ரீதியும்

"ராமாவதார: ஸூர்யஸ்ய சந்த்ரஸ்ய யதுநாயக: |
ந்ருஸிம்ஹோ பூமிபுத்ரஸ்ய ஸௌம்ய: ஸோமஸுதஸ்ய ச ||
வாமநோ விபுதேந்த்ரஸ்ய பார்கவோ பார்கவஸ்ய ச |
கூர்மோ பாஸ்கரபுத்ரஸ்ய ஸைம்ஹிகேயஸ்ய ஸூகர: ||
கேதுர் மீநாவதாரஸ்ய யே கே சாந்யேபி கேசரா:" ||

என்ற ப்ரமாணத்தையொட்டி ஶ்ரீ வேதாந்த தேசிகன் அருளிச்செய்த "தசாவதார ஸ்தோத்ரத்தைப்" பிரதி தினமும் பாராயணம் செய்பவர்களுக்கு க்ரஹங்களால் ஏற்படக்கூடிய இன்னல்கள் நீங்கி மேலும் நன்மையே உண்டாகுமென்பது நிச்சயம்.



https://www.facebook.com/ebooksintamil/

Hariram Thejus

www.facebook.com/ebooksintamil

https://www.facebook.com/ebooksintamil/

# ஜாதகக் குறிப்பு

அடுத்து, ஜாதகங்களை எழுதுவதற்காகச் சில பக்கங்கள் தரப்பட்டுள்ளன. அவைகளில் வரிசையாகக் குடும்பத் தலைவர், தலைவி, பிள்ளைகள், பெண்கள், மாப்பிள்ளைகள், பேரப் பிள்ளைகள் முதலியோரின் ஜாதகங்களை வரிசையாக எழுதி வைத்துக்கொள்ளலாம்.

அப்படிச் செய்தால், ஜாதகங்களைப் பார்க்கும் தேவை ஏற்படும்போது அவைகளைத் தேடவேண்டிய அவசியம் இருக்காது. மற்றும், அவ்வப்பொழுது தம்முடையவும் தம்மைச் சேர்ந்தவருடையவுமான வாழ்க்கை நிகழ்ச்சிகளை அந்த அந்த ஜாதகத்தாரின் தசாபுக்திகள், கோசாரக் கிரஹநிலைகள் இவைகளைக் கொண்டு ஒப்பிட்டுப் பார்த்து, ஜோதிட அனுபவம் பெறுவதற்கும் இந்த ஜாதகக் குறிப்பு பயன்படும்.

குடும்பத்தில் இருப்போர் அனைவரது ஜாதகங்களையும் சீரிய முறையில் கணித்து வைத்திருப்பது நல்லது. ஏதேனும் புது முயற்சியில் ஈடுபடும்பொழுதும், அல்லது வித்தியாரம்பம், உபநயனம், விவாஹம், பதவி ஏற்றல் முதலிய சமயங்களிலும் தங்கள் ஜாதகங்களைக் கொண்டு காலபலம் சரியாக உள்ளதா என்று பார்த்துக் கொள்ளலாம்.

தவிர, அனுகூல தசாபுக்திகள் இல்லாமலிருந்தால், கிரஹ ப்ரீதிக்காகச் சாந்திகள், பாராயணங்கள் செய்து சிரமங்களைக் குறைத்துக்கொண்டு நன்மையடைவதற்கும் இந்த ஜாதகக் குறிப்பு இன்றியமையாததாகும்.



Hariram Thejus

https://www.facebook.com/ebooksintamil/

|| ஸ்ரீ ராமஜயம் ||

## ஜாதகக் குறிப்பு

ஜாதகரின் பெயர் ……………………………………

பிறந்த ஊர் …………………… ஜில்லா ……………………

பிறந்த தேதி …………… மணி …………… நிமிடம் ……………

சூரிய உதயாதி நாழிகை …………………… விநாடி ……………


தமிழ் ௵ …………… மாதம் …………………… தேதி ……………

…………………… கிழமை சுக்ல/கிருஷ்ண பக்ஷம் …………… திதி

நக்ஷத்ரம் …………… பாதம் …………… லக்னம் ……………

கோத்ரம் …………………… சந்திர ராசி ……………………

## ஜனனகால கிரஹ நிலை




ஜனன காலத்தில் ……… தசை இருப்பு ௵ ……… மீ ……… நா ………

LIFCO

www.facebook.com/ebooksintamil